# சிறுகதைக் கோவை

பதின்மூன்று
சிறந்த எழுத்தாளர்களின்
உயர்ந்த ஓவியங்கள்

எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை
திரு

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✱✱✱

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✱✱✱

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

*Tamil*
*First Edition: 5000*
*May, 1961*

# SIRUKATHAI-K-KOVAI

ANTHOLOGY OF MODERN SHORT STORIES

PRICE Rs. 1—50

Published under the auspices of
The Southern Languages Book Trust, Madras
Second Series: Tamil 6

S. R. SUBRAMANIA PILLAI
PUBLISHERS : : TIRUNELVELI

*Shanmugam Press Private Limi...*

# பொருளடக்கம்


1. மகன் வந்தான் ... 1
டி. எஸ். கோதண்டராமன்
2. உருவத்தைத் தாண்டி ... 18
ஆர். சூடாமணி
3. தெளிவு ... 31
ஏ. எஸ். ராகவன்
4. பிரசாதம் ... 45
சுந்தர ராமசாமி
5. வட்டிற்சோறு ... 69
பூவை எஸ். ஆறுமுகம்
6. துணை ... 79
விக்ரமன்
7. செல்லம்மாளின் மறுமணம் ... 92
பூர்ணம் விசுவநாதன்
8. வேப்பம் பழம் ... 105
நா. பார்த்தசாரதி
9. கௌரி ... 119
கி. பாலசுப்ரமண்யன்
10. கவலை ... 130
ஸ்ரீரஞ்சனி
11. அன்னை ... 138
சரோஜா ராமமூர்த்தி
12. சிதைந்த கூடு ... 153
வாசவன்
13. புதிர் ... 166
வேங்கடலட்சுமி

# அணிந்துரை

சி. சுப்பிரமணியம்

(தமிழ்நாட்டு நிதி, கல்வி அமைச்சர்)


மொழி, நாகரிகம், கலை முதலியவற்றில் பெரிதும் ஒற்றுமையுடையவர் தென் பகுதி மக்கள். சரித்திர காலத்திற்கு முன்பிருந்தே இவ்வொருமைப்பாடு வேரூன்றி இருந்தது. ஆனால், சில நூற்றுண்டுகளுக்கு முன்னுல் இவ்வொற்றுமை உணர்ச்சி குறைந்து போய்விட்டது. காலம் செய்த இடையூற்றை நீக்கி, தென் பகுதி மக்களிடையே ஒரு பகுதியினரின் கருத்துக்கள் மற்றப் பகுதியினருக்கும் பரவும் வகையில் தென்மொழிகள் புத்தக டிரஸ்ட் பாடுபட்டு வருவதைக் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

1955-ல் சென்னையில் நமது நாட்டின் தலைமை அமைச்சர் ஸ்ரீ ஜவகர்லால் நேரு அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட டிரஸ்ட் நாள்தோறும் நல்ல முறையில் முன்னேறி

வருவது மிகவும் பாராட்டுக்குரியது. இந்நிறுவனம் குழந்தைகள் முதற்கொண்டு பெரியவர்கள் வரை எல்லோருக்கும் பயன்படும் வகையிலே பல புத்தகங்களை வெளியிட்டிருக்கின்றது. குறிப்பாகத் திருக்குறள் போன்ற நூலை, கன்னடத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டிருப்பது மிகவும் போற்றுதற்குரியது.

கருத்துப் பரிமாற்றத்தில்தான் மனித இனத்தின் அறிவு வளர்ச்சியும் உலக அமைதியும் அடங்கியிருக்கின்றன. இவ்வுண்மையை அடிப்படையாகக் கொண்டு தென் பகுதியிலே உள்ள சிறந்த நூல்களைக் குறைந்த விலையிலே மற்ற மொழியாளரும் அறிந்துகொள்ளும் வகையிலே ஆக்கப் பணிபுரியும் டிரஸ்டின் சேவை மேலும் மேலும் வளர்ந்து பயன்படும் என நினைக்கிறேன். புத்தகங்கள் வெளியிடுவதோடு மட்டுமல்லாது கருத்து அரங்கிற்கு ஏற்பாடு செய்வதிலும், ஆராய்ச்சி வேலைகளிலும் இப்புத்தக டிரஸ்ட் ஈடுபட்டிருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியது. குறிப்பாக, குழந்தைகளின் புத்தகம் படிக்கும் பழக்கத்தைப் பற்றி அவர்கள் ஆராய்ச்சி நடத்தியிருப்பது நாட்டிற்கு மிகவும் நன்மை பயக்கும் என்று எண்ணுகிறேன். புதிதாக அவர்கள் தமிழில் வெளியிட இருக்கும் நூல்கள் தமிழ்ப் பெருமக்களிடையே பெரும் ஆதரவோடு திகழும் என்று எண்ணுகிறேன்.

இத்துறையில் அவர்கள் மேலும் மேலும் பல சிறந்த நூல்களை எளிய விலையில் வெளியிட்டுத் தென் பகுதி மக்களுக்கும், நாடு முழுமைக்கும் பயன்படும் வகையில் முன்னேற இறைவன் அருள்வானாக.



# மகன் வந்தான்

டி. எஸ். கோதண்டராமன்

தெருவில் மாட்டு வண்டியின் 'ஜல், ஜல்' என்ற ஒலி கேட்டதும் கனகம் அம்மாள் பரபரப்புடன் வெளியே வந்தாள். அவள் வீட்டைத் தாண்டிக்கொண்டு கீழ்த் திசை நோக்கிச் சென்றது வண்டி. மாட்டு வண்டி போவதையே சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்த கனகம் மெல்லிய நகைப்பைச் சிதற விட்ட வண்ணம் உள்ளே செல்லத் திரும்பினுள். கிழக்குப் பக்கத்திலுள்ள யார் வீட்டுக்கோ யாரோ போய்க் கொண்டிருக்கிருர்கள். அவளுடைய அருமை மகன் துரை அந்த வண்டியில் வரவில்லை. இதில் ஏமாற்றத்துக்கு என்ன இருக்கிறது? அன்றைய தினம் கிராமத்துக்கு வருவதாக துரை கடிதம் ஏதும் எழுதவில்லை. கடந்த இருபது வருடங்களாக ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு விநாடியும் துரையின் வருகையை எதிர் பார்த்துக் கொண்டிருப்பதைப் போலவே அன்றைக்கும் அவனை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருள், கனகம்.

துரை இன்றைக்கும் வரவில்லை.

இப்படி எண்ணிப் பார்ப்பதற்குக்கூடக் கனகம் கூசினுள். இன்றைக்கு வரவில்லை என்று எப்படிச் சொல்ல முடியும் ? பொழுது விடிந்ததிலிருந்து, அப்படியும் இப்படியுமாக, மணி பதினென்றைத்தானே தாண்டியிருக்கிறது ? சூரியன் மறைவதற்கே இன்னும் ஏழு மணி நேரம் இருக்கிறது. அதற்குப் பின் பன்னிரண்டு மணி நேரம் இராப் பொழுது ! அதற்குள் துரை வராமலா போய்விடுவான் ? அப்படி வராவிட்டால்தான் என்ன ? மறுநாள் பன்னிரண்டு மணி காலத்திற்குப் பகலும் பன்னிரண்டு மணி காலத்திற்கு இரவும் இருக்கின்றன. அதற்கு மறுநாளும் அப்படியே தான்...

'என்னுடைய துரை என்னைப் பார்க்க வராமல் இருக்க மாட்டான். கட்டாயம் வருவான் ! என் அருமை மகனுயிற்றே ! வராமல் இருப்பானு ?'

அந்தப் பெரிய, பழைய வீட்டில் வாசலுக்கு எதிரில் பெரிய முற்றம். தெற்குப் பார்த்த வீடு. முற்றத்தின் கிழக்கெல்லை, வீட்டின் தாய்ச்சுவர். மற்ற மூன்று பக்கங்களிலும் விசாலமான தாழ்வாரங்கள். வாசல் படிக்கட்டைத் தாண்டியதும் ஒரு இடைகழி. அதன் இருபுறமும் இரு அறைகள். இடை கழியைக் கடந்தால் தாழ்வாரத்தில் வாசலை நோக்கி, ஒரு கை இல்லாத நாற்காலி. அதுதான் கனகத்தின் பகற்பொழுது ஸ்தானம் !

அந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டுதான் துரையைப் பற்றிய நினைவுகளில் ஈடுபடுவாள், அவள். இன்றைக்கா, நேற்றைக்கா ? இருபது வருடங்கள் உலகத்தில் வேறு எந்தத் தனி மனிதனும் இவ்வளவு கற்பனை செய்ததில்லை என்று சொல்லும் அளவுக்குக் கற்பனை செய்து பார்த்திருக்கிருள், கனகம்.

சென்று போன, எண்ணற்ற, எத்தனையோ நாட்கள் இருக்கட்டும்; இன்றைக்குத் துரை வந்து விடுவான் என்று நிச்சயமாக நம்பினுள், கனகம்.

'துரை இன்று கட்டாயம் வரப்போகிருன் !...முற்றத்தில் காகம் வெள்ளை எச்சம் இட்டிருக்கிறதே ! என்னைத் தேடிக்

கொண்டு வேறு யார் வரப் போகிறார்கள்? உற்றமா, சுற்றமா?......துரைதான் வருவான்!...'

ஐம்பது வயதை நெருங்கிக் கொண்டிருந்த வற்றிப் போன உடலில், உட்குழிந்த கண்களில் நம்பிக்கை ஒளி வீசிற்று. துரையின் வருகைக்காகக் கல்பகோடி காலமானாலும் பெரும் நம்பிக்கையோடு காத்திருக்கத் துணிந்த மனம் பெருமிதத்தால் விம்மியது.

கண்டிப்பாக இன்று வரத்தான் போகிறான், அவன். அம்மா காத்துக் கொண்டிருக்கிறாள் என்பது அவனுக்குத் தெரியாதா?...

'துரை, உனக்காகக் கீரைக்கூட்டு பண்ணிவச்சிருக்கேண்டா! உனக்கு ரொம்பப் பிடிக்குமேன்னுதான் பண்ணினேன். அன்னிக்கு அப்பாவுக்குக்கூடப் போடாமல் எல்லாத்தையும் எனக்கே போட்டு விடுன்னு சொன்னியே? அப்புறம், நீ கீரைக்கூட்டு சாப்பிட்டியோ, இல்லேயோ? உன் வாய்க்கு வகையா யார் பண்ணிப் போட்டிருக்கப் போறா? அதனால்தான் நான் தயாரா வெச்சிருக்கேன்!... ஆமாம், அன்னிக்குக் கூட்டு நன்றாக இருந்த தோன்னோ? சாப்பிட்டுக் கொண்டிருக்கிறபோது, கீரையைக்கூடச் சாப்பிடாமல் பாதியிலே எழுந்து, அன்னிக்கு...'

* * *

அன்றைக்கு சனிக்கிழமை. பள்ளிக்கூடம் இல்லை. காலையில் எட்டரை மணிக்குப் பழையது சாப்பிட்டு விட்டு வெளியே புறப்பட்டான், துரை. அவனுடைய தந்தை அருணாசலம் ஏழு மணிக்கெல்லாம் வண்டியைக் கட்டிக் கொண்டு கழனியைப் பார்க்கச் சென்றுவிட்டார்.

துரை வீடு திரும்புகையில் மணி பதினொன்று. பரட்டைத் தலையும் வியர்வை வழியும் முகமுமாய் வீட்டுக்குள் நுழைந்தான். மைல் கணக்காக ஓடி வந்தவனைப்போல் மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கிற்று. அவனைக் கண்டதும் கனகம் பயந்தே போனாள்.

"ஏண்டா, இப்படி இரைக்க இரைக்க ஓடி வரே? யாரோடு சண்டை?..."

ஐந்து நிமிஷம் சென்ற பிறகுதான் அவனால் பேச முடிந்தது. "சண்டையு மில்லே, மண்டையு மில்லே" என்றபடியே கொல்லைப்புறம் நோக்கி நடந்தான்.

அவன் முதுகைப் பார்த்தபடியே கனகம் நின்றாள். மாநிறம் என்றுகூட சொல்வதற்கில்லை. கறுப்புதான். பதின்மூன்று வயதே ஆன சிறுபிள்ளையின் உடல்போல் இல்லை. தோலில் வழுவழுப்பும் மினுமினுப்பும் தென்பட வில்லை. வறட்சியாய், தடித்துப் போன மாதிரி தோன்றிற்று.

கனகத்தினுள்ளே தாய்மையுணர்ச்சி பொங்கியெழுந் தது. "ஏண்டா, இப்படித் தெரு நாய் மாதிரி அலைகிறாய்? படித்துப் படித்து ஆயிரம் தடவை சொல்லிவிட்டேன். ஒரே ஒரு பிள்ளை என்று சலுகை காட்டினால் பாழாய்ப் போகிறாயே! அப்பாவிடம் அடி வாங்காத நாள் உண்டா? தெருப் பசங்களைச் சேர்த்துக் கொண்டு ஏன் தத்தாரியாய்த் திரிகிறாய்? கிட்டா மாமாவின் பிள்ளையைப் பார். எத்தனை சமர்த்தாக இருக்கிறான்!..."

அவள் அங்கலாய்ப்பு படர்ந்து நீண்டுகொண்டே போயிற்று.

கொல்லைக் கதவை மடேர் என்று சாத்திவிட்டு, மேலண்டைத் தாழ்வாரத்திற்கு வந்தான், துரை. ஒரு எம்பு எம்பி, மேலே கொடியில் உலர்த்தியிருந்த மேல் துண்டை எடுத்துக் கொண்டான்.

"அம்மா, நான் குளிச்சுட்டு வந்துடறேன்..."

அவன் சொற்களிலேதான் எத்தனை பணிவு, அன்பு, மரியாதை! தேனொழுக்குப்போல் பேசுகிறான்! 'இவனைப் போய் முரட்டுப் பிள்ளை என்கிறார்களே, ஊரார்? இவனளவு சாமர்த்தியம் மற்றவர்களுக்கு வரட்டுமே, பார்க்கலாம். சிறு பிள்ளையானதால் கொஞ்சம் விளையாட்டுத் தனமாய் இருக்கிறான். அவ்வளவுதான்!

" சீக்கிரம் வந்துவிடடா, துரை "—ரேழியைக் கடந்து கொண்டிருந்தவனைப் பார்த்துக் கூவினாள், கனகம்.

" சரி, அம்மா. "

" நீபாட்டுக்குத் துளையாதே. அக்கரைக்கும் இக் கரைக்குமாய் நீச்சல் போடாதே. உச்சி வேளை. ஈ, காக்காய் இருக்காது, குளத்தங்கரையிலே. ஐயோ, பிள்ளையே! ஒன்பது மணிக்கெல்லாம் குளிச்சிட்டு வந்திருக் கப் படாதோ ?... "

" அஞ்சு நிமிஷத்திலே வந்துடறேன், அம்மா !"

" ஜாக்கிரதை... "

அரை மணிக்குப் பின்புதான் துரை திரும்பி வந்தான். கனகத்திற்கு அவன் திரும்பி வரும்வரை வயிற்றில் நெருப்பு. ஒவ்வொரு நாளும் இப்படித்தான்.

துரை தலைவாரிக் கொண்டு கண்ணாடியை ஆணியில் மாட்டினான்.

" சாப்பிட வரயா ?"

" அப்பா வந்துடட்டுமே"

கனகத்திற்குக் கனகாபிஷேகம் செய்தாற் போல் உள்ளம் குளிர்ந்தது.

" அவர் எப்போ வருவாரோ ? ஏண்டா பசிக்கல்லே ? மணி பன்னிரண்டாகிறது. எட்டு மணிக்குப் பிடி பழையது சாப்பிட்டதுதானே ?"

அவனுக்கு என்ன தோன்றிற்றோ, " சரி, சாதம் போட்டுடு" என்றான்.

கனகம் இலையைப் போட்டாள். எதிரில் வந்தமர்ந் தான், துரை. அவன் கண்கள் விரிந்தன.

" பேஷ், பேஷ் ! கீரையா ?... இன்னிக்கு ரொம்ப நன்னா யிருக்கு ! கொஞ்சம்தான் பண்ணினியோ ?"

தாய் பூரித்துப் போனாள்.

"நிறையப் பண்ணியிருக்கேன்! உனக்கு வேணுங்கிறதைப் போட்டுக்கோயேண்டா!..."

"அப்படீன்னு, அப்பாவுதையும் சேர்த்து எனக்கே போட்டுடேன்!..."

கனகம் இன்ப வாரிதியில் திளைத்தாள். 'இவ்வளவு அழகாகப் பேச, இந்த ஊரில் வேறு எந்தப் பிள்ளைக்காவது வருமா?'

"எங்கேடி, அந்தத் தத்தாரி..."

வீடு அதிர்ந்தது. கனகம் நடுங்கினாள். துரை, வாயில் இருந்த கீரையை விழுங்க முடியாமல் உணர்வற்றுப் போனான்.

அருணாசலம் சமையற் கட்டுக்கு வந்தார்.

"வெக்கங்கெட்ட பயலே, உனக்குச் சோறு ஒரு கேடா?...பழி, பழி, கோடாலிக் காம்பா வந்து முளைச்சிருக்கயே..."

"அவன் சாப்பிட்டு முடிக்கட்டுமே. அப்புறம் திட்டலாம்" மெல்லச் சொன்னாள், கனகம்.

"எல்லாம் உன்னால்தான்! நீ கொடுக்கிற செல்லம்... தெருவிலே போனால் என் மானம் போகிறது...சுப்பையன் தோட்டத்துக்குள்ளே புகுந்து, அத்தனை கொய்யா மரத்தையும் உலுக்கியிருக்கான்..."

"நான் ஒண்ணும் அங்கே போகல்லே..."

பிரமாதமான கோபம் வந்துவிட்டது, அருணாசலத்துக்கு. கையைப் பிடித்துத் தூக்கி நிறுத்தினார், அவனை.

"பொய்யா சொல்றே?"

பளாரென்று ஓர் அறை. அவன் கலங்கவில்லை. மலை போல் நின்றான்.

அவனை உலுக்கித் தள்ளிவிட்டு வெளியே வந்தார், அவர். "எங்கேயும் தொலைஞ்சுபோக மாட்டேங்கிறயே? நீ போயிட்டீன்னா நான் நிம்மதியா இருப்பேன். பாபம்... பாபம்!..."

ஒரு நிமிஷம் நகர்ந்தது. வாசலைநோக்கி அம்புபோல் பாய்ந்தான், துரை.

"துரை, துரை,...இங்கே வாடா..." கனகம் விம்மினுள்.

"ஏண்டி அழறே? வயத்திலே இருக்கிற கொய்யாப் பிஞ்சு ஜீரணமானுல் தானே வருகிருன்!"

அவன் வரவில்லை.

'இன்றைக்கு வருவான். முற்றத்தில் எத்தனை காக்காய்கள் கத்துகின்றன!...இருபது வருடங்கள் ஓடி விட்டனவே! ஒரு வேளை, வீட்டை அடையாளம் கண்டு பிடிக்க முடியாமல் தவிப்பானே? மாட்டான். நான்தான் பகல் முழுவதும் வாசலுக்கு எதிரேயே நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறேனே!'

* * *

அப்போது ஏற்பட்ட மனவீழ்ச்சிக்குப் பின் அருணுசலம் நிமிரவே யில்லை. பல வாரங்கள், பல மாதங்கள் தேடினுர். தெரிந்தவர், அறிந்தவர்களுக்கெல்லாம் கடிதம் எழுதினுர். மாதங்கள் பறந்தனவே தவிர மகிழ்ச்சி தரும் செய்தி வரவில்லை.

ஒரு வருஷம் மறைந்தது.

துரை வீட்டிலிருந்து ஓடிப்போன அதே நாள். காலையில் எழுந்ததிலிருந்து பித்துப் பிடித்தவர்போல் உட்கார்ந்திருந்தார், அருணுசலம். இவ்வளவு அதைரிய மாய் அவர் என்றைக்கும் இருந்ததில்லை.

"கழனிக்குப் போகல்லியா?" தூரத்தில் நின்றவாறே கனகம் கேட்டாள்.

பதிலில்லை. அருகே வந்தாள்.

"மணி எட்டாயிடுத்தே!"

அவருக்குத் தன் மனைவியைப் பார்க்க வெட்கமா யிருந்தது. உச்சி முகட்டைப் பார்த்தார்.

"சரியா......ஒரு வருஷம்......ஆயிடுத்து......"

கனகம் தன்னைத் தைரியப் படுத்திக் கொண்டாள். “ தானே வருவான்......எழுந்திருங்கோ......”

“ கனகம்......கனகம்......” அருணாசலம் முகத்தைக் கைகளில் புதைத்துக்கொண்டு விசித்து அழுதார்.

“ரொம்ப நன்றாயிருக்கு! நீங்கள் செய்ற காரியமா இது?......சீக்கிரம் அவன் வந்துடுவான்......”

அவள் உள்ளே போய்விட்டாள். ஒரு மணி நேரம் சென்று வெளியே வந்து பார்த்தபோது அவரைக் காணோம். வாசலில் நின்ற வண்டியையும் காணவில்லை.

* * * *

இந்தச் சம்பவத்திற்குப் பின் துரையைப் பற்றி இருவரும் பேசத் துணியவேயில்லை. அவன் எப்பொழுதும் அவர்கள் நினைவில் வாழ்ந்து வந்தான்; இதயத்தை நிறைத்தான்.

அருணாசலத்திற்கு எள்ளளவும் சந்தேகமில்லை, துரை இந்த உலகில் இல்லை என்பதில். குளத்தில் விழுந்தானோ, ரயிலில் அரை பட்டானோ, பசியால் வாடிச் செத்தானோ? ஆனால், அவன் உயிரோடு இல்லை.

வீட்டை விட்டுச் செல்கையில் அவன் விவரம் அறியாத பாலகன் அல்ல. மூன்றாவது பாரம் படித்துக்கொண்டிருந்த இளைஞன். வயதுக்கு மீறிய பொது அறிவு; உலக ஞானம். வகுப்புப் பாடங்களில் இரட்டை இலக்க மதிப்பெண்ணைப் பார்ப்பதே அரிது. ஆனால், அவன் அசடு இல்லை. கட்டுப் பாட்டை விரும்பாத தனிப்போக்கு. வெளிக் காரியங்களில் அசகாய சூரன். ஓட்டப் பந்தயத்தில் அவன்தான் முதல்!

வாசற் கதவு ‘கிர்ர்...கிர்...கிர்...’ என்று ஓலமிட்டது.

“ யாரது?” என்றார் அருணாசலம், முன் அறையில் அமர்ந்திருந்தபடியே.

“ நான்தான் மாமா, கோபாலன். அடேயப்பா, இந்தக் கதவு என்ன மாமா, இரும்பு மாதிரி கனக்கிறது! அதைத் தள்ளுவதற்குள் என் கையில் வலி கண்டுவிட்டது!...”

“ போடா, சோனிப்பயலே! எப்போ வந்தே?”

" நேற்றைக்கு ராத்திரி. சௌக்கியம்தானே மாமா?"

" உம். உட்கார்."

" இல்லே. நான் போகணும். மாமியும் சௌக்கியம் தானே? சரி, நான் வரேன். சும்மா பார்த்து விட்டுப் போகத்தான் வந்தேன்."

துரையோடு சேர்ந்து படித்தவன், கோபாலன். கல்லூரியில் இரண்டாவது ஆண்டுத் தேர்வை எழுதிவிட்டு வந்திருக்கிறான், அவன். துரை இருந்தால்?......ஆஜானு பாகுவாய் வளர்ந்திருப்பான்! வாசற்கதவைத் தள்ள முடிய வில்லையே, கோபாலனால். துரையாக இருந்தால், ஒரு உதையில் திறந்துவிட மாட்டானா! பழைய வீடு. குறுகலா, கனமான நிலைப்படி. அதற்கேற்ற கதவுகள்.

" துரை, நான்பாட்டுக்குப் பணத்தைச் சேமித்துக் கொண்டே போகிறேன். யாருக்காகடா, இவ்வளவும்? நீ உயிரோடு இருந்தால் வரமாட்டாயா? எனக்காக வர வேண்டாம், உன் அம்மாவுக்காக வரமாட்டாயா? நீ வந்து விடுவாய் என்று அவள் எவ்வளவு நிச்சயமாய் இருக்கிறாள், தெரியுமா?......"

ஐந்து வருடங்கள் ஓடிவிட்டன. ஆனால் கனகத்தின் நம்பிக்கையில் ஐந்து அரிசி முனையளவுகூடக் குறைய வில்லை.

சென்ற வருஷம், அருணாசலத்தின் ஒன்றுவிட்ட அண்ணா பெண்ணுக்குக் கல்யாணம். அண்ணாவே வந்து அழைத்தார். கல்யாணம், பத்து மைல் தூரத்தில்தான் நடைபெற விருந்தது. முகூர்த்தத்தன்று அதிகாலையில் வண்டியைக் கட்டிக்கொண்டு புறப்பட்டால், சாப்பாடு முடிந்ததும் திரும்பி வந்துவிடலாம். அருணாசலம் இரண்டு, மூன்று தடவைகள் கனகத்தை அழைத்தார். அவள் வரவில்லை.

" நீங்கள் போய்விட்டு வாங்கோ. நாம் இல்லாத சமயத்தில் அவன் வந்து, பூட்டி யிருக்கும் வீட்டைப் பார்த்

தால் எப்படி ஏமாந்து போவான்! ஊஹூம். நான் வர மாட்டேன்''

கடைசியில், அருணாசலம் மட்டும்தான் போனார்.

* * * *

அருணாசலத்தின் வாடிய உடல் படுக்கையில் கிடந்தது. இராப்பகலாய்ப் பணிவிடை செய்துவந்த கனகமும் சோர்ந்து காணப்பட்டாள். உறவில்லாத உறவைச் சிருஷ்டித்துக் கொண்டு ஐந்தாறு பேர்கள் ஒரு மாதமாக வீட்டில் டேரா போட்டுவிட்டார்கள். 'கிழம் தலையைப் போட்டால், சொத்தில் நாலில் ஒரு பங்காவது நமக்குக் கிடைக்காதா?' என்று ஒவ்வொருவருக்கும் உள்ளுக்குள் நைப்பாசை.

அருணாசலம் இருமினார். கனகம் அவர் மார்பைப் பிடித்து விட்டாள்.

"நான் இனிமேல் பிழைக்கமாட்டேன்......'

"ஐயோ, அப்படிச் சொல்லாதேங்கோ......"

"எனக்குக் கொடுத்து வைக்கல்லே...யாரோ கொள்ளி போடப்போரு......"

"நீங்களும்தான் ஒரு மாமாங்கம் காத்துக் கொண்டிருந்தேள்."

"அவன் வருவான் என்று எனக்கு நம்பிக்கையில்லே."

"கட்டாயம் வருவான்!...என்னை விட்டுப் பிரிந்திருக்க அவனால் முடியுமோ?" கனகத்தின் குரலில் அவநம்பிக்கையின் ரேகையைக்கூடக் காணவில்லை. மாறாக, அமானுஷ்ய உறுதியின் சாயல் தோன்றிற்று.

அருணாசலம் அவளுக்காக வருந்தினார். 'இப்படியா ஒருத்தி இருப்பாள்!......மகனை இழந்த தாய் துடித்துத் துடித்து உயிர்விடமாட்டாளோ? இது என்ன, பைத்தியக்கார நம்பிக்கை!...எனக்குப் பின்னும் இவள், அவன் வரவுக்காகக் காத்திருப்பாள் போலிருக்கிறதே! அசடு!......'

"கனகம், கிட்டா மாமாவை அழைத்துக்கொண்டு வரச்சொல்லு. எல்லா விவரங்களையும் அவரிடம் சொல்லி விடறேன். விஜயத்தின் பிள்ளை ரொம்ப நல்லவன். அவன் இங்கேயே இருந்தால் உனக்கு ஆறுதல்; துணை; பின்னல், சொத்துக்கும்......"

"அதான் துரை இருக்கானே! வாரிசு இல்லாத சொத்து இல்லையே !......எனக்கு யாரும் துணை வேண்டாம். வேலைக்காரி இருக்கிருள். கூப்பிட்ட குரலுக்குக் கண்ணப் பன் இருக்கிருன்!......"

பதில் சொல்வது வீண் என்று நினைத்தார் அருணுசலம்.

"எல்லாம் துரை வருகிறவரைதானே! அவன் வந்துட் டால் எல்லாவற்றையும் அவனே பார்த்துப்பான். முதல்லே, இந்த வீட்டை இடித்துப் புதிசாகக் கட்டச் சொல்லணும். குழந்தை இந்தப் பழைய வீட்டைப் பார்த்தாலே சிரிப் பான்! வாசற் கதவை யாரால் சாத்தித் திறக்க முடி கிறது?......"

அருணுசலம் கேட்டுக் கொண்டிருப்பதாக அவள் நினைப்பு. ஆனுல், அவளுடைய குரல் கேளாத இடத்தைச் சேர்ந்துவிட்டார், அவர்.

* * * *

கிட்டா மாமாவுக்கு அறுபதாண்டு நிறைவுக் கல்யாணம் நிகழ்ந்து பத்துப் பன்னிரண்டு வருஷங்களுக்கு மேல் ஆகி யிருக்கும். அவருடைய வயதுக்காக இல்லாவிட்டாலும், குரலுக்காகவாவது எல்லோரும் அவரிடம் மரியாதை செலுத்தியாகவேண்டும். கிராமத்தில், அவர் வாக்குத்தான் கடைசித் தீர்ப்பு. நெறி தவருத மனிதர். எல்லா வீடு களிலும் அவருக்குச் சுதந்திரம் உண்டு.

தெருவோடு போய்க் கொண்டிருந்தவர் திறந்து கிடந்த வாசலுக்கு அப்பால், நாற்காலியில் உட்கார்ந்திருந்த கனகத்தைப் பார்த்தார். உள்ளே நுழையலாமோ, கூடாதோ என்று சந்தேகப் படுபவரைப் போலத் தயக்கத் துடன் வாசற்படியருகே வந்தார்.

கனகம் எழுந்தாள்.

"வாங்கோ மாமா, ஏன் தயங்கறேள்?"

நிறைந்த வரவேற்பே அவருக்குத் தடுமாற்றத்தைத் தந்தது.

"ஒண்ணுமில்லே......'அது'க்கப்புறம் இந்த வீட்டுக்குள்ளே நுழையவேயில்லே. மூன்று வருஷமாச்சு...உன்னைப் பார்க்கவுமில்லே......"

"உங்க பேத்தி அடிக்கடி வருகிருள்."

"ஆமாம், ஆமாம்."

"உட்காருங்கோ." எழுந்து நகர்ந்தாள்.

"இருக்கட்டும். வீடு ரொம்ப சுத்தமா இருக்கே!"

"முந்தாநாள் கண்ணப்பனை ஒட்டடை அடிக்கச் சொன்னேன்."

"குத்தகைக்காரன் சரியா அளக்கிருனு?"

"உம், மாமனர் காலத்திலேருந்து முத்தையன் பழக்கமானவனுச்சே!"

"யோக்கியன்......"

தலையைத் திருப்பி நாற்புறமும் பார்த்தார், கிட்டா மாமா.

"ரேழிஉள் பூட்டியா இருக்கு?"

"ஆமாம்; ஒரு உள் பூட்டிக் கிடக்கு. இன்னொரு உள்ளில் நான் படுத்துக்கிறேன். ராத்திரியில் கதவைத் தட்டினுல் உடனே திறக்கச் செளகரியமா யிருக்குமோன்னே?"

கிட்டா மாமா ஒரு நிமிஷம் மெளனமா யிருந்தார்.

"உன்கிட்டே ஒரு காரியமா வந்தேன்......"

"சொல்லுங்கோ."

"நம்ப ஊர் சிவன் கோவிலைப் பார்த்திருக்கியோ?"

"எப்பவோ பார்த்திருக்கேன்."

"இப்ப ஒரேயடியா சிதிலமாகப் போயிடுத்து. புல்லும் புதரும் மண்டிக் கிடக்கு......கோவிலைச் செப்பனிடலாம்னு எல்லாரும் யோசனை பண்ணிக் கொண்டிருக்கா......"

"நல்லதுதான்."

"ரொம்பக் குறைச்சலா செலவழித்தால்கூட இருபதி னாயிரம் ஆகும். ஊரிலே வசூல் பண்ணினோம். ஐயாயிரம் கூடத் தேறல்லே. கொஞ்சம் நெருக்கினால் இன்னும் இரண்டு, ஒண்ணு கிடைக்கும். பாக்கி......"

அம்மாள் பதில் சொல்லவில்லை.

"உன்னைக் கேட்கலாமென்று எல்லாரும் அபிப்பிராயப் படுகிறார்கள். முழுக்கவே நீ கொடுக்கலாம். இந்தத் தொகை ஒண்ணும் உனக்குப் பெரிசில்லே!......இந்த மாதிரி நல்ல காரியம் செய்யவேணுமென்று உனக்கும் ஆசையா யிருக்கும். என்ன, நான் சொல்கிறது?"

கிடைக்கப்போகும் பதிலுக்காகத் தன்னுள் சில விநாடிகள் தவித்தார், மாமா.

"மாமா, நான் சொல்றனேன்னு கோவிச்சிக்கா தேங்கோ. இப்படி யெல்லாம் தர்மம் செய்ய எனக்கு அதிகாரமில்லே!"

"என்னது!"

"ஆமாம். நாளைக்கே துரை வந்துடுவான். அவ னண்டை வந்து கேளுங்கோ. மறுபேச்சுப் பேசாமல் கொடுத்துடுவான்!......"

"அவன் இனிமே வருகிறதாவது......"

"ஏன் வரமாட்டான்?...நீங்கள் பார்த்துக் கொண்டே யிருங்கோ. திடீரென்று ஒரு நாளைக்குத் துரை வந்து 'மாமா' என்று உங்களை அழைப்பான்!......நான் ஏன் பகல் முழுக்க இந்த நாற்காலியோடு ஒட்டிக் கொண்டிருக்கேன்? துரை வாசற்படி ஏறி உள்ளே நுழைவதைக் கண்ணால் காண

வேண்டும் என்பதற்காகத்தான்!......ராத்திரியில், கடைசி ரயில் ஊதிவிட்டுப் போய் அரைமணி நேரம் ஆகிறவரையிலும் வாசற் கதவைத் தாளிடமாட்டேன். அவன் வந்து வீட்டு வாசலில், தாழ்ப்பாளைத் தள்ளிக் கதவைத் திறக்கிற வரையிலும், காத்துக் கொண்டிருப்பதை என்னால் சகிக்க முடியாது.........”

பத்து நிமிஷம் கற்சிலைபோல் அமர்ந்திருந்து விட்டு வெறுங்கையுடன் திரும்பினார், கிட்டா மாமா.

* * * *

காலம் கடுகிச் சென்றது. கனகத்தின் உடல் தளர்ந்து கொண்டே வந்தது; உள்ளத்தில் பலம் ஏறிக் கொண்டே போயிற்று.

கிராமத்தினருக்கு அவளுடைய போக்கு பிடிபடவில்லை. ஆனால், அதைப் பற்றிக் கனகம் கவலைப்பட்டாளா? எப்போதும் போல்தான் மற்றவர்களுடன் பழகினாள். வீட்டைத் தேடிவரும் பெண்களுடன் சந்தோஷமாகப் பேசினாள். தன் வாழ்வில் எவ்விதக் குறையும் இல்லாதவளைப்போல், நிறைந்த வாழ்க்கையை அனுபவித்து விட்டவளைப்போல் கலகலப்பாகப் பழகினாள். துரையைப் பற்றிக் கூட மற்றவர்களிடம் தானாகப் பேசி அவர்களுள் வெறுப்பை உற்பத்தி செய்வதில்லை!

வேலைக்காரி தினமும் காலையில் வருவாள். இயந்திரம் போல் வீட்டுக் காரியங்களைச் செய்வாள். கொல்லைத் தோட்டத்திலிருந்து புதிதாகக் கறிகாய் பறித்துக் கொடுப்பாள். இரவு ஏழு மணிக்கு வீட்டுக்குத் திரும்புகையில் சோறும் கறியும் குழம்பும் எடுத்துச் செல்வாள். எல்லாம் துரைக்காகச் செய்தவை!

வெளி விவகாரங்களைக் கண்ணப்பன் நிர்வகித்தான். கனகத்திடம் உண்மையான அனுதாபம், அவனுக்கு. எசமானியின் மனம் கோணாமல் நடப்பான். ‘சின்ன எசமான் இருந்தாருன்னா, எவ்வளவு நல்லா இருக்கும்?’ என்று அவன் வருந்தாத நாளே இல்லை.

சிவன் கோவிலைப் பழுது பார்க்கக் கனகம் பணம் கொடுக்காததனால் கிட்டா மாமாவுக்கு அவளிடம் வருத்த மில்லை. அவளுக்கிருந்ததைப் போன்ற நெஞ்சுத் திடத்தை அவர் வேறு எந்தப் பெண்மணியிடமும் கண்டதில்லை. கனகத்திடம் பேசிவிட்டு வந்தபின், 'என்றேனும் ஒரு நாள் துரை வந்தாலும் வரலாம்' என்ற எண்ணம்கூட அவரிடம் இலேசாகத் தோன்றவாரம்பித்தது.

"எனக்கென்னமோ, துரை வந்துடுவான் என்றே படு கிறது" என்று, அண்டை வீட்டுக் குப்புசாமியிடம் சொன்னார்.

அவர் சிரித்தார். "போங்கோ, மாமா!......இந்த ஜன்மத்திலே நடக்கிற காரியமா? தீவாந்திர சிட்சை என்கிருப்பிலே இருபது வருஷம் ஓடிப் போயிடுத்தே!..."

மாமாவுக்குக் குப்புசாமியின் பேச்சை மறுக்க வேண்டும் போலிருந்தது. என்றாலும் தன் முடிவுக்குக் காரண காரியம் ஏதுமில்லை என்பதை அவரே உணர்ந்தார். ஆகவே தலையை அசைத்து விட்டுப் பேசாமல் இருந்தார்.

எதிரே கண்ணப்பன் வந்து கும்பிடு போட்டான்.

"என்னப்பா?" என்றார், மாமா.

"அம்மாவுக்கு உடம்பு சொகமில்லீங்க......"

"அருணாசலத்து வீட்டு அம்மாவுக்கா?"

"ஆமாங்க. ஒரு மாசமாவே ரொம்ப பலஹீனம். இன்றைக்குக் காலையிலேருந்து எளுந்திருக்கவே இல்லீங்க..."

"அடடே!...என்ன உடம்பு? ஜுரமா?"

"அதெல்லாமில்லைங்க. வயசாயிடிச்சு. சரியான சாப்பாடு இல்லே. மனோவியாதி......"

"சரி, நீ போ. நம்ம வீட்டுப் பொண்ணை அனுப்பி விசாரிக்கச் சொல்றேன்."

கண்ணப்பன் நகர்ந்ததும் தன் பேத்தி சரோஜாவை அழைத்துக்கொண்டு கனகத்தின் வீட்டுக்குச் சென்ருர், கிட்டா மாமா.

"எனக்கு ஒண்ணுமில்லே மாமா! ரொம்ப அசதிமாதிரி இருந்தது. படுக்கையிலேயே கிடந்தேன். கண்ணப்பன் பயந்து விட்டான் போலிருக்கு!......"

"சரோஜா வேணுமாஞல் இங்கே இருக்கட்டுமா? கூடமாட ஒத்தாசை செய்வாள்......"

"இப்போ எனக்கு என்ன வந்து விட்டது?......வேணு மாஞல் சொல்லி அனுப்புகிறேன்!"

உலர்ந்து நின்ற அவளைப் பரிதாபத்தோடு பார்த்து விட்டு வீட்டுக்குத் திரும்பிஞர், மாமா.

அன்றைய தினம் சமையலுக்காக அடுப்பு மூட்டு கையில், முற்றத்தில் காகம் கரைந்தது. ராஜபவனியின் போது, எல்லாவற்றுக்கும் முன்னதாக சுபச்செய்தியைத் தெரிவிக்கும் சங்கொலிபோல் கனகத்தின் செவிகளில் கேட்டது, அது. ஓடோடி வெளியே வந்து பார்த்தாள். முற்றத்தில் வெள்ளை எச்சம்!

கனகத்திற்கு உடல் பலஹீனம் பறந்து விட்டாற் போலிருந்தது. கொல்லைப் புறத்திற்குப் பாய்ந்து சென்று கீரைப் பாத்தியில் கைகளை ஓட்டிஞள்.

பகல் மறைந்து இருள் விரிந்தது. துரை வரவில்லை.

வேலைக்காரி வீட்டுக்குப் போய்விட்டாள். பின்கட்டுக் கதவுகளைத் தாழிட்டுக்கொண்டு முன்பக்கத்து அறைக்கு வந்தாள், கனகம். வாசற் கதவைச் சாத்தியபோதுதான் தன் உள்ளச் சோர்வை அவளால் உணர முடிந்தது. இடை கழியிலேயே சிறிது நேரம் தயங்கி நின்ருள். பின், அறைக் குள் படுக்கையில் படுத்தபோது உடல் நிலைகொள்ளவில்லை; புரண்டாள். இந்த மண்ணுலகத்துடன் அவளைப் பிணைத் திருந்த ஏதோ ஒன்று அவளிடமிருந்து நழுவிக் கொண் டிருப்பதாகப் பட்டது. 'கடைசி ரயில் வருகிற நேரம்தான். சற்றைக்கெல்லாம் வாசற் கதவைத் தாளிட வேண்டுமே!'

என்ன காரணத்தாலோ கனகத்தின் கண்களிலிருந்து பொலபொல வென்று கண்ணீர் பெருகி தலையணையை நனைத்தது. அசையாமல் கிடந்தாள், அவள்.

எவ்வளவு நேரம் சென்றதோ, வாசலில் மாட்டுச் சலங்கையின் ஒலி கேட்டதும் கண் விழித்தாள், கனகம். 'துரை வாசலில் காத்துக்கொண்டு நிற்கிறானோ?' சரேலென்று வாசற் கதவை நோக்கி நடந்தாள்.

அந்தப் பெருங் கதவை, வாசற் புறத்திலிருந்து, பூட்ஸ் அணிந்த காலொன்று படுவேகமாக உதைத்தது. அதன் வேகத்தைத் தடுத்து நிறுத்த முயன்றது, கனகத்தின் நெற்றி.

"ஐயோ, துரை......"

'அம்மா' என்று அலறியவன், கீழே விழுந்த அவளை அள்ளியணைத்தான். வெள்ளைச் சட்டை செஞ்சிவப்பாய் மாறியது.

"அம்மா, அம்மா!...இதோ, பாரேன்...உன் மகன்... நான்."

கனகம் மலங்க மலங்க விழித்தாள். நெற்றிப் பொட்டில் செந்நீர் பெருகிக் கண்களை மறைத்தது. 'துரை!' என்றாள், ஒடுங்கிய குரலில்.

தன் வீட்டுத் திண்ணையில் இருந்தபடியே மாட்டு வண்டியைப் பார்த்த கிட்டா மாமா குப்புவுடன் வந்து வாசலில் நின்றார். "யாரு, துரையா!" என்றபடியே உள்ளே வந்தார். அரிக்கன் விளக்கின் மங்கலான ஒளியில், கனகத்தின் முகத்தில் ஜீவனுடன் விளங்கிய மென்னகை அவரைப் பார்த்துச் சிரித்தது. 'துரை வந்துட்டான்!' என்று அவர் செவியருகே கிசுகிசுப்பதைப் போலிருந்தது!

'துரை, துரை' என்று கிட்டா மாமா அலறியதையும் பொருட்படுத்தாமல், கால் சராய்க்குள் விட்ட கையும் குனிந்த தலையுமாய், இருண்ட தெருவில் அவன் நடக்கத் தொடங்கினான்.

# உருவத்தைத் தாண்டி

ஆர். சூடாமணி

'க்ளிக் !'

கறுப்புத் துணிக்குள்ளிருந்து தலையை வெளியே இழுத்த மாணிக்கம் நீண்டதொரு பெரு மூச்சு விட்டான். எதிரே பெரியவர்களும் குழந்தைகளுமாய் உட்கார்ந்திருந்த கூட்டம் எவ்வளவு தூரம் அவன் பொறுமையைச் சோதித்துவிட்ட தென்று அவனுக்கல்லவா தெரியும்!

ஒரு நிமிஷம் அமைதியாய் உட்கார்ந்த கூட்டம் இப்போது சலசலத்துக் கலந்தது.

"படம் சரியாய் வந்திருக்குமில்லே?" என்றார் ஒரு நடுத்தர வயதினர்.

"அதைப் பத்திக் கவலையை விடுங்க!"

"எப்போ கொடுப்பீங்க படத்தை?" இது ஒரு பெண் மணி. வேறு யார் இவ்வளவு அவசரப்படுவார்கள்!

"நாளை சாயங்காலம் கொடுத்திடறேன்."

"அவ்வளவு நாழி ஆகுமா?" ஓர் இளைஞனின் மிடுக்கான குரல்.

" ஆகும் ஸார்."

"கொஞ்சம் 'டச்' பண்ணிக் கொடுங்க" என்ருர் ஒரு கிழவர், தம் முகத்துக் கோடுகளைத் தடவிக்கொண்டே. கோடுகள் அதிகமாய்ப் புகைப்படத்தில் தெரிந்துவிடப் போகிறதே என்ற கவலை. வயதுக்கும் சபலத்துக்கும் சம்பந்தமே கிடையாதோ?

" அப்படியே செய்யறேன் ஸார் "

"என் சட்டையிலிருக்கிற நீலப் பூ போட்டோவில் தெரியுமோ?" என்று கவலையோடு விசாரித்தாள் ஒரு ஐந்து வயதுப் பெண்.

மாணிக்கம் பதில் சொல்வதற்குள் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு சிறுவன், "வெள்ளையிலிருக்கிற பூ எங்கேயாவது படத்தில் தெரியுமா? மக்கு!" என்ருன்.

"ஏன் தெரியாதாம்? தடியா! அப்போ உன் புஷ் கோட்டு மட்டும் தெரியுமோ?"

" வாயாடிஞயாஞல் தலையில் குட்டுவேன்."

" நான் உன் காதைத் திருகுவேன்."

" ஏய், ஏய், இரையாதீங்க."

இவர்கள் வெளியே போய்த் தொலைய மாட்டார்களா? மாணிக்கம் உள்ளேயே புலம்பிஞன். சரியாக உட்காருவதற்குள் இந்த மனிதப் படை செய்த தொந்தரவு! அப்பப்பா! படம் பிடிப்பவனென்று ஸ்டூடியோவில் வந்து நின்றுவிட்டால் மனிதஞய் இருக்கக் கூடாது. இயந்திரமாகத் தான் மாறிவிட வேண்டும்.

" அப்போ நாளை சாயங்காலம் வரேன், படத்தை வாங்கிக்க."

" சரி ஸார்."

இரைச்சல், வாத விவாதங்கள், குழந்தைகளின் சண்டைகள். ஒரு வழியாய்க் கூட்டம் கடைசியில் வெளியில் சென்றது.

மாணிக்கம் ஆயாசத்துடன் முகத்தைத் துடைத்துக் கொண்டான். வெளியே தூங்கி வழிந்து கொண்டிருந்த வேலைக்காரச் சிறுவனை எழுப்பி உட்கார்த்திவிட்டு பக்கத்தி லிருந்த இருட்டறைக்குச் சென்றான்.

பத்து நிமிடத்தில் வெளி வராந்தாவில் பேச்சுக்குரல். படம் எடுத்துக் கொள்ள வந்தவர்கள்தான்.

மாணிக்கம் களைப்பைக் களைந்துவிட்டுப் புன்னகையை எடுத்துத் தரித்தவனாய் வெளியில் வந்தான்.

" வாங்க ஸார்."

ஒரு பெரியவர். உயரமாக, சற்று மாநிறமாய் இருந்தார். பஞ்சகச்ச வேஷ்டி, பனியன் தெரியும்படியாய் மஸ்லின் ஜிப்பா, மேலே அங்கவஸ்திரம், நெற்றியில் விபூதி; அதன் கீழ் சிறிதாய் ஒரு சந்தனப் பொட்டு. அவர் ஏதோ ஒரு பொதுநல ஊழியராம். அடுத்த வாரம் அவர் படத்தை ஒரு பிரபல பத்திரிகை வெளியிட விரும்பியது. அதற்குத்தான் வந்திருந்தார்.

" நல்லாப் பார்த்து எடுங்க" என்றார் கவலையோடு.

" அதுக்கென்ன. இதோ பாருங்க, இந்த ஸ்கிரீனைப் பின்னாலே வைக்கலாமா?" மாணிக்கம், சரியும் மரத்திரை ஒன்றைக் காட்டினான். சில பட்சிகள் பறக்கும் ஓவியத்தைப் பார்த்ததும் அம்மனிதர், " இது வேணாம். ஏதாவது பட்சி நூலா படிச்சிருக்கேன் நான்?" என்றார்.

" அப்போ இதைப் பாருங்க."

மரத்திரை சரிந்து இன்னொரு காட்சியைக் காட்டியது. நீர்த் துறையும் சில மரங்களும். ' இயற்கையை வரைகிற ஓவியனா நான்?' என்று கேட்பாரோ? மாணிக்கத்துக்குச் சந்தேகம்தான். ஆனால் ஏனோ அவருக்கு அக்காட்சி பிடித்து விட்டது.

" இது நல்லா யிருக்குது. உம், இங்கே கண்ணாடி ஒண்ணுமில்லையா?"

" அதோ அந்தச் சின்ன அறையில் இருக்குதே."

அவன் குறிப்பிட்ட அறையில் ஒரு மேஜை. அதன் மேல் சீப்பு, முகப்பௌடர் முதலியவை. சுவரில் நிலைக் கண்ணாடி, கோட்ஸ்டாண்ட் ஒன்றில் சில கோட்டுகள்—இவை இருந்தன. பெரியவர் அங்குச் சென்று கண்ணாடியின் முன் தம் அழகைச் சிறிது செவ்வைப் படுத்திக் கொண்டு திருப்தியுடன் வெளியே வந்தார்.

"நான் ரெடி."

"உட்காருங்க."

அன்றாட நாடகமேதான்.

'இப்படித் திரும்புங்க' 'கொஞ்சம் மேலே பாருங்க' ரொம்ப சாயாதீங்க' 'கொஞ்சம் சிரிக்கணும்.'

"சிரிப்பு அதிகம் வேணாங்க. பொதுநல ஊழியனுக்குச் சிரிக்க ஏதுங்க நேரம்?' என்றார் அவர்.

"இருந்தாலும் போட்டோவுக்கு......"

"அதிகப்படி நமக்கு இஷ்டமில்லை."

மாணிக்கம் பொறுமையாய் மேலே வேலையைக் கவனித்தான். படம் எடுக்கப்போகும் சமயம், "இருங்க இருங்க" என்றார் வந்தவர்.

"என்ன ஸார்?"

"பக்கத்திலே ஒரு மேஜைமேலே சில புஸ்தகம் வைத்தால் நல்லாயிருக்காது?"

'பொதுநல ஊழியருக்குப் படிக்க நேரமுண்டா?' என்று மாணிக்கம் கேட்கவில்லை; நினைத்துக் கொண்டான்.

"இதெல்லாம் என்ன புஸ்தகம்?"

"நீங்களே பாருங்களேன்" என்றான் மாணிக்கம்.

"இங்கிலீஷிலே இருக்குது. நமக்குத் தமிழ்தாங்க தெரியும். பரவாயில்லே. படத்துக்குத்தானே! என்ன புஸ்தகமானா என்ன?."

எல்லாம் பகட்டு, ஆடம்பரம். வெளித் தோற்றம். படம் பிடிக்கும் கலையே வாழ்வின் ஓர் இதயமற்ற, வெளிப் பூச்சான அம்சத்தைச் சித்திரிப்பதுதான்.

"படம் நாளை சாயங்காலம் கிடைக்கும். என்ன அள விலே வேணும்?"

"காபினட் ஸைஸிலே கொடுங்க."

தினம் இதே மாதிரிதான். மனிதர்கள் வருவதும் படம் எடுத்துக் கொள்வதும் வெளிப்புறத் தன்மைக்கு இலக் கணம் கூறும் ஒரு கலையாகவே அமைந்து விட்டது. மாணிக் கத்துக்கு அதுதான் சோறு போட்டது என்றாலும் மனித சமுதாயத்திலேயே ஒருவித இளக்காரம்—அதிகமாய்ப் போனால் பொறுமையுடன் பார்த்துச் சிரிக்கும் ஒரு மேல் நோக்கு—ஏற்பட்டது அவனுக்கு.

"வாங்க ஸார்."

ஓர் இளம் ஜோடி. புதுமணத் தம்பதி என்று சொல்லித் தானா தெரியவேண்டும்? இருவர் முகத்திலும் சிரிப்புப் பொங்கி வழிந்தது.

"நீ உக்காரு புஷ்பா. நான் பக்கத்திலே நிக்கறேன். அப்படித்தான் போட்டோ...."

"ஊஹூம்" அழகு கொஞ்ச பெண் சிணுங்கினாள். "நல்லா யிருக்குது! நான்தான் நிப்பேன்."

"கூடாது. அப்புறம் கால் நோவு வந்தால் நானில்லே பிடிக்கணும்?"

சூழ்நிலையை மறந்த உற்சாகம் ஆண் மகனுக்கு. ஆனால் பெண் மறக்கவில்லை. "சும்மா இருங்க" என்று கோபித்தாள். குரல் பொய்த்தது.

"அது போகட்டும், கையைப் பிடிச்சுக்கிட்டு நிக்க லாமா?"

"ஐயையோ, வேணாங்க!" நாணம் அழகிட்டது. "படத்தை வீட்டிலே எல்லாரும் பார்ப்பாங்களே! முதல்லே சண்பகம் என்ன சொல்லும்?"

சண்பகம் யாரோ, என்ன சொல்லக்கூடியவளோ, தெரியாது. ஆனால் அந்த நினைவினால் இருவரும் சிரித்துக் கொண்டார்கள்.

"கொஞ்சம் தலை சீவிக்க முடியுங்களா?"

"அந்த ரூமுக்குப் போங்க."

கேட்டவள் பெண்தான். ஆனால் கூடவே அவனும் சென்றான். இது சீக்கிரத்தில் முடியாதென்று மாணிக்கத்துக்குத் தெரியும். நிதானமாக ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக்கொண்டு உட்கார்ந்தான்.

அலங்கார அறையிலிருந்து பேச்சும் சிரிப்பும் கேட்டன. சிறிது நேரத்தில் தம்பதி வெளியில் வந்தார்கள். மாணிக்கத்துக்கு அவர்கள் தோற்றத்தில் எந்த முன்னேற்றமும் தெரியவில்லை. அவர்கள் கண்களுக்குத்தான் தெரியும் போலும்.

கணவனின் அருகில் ஒரு சிறு பலகையை வேலைக்காரப் பையன் கொண்டு வந்து போட்டான். மனைவி அதன்மேல் ஏறி நிற்கவும் உயரம் சமமாகியது.

முதலில் அப்படியே படம் எடுத்துக் கொண்டார்கள். பிறகு "இன்னும் ஒரு 'போஸ்' ஸார்!" என்றவாறு அந்த வாலிபன் மனைவியின் கையைப் பிடித்துக் கொண்டான்.

"ஸார், அந்த முதல் போட்டோவை நான் கொடுத்த வீட்டு விலாசத்துக்கே அனுப்பிச்சிடுங்க. அப்புறம்...வந்து... அந்த ரெண்டாவது 'போஸை'...இந்த விலாசத்துக்கு அனுப்பறீங்களா?" தயங்கித் தயங்கி வெட்கத்துடன் வாலிபன் இன்னொரு விலாசம் கொடுத்தான். அது அவனது காரியாலய விலாசம். கையைப் பிடித்துக் கொண்டிருக்கும் காட்சி வீட்டிலுள்ளவர்களுக்கல்ல, அவர்கள் இருவருக்கு மட்டும்தான்.

"ஆகட்டும் ஸார். அப்படியே அனுப்பறேன்."

அவர்கள் போனார்கள். வேறு பலர் வந்தார்கள். ஒரே இயந்திர ஒழுக்கம். அவனும் அதில் ஒரு விசை. மாணிக்கத்துக்கு அலுப்பாயிருந்தது. இந்த மேல் ஓட்ட நிலையைத்

தவிர அவன் தொழிலில் ஆழத்துக்கு ஒரு நிமிஷம்கூட இட மிருக்காதா ?

பெரிய கும்பல் வந்து அறையை ஆக்ரமித்தது. மாணிக்கம் ஒரு கணம் திகைத்துப் போய்விட்டான்.

"குழந்தையைப் படம் எடுக்கணுங்க. நல்லா எடுப் பீங்களா ?"

ஆண்களும் பெண்களுமாய்ச் சூழ்ந்திருந்த அந்தக் கூட்டத்துக்கு நடுவே மாணிக்கம் ஒரு சின்ன குழந்தை யைச் சிரமப்பட்டுக் கண்டு பிடித்தான்.

"எடுக்கறேனுங்க. பையா, அந்த மேஜையைக் காமிரா வுக்கு எதிரே இழுத்துப்போடு. குழந்தையை மேஜை மேலே விடுங்க."

"மூணு மாசத்துப் பிள்ளை இது. குழந்தை மிரண்டு போகாமே பிடிக்கணும்."

மாணிக்கம் கோபத்தை அடக்கிக்கொண்டு மேஜை மேல் ஒரு விரிப்பைப் போட்டான். "ம், குழந்தையை விடுங்க."

குழந்தை மேஜைமேல் விடப்பட்டது. "கண்ணுக் குட்டி, எங்கே சிரி ?" யாரோ கொஞ்சினார்கள்.

"பட்டுச் சொக்காய் போட்டிருக்குதே, அது படத்திலே நல்லா விழுங்களா ?"

"உம், விழும், விழும்."

"அதிலே இருக்கிற பூவேலை கையாலே செய்தது. அது நல்லாத் தெரியணும்." சொன்னவளின் குரலிலிருந்து பூ வேலை செய்தவள் அவள்தானென்பது வெட்ட வெளிச்சமா யிருந்தது.

"பாபு, சிரிடா கண்ணு! அதோ காமிராவைப் பாரு !"

"படம் பிடிச்சு குழந்தையின் தகப்பனுருக்கு அனுப் பணும். நல்லாப் பிடியுங்க."

மாணிக்கத்துக்குத் தாங்கவில்லை.

"குழந்தையின் பாட்டனுரே பார்க்கணும்னுக்கூட நல்லாயிருக்கும்படி பிடிக்கிறேன். கொஞ்சம் எல்லாரும் விலகிப் போங்க."

"அப்புறம் குழந்தை அழுமே!"

"அப்போ அதை வெச்சுக்கிட்டு எல்லாருமா உக்காந் துக்குங்க."

"ஐயய்ய, வேணும்."

எல்லோரும் விலகினுர்கள். ஆனுல் பேசுவதை நிறுத்த வில்லை. "கண்ணு, இதோ பாரு!"

"சிரிடா ராஜு?"

"காமிராவைப் பார்த்துப் பயப்படுது அது!"

"சிச்சிச்சிச்சிச்சி......" சப்தமிட்டார் ஒருவர்.

"இதோ பாரு? ஊஊஊ......"

குழந்தை சிரிப்பதற்காக முகத்தைக் கோணிக் கொண் டாள் ஒருத்தி.

"டக்கு டக்கு டக்கு!"

"த்ஸொ த்ஸொ த்ஸொ!"

இந்த இரைச்சலிலும் பட்டுச் சொக்காயின் புழுக்கத் திலும் குழந்தை மிரள விழித்து அழ ஆரம்பித்தது. சிரிப்பு வந்தது. மாணிக்கத்துக்குத்தான். குழந்தை கிடக்கட்டும், அதைச் சிரிக்க வைக்க முயலும் பெரியவர்கள் செய்து கொள்ளும் முக விகாரங்களை யெல்லாம் படம் பிடித்தால் எவ்வளவு நன்ரு யிருக்கும் என்று எண்ணினுன் அவன்.

"ஐயோ, அளுவுதே பிள்ளை!"

"நான் அப்பவே சொன்னேன், பழரசம் கொடுத்து எடுத்து வாங்கன்னு, யாரு கேக்கருங்க என் பேச்சை."

"அது ஒண்ணுமில்லே. தூக்க சமயம் அதுக்கு. விடியற்காலயே வேறு முழிச்சிக்கிட்டுதா?"

"அதுதான் நேத்து சாயந்திரம் பூரா தூங்கிச்சே?"

"அதுக்காகக் காலையிலே சீக்கிரம் முழிச்சிக்கிடுமா? தெரிஞ்சவ மாதிரிப் பேசறியே!"

"நான் நாலு குழந்தை பெத்தவ. எனக்குச் சொல்லித் தரியா நீ?"

எல்லோருக்கும் வீடு என்றே நினைப்பு. மாணிக்கம் கடைசியில் ஸ்டூடியோவிலிருந்த சில விளையாட்டுச் சாமான் களைக் காட்டி ஒருவிதமாய்க் குழந்தையின் அழுகையை நிறுத்திப் படம் எடுத்து முடித்தான்.

"அழகா வருமில்லே குழந்தை?"

அழகு அழகு! எப்போதும் அதுதான் லட்சியம். இந்த உலகத்தில் வெளித் தோற்றத்தைத் தவிர வேறொன்றுமே இல்லையா? அந்த வெளி உருவத்துக்கு மட்டுமே அழுத்தம் கொடுக்கும் புகைப் படத் தொழில் இதயமற்றதுதான்.

"வரும் வரும். கவலைப்படாதீங்க!"

இப்படி எவ்வளவு நாள்! குடும்பப் படம், வியாபாரத் துக்காகப் படம், கல்யாணத்துக்காகப் படம், குழந்தையின் படம், பெரியவர்களின் படம்......

"எங்கே தலை சீவிக்கலாம்? அழகாய் வருமில்லே?" இதேதான் கேள்விகள்.

"என்னுங்க போட்டோகிராபர் ஐயா! நல்லா விழணும் என் மகள் படத்திலே. பார்த்துப் பிடியுங்க."

வேறொரு நாளில் ஒரு தாயின் கரிசனம் இது. அவள் மகளின் அலங்காரத்திலிருந்தே கல்யாண நோக்கத்தோடு படம் பிடித்துப் பிள்ளை வீட்டாருக்கு அனுப்புகிறார்க ளென்பது தெரிந்தது.

"இதுவரை நாலு இடம் தட்டிப் போச்சுங்க. பெண் கறுப்புன்னு எல்லாரும் வேணுங்கருங்க. எங்க சரஸா முகத்து அழகு யாருக்கு வரும்? அதான் இனிமேல் படத்தையே அனுப்பறதுன்னு தீர்மானிச்சிட்டேன்."

கவலை மிகுதியில் தாய் தன்பாட்டில் சொல்லிக்கொண்டிருந்தாள். ஓர் அன்னியனிடம் சொல்கிறோமென்ற நினைப்பே இல்லை.

மீண்டும் படமெடுக்கும் வேதனை.

"கொஞ்சம் திரும்புங்க. இன்னும் சிரியுங்க."

மகளின் சேலையைத் தாய் அக்கறையோடு தடவி, ஒவ்வொரு இடத்திலும் ஜரிகைக் கரை முழுவதும் தெரியும் படியாய் விரித்து விட்டாள். கழுத்து ஆபரணத்தைச் சேலைக்கு வெளியே இழுத்துப் பொருத்தினாள். அது மட்டுமல்ல. தாயின் கரமல்லவா? படத்தில் விழாத பாகம் என்ற உணர்வு இன்றிப் பின்னால் சென்று மகளின் தலையிலிருந்த பூவைக் கூடக் குவித்துச் சரிப்படுத்தினாள்.

"படம் நல்லா வருமில்லே? சரஸா அழகா விழணும். கொஞ்சம் பார்த்துச் சரி செய்யணும்னாலும் செய்யுங்க."

இப்படி ஒருவகை.

அடுத்த நாள் வேறொருத்தி வந்தாள். சேலைக்குமேல் கறுப்பு அங்கி: கையில் சதுரமான கறுப்புத் தொப்பி; ஒரு காகிதச் சுருள்; பரீட்சை தேறியவள், 'கான்வகேஷன்' உடையில் தன் வித்தைப் பெருமிதத்தை விளக்கிட்டு வைத்துக்கொள்ள வந்திருந்தாள்.

"பின்னால் 'ஸ்க்ரீன்' அம்மா?"

"சித்திர ஸ்க்ரீன் ஒண்ணும் வேண்டாம். 'ஸிம்பிளா'க ஒரு துணி போடுங்க, போதும்"

கையில் தேர்வுப் பத்திரத்தைப் பிடித்துக்கொண்டு, பூக்கிண்ணம் ஏந்திய மேஜைமேல் முழங்கையைப் பதித்தவளாய்ச் சற்று மேல் நோக்கிய பார்வையுடன் நின்றாள் அவள். அதுதான் 'படிப்புப் பார்வை' என்ற எண்ணம். கறுப்புக் குல்லாய் அவள் தலைமேல் கோமாளித் தனமாய்க் காட்சியளித்தது. ஆனால் அவள் பெருமையாய்த்தான் நின்றாள். இனி அந்தப் பத்திரத்தைத் தொலைத்தாலும் இந்தப் படத்தைத் தொலைக்க மாட்டாள். தன் வித்தை

யைப் பறைசாற்றும் ஓர் ஆடம்பரச் சாதனமல்லவா அது ? நல்ல வித்தை! அடுத்த வருஷம் எவனுக்கோ கழுத்தை நீட்டி, வீடு எங்கே வம்பு எங்கே என்று அழப்போவதற்கு இது ஒரு படியா? என்ன படிப்பு! எல்லாம் வெளி ஜம்பத்துக்காக.

அடுத்ததாக வந்த ஆளும் மாணிக்கத்தின் எரிச்சலைக் குறைக்க உதவவில்லை. 'பாலிஷ்' ஜோடுகள் அணிந்த பாதங்களிலிருந்து, 'க்ரீம்' சுடர் விடும் கலையாத கேசம்வரை நாகரிகத்தில் திளைக்கும் அலங்காரத்துடன் ஓர் இளைஞன். படம் என்னவோ மார்புவரைதான் எடுத்துக் கொள்ளப் போகிறான். பெரிய சுங்க அதிகாரியின் மகனாம். பூ பராமரிப்புத் துறையில் மேற்படிப்புப் பெற அமெரிக்கா செல்கிறானாம். இந்த விஷயம் எல்லாப் பத்திரிகைகளிலும் அவனது புகைப்படத்தோடு விளம்பரம் ஆகப்போகிறதாம்.

இவன் அப்பாவை முதலில் யார் கண்டார்கள்? இவன் என்ன பயிற்சிக்காக எங்கே போனாலென்ன, போகாவிட்டால் என்ன? என்னவோ பொதுஜனங்கள் இதே சிந்தனையில் தூக்கமின்றிக் கவலைப்படுவதாக ஒரு பிரமை.

"படம் நல்லா வரணுங்க, 'டிப்டாப்'பா இருக்கணும். 'லைட்' பத்திரிகையில்கூட வெளியாகப் போவுது. 'பாஸ்போர்ட்' அளவு."

"சரி ஸார்."

ஒருவாறு அந்த ஆளும் வெளியேறிய பிறகு, மாணிக்கம் தன் கைக் குட்டையால் முகத்திலிருந்த வியர்வையையும் புன்னகையையும் வழித்தெறிந்தான்.

உஸ்! என்ன போலி வாழ்க்கை! ஆடம்பரம், அழகு உருவம், சீ!

கடிகாரத்தில் மணி ஆறடித்தது. ஸ்டூடியோவை மூடிச் சற்று நிம்மதி அடைவதென்பது உண்டா? சின்ன ஸ்டூடியோ. அவனே முதலாளி, அவனே படம் பிடிப்பவன். ஆனாலும் இன்று மனம் மிகவும் அயர்ந்து போயிருந்தது. வாயில் ஒரு சிகரெட்டுடன் வாசலுக்கு வந்தான்.

"ஸார்!"

அட துரதிருஷ்டமே! இன்னுமா ஆட்கள்? ஒரு ஆண், ஒரு பெண், பெண்ணின் கையில் ஒரு குழந்தை. குடும்பப் படமா?

"நாளைக்கு வாங்க. நான் வெளியே போறேன். வேறே ஆளு இல்லை."

அந்த மனிதன் ஏமாற்றத்துடன் மனைவியைப் பார்த்தான்.

"ரொம்ப தூரத்திலேருந்து வரோமுங்க. பஸ் கிடைக்க நேரமாயிடுத்து. இன்னிக்கு இல்லேன்னு திரும்பியும் குழந்தையைச் சிரமப்படுத்திக்கிட்டுத் தூக்கி வரணும்."

அப்பெண் பரிதாபமாகப் பேசினுள்.

"சரி சரி, வாங்க உள்ளே!" என்று முனகியவனுய் மறுபடியும் அறைக்குள் சென்றுன் மாணிக்கம்.

"பையா, ஸ்டூலைக் கொண்டு வந்து போடு. ரெண்டு பேரும் நிக்கத்தானே போறீங்க ஸார்? உட்கார்ந்து குழந்தையை மடியில் வைச்சுக்கறீங்களா?"

"கொஞ்சம் தலை சீவிக்க முடியுங்களா?" என்றுள் அப்பெண்.

"அந்த ரூமில் சீவிக்குங்க."

அவள் குழந்தையுடன் உள்ளே சென்றுள். கணவன் போகவில்லை.

"நீங்களும் போறதானுல் போங்களேன் ஸார். கோட்டு கூட மாத்திக்கலாம். இப்போ நீங்க போட்டிருக்கிற கோட்டைவிட அங்கேயிருக்கிறது படத்தில் நல்லா விழும்" என்றுன் மாணிக்கம், ஒரு சின்னஞ் சிறு ஏளனச் சிரிப்புடன்.

"வேண்டாம். நான் படத்துக்கு நிக்கப் போறதில்லை."

"அம்மாவும் குழந்தையும்தானு? பையா, அந்த ஸ்டூலை எடுத்திட்டு நாற்காலி மட்டும் வை. பின்னுலே என்ன மாதிரி ஸ்கிரீன் வேணும் ஸார்? அழகான படம் வரணுமில்லே!"

எத்தனையோ நாளாக இருந்த எரிச்சலெல்லாம் இன்று பேச்சில் வெடித்துச் சிதறியது.

"குழந்தையை மட்டும்தான் படம் எடுக்கணும்."

"அப்படிங்களா? அப்போ மேஜை மட்டும் போதும். பையா, மேஜையை இழு."

இதற்குள் தாயார் வெளியே வந்துவிட்டாள். கைகளில் அணைத்துப் பிடித்திருந்த குழந்தைக்குத்தான் தலை வாரிச் சீர் செய்திருந்தாள், தனக்கல்ல.

"குழந்தையை மேஜைமேலே விடுங்கம்மா. உட்காருகிற குழந்தையா? ரைட்! கையிலே ஏதாவது சாமான் கொடுக்கலாமா? அப்போ குழந்தை இன்னும் அழகா விழும் படத்திலே."

"எப்படி விழுந்தாலும் சரி" அம்மனிதன் மெதுவாகப் பேசினான். "எங்க குழந்தைக்கு வைத்தியம் இல்லாத ஒரு அபூர்வ ரத்த வியாதி. இன்னும் ரெண்டு மாசம்தான் தாங்குமாம். அதுக்காகத்தான்...ஒரு படம் எடுத்து வச்சிட்டா எப்பவும் பார்த்துக்கிட்டே இருக்க முடியுமில்லே......"

மாணிக்கத்தின் வாயிலிருந்து சிகரெட் தானே நழுவி விழுந்தது. தான் திடீரென்று தெய்வ சன்னிதானத்தில் நிற்பதாக உணர்ந்தான் அவன், அந்த மகத்தான துயரத்தின் முன்னே.

உலகத்தில் இதயமில்லாத இடமே இல்லை! ஆடம்பரத்துக்கெல்லாம் நடுவே ஓர் ஆழமான உணர்ச்சியா! செயற்கைகளுக்கெல்லாம் இடையில் இந்த இடத்திலும் ஓர் உண்மைத் தாபமா! இதயமற்ற விளம்பரமாய் இருந்த தொழில் இப்போது இரண்டு உள்ளங்களின் கரைகாணாச் சோகத்தைத் தாங்கித் தடவிக் கொடுக்கும் ஒரு புனிதத் தாயகமா!

அவன் பணிவாகி, பக்தியாகி, உறைந்து விட்டான்.

விம்மலோடு குழந்தையை மேஜைமேல் இருத்தி விட்டுத் தாய் விலகியபோது அவன் வெறும் விசையாய் இல்லை. மனிதனாய் மாறிக் காமிராவை நோக்கிச் சென்றான்.

# 3

# தெளிவு

ஏ. எஸ். ராகவன்

ஆற்றுப் பாலம் வரை நேர்க்கோடாக வந்த பாதை, திடீரென்று வலப்புறம் நோக்கித் திரும்பியது. சாலையின் இருபுறமும் தென்னை மரங்கள் அணி வகுத்திருப்பதைப் பார்த்தால், ராணுவப் படை ஒன்று நிற்பது போல் தோன்றியது. வெற்றிலைக் கொடிக்கால்கள், வாழைத் தோட்டங்கள், கரும்பு, நெல் எல்லாம் திமிறிக் கொண்டு வளர்ந்திருக்கும் காவேரிப் பகுதி எட்டிய வரை பச்சைப் போர்வையாக விரிந்தது.

இன்னும் இரண்டே பர்லாங்குகள்தான் பாக்கி. மயிலைக் காளை உற்சாக மிகுதியில் நாலு கால் பாய்ச்சலில் ஓடிக்கொண்டிருந்தது. என்றாலும், வண்டி ஊர்ந்து செல்வதாகவே அலமுவுக்குத் தோன்றியது. மனதின் வேகத்துக்கு அது ஈடு கொடுக்க முடியுமா ?

வாய்க்கால் கரைப் பிள்ளையார் கோவில் வந்து விட்டது. அருகே படித்துறையில் பெண்களின் சிரிப்பும் பேச்சும் கேட்டன. வேம்பும் அரசும் பிணைந்து நின்றன. அவற்றின் கீழ் சில நாகர்கள். அலமு இந்தப் படித் துறையில்தான் தினமும் குளிப்பது வழக்கம்.

தெருக் கோடியை நெருங்கியதும் ஈசுவரன் கோவில் கோபுரம் தென்பட்டது. கைகூப்பி வணங்கினாள் அலமு.

வீட்டை அடைந்ததும் "வாடியம்மா............ஏன் இப்படி இளைத்திருக்கிறது உடம்பு?" என்று கேட்டாள் கனகம், பெண்ணைப் பார்த்து.

"இளைத்தா இருக்கு?" என்று சிரித்தாள் அலமு.

"பின்னே என்ன? பருத்து விட்டதாக நினைப்போ?"

அலமு தன் உடலைப் பார்த்துக் கொண்டாள். வாஸ்தவத்தில் அவள் சற்று 'பூசினாற்போல்' பருத்துத்தான் இருந்தாள். அம்மாவுக்கு இது தெரியவில்லையே! விஷயத்தைச் சொன்னால் பூரித்துப் போக மாட்டாளா?

இரண்டு பெட்டிகள், ஒரு படுக்கை, பழக்கூடை, ஓலைத் தூக்கு, நாகரிகப் பை இவ்வளவும் வீட்டுக்குள் வந்தன. கனகம் அவற்றைப் பார்த்ததும் பெருமை அடைந்தாள். உடனே ஓடிப்போய்க் கோமளத்தைக் கூட்டி வந்து காட்ட வேண்டும். வாய்க்கு வாய் தன் பெண் வாழ்க்கைப்பட்டிருக்கும் பெரிய குடும்பத்தைப் பற்றிப் பெருமை பேசும் அவள் வாயை மூட அதுதான் வழி.

"மாப்பிள்ளை உடம்புக்கு ஒன்றுமில்லாமல் இருக்காரா?"

"உம்..............."

"ப்ரமோஷன்' ஆயிருக்காமே?"

"யார் சொன்னா?"

"நாலு நாள் முன்னாடி பட்டணத்திலிருந்து கண்ணன் வந்திருந்தான். அவன்தான் சொன்னான்...........உனக்கு எப்படிடா தெரியும்னு கேட்டேன். அவன் சிநேகிதன் ஒருத்தன் வந்திருக்கானாம், அவன் சொன்னதாக.........."

"எனக்கு ஒண்ணும் தெரியாதம்மா. உன் மாப்பிள்ளை அதையெல்லாம் என்கிட்டே சொல்லி விட்டா, அப்புறம் என்னை யாராலேயும் கட்டிப் பிடிக்க முடியாது.........."

பெண்ணின் விரக்தி கலந்த பேச்சு, கனகத்தின் வாயை மூடிவிட்டது. "சரி, பல்லைத் தேய். காப்பி போட்டு வைத்திருக்கேன்.........உங்கப்பாவுக்கு இப்பதான் கோர்ட் வேலை மும்முரமா வந்துடுத்தாம். திருச்சிக்குப் போயிருக்கார். .........எல்லாத்துக்கும் நான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்!" என்றாள்.

அலமு பெட்டியைக் குடைந்து கொண்டு உட்கார்ந்திருந்தாள். சமையற் கட்டின் நிலைப்படியைப் பிடித்துக் கொண்டு நின்ற கனகம், அவளையே கூர்ந்து பார்த்துவிட்டு, "அலமு, இது எத்தனாவது மாசம்?" என்று கேட்டாள்.

"நாலுன்னு நினைக்கிறேன்" என்றாள் அலமு.

"எழுதவே இல்லையே?"

"எழுதின போதெல்லாம் தரிச்சுதாக்கும்?"

"தரிக்கிறதுக்கும் தரிக்காததுக்கும் நீ என்ன பண்ணுவே? நன்னா யிருக்கடி நீ பேசறது. அசடு மாதிரி பேசாமல் போனா நீ அலமு இல்லையே!"

"என் வயிற்றெரிச்சலைக் கிளப்பாதே அம்மா. இங்கே யாவது நிம்மதியா இருக்கலாம்னு வந்தா........." அலமுவின் கண்களில் நீர் துளிர்த்து விட்டது.

கனகம் பயந்து விட்டாள். பெண் கண் கலங்குவது வயிற்றைப் பிசைந்தது. இது என்ன இப்படி? வந்ததும் வராததுமாக அபசகுனம் மாதிரி. தன் மீதே கோபம் வந்தது கனகத்துக்கு. எங்கே என்று காத்திருந்தவளைப் போல எடுத்த எடுப்பிலேயே தகராறுதானா? அலமுவின் சுபாவம்தான் தெரிந்ததாயிற்றே! "பல்லைத் தேயம்மா. கண்ணைத் துடைச்சுக்கோ" என்றாள் அன்பு பொங்க.

புழக்கடைப் பக்கம் சென்றாள் அலமு. ஒற்றைத் தனி மரமாய் நெடிது வளர்ந்திருந்தது பாக்கு. அருகில் மல்லிகைப் புதர். கனகாம்பரத்தின் சிவப்புச் சிரிப்பு. கொடி படர்ந்து குதூகலிக்கும் புடலையும், அவரையும் இவற்றோடு போட்டியிட்டுக் கொண்டு வேலிக் காலில் ஒரு

காட்டுக் கொடியின் ஆதிக்கம். காப்பியைக் குடித்துவிட்டு, மீண்டும் பெட்டியைக் குடையலானுள் அலமு.

புதிதாக ஏதாவது நகை செய்து கொண்டிருப்பாளோ? அல்லது புடவை வாங்கியிருப்பாளோ! கணவன் முந்நூறுக்கு மேல் சம்பாதிக்கிருன். பிச்சுப் பிடுங்கல் இல்லாத குடும்பம். செய்து கொள்வது பிரமாதமல்ல.

"ஏண்டியம்மா, இப்பதான் புதுசு புதுசா என்னென்னவோ 'பார்டரிலே' புடவை யெல்லாம் வந்திருக்கே .........நீ ஏதாவது வாங்கிஞயா?" என்று கேட்டாள் கனகம். இந்தக் கேள்வி கேட்பதற்கு மனத்துள் வேறு நோக்கம் உண்டு. பெண்ணுக்கு இதமாக ஏதாவது பேசி, அவளது கோபத்தையும், முதல் முதல் இடறிய அபசகுனத்தையும் துடைக்கலாமென்பதுதான் அது.

ஆனுல் விளைவோ விபரீதமாக இருந்தது. வெறிக்கத் தாயாரையே பார்த்தாள் அலமு. "அவ்வளவு தூரத்துக்கு இருந்தால், நான் ஏன் இப்படி இருக்கிறேன்?" என்ருள்.

வாயைத் திறக்காதிருப்பதே உத்தமம் என்று தோன்றி விட்டது கனகத்துக்கு. ஏதாவது ஒன்று கேட்டால், அது ஒன்பதாகக் கிளைத்து விடுகிறதே! வந்த நேரம் சரியில்லையா? சந்தடி செய்யாமல் சமையற் கட்டுக்குள் புகுந்து விட்டாள்.

அம்மா கேட்ட கேள்வியிலே அலமுவின் மனது லயித்து விட்டது. பெட்டியைக் குடைவதெல்லாம் வெறும் பாசாங்குதான். 'பிரமோஷன்' ஆகியிருக்கிறதாமே, அதைப் பற்றி ஒரு வார்த்தை சொன்ஞரா! கொண்டவளுக்கு அந்த உரிமைகூட இல்லை என்ருல், இல்வாழ்க்கைக்கு என்னதான் பொருள்? ஏதோ மாதிரி நடத்துவதைத் தவிர, அவளை ஒரு பெண்ணுக இதுவரை அந்த மனிதர் மதித்திருக்கிருரா? எப்போது பார்த்தாலும் ஆபீஸ், ஆபீஸ், ஆபீஸ்! பிரமாத ஆபீஸை இவர் ஒருத்தர்தானே ஆள்கிருர்!

உலகத்தில் எல்லோரும் ஆபீஸுக்குப் போகவில்லையா, சம்பாதிக்கவில்லையா? என்ன அதிசயமோ! முகத்தில்

சிரிப்பின் சுவடே கிடையாது. அந்த நரகத்திலிருந்து விடுபடலாமென்று இங்கே வந்தால், அதற்கு மேல் வேதனை பொறுக்க முடியவில்லை. யாருக்காவது அவளுடைய மனது புரிகிறதா? யாரை நொந்து கொள்வது? விதி! எல்லாம் விதி!

அப்பா கூட வீட்டில் இல்லை. அவசர காரியம் வந்து விட்டதாம். 'பெண் வருகிறாளே. அதுவும் ஆயிரம் மைலுக்கு அப்பாலிருந்து வருகிறாளே' என்கிற பாசம் இருக்காதோ? இருந்தால் போவாரா? எல்லோரும் யந்திர மாக இருக்கிறார்கள். அவளுக்கு அப்படி இருக்கத் தெரியாத குறைதான் இத்தனை சங்கடங்களுக்கும் காரணம்.

வாசலுக்கு வந்தாள். மழை பெய்து படிந்திருந்த தெருவில் ஒரு மாறுதலும் இல்லை. அன்று போல் இன்றும் மேலக் கோடிப் பெருமாள் கோவிலிலிருந்து, கீழ்க் கோடி ஈசுவரன் கோவில் வரை மேனி மழுங்காது நீண்டிருக்கிறது. உலகத்தில் எத்தனை மாறுதல்கள் ஏற்பட்டால்தான் என்ன, இந்த ஊரை ஒன்றும் செய்துவிட முடியாது!

காற்றைக் கூடக் காணோம். அதன் மென்னியை யாரோ பிடித்துத் திருகிவிட்டதைப் போல அசைவற்றுக் கிடந்தது. காலைக் கதிரவன் உமிழ்ந்த கதிர்கள், தெருவில் தேங்கியிருந்த நீரில் விகாரமாகப் பளபளத்தன.

"யாரடி அலமுவா!"

பக்கத்து வீட்டுத் திண்ணை குரல் கொடுத்தது. அலமு பார்த்தாள். பத்து வருஷத்துக்கு முன்பிருந்த மேனிக் கட்டு சற்றும் தளராது அம்புஜம் நின்றாள்.

"ஆமாம், மாமி.........."

"எப்போ வந்தே?"

"காலையில்தான்."

"நான் கவனிக்கவே இல்லையே.........இங்கே இதுகள் போடற இரைச்சலிலே என்ன காதிலே விழறது?......... உடம்புக்கு ஒன்றுமில்லாமல் இருக்கிறாயா?"

"உம்" என்றாள் அலமு. 'இதுகள்' என்று அம்புஜம் குறிப்பிட்டது அவளது அளவற்ற சந்தான பாக்கியங்களைத் தான்! காலணா அகலத்துக்கு நெற்றியில் பொட்டிட்டுக் கொண்டு, எப்போதும் 'ரெடிமேட்' சிரிப்புடன், வயிறு குலுங்கப் பேசும் ஹாஸ்யமுமாய்த் துலங்கும் அவளிடம், எப்போதும் அலமுவுக்குப் பொறாமை. எட்டுக் குழந்தைகளையும் சமாளித்துக் கொண்டு இவளால் சிரித்துப் பேசவும் முடிகிறதே!

"உங்களவர் வந்திருக்காரா?"

"இல்லை, நான் மட்டும்தான்."

"ஆமாண்டியம்மா, ஒரு தடவை வந்துவிட்டுப் போற துன்னா லேசிலே இருக்கா? எண்ணி ரெண்டு பச்சை நோட்டை எடுத்து வைக்க வேண்டியிருக்கே............. தவிரவும் ஆபீஸ்காரா நெனைச்சபடி வரத்தான் முடியுமா? .........சாவகாசமா வீட்டுக்கு வாயேன்.........அடுப்பிலே தீஞ்சு போயிடும்...வரேன்" என்று அம்புஜம் விடை பெற்றுப் போனாள்.

ஆபீஸ்காரர்கள் என்றால் கிராமத்திலிருப்பவர்களுக்குத் தேவ லோகத்துப் பதவி என்று கற்பனை போலும்!

ஏன், முதலில் அலமுவே அப்படித்தானே எண்ணிக் கொண்டிருந்தாள்! அதுவும், நம் தேசத்தவர்களுக்கு வடக்கே வேலை பார்க்கிற மாப்பிள்ளை வாய்த்துவிட்டால், தலை கால் தெரிவதில்லை!

அலமுவின் கணவன் வேலை பார்த்த இடம், இரும்புத் தொழிற்சாலைகள் புதிதாக நிர்மாணமாகும் பகுதியில் அமைந்திருந்தது. சுற்றிலும் செம்மண் காடு. புல், பூண்டு மருந்துக்குக் கூடக் கிடையாது.

அதுகூட அவளுக்குப் பெரிய ஏமாற்றமல்ல. காடு புதரில் வசித்தால் கூட, அன்பான கணவனின் இன்சொல் அதைத் தெய்வலோகமாக்கி விடாதா? ஆனால் அவளது கணவன் பத்மநாபனோ, ஆபீஸைத் தலையில் தாங்குபவனைப் போல, மணமானது முதல், இன்றுவரை

நம்பிக்கையற்ற நிராசைப் பெரு வெளியில் அவளைத் தவிக்க விட்டு, உடலையும் உள்ளத்தையும் சோரச் செய்தானே தவிர, அன்பெனும் அரும்பை மலரச் செய்ததில்லை.

அவனது மனத்தைக் கவர அவளும் படாதபாடு பட்டாள். விதம் விதமாக உடுத்திக் கொண்டாள். மலர் சூடி, மையிட்டு, முறுவலுடன் வழிபார்த்து நின்ருள். அவனோ வீட்டுக்குள் கால் எடுத்து வைத்ததும், "எதற்காக இந்த அலங்காரம்?.........கண்ணைக் கூசுகிறது. எப்போதும் போல இரு, போதும்" என்பான்.

இதற்கு என்ன அர்த்தம்? எவ்வளவோ அர்த்தம் கொள்ளலாம். தன் மீதே நம்பிக்கையற்ற பலவீனமும் ஒரு முக்கிய காரணம் எனலாம். தலையைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விடுவான்.

"உடம்பு சரியில்லையா?"

"எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது.........விடிவதற்குள் ஒரு 'ஸ்டேட்மெண்டு' அனுப்பியாகணும்......... கணக்கில் எங்கோ உதைக்கிறது. கண்டு பிடித்தாகணும்."

"காப்பி கொண்டு வரட்டுமா?"

"உம்.........."

எவ்வளவோ ஆசையுடன் தயாரித்த பலகாரமும், காப்பியும் அவன் முன் வைக்கப்பட்டாலும், ஒருவித உணர்ச்சியும் இன்றிச் சாப்பிட்டு எழுந்திருப்பான். முப்பது வயது வரை வாழ்க்கையின் மேடு பள்ளங்களில் உழன்று விட்டுத் தாமாக மணம் செய்துகொண்ட பிழையோ, வேறு எதுவோ, அவளுடைய உணர்ச்சிகளுக்கு அவன் மதிப்புக் கொடுத்ததே இல்லை. ஒரு வேளை அவளுக்கு உணர்ச்சிகள் உண்டு என்பதையே அவன் அறிவானே என்னவோ?

அர்த்தமற்ற பிணைப்பு. சாப்பாட்டுக் கவலையில்லை. அதை வாங்கிப் போட்டு விடுகிருன். தான் சம்பாதிப்பதே அதற்காகத்தான் என்பதைத் தவிர, அவனுக்கு வேறு சிந்தனையே இல்லை. ஒரு துணை வேண்டுமே, அதற்காக

அவள். உடற் புண்ணுல் மனப் புண்ணை அதிகமாக்கிக் கொள்வதைத் தவிர, அங்கே குளிர் நிலவுக்கோ, உதயத்தின் மலர்ச்சிக்கோ அர்த்தமே கிடையாது. என்ன வாழ்க்கை!

அம்புஜம் தான் இருக்கிருள். அலமுவைவிட ஏழெட்டு வயது மூத்தவள். இருந்தும், இப்போது பார்த்தாலும், புது மணப் பெண் போலப் பொலிவு துலங்குகிறது. மணமாகி ஆறு ஆண்டுகள் ஆகியும், இன்னமும் ஒற்றை மரமாக நிற்கும் தனக்கும், அம்புஜத்துக்கும் எத்தனை வேறுபாடு!

சரேலென்று உள்ளே வந்தாள் அலமு. தலை கனத்தது. படுக்கையில் விழுந்தாள். துயரம் அடக்கக் கூடியதாக இல்லை. பொங்கிப் பொங்கி விம்மினுள்.

"என்னம்மா, என்ன?" என்று ஓடோடி வந்தாள் கனகம். அலமு பதில் சொல்லவில்லை. அவளது தலை மயிரைக் கோதியபடி, ஆதுரத்துடன் மூச்சடைக்க நின்ருள் கனகம், பேச வாயற்று.

இதற்கு விமோசனம் இல்லையா? இப்படியே எத்தனை நாள் வாழ்வது? 'பொக்' கென்று ஒரு கணத்தில் பிராணன் போய் விட்டாலும் தேவலையே!

"எழுந்திருந்து குளித்து விட்டு வாம்மா.........பிள்ளைத் தாச்சி இப்படி அழக்கூடாது. என் கண்ணல்லவா, எழுந் திரடா கண்ணு" என்று அன்பைப் பூசினுள் கனகம்.

வெடித்த நிலத்தில் மழைத் துளி பாய்ந்ததைப் போல, அலமுவின் உள்ளத்தில் சற்றுக் கசிவு கண்டது. கண்ணைத் துடைத்துக் கொண்டு எழுந்தாள்.

உம்......பொருமுவதால் என்ன லாபம்? வாய்த்ததைக் கொண்டு திருப்தி அடைய வேண்டியதுதான். ஆறு வருடம் பழகிப்போன விஷயம்தானே!

"வாய்க்காலுக்குப் போய்க் குளித்து விட்டு வரட்டுமா?" என்ருள் அலமு.

"உடம்புக்கு ஆகுமோ?" என்று கேட்ட கனகம், பிறகு தன் பெண்ணின் ஆவலுக்கு எதிர் சொல்ல வேண்டா

மென்று, "சரி, போயிட்டுத்தான் வாயேன்.........அம்பு ஜம்கூடப் புறப்படுகிற சமயம்தான்" என்ருள்.

குழந்தை மாதிரிச் சிரித்துக் கொண்டு அம்புஜம் வந்தாள். "என்ன அத்தை, பேரனு பேத்தியா?............" கனகத்தை 'அத்தை' என்றே அழைப்பாள் அம்புஜம்.

"எதுவோ ஒண்ணு.........நல்லபடியாப் பிறக்கணும்னு பகவானை வேண்டிண்டிருக்கேன்."

"அதெல்லாம் கவலைப் படாதேங்கோ.........எனக்கு மாட்டுப் பெண்தான் பொறக்கப் போரு! என்ன சம்பந்தியம்மா, இப்பவே பிடிச்சுக் கிராக்கி பண்ணிக்காதே. புறப்படு, வாய்க்காலுக்கு."

"சரி, போயிட்டுச் சீக்கிரம் வாங்கோ.........வெய்யில் ஜாஸ்தியாகிறது."

வழியில் ஓயாமல் பேசிக்கொண்டே இருந்தாள் அம்புஜம். அலமுவுக்கு அதை எல்லாம் கேட்கக் கேட்க மறைந்த தாபம் அதிகரிக்க ஆரம்பித்தது. படித்துறையில் குளிக்கும் போது மனது குளிர வேண்டுமே! ஊஹூம்!

வீட்டுக்கு வந்து சாப்பிட்டுப் படுத்ததும், கடிதம் எழுதிப் போட வேண்டும் என்ற நினைவு வந்தது. எழுதா விட்டால்தான் என்ன? ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கவா போகிருர்?

இரண்டு நாட்கள் கழித்து வேண்டா வெறுப்பாக ஒரு முக்காலணு கார்டு போட்டு வைத்தாள். "சௌக்யமாக வந்து சேர்ந்தேன். இங்கு எல்லோரும் சௌக்கியம். அங்கு உங்கள் சௌக்கியத்துக்கு எழுதவும்............குளிர் காலம், மப்ளரைக் கட்டிக் கொள்ளுங்கள்......இப்படிக்கு—அலமு."

மாதங்கள் உருண்டோடின. சீமந்தம் எப்போது வைத்துக் கொள்ளலாம், என்று அவள் தந்தை தேசிகாச்சாரி மாப்பிள்ளைக்கு எழுதிக் கேட்டார். 'அதெல்லாம் ஒன்றும் வேண்டியதில்லை' என்று அவன் எழுதி விட்டான்.

"இதென்னடி இப்படி எழுதியிருக்கார்?" என்றார் மனைவியிடம்.

"லீவ் கிடைக்காதோ என்னவோ!"

"அதுக்காக?.........சீமந்தம் செய்யாம விடலாமா?"

"மறுபடியும் எழுதுங்களேன்—......நான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்!"

"சரி, சரி. நீ வேறே கண்ணைக் கசக்காதே......அலமு, இந்தாம்மா" என்று அழைத்தார் பெண்ணை. அவள் வந்து நின்றாள். "நீ எழுதிப் போடம்மா ......... இதெல்லாம் சம்பிரதாயத்தை ஒட்டி நடந்தாகணும்......அப்புறம் ஊரிலே நாலு பேர் நாலுவிதமாப் பேசுவா......என்ன?" என்றார்.

வேறு வழியின்றி அவளே கடிதம் எழுதினாள். திரும்பத் திரும்ப, "செய்யாது விட்டோமானால் நாலு பேர் நாலுவிதம் சொல்லுவா" என்ற பல்லவியையே கடிதம் பூராவும் நிரப்பி அனுப்பினாள். ஒரு வழியாக மாப்பிள்ளை அசைந்து கொடுத்தான். வருவதாகக் கடிதம் எழுதினான்.

இன்றுதான் பத்மனாபன் வரப் போகிறான். பாழும் மனசு! வாசலுக்கு, வாசலுக்கு ஏன்தான் ஓடுகிறதோ?

வண்டி வந்து நின்றது. தேசிகாச்சாரி முதலில் இறங்கினார். பின்னால் அவன்!

"வாங்கோ" என்று வரவேற்றாள் அலமு.

"உம்......"

"வண்டி லேட்டா என்ன?

"இல்லையே......ஆறு பதினெட்டுக்கு வரவேண்டியது. ...பதினேழுக்கே வந்துட்டானே!"

எப்படி இருக்கிறது? இந்த வேண்டாத தகவல்களை எல்லாம் மனதில் பதிய வைத்துக் கொள்ளத் தெரிகிறது!

வாசல் அறையில் அவனுக்குக் காப்பி கொண்டு போனாள். சட்டையைக் கழற்றி மாட்டிவிட்டு, பனியனோடு ஒரு சிறு நோட்டுப் புத்தகத்தில் கணக்குக் குறித்துக்

கொண்டிருந்தான். அவளைப் பார்த்ததும், "இது வரையிலே ஐம்பது ரூபாய் ஆயிடுத்து......இத்தனைக்கும் வழியிலே ஒரு தூசு கூட வாங்கல்லே" என்றான்.

"போறுப் போறது. காப்பி சாப்பிடுங்கோ"

மடக் கென்று காப்பியை முழுங்கினான். "ஒரு வாரம் தான் லீவ். தெரிஞ்சுதா?......இதுக்கே பெரிய துரைகிட்ட சண்டைபோட்டு வாங்கிண்டு வந்திருக்கேன்"

"குளிக்கிறீர்களா? வெந்நீர் இருக்கு......"

"உம்......"

கை நிறைய வளையல்கள் குலுங்க அவள் திரும்பினாள். ஒரு வார்த்தை — ஒரே ஒரு வார்த்தை — அன்புடன் விசாரிக்கத் தெரியவில்லையே! ஐம்பது ரூபாய் செலவானாலென்ன, ஐந்நூறு ஆனாலென்ன! ஆற்றிலே கொண்டு எறியலாமே அந்தப் பணத்தை! அவளுக்கு ஒரு முழப் பூ வாங்கி வரக்கூடாதா? செலவாயிற்றாம் செலவு!

பகலில் தலையை வலிப்பது போலிருந்தது அலமுவுக்கு. மெள்ள மெள்ள வலி அதிகரித்து, உடலில் குளிர் கண்டு விட்டது. மாலையில் பேச்சு மூச்சற்றுப் படுத்துவிட்டாள். தேசிகாச்சாரி பயந்து போய் டாக்டரை அழைத்து வர ஓடினார். கனகம் கையைப் பிசைந்தாள். இதற்கு முன் மூன்று தடவை இந்த அநுபவம் உண்டு. ஆனால் சீமந்த மாதம் வரை தாண்டியதில்லை. மூன்றிலும், நான்கிலுமாகக் கரைந்து போனவை. இப்போதும் அப்படித்தானா? பெண் வந்த அன்றைக்கு ஆரம்பித்த அபசகுனத்தின் விளைவோ இதெல்லாம்? நல்லபடியாக முடியாதா?

"என்னடியம்மா, என்ன பண்றது?" என்று அடிக்கொரு முறை கேட்டுக் கொண்டே இருந்தாள். பதில் இல்லை. நினைவற்றுக் கிடந்தாள்.

டாக்டர் வந்து பார்த்து, இஞ்செக்ஷன் போட்டுவிட்டு, இரண்டு மருந்துகளை எழுதிக் கொடுத்தார். இவ்வளவையும் பொம்மை போலப் பார்த்துக் கொண்டே நின்றான்

பத்மனுபன். என்ன செய்வதென்று தெரியவில்லையோ அல்லது இத்தகைய ஏமாற்றத்தை அவன் எதிர் பார்க்கவில்லையோ, அவன் முகம் பேயறைந்தது போலாகிவிட்டது. வாசல் அறைக்குப் போய் விட்டான்.

யாரும் சாப்பிடவில்லை. சாப்பிடத் தோன்றவில்லை. இன்னும் இரண்டு நாள்தான் இருக்கிறது. சீமந்தத்துக்கு பத்திரிகை அடித்து அனுப்பியாகி விட்டது. வருபவர்களுக்கு என்ன பதில் சொல்லப் போகிறோமோ என்கிற பீதி கனகத்துக்கு.

"நீங்கள் ஒரு வாய் சாப்பிடுங்களேன், மாப்பிள்ளை" என்றார் தேசிகாச்சாரி.

"உம்......" என்றான் பத்மனுபன். பிறகு "வேண்டாம் ......பசியில்லை எனக்கு" என்று கூறிவிட்டான்.

பத்து மணி இருக்கும், அலமு மெல்லக் கண் திறந்தாள். கனகம் அருகில் நின்று கொண்டிருந்ததைக் கண்டதும், "அம்மா!" என்று அரற்றினாள்.

"அழாதேம்மா...எல்லாம் சரியாயிடும்...இரு, மருந்து தரேன்" என்று ஓடினாள் கனகம்.

பத்மனுபன் வந்து பார்த்தான். அவன் முகம் வெளிறியிருந்தது.

அவள் பேசவில்லை, தலையைத் திருப்பிக் கொண்டாள். பயங்கர அமைதி! டாக்டர் பதினேரு மணிக்கு ஒரு முறை வந்து விட்டுப் போனார். தேசிகாச்சாரி வாசல் திண்ணையில் படுத்தார். கனகம் கூடத்தில் சுருண்டு கிடந்தாள்.

மணி என்ன இருக்குமோ! அலமுவுக்கு சுயநினைவும் விழிப்பும் வந்தன. இருளைக் கிளறிக் கொண்டு சிம்னியின் சிறு நாக்கு நீண்டு துவண்டது. வறண்ட புன்சிரிப்பு இதழ்க் கடையில் மெல்ல ஓட, அவள் எழுந்திருக்க முயன்றாள். அம்மாடி! எவ்வளவு நிம்மதி! இத்துடன் முழு நிம்மதியும் வந்துவிடக் கூடாதா? வந்து விடும்! நிச்சயம் வந்து விடும்!

புழக் கடைக் கதவை மெல்லத் திறந்தாள். நடை தள்ளாடியது. அம்மாவைத் துணைக்கு அழைத்துக் கொண்டு வந்திருக்கலாம். பாவம்! அவள் இப்போது தான் சற்று அயர்ந்து கண் மூடியிருப்பாள். அவளை எழுப்புவானேன்? ஆனால் புழக்கடைக் கதவு தாளிடப் படவில்லையே! மறந்து விட்டார்களோ சாத்தி வைக்க?

ஒற்றைப் பாக்கு மரமும், மல்லிகைப் புதரும், அவரைக் கொடி வீடும் கண்ணில் பட்டன. மெல்லிய சந்திரனின் ஒளிக் கதிர்கள், வலிக்கு ஒத்தடம் கொடுப்பன போலப் பரவியிருந்தன.

" அலமுவா ?"

மாட்டுக் கொட்டத்திலிருந்து குரல் வந்தது. அலமு திடுக்கிட்டாள், யார்? அவரா? இங்கே என்ன செய்கிறார்? தள்ளாடியபடி, " ஆமாம், நீங்கள்...?" என்று திணறினாள்.

அவன் எழுந்து வந்தான். அலமு அவனையே பார்த்தாள். கண்கள் சிவந்திருந்தன. தனிமையில் கண்ணீர் வடித்திருக்கிறான் என்பதை அவை புலப்படுத்தின. கலைந்து கிடந்த தலை மயிர் முகத்தில் புரள, அவன் நின்ற நிலையைக் கண்டு அவள் நெஞ்சு விண்டது.

" நான் பயந்தே போயிட்டேன், அலமு......எனக்கு இப்போ போதாத காலம்...ஆபிஸிலே துரை போன வாரம் எரிஞ்சு விழுந்தான்...இங்கே இப்படி இருக்கிறது" என்றான் அவன் குழந்தை போல.

அவளுக்கு அழுகை வந்து விடும் போல ஆகிவிட்டது. " எனக்கு ஒன்றும் இல்லை...பயப்படாதீர்கள்" என்றாள்.

" பயப்படறதென்ன? நீ இல்லை என்றால் என் வாழ்வு முடிந்தது. அவ்வளவுதான்."

" அப்படி எல்லாம் சொல்லாதீர்கள்...உங்களைப் பார்த்தால் எனக்குப் பயமாக இருக்கிறது...ஒரு மாசத்துக்கு லீவு எழுதுங்கள்."

" எழுதியாச்சே!"

அருகில் சென்று அவன் கைகளைப் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டாள் அலமு.

இவ்வளவு நாட்கள் தெரியாத ரகசியம் தெரிந்து விட்டது!

யந்திரமாக இருந்த அவனது உள்ளத்தின் அடியில், அன்பின் வெள்ளச் சுழலைக் கண்டு விட்டாள் அலமு. இனி அவளுக்கு வியாதி ஏது, கவலை ஏது?

# 4

# ‘பிரசாதம்’

சுந்தர ராமசாமி

எழுபத்தி மூன்று நாற்பத்தியேழு சுற்றிச் சுற்றி வந்தான். அன்றிரவே அவன் ஐந்து ரூபாய் சம்பாதித்தாக வேண்டும். அப்பொழுதுதான் தலை நிமிர்ந்து வீட்டை நோக்கிச் செல்ல முடியும். பொன்னம்மையின் முகத்தை ஏறிட்டுப் பார்க்க முடியும். அவள் சிரிப்பதைப் பார்க்க முடியும். எல்லாவற்றிற்கும் மேலாகக் குழந்தை பிறந்த நாளைக் கொண்டாட முடியும்.

ஜங்ஷனுக்கு வந்தான். ஜங்ஷனிலிருந்து புறப்பட்டு வளைய வளையச் சுற்றிவிட்டு, ஜங்ஷன் வந்தான். அதே ஜங்ஷன்தான்.

மெயின் ரஸ்தா ஓரத்தில், ஒரு புருஷனும் மனைவியும் ரஸ்தாவைத் தாண்டுவதற்கு பத்து நிமிஷமாக இரண்டு பக்கமும் மாறிமாறிப் பார்த்துக் கொண்டு நின்றார்கள். அவள் ஒக்கலில் ஒரு குழந்தை. கோயிலுக்குப் போய்விட்டு வருகிறார்கள் என்பது தெளிவாகத் தெரிந்தது.

‘இப்படித்தான் நானும் அவளும் நாளை கோயில் போய் வரவேண்டுமென்று நினைக்கிறாள், அவள்’ என்று

எண்ணினான் அவன். குழந்தை பிறந்த நாளை எவ்வளவு கோலாகலமாகக் கொண்டாட ஆசைப்படுகிறாள் அவள்! அன்று மாலை பொன்னம்மை சொன்ன ஒவ்வொரு சொல்லும் அவன் ஞாபகத்திற்கு வந்தது. அவளுடைய ஆசையே விசித்திரமானதுதான். தெருவழியாகக் குழந்தையைத் தூக்கிக்கொண்டு நடந்து போகிற காட்சியை அவள் வியாக்கியானம் செய்ததை அவன் எண்ணிப் பார்த்துக் கொண்டான்.

—நாளைவிடியக் கருக்கலில் எழுந்திருக்கவேண்டும். சுடு தண்ணீரில் குழந்தையைக் குளிப்பாட்ட வேண்டும். பட்டுச் சட்டை போட்டு, கலர் நூல் வைத்துப் பின்ன வேண்டும். அந்தப் பின்னலில் ஒரு ரோஜா. ஒன்றே ஒன்று. அதற்குத் தனி அழகு. நாம் இருவரும் குழந்தையைக் கோயிலுக்கு எடுத்துச் செல்கிற பொழுது, தெருவில் சாணிதெளிக்கும் பெண்கள், கோலம் இழைக்கும் பெண்கள் எல்லோரும் தலை தூக்கித் தலை தூக்கிப் பார்க்க வேண்டும். அவர்கள் தலை தூக்கிப் பார்ப்பதை நான் பார்க்கவேண்டும். நான் பார்த்து, உங்களைப் பார்க்க வேண்டும். நீங்கள் எல்லோரும் பார்ப்பதைப் பார்க்கவேண்டும், பார்த்துவிட்டு என்னைப் பார்க்க வேண்டும்.

எழுபத்தி மூன்று நாற்பத்தியேழு ஒரு நிமிஷம், தான் நிற்கும் இடத்தை மறந்து சிரித்தான். சட்டென்று வாயை மூடிக்கொண்டான். தம்பதிகள் ரஸ்தாவைத் தாண்டிப் போய்விட்டார்கள்.

ஆனால் பொன்னம்மை போட்ட திட்டமெல்லாம் நிறைவேறுவதற்கு ஐந்து ரூபாய் வேண்டும். ஐம்பது ரூபாய் செலவாகும். ஆனால் பொன்னம்மை அவனிடம் ஐந்து ரூபாய்தான் கேட்டாள். துணி மணி கடனாக வாங்கிக்கொண்டு வந்துவிட்டாள். அதை இரவோடு இரவாகத் தைக்கவும் கொடுத்துவிட்டாள். சீட்டுப் பணம் பிடித்து குழந்தைக்கு மாலை வாங்கிவிட்டாள். பால் விற்று அதையும் அடைத்து விடுவாள். பிறந்த நாளையொட்டிய சில்லறைச் செலவுக்காகத்தான் அவள் பணம் கேட்டாள்.

ஐந்து ரூபாய்க் காசு. வீட்டில் காலணா கிடையாது. காலணா என்றால் காலணா கிடையாது. அன்று தேதி இருபத்தைந்து.

கைத்தடியைப் பூட்சில் தட்டிக் கொண்டே நின்றான் எழுபத்தி மூன்று நாற்பத்தியேழு. அவனைப் பார்ப்பதற்கு வேடிக்கையாக இருந்தது. ஒரு தடவை பார்த்தவர்கள் அவன் முகத்தை மறக்கமுடியாது. முகத்தில் ஆறாத அம்மைத் தழும்பு. எவ்வளவு அடர்த்தியான புருவம்! மண்டி வளர்ந்து, இரு புருவமும் ஒன்றாக இணைந்துவிட்டது. காது விளிம்பில் ரோமம். மூக்கிற்குக் கீழ் கருவண்டு உட்கார்ந்திருப்பதுபோல் பொடி மீசை.

அவன் பார்வை தாழ்ந்து பறக்கும் பருந்தின் நிழல் மாதிரி ஓடிற்று. நீளமாக ஓடிற்று; வட்டம் போட்டது; குறுக்கும் மறுக்கும் பாய்ந்தது.

'ஒன்றும்' அகப்படவில்லை.

கழுத்தில் வேர்வை வழிந்தது. முகத்தில் சோர்வு. அங்கமெல்லாம் அசதி.

சர்வீஸில் புகுந்த பின்பு இன்று போல ஒரு நாளும் விடிந்ததில்லை. யார் முகத்தில் விழித்தோமென்று யோசித்தான். கண் விழித்ததும் எதிரே, சுவர்க் கண்ணாடியில் தன் முகம் தெரிந்தது ஞாபகத்திற்கு வந்தது; சிரித்துக் கொண்டான்.

பகற் காட்சி சினிமா முடிந்து, மனித வெள்ளம் தெரு வெங்கும் வழிந்தது; நெரிசலிலிருந்து விலகி நின்று கொண்டான் அவன். கூட்டம் குறைந்ததும் மீண்டும் நடந்தான்.

நாலு மணிக்கு ஆரம்பித்த அலைச்சல், மணி ஏழு அடித்துவிட்டது, ஏழரை அடித்துவிட்டது. இன்னும் சில நிமிஷங்களில் எட்டு அடித்து விடும்.

பொழுது போய்க் கொண்டே இருந்தது. 'ஒன்றும்' அகப்படாமலேயே பொழுது போய்க் கொண்டிருந்தது.

அன்று சைக்கிளில் விளக்கில்லாமல் போவாரில்லை. சிறுநீர் கழிப்பதற்கு பிரசித்தமான சந்துகள் ஒன்று பாக்கி யில்லாமல் தாண்டி வந்தாகி விட்டது. சந்துக்குள் நுழை பவர்கள் கண்களுக்குத் தென்படாமல், நின்று நின்று பார்த்தாகிவிட்டது. கால் வலி எடுத்ததுதான் மிச்சம். ஒரு குழந்தைகூட ஒன்றுக்குப் போகவில்லை.

—முன்பெல்லாம் நம்மவர்கள் சாதாரண மனிதர்களாக இருந்தார்கள். இப்பொழுது பிரஜைகளாகி விட்டார்கள். பொறுப்பு உணர்ச்சி கொண்ட பிரஜைகள். நமது பிரஜைகள் நீடூழி வாழ்க!

எழுபத்தி மூன்று நாற்பத்தியேழு முகத்தைச் சுளித்துக் கொண்டான்.

மீண்டும் ஜங்ஷனிலிருந்து கிளம்பி, வடதிசை நோக்கி நடந்தான். நின்று நின்று நடந்தான். சிறிது நடந்து விட்டு நின்முன்; நடந்தான்; நின்முன்.

இப்பொழுதும் கோபம் கோபமாக வந்தது.

எதிரே வந்த டாக்சி கார்களை எல்லாம் பட் பட்டென்று கை காட்டி நிறுத்தினன். எல்லோரும் ஒழுங்காக லைசன்ஸ் வைத்திருக்கிருர்கள். ஐந்து பேர் போகவேண்டிய வண்டி யில் மூன்று பேர் போகிருர்கள். நாலு பேர் போகவேண்டிய வண்டியில் டிரைவர் மட்டும் போகிருன்.

—பேஷ்! இனிமேல் இந்த தேசத்தில் போலீஸ் காரர்கள் தேவையில்லை.

கூலிகள் யாரையாவது அதட்டிப் பார்க்கலாம்; ஒரு வரையும் காணேம். புது சினிமா ஆரம்பமாகிற நாள். ஒருவரையும் காணேம்

—எல்லாக் கழுதைகளும் சினிமாவில் காசைக் கரியாக்கு கிருர்கள்.

அந்தி மயங்குகிற சமயம் 'கூல்டிரிங்' கடையில் ஸ்பிரிட்' வியாபாரம் ஆரம்பமாகும். மதுவிலக்கு அமுலி

லிருக்கும் பிராந்தியம் இது. கடை வாசலில் போய் நின்று விட்டால் போதும். மாதாந்திரப் படி கையில் விழுந்து விடும். பிறந்த நாள் ஜமாய்த்து விடலாம்.

ஆனால் கடை பூட்டியிருக்கிறது!

—அவன் பாட்டிக்குக் குழந்தை பிறந்திருக்கும்! வியாபாரத்தை கண்ணுக்குக் கண்ணாக கவனிக்க வேண்டாமோ?

சந்திலிருந்து ஒரு குதிரை வண்டி திரும்பி மெயின் ரஸ்தாவில் ஏறிற்று; சாரதி சிறு பயல். மீசை முளைக்காத பயல். அவனும் விளக்கேற்றி வைத்திருக்கிறான்!

வண்டி அருகே வந்தது.

"லேய், நிறுத்து."

குதிரை நின்றது.

"ஒங்கப்பன் எங்கலெ?"

"வரலே."

"ஏனும்?"

"படுத்திருக்காரு."

"என்ன கொள்ளே?"

"வவுத்தெ வலி."

"எட்டணா எடு."

"என்னாது?"

"எட்டணா எடுலெ."

"ஒம்மாணெ இல்லே."

"ஒங்கம்மெ தாலி. எடுலெ எட்டணா."

"இன்னா பாரும்" என்று சொல்லிக் கொண்டே பயல் நுகக்காலில் நின்று கொண்டு வேஷ்டியை நன்றாக உதறிக் கட்டிக் கொண்டான்.

"மோறையெப்பாரு. ஓடுலெ ஓடு. குதிரை வண்டி வச்சிருக்கான் குதிரை வண்டி. மனுசனாப் பொறந்தவன் இதிலே ஏறுவானலே."

குதிரை நகர்ந்தது.

தபால் ஆபீஸ் பக்கம் வந்தான், எழுபத்தி மூன்று நாற்பத்தியேழு. எதிர் சாரி வெற்றிலை பாக்குக் கடை பெஞ்சில் அமர்ந்தான். தொப்பியை எடுத்து மடியில் வைத்துக் கொண்டான். தலையைத் தடவி விட்டுக் கொண்டான். கையெல்லாம் ஈரமாகிவிட்டது. எரிச்சல் தாங்க முடியவில்லை. தொடை நோவும்படி நிக்கரில் பிசைந்து பிசைந்து துடைத்துக் கொண்டான். மேற்கும் கிழக்கும் பார்த்தான்.

அப்பொழுது தபால் நிலையத்தை நோக்கி ஒரு கனமான உருவம் வருவது தெரிந்தது. எங்கோ பார்த்த முகம் போலிருந்தது. கிருஷ்ணன் கோவில் அர்ச்சகரோ?

கிருஷ்ணன் கோவில் அர்ச்சகர் தபால் ஆபீசில் நுழைந்தார். கூர்ந்து கவனித்தான் எழுபத்தி மூன்று நாற்பத்தியேழு.

அர்ச்சகர் கையில் ஒரு நீள உறை. எழுந்து பின்னால் சென்றான். அர்ச்சகர் தபால் பெட்டியருகே சென்று விட்டார்.

" வேய் "

சட்டென்று திரும்பி நின்றார்.

" இங்கே வாரும்."

" இதெ போட்டுட்டு வந்துடறேன் "

" போடாமெ வாரும்."

அர்ச்சகர் ஸ்தம்பித்து நின்றார்.

" வாரும் இங்கே."—ஒரு அதட்டல்.

அர்ச்சகர் தயங்கித் தயங்கி வந்தார்.

நல்ல கனமான சரீரம். மொழு மொழுவென்று உடம்பு. உடம்பு பூராவும் இலேசாக எண்ணெய் தடவியதுபோல் மினுமினுப்பு. வளைகாப்புக்குக் காணும்படி, வயிறு.

அர்ச்சகர் முன்னால் வந்து நின்றார்.

"அதென்னது அது கையிலெ ?"

"கவர்"

"என்ன கவரு ?"

"ஒண்ணுமில்லெ. சாதாக் கவர்தான். தபால்லெ சேர்க்கப்போறேன்."

"கொண்டாரும் பாப்பம்."

வாங்கிப் பார்த்தான். உறையோடு ஒரு கார்டுமிருந்தது. கார்டு, யாரோ யாருக்கோ எழுதியது. நீள உறை ஸ்தல டி. எஸ். பி. காரியாலயத்தின் தலைமை அலுவலகத்திற்குப் போக வேண்டியது.

எழுபத்தி மூன்று நாற்பத்தியேழு அர்ச்சகர் முகத்தை வெறிக்கப் பார்த்தான்.

அர்ச்சகர் முகம் சிவந்தது.

இமைக்காமல் பார்த்துக்கொண்டே இருந்தான். அர்ச்சகர் முகம் மேலும் சிவந்தது.

எழுபத்தி மூன்று நாற்பத்தியேழுக்கு ஒரே சந்தேகம்; ஒரே சந்தோஷம்.

அவனுடைய மகள் அதிருஷ்டசாலிதான்!

"இந்தக் கவர் உம்ம கையிலெ எப்படி சிக்கிச்சு?"

குரலில், அதிகார மிடுக்கேறிவிட்டது.

அர்ச்சகர் உதட்டைப் பூட்டிக் கொண்டு நின்றார். முகம் தொங்கிப் போய்விட்டது.

"வாயிலெ கொளுக்கட்டையோ ?"

அதற்கும் பதிலில்லை.

"மயிலே மயிலே எறகு போடுன்னா போடாது. நடவும் ஸ்டேஷனுக்கு."

'ஸ்டேஷனுக்கு' என்ற வார்த்தை காதில் விழுந்ததும், உடம்பை ஒரு உலுக்கு உலுக்கியது அர்ச்சகருக்கு.

அர்ச்சகர் முதுகைப் பிடித்து இலேசாகத் தள்ளினன் எழுபத்தி மூன்று நாற்பத்தியேழு.

அர்ச்சகர் தட்டுத் தடுமாறிப் பேச ஆரம்பித்தார்.

"நான் சொல்றதெ கொஞ்சம் பெரிய மனஸு பண்ணி, தயவாக் கேக்கணும். எனக்குப் போராத காலம், இல்லேன்னு.........."

"இளுக்காமெ விஷயத்துக்கு வாரும்."

"எனக்குப்போராத காலம். இல்லேன்னு இந்த ஸந்தி வேளையிலே, நட்ட நடுக்க, ஏதோ திருடன்மாதிரி, ஏதோ கொள்ளைக்காரன் மாதிரி, ரவுடி மாதிரி, ஜேப்படிக் காரன் மாதிரி......"

"அட சட்! விஷயத்தைக் கக்கித் தொலையுமே. இளு இளுன்னு இளுக்கான் மனிசன்."

"இதோ இந்த கார்டெ சேக்கப்போனேன். கோவிலுக் குப் பக்கத்திலெ தபால் பெட்டி தொங்கறது. தொங்கற தபால் பெட்டியிலெ இந்தக் கார்டெ சேக்கப் போனேன்."

"போற வளியிலெ இந்த கவர் ரோட்டிலே படுத்துக் கிட்டு, அர்ச்சகரே வாரும், வாரும்னு கூவி அளச்சு தாக்கும்!"

"நான் சொல்றதெ கொஞ்சம் பெரிய மனஸு பண்ணி தயவாக் கேக்கணும். தொங்கற தபால் பெட்டியிலெ இந்தக் கார்டெ போடப் போனேன். போட முடியலெ."

"கை சுளிக்கிடிச்சோவ்?"

"இல்லெ. இந்த நீளக் கவர் தொங்கற தபால் பெட்டி யிலெ வாயெ மறிச்சுண்டிருந்தது."

"ஆமய்யா! அப்படிக் கொண்டாரும், கதெயெ."

"கதெ இல்லெ. நெஜத்தெ அப்படியே சொல்றேன். தொங்கற தபால் பெட்டியிலெ இந்த நீளக் கவர் வாயெ மறிச்சுண்டு வளஞ்சு கெடந்தது."

" அட...டா...டா!"

"இந்தக் கார்டெ ஆனமட்டும் உள்ளெ தள்ளிப் பாத்தேன். தள்ளித் தள்ளிப் பாத்தேன். உள்ளே போக மாட்டேன்னு சொல்லிடுத்து."

" சொல்லும் சொல்லும்."

"தொங்கற தபால் பெட்டி வாய் நுனியிலே அப்படியே ரெண்டு விரலெ மட்டும் உள்ளேவிட்டு நீளக்கவரெ வெளி யிலே எடுத்தேன்."

"அபார மூளெ!"

"சொல்றதெ கொஞ்சம் கேளுங்கொளேன். நான் ஒரு தப்பும் பண்ணலெ. தப்புத் தண்டாவுக்குப் போறவனில்லெ நான். ஊருக்குள்ளெ வந்து விசாரிச்சாத் தெரியும். நாலு தலெமொறயா நதீக் கிஷ்ணன் கோவில் பூசை எங்களுக்கு. இன்னித் தேதி வரையிலும்...... "

"அட விஷயத்தை சுருக்கச் சொல்லித் தொலெயுமே அய்யா. செக்கு மாடு கணக்கா சுத்திச் சுத்தி வாருன் மனுசன்."

"தொங்கற தபால் பெட்டி வாயிலெ ரெண்டு விரலெ மட்டும் விட்டு கவரை வெளியிலெ எடுத்து, கார்டையும் கவரையும் சேத்துப்போடப் பாத்தேன். முடியலெ."

" முடியாது, முடியாது."

"தள்ளித் தள்ளிப் பார்த்தேன். கவர் மடிஞ்சு மடிஞ்சு வாயெ அடச்சுது. என்ன சேறதுனு தெரியலெ. திரு திருனு விழிக்கறேன். மேலெயும், கீழெயும் பாக்கறேன். முன்னும் பின்னும் போகலெ எனக்கு. என்னடா சேற துன்னு யோசிச்சேன். சரி, அந்த நதீக் கிஷ்ணன் விட்டது வழீனு மனசெ தேத்திண்டு, பெரிய தபாலாபீஸிலெ கொண்டு வந்து சேத்துப் புடறதுனு தீர்மானம் பண்ணிண்டு வறேன்."

"அவ்வளவும் கப்ஸா, அண்டப் புளுகு!" என்றுன் எழுபத்தி மூன்று நாற்பத்தியேழு.

"ஒரே அடியா அப்படிச் சொல்லிடப்படாது. நான் சொன்னதெல்லாம் நெஜம். கூட்டிக் கொறச்சுச் சொல்லத் தெரியாது எனக்கு. மந்திரம் சொல்ற நாக்கு இது. பொய் வராது."

"சரி சரி. ஸ்டேஷனுக்குப் போவோம்."

அர்ச்சகர் எழுபத்தி மூன்று நாற்பத்தியேழின் கைகளைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினார். அவர் அடைந்த கலவரம் பேச்சில் தெரிந்தது. ஸ்பரிசத்தில் தெரிந்தது. முகத்தில் பிரேதக் களை தட்டிவிட்டது.

"நான் பொய் சொல்லலெ. நான் ஒரு தப்பும் பண்ணலெ. நான் சொல்றது சத்தியம். நதீக் கிஷ்ணன் கோவில் மூல விக்கிரகம் சாட்சியாச் சொல்றேன், நான் சொல்றது பொய்யானு, ஸ்வாமி சும்மாவிடாது. கண்ணெப் புடுங்கிப்புடும். கையெயும் காலெயும், மடக்கிப்புடும்."

"உடம்பெ அலட்டிக்கிடாதேயும். ஸ்டேஷனுக்கு வாரும்."

அர்ச்சகர் கையைப் பிடித்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தான், அவன்.

அர்ச்சகர் மெதுவாகக் கையை இழுத்துக் கொண்டு, பின் தொடர்ந்தார். அவருக்கு உடம்பெல்லாம் கூசியது. அவமானத்தால் உள் வாங்கி நடந்தார். அவருக்குத் தெரிந்த ஆயிரமாயிரம் பேர்கள் சுற்றிச் சூழ் நின்று கொண்டு வேடிக்கை பார்ப்பது போலிருந்தது. எல்லோரும் அதிசயத்தோடு பார்த்துக் கொண்டு நிற்கிறார்கள்!

பஜாரைத் தாண்டித்தான் ஸ்டேஷனுக்குப் போக வேண்டும். எல்லா வியாபாரிகளையும் அவருக்குத் தெரியும். வியாபாரிகளின் ஜென்ம நக்ஷத்திரத்தன்று கோயிலில், பூஜை செய்து பிரசாதம் கொண்டு போய்க் கொடுப்பார். எல்லோருக்கும் அவரிடத்தில் மதிப்பு. அவர்கள் முன்னால் நடந்து போகவேண்டும். எல்லோரும் கடை வாசலில் நின்று பார்ப்பார்கள்.

அர்ச்சகருக்கு, தான் ஜெயில் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு நிற்பது மாதிரித் தோன்றிற்று. மனைவியும் குழந்தைகளும், முன்னால் நின்று நெஞ்சிலடித்துக்கொண்டு அழுகிறார்கள். போலீஸ் சேவகன் வந்து தடியால் அவர் களை வெளியே தள்ளுகிறான்.

எழுபத்தி மூன்று நாற்பத்தியேழின் காலில் சாஷ்டாங்க மாக விழுந்துவிடுவோமா என்று எண்ணினார் அர்ச்சகர். குய்யோ முறையோ என்று கத்தி, கூட்டத்தைக் கூட்டு வோமா என்றும் எண்ணினார். நூறுபேர் கூடத்தானே செய்வார்கள். நூறுபேர் கூடினால் தெரிந்தவர்கள் பத்து பேர் இருக்கத்தானே செய்வார்கள். 'இது என்ன அநியாயம்' என்று முன் வந்து சொல்லமாட்டார்களா?

ஆனால் வாயைத் திறந்தாலே முதுகில் அறை விழுமோ என்று பயந்தார். மேலும் அவருக்குத் தொண்டையை அடைத்தது. நிமிஷத்திற்கு நிமிஷம் வயிற்றிலிருந்து கனமாக ஏதோ ஒன்று மேலெழும்பி நெஞ்சைக் கடைந்தது. துக்கத்தை விழுங்கி விழுங்கிப் பார்த்தார். ரோட்டிலேயே அழுது விடுவோமோவென்று பயந்தார்.

மெயின் ரஸ்தா இன்னும் வரவில்லை. இரு மருங்கிலும் ஓங்கி வளர்ந்திருந்த வேப்ப மரங்கள் இருளைப் பெய்து கொண்டிருந்தன. அர்ச்சகர் துண்டால் முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

எழுபத்தி மூன்று நாற்பத்தியேழுக்கும் இப்பொழுது அவன் குழந்தையின் அதிர்ஷ்டத்தைப்பற்றி சந்தேகம் தட்டிவிட்டது. வெடிக்காமல், புஸ்ஸென்று ஒடுங்கிப் போன யானை வெடியைப் பார்த்து உதட்டைப் பிதுக்கும் சிறுவன் மனநிலையிலிருந்தான் அவன். 'இதுவும் இப் படியா!' என்று முணு முணுத்தான். அர்ச்சகரை நினைக்கும் போது அவனுக்கு ஒரு பக்கம் சிரிப்பு வந்தது. மறு பக்கம் அனுதாபப் பட்டான். இருந்தாலும் கடைசிவரை ஒரு கை பார்த்துவிடுவது என்று எண்ணிக் கொண்டான். வேறு வழியில்லை.

சிறிது தூரம் சென்றதும் நின்றார் அர்ச்சகர். தெரு விளக்கின் ஒளி அவர் முகத்தில் விழுந்தது. எழுபத்தி மூன்று நாற்பத்தியேழு அவர் முகத்தைப் பார்த்தான். கண்கள் சிவந்திருந்தன. அர்ச்சகர் துண்டால் மூக்கைத் துடைத்துக் கொண்டு சொன்னார்.

"நான் ஒரு தப்பும் பண்ணலெ. ஒரு தப்பும் பண்ணலெ." இதைச் சொல்லும் போது உண்மையாகவே அழுதுவிட்டார் அவர்.

மனதைக் கல்லாக்கிக் கொண்டு சொன்னான் எழுபத்தி மூன்று நாற்பத்தியேழு.

"நான் என்னவேய் செய்ய முடியும்? நான் என் ட்யூட்டியெ கரெக்டா பார்க்கற மனுசன்."

"நான் சொல்றது நம்பிக்கையில்லையா?"

"நம்பிக்கையெப் பொறுத்த விஷயமில்லே வேய் இது. ஸ்டேஷனுக்கு வாரும். இன்ஸ்பெக்டருட்டே விஷயத்தைச் சொல்லும். இன்ஸ்பெக்டரு விட்டா, நானு பிடிச்சுக் கட்டப் போறேன்."

"இன்ஸ்பெக்டர் விட்டுடுவாரோ?"

"எனக்கு என்ன ஜோஸ்யமா தெரியும்?"

"இன்ஸ்பெக்டர் வேறொண்ணும் செய்யமாட்டாரே."

"என்னுது?"

"இல்லே, வந்து, அடி கிடி இந்த மாதிரி..." அதைச் சொல்லுவதற்கே வெட்கமாகயிருந்தது அவருக்கு.

இத்தனை பெரிய சரீரத்தில், அதை விடவும் பெரிய கோழைத்தனம் குடி புகுந்திருப்பதை எண்ணி மனதுள் சிரித்துக் கொண்டான் எழுபத்தி மூன்று நாற்பத்தியேழு.

"அடிகிடி யெல்லாம் கேஸைப் பொறுத்து; அடிக்கப் படாதுன்னு சட்டமா? சந்தேகம் வந்திடுச்சின்னு எலும்பெ உருவி எடுத்துடுவாங்க. அதிலேயும் இப்பம் வந்திருக்கிற இன்ஸ்பெக்டரு எமகாதகன். நச்சுப்புடுவான் நச்சு."

"ஐயோ, எனக்கு என்ன செய்யணும் தெரியலியே" என்று அர்ச்சகர் பிரலாபித்தார். அந்தக் குரல் எழுபத்தி மூன்று நாற்பத்தியேழின் மனதைத் தாக்கிற்று.

"உம்மெப் பார்த்தா எனக்கு எரக்கமாத்தான் இருக்குது."

"அப்படீன்னா என்னெ விட்டுடுமே, உமக்கு கோடி புண்ணியம் உண்டு."

"அது முடியுமா ? கேஸிலெ புடிச்சா விடமுடியுமா ? வெளயாட்டுக் காரியமா ? உத்தியோகம் பணயமாயுடுமே."

அர்ச்சகர் சிலைபோல் நின்றார்.

மீண்டும் எழுபத்தி மூன்று நாற்பத்தியேழுதான் பேச்சை ஆரம்பித்தான் :

"ஒண்ணு வேணாச் செய்யலாம் ; அதும் பாவமேனு பாத்துச் செய்யணும்."

"என்னுது ?"

"எச். ஸிட்டெச் சொல்லி கேஸை ஒரு மாதிரியா வெளிக்கித் தெரியாமெ ஓச்சுடலாம்."

"அதாரு எச். ஸி."

"ஹெட் கான்ஸ்டபிள்."

"அப்படின்னாச் சொல்லும். நீர் நன்னா இருப்பேள். நதீக் கிஷ்ணன் ஒம்மெக் கண் திறந்து பாப்பன்."

"எச். ஸி. முன்னாலெ போய் இளிக்கணும். அதிலேயும் பெரிய சீண்ட்றம் புடிச்ச மனிசன் அவன். உடனெ கொப்புலெ ஏறிடுவான். கால் மேலே காலெப் போட்டுக் கிடுவான்."

"நீர் எனக்காகச் சொல்லணும். இல்லேன்னா நான் அவமானப்பட்டு அழிஞ்சு போயுடுவேன். இது பணத் தாலெ, காசாலெ நடத்தற ஜீவனமில்லெ. கேஸு கீஸுனு வந்துடுத்தா, உத்தியோகம் போயுடும். நான் சம்சாரி. அன்னத்துக்கு லாட்டரியடிக்கும்படி ஆயுடும். ஒரு

மனுஷன் முகத்திலெ முழிக்க முடியாது. நீர் எச். ஸிட்டெ சொல்லும், இந்த ஆயுஸு பூராவும் நதீக் கிஷ்ணனோடெ சேத்து உம்மையும் நெனச்சுப்பேன்."

"அது சரிதான் வேய். உம்ம வயித்திலே மண்ணடிக்கணும்ங்கற ஐடியா கெடையாது எனக்கு. எச். ஸி. ஒரு மாதிரி ஆளு; பாத்துக்கிடும். ஈவு இரக்கம் அவன் போன வழியிலெ கிடையாது; மேலும் பெரிய துட்டுப் பிடுங்கி."

"என்னுது ?"

"துட்டுப் பிடுங்கி. காணிக்கை வச்சாத்தான் சாமி வரம் தரும். இந்த எளவுக்காகச் சுட்டித்தான் அந்த மனுசங்கிட்டே வள்ளிசா சிபாரிசுக்கு போறதில்லெ நான்."

"என்ன கொடுக்கணும் ?"

"அஞ்சு பத்து கேப்பான்."

"அஞ்சா ? பத்தா ?"

"பத்து ரூபாய்க் காசில்லாமெ ஒரு கேஸெ ஒய்ப்பானா ?"

"பத்து ரூபாயா !"

"ஏன் வேய் ?"

"பத்து ரூபாய்க்கு இப்பொ நான் எங்கே போறது ?"

"வேணும்னா செய்யும். இல்லென்னா வருது போலே பாத்துக்கிடணும்."

அர்ச்சகர் வாய் திறவாமல் நடந்தார். மீண்டும் எழுபத்தி மூன்று நாற்பத்தேழுதான் பேச்சை ஆரம்பித்தான்.

"என்ன ? என்ன சொல்லுதீரு ?"

"ஊஹூம். நான் எங்கே போவேன் பத்து ரூபாய்க்கு?" கணீரென்ற குரலில் சொன்னார் அர்ச்சகர். எழுபத்தி மூன்று நாற்பத்தியேழுக்கு கோபம்தான் வந்தது.

"இப்பொ யாரு வேய் தரணும்னு களுத்தெப்புடிக்கா- யாரோ லஞ்சம் புடுங்குதாப்லெ படுதீரெ. துரிசமா நடவும். இன்ஸ்பெக்டர், வீட்டுக்கு போகுதுக்கு முன்னடி போயுடணும். கொஞ்சம் கஷாயம் குடிச்சாத்தான் உடம்புக்கு சரிப்பட்டு வரும் உமக்கு."

"ஒடனெ கத்திரிச்சுப் பேசறேரே."

"கத்திரியுமில்லெ இடுக்கியுமில்லெ, வாய் பேசாமெ நடவும்."

சிறிது தூரம் சென்றதும் மீண்டும் பேச்சை ஆரம்பித்தான். எழுபத்திமூன்று நாற்பத்தியேழுதான்!

"இப்பம்தான் ஞாபகம் வருது. அண்ணைக்கு டி. எஸ். பி. ஆபிஸிலெயிருந்து ஒரு கடிதாசி வந்துச்சு. டி. எஸ். பி. ஆபிஸிலேருந்து காயிதமெல்லாம் மாயமா மறஞ்சு போகுதாம். 'காக்கிச் சட்டைக்காரங்க நாந்துக்கிட்டு சாகப் படாதா'ங்கர தோரணையிலே எழுதியிருந்தாங்க. இப்பம்தாலா விஷயம் தெரியுது?"

"என்ன தெரியுது!"

"சட், வாயெ மூடிட்டு வாரும். வாயெத் தொறந்தீர்னு பொடதிலெ வச்சிடுவேன். ஸ்டேஷனுக்கு உள்ளே ஏத்தினம் பெறவுல்லா இருக்கு."

"பகவான் விட்டது வழி."

அர்ச்சகர் மௌனமாக நடந்தார். இப்பொழுது அவருக்கு சந்தேகம் வலுத்தது. எழுபத்தி மூன்று நாற்பத்தியேழின் 'வியாதியை'ச் சிறுகச் சிறுகப் புரிந்துகொண்டார் அவர். சந்தேகத்தை மனதுள் ஊர்ஜிதம் செய்துகொண்டார். இப்பொழுது அவருக்குள்ளே குவிந்து கிடந்த பீதியுணர்ச்சி சிதறி ஓட ஆரம்பித்தது. உடம்பில் புது ரத்தம் பாய்ச்சியது போலிருந்தது. தலை நிமிர்ந்து நடந்தார். 'பார், உன்னை ஒரு கை பார்க்கிறேன்' என்று மனதில் கருவிக்கொண்டார்.

இருவரும் ஸ்டேஷன் பக்கம் வந்து விட்டார்கள். எழுபத்திமூன்று நாற்பத்தியேழுதான் மீண்டும் பேச்சை ஆரம்பித்தான்.

"நல்ல மனுசங்களுக்கு இது காலமில்லே. எத்துவாளி பயகளுக்குத்தான் காலம். ஈவு இரக்கம் இருக்கப்படாது?"

"ஏனும்?"

"பாருமே, மாலை மாதிரி குத்தம் பண்ணிப்புட்டு நிக்கேரு. நீரு உடற கதெயெல்லாம் ஒரு பயவுளும் நம்பப் போவதில்லே. கோயில் குளிக்கிற மனுசன் தெரியாத் தனமா ஆம்பிட்டுக்கிட்டு முளிக்காரு, அடியும் உதையும் பட்டு, அவமானமும் பட்டு, அலக்களிஞ்சுப் போகப் போருரன்னு ஐடியா சொன்ஞ, காதிலெ ஏறமாட்டேங்குது. உம்ம கூட்டாளிக்கெல்லாம் பட்டாத்தான் தெரியும். உம்மெச் சொல்லிக் குத்தமில்லெ, காலம் அப்படி."

அர்ச்சகருக்குச் சிரிப்புத்தான் வந்தது.

"உம்மெ நைஸா கை தூக்கிவிட்டுப் போடணும்னு நெனச்சேம்பாரும். அந்த புத்தியெ செருப்பாலெ அடிக் கணும்" என்ருன் எழுபத்திமூன்று நாற்பத்தியேழு.

"நீர் சொல்றது சரி. என்னெக் காப்பாத்தணுங்கற நெனப்பு ரொம்ப இருக்கு உமக்கு. அந்த எச். ஸி. தான் பெரிய பேராசைக்காரனு இருக்கான். அவன் பேராசைக் காரனு இருக்கட்டும், நான் அஷ்டதரித்திரமா இருக்க ணுமோ?"

"ஆசாமியெ ஸ்டேஷனுக்கு உள்ளே விட்டுப் பூட்டாத் திருகித் திருகி எடுத்தால்ல தெரியும், அஷ்டதரித்திரம் படறபாடு."

"பகவான் விட்டது வழி. பதனஞ்சு வருஷமா தினம் தினம் அவனெ குளுப்பாட்டறேன். விதவிதமா அலங்காரம் பண்ணிப் பாக்கறேன். சாஷ்டாங்க நமஸ்காரம் பண்ணிப் பண்ணி நெத்தியிலே தழும்பு விழுந்துடுத்து. அந்த நன்னி கெட்ட பயல் அடி வாங்கித் தறதுன்ஞ தரட்டும். உதை

வாங்கித்தறதுன்னு தரட்டும். கம்பி எண்ணவச்சான்னு வைக்கட்டும்.''

அர்ச்சகர் அமைதியாகப் பேசினார்.

எழுபத்திமூன்று நாப்பத்தியேழு அர்ச்சகர் முகத்தைத் திரும்பிப் பார்த்தான். அவர் முகத்தில் பயத்தின் சாயலே இல்லை. அவர் இப்பொழுது வேகமாக நடந்தார். கைகளை ஆட்டிக்கொண்டு நடந்தார்.

''அப்பம் ஒரு காரியம் செய்வமா?'' என்று கேட்டான் எழுபத்திமூன்று நாற்பத்தியேழு.

''என்ன?''

''நீரும் அப்படியொண்ணும் டாட்டாவுமில்லெ, பிர்லாவுமில்லெ. ஏதோ ஒரு மாதிரியா காலத்தெ தள்ளிட்டிருக்கீரு. உமக்காகச்சுட்டி ஒண்ணுவேணுச் செய்யலாம்.''

''விஷயத்தைத் தெளிவாகச் சொல்லலாமே. ஏன் சுத்திச் சுத்தி வளைக்கணும்?'' என்று கேட்டார் அர்ச்சகர்.

எழுபத்தி மூன்று நாற்பத்தியேழுக்கு பிடரியெத் தாக்கிற்று.

''எச். ஸிட்டெ ஒம்ம நெலமெயெ எடுத்துச் சொல்லி சுளுவா முடிக்கப் பாக்கறேன். அஞ்சு ரூபா எடும் சட்னு எடும். எனக்கு வேறெ வேலை இருக்கு.''

அர்ச்சகரை முன்பின் யோசிக்க விடாமல் பணத்தை வாங்கிவிட எண்ணினான் அவன்.

அர்ச்சகர் முன்னைவிடவும் அமைதியாகச் சொன்னார்;

''இதென்ன பேச்சு இது. அஞ்சு ரூபாய் தரலாம்னு பத்தாத் தந்துடப் படாதா? அம்புட்டுக்கெல்லாம் இருந்தா நான் ஏன் நதீக் கிஷ்ணனெ குளுப்பாட்டப் போறேன். மேலும் இப்போ நான் என்ன திருடினேனு, கொள்ளை யடிச்சேனு, இல்லெ ரோட்டிலெ போறவ கையெப் புடிச்சு இழுத்தேனு, என்ன தப்புப் பண்ணிப்பிட்டேன்னு சொல்லட்டுமே, உம்ம எச். ஸி. தலெயெ சீவறதுன்னு சீவட்டுமே.''

எழுபத்திமூன்று நாற்பத்தியேழுக்கு அந்த இடத்தி லேயே அர்ச்சகரை கண்டதுண்டமாக வெட்டிப் போட்டு விடலாம் போலிருந்தது.

"மகா பிசுநாறி ஆசாமியா இருக்கெரே!" என்ருன் ஆத்திரத்துடன்.

"என்ன சேறது? அப்படித்தான் என்ன வச்சிருக்கான் அவன்."

"அவன் யாரு அவன்?"

"மேலே இருக்கான் பாரும், அவன்."

இருவரும் ஸ்டேஷன் முன்னுல் வந்து விட்டார்கள். ஸ்டேஷனுக்கு முன்னுலிருந்த வெற்றிலை பாக்குக் கடையில், கடைக்காரரிடம் பேசிக்கொண்டிருந்தவரை, 'அண்ணுச்சீ' என்று கூப்பிட்டுக் கொண்டே, அவரிடம் வலிய பேச ஆரம்பித்தான் எழுபத்திமூன்று நாற்பத்தியேழு.

அர்ச்சகர் பின்னுல் நின்றுகொண்டிருந்தார். அண்ணுச்சி யிடம் சளசளவென்று பேச்சை வளர்த்திக் கொண்டிருந் தான் அவன். அர்ச்சகர் நின்று கொண்டிருந்த இடத்தை அவன் அசைப்பிலும் திரும்பிப் பார்க்கவில்லை. அவர் போவதானுல் போகட்டும் என்ற தோரணையில் நிற்பது போலிருந்தது. அர்ச்சகர் இதைப் புரிந்துகொண்டார். ஆனுல் அவர் கற்சிலை மாதிரி அங்கேயே நின்ருர்.

அண்ணுச்சிக்குப் பேச்சு சலித்து விட்டது.

எழுபத்திமூன்று நாற்பத்தியேழு அர்ச்சகர் பக்கம் திரும்பி, "சாமி, நீங்க போறதுன்னுப் போங்க, பின்னுலெ பாத்துக்கிடலாம்" என்ருன்.

"கையோடெ காரியத்தை முடிச்சுடலாமே" என்ருர் அர்ச்சகர்.

"அட போங்க சாமீ. நான்தான் சொல்லுதேனெ பின்னுலெ பாத்துக்கிடலாம்னு. உடாமெ பிடிக்கேரே."

"என்னப்பா விஷயம்?" என்று கேட்டார் அண்ணுச்சி

" ஒண்ணுமில்லெ. என் கொளந்தெக்குப் பொறந்த நாளு நாளைக்கு. பூசைகீசை பண்ணி கொண்டாடணும்ணு சொல்லுது அது. அதுதான் இவரிட்டே கேட்டுக்கிட்டே வாறேன். சாமான் கீமான் வாங்கணும்ங்காரு. ஆனு பணத் துக்கு எங்கே போகுது ?"

'அடி சக்கே' என்று மனதில் சொல்லிக்கொண்டார் அர்ச்சகர்.

பணம் சம்பந்தமான பேச்சு வந்ததாலோ என்னமோ அண்ணாச்சி சட்டென்று விடைபெற்றுக்கொண்டு சென்று விட்டார்.

எழுபத்திமூன்று நாற்பத்தியேழும் அர்ச்சகர் நின்ற திசைக்கு நேர் எதிர்த்திசை நோக்கி மடமடவென்று நடக்க ஆரம்பித்தான்.

அர்ச்சகர் பின்னால் ஓடி ஓடிச் சென்றார்.

" இந்தாரும். ஓய், கொஞ்சம் நில்லும். என்ன இது ? நடுரோட்டிலெ நிக்கவச்சுட்டு நீர் பாட்டுக்கு கம்பியெ நீட்டறேரே ?"

" அட சரிதான் போமய்யா ?"

" என்னய்யா இது, எனக்கு ஒண்ணும் புரியலையே."

" வீட்டெப் பாத்துப் போமய்யா. போட்டு பிராணனெ வாங்குதீரெ."

" என்னன்னமோ சொன்னேர். ஆனா ஆனா அறுபத்தி ரெண்டுன்னு சொன்னீர். இப்பொ போ போனு விரட் டறேரே. "

எழுபத்தி மூன்று நாற்பத்தி யேழுக்கு அசாத்திய கோபம் வந்துவிட்டது. கண்கள் சிவந்தன. நெற்றிப் பொட்டில் நரம்புகள் புடைத்தன. அர்ச்சகர் முகத்தையே இமைக்காமல் வெறிக்கப் பார்த்தான். அர்ச்சகரும் இமைக் காமல் பார்த்தார். அவருக்கு சற்றுப் பயமாகத்தான் இருந்தது. ஆனால் அதே சமயத்தில் அடக்க முடியாத சிரிப்பும் வந்தது. இலேசான புன்னகை உதட்டில்

நெளிந்தது. அர்ச்சகர் சிரிப்பை அடக்குவதையும், அவர் உதட்டில் சிரிப்பு பீறிட்டு வழிவதையும் கவனித்தான் எழு பத்தி மூன்று நாற்பத்தேழு. சிரிப்புப் பொத்துக்கொண்டு வந்துவிட்டது அவனுக்கு.

எழுபத்திமூன்று நாற்பத்தியேழு கடகட வென்று சிரித்தான். சப்தம் போட்டுச் சிரித்தான். வாய்விட்டுச் சிரித்தான். குழந்தை போல் சிரித்தான்.

அர்ச்சகரும் சேர்ந்து கொண்டு அட்டகாசமாகச் சிரித்தார்.

எழுபத்திமூன்று நாற்பத்தியேழு அர்ச்சகரிடம் மிக நெருங்கி நின்று கொண்டு, அவர் முகத்தைப் பார்த்து சிரித்தபடி சொன்னான் :

" வீட்டுக்குப் போம். நானும் வீட்டுக்குத்தான் போறேன் " குரல் மிக அமைதியாக இருந்தது. அர்ச்சகர் அவன் முகத்தைப் பார்த்தார். சற்று முன்னால், அவர் முன் நின்ற ஆள் மாதிரியே இல்லை. அர்ச்சகருக்கு ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை.

" நானும் அந்தப் பக்கம்தானே போகணும். சேர்ந்தே போறது " என்று கூட நடந்தார் அர்ச்சகர்.

" ஆமாம், அந்த ஆசாமீட்டெ ஏதோ ஜென்ம நக்ஷத் திரம்னு சொன்னேரே, வாஸ்தவம்தானா ? இல்லெ எங்கிட்டெக் காட்டின டிராமாவுக்கு மிச்சமோ ?" என்று கேட்டார் அர்ச்சகர்.

" உண்மைதான் வேய், நாளைக்குப் பொறந்த நாள் "

" என்ன கொழந்தெ ?"

" பொம்புளெப் புள்ளெ."

" தலைச்சனெ ?"

" ஆமா. கலியாணம் முடிஞ்சு பதினெண்ணு வருசமாவுது."

" ஓஹோ, பேரென்ன ?"

"கண்ணம்மா"

"நம்ம ஸ்வாமிக்கு ரொம்ப வேண்டிய பெயர்" என்றார் அர்ச்சகர்.

எழுபத்திமூன்று நாற்பத்தியேழு சிரித்துக்கொண்டான்.

"ஆமாம், அதுக்கு என்ன பண்ணப்போறீர்?"

"வீட்டுக்காரி எதை எதையோ செய்யணும்னு சொல்லுதா. நான்தான் இளுத்துக்கிட்டிருக்கேன்."

"ஏன் இளுக்கணும்? தலைச்சன் கொழந்தெ. ரொம்ப நாளைக்கப்பறம் ஸ்வாமி கண் திறந்து கையிலெ தந்திருக்கார். அதுக்கு ஒரு குறைவும் வைக்கப்படாது; வைக்க உமக்கு அதிகாரம் கிடையாது." என்று அடித்துப் பேசினார், அர்ச்சகர்.

"அது சரிதாய்யா. யாரு இல்லைன்னு சொல்லுதா? ஆனா கைச்செலவுக்கில்லா திண்டாட்டம் போடுது."

"போயும் போயும் ராப்பட்டினிக்காரன், ஸ்வாமி குளுப்பாட்டறவனப் பிடிச்சா என்ன கெடைக்கும்? பிரஸாதம் தருவன். கொழச்சுக் கொழச்சு நெத்தியிலெ இட்டுக்கலாம். ஜரிகைத் துப்பட்டா, மயில் கண் வேஷ்டி, தங்கச் செயின் இந்த மாதிரி வகையாப் பிடிச்சா போட்டு போட்னு போடலாம். என்ன ஆளய்யா நீர், இதுகூட தெரிஞ்சுக்காமெ இருக்கேரே" என்றார் அர்ச்சகர்.

எழுபத்திமூன்று நாற்பத்தியேழு வாய்விட்டுச் சிரித்தான். "ஒரு பயலும் கையிலெ சிக்கலெ. நாயா அலஞ்சு பாத்தேன். பிறந்தநாள் அயிட்டம் வேறெ மனசிலெ உறுத்திக்கிட்டு இருந்தது. அர்ச்சகரானா அர்ச்சகர்னு பாத்தேன். கையெ விரிச்சுட்டீரே! பொல்லாத கட்டை தாய்யா நீரு."

"நானும் விடிஞ்சா அஸ்தமிச்சா பத்து மனுஷாளிடம் பழகறவன்தானே? எழுபத்திமூன்று நாற்பத்தியேழு என்ன துள்ளுத்தான் துள்ளிருவன்னு தெரியாதாக்கும்."

"அடி சக்கையின்னும்! கொஞ்ச முன்னலே யாரோ அளுதாளே, அது யாரு? யாருக்கோ பல்லு தந்தி அடிச்சுதே, யாருக்கு? யாருக்கு கையும் காலும் கிடுகிடான்னு வெறச்சுதாம்?"

"மொதல்லெ கொஞ்சம் பயந்துதான் போனேன். ஏன் பொய் சொல்லணும். இருந்தாலும் என்ன உருட்டு உருட்டிப்புட்டீர்."

"என்ன செய்யுது சாமீ. இந்த சாண் வயத்துக்காகத் தானே இந்த எளவெல்லாம். இல்லாட்டி மூக்கெப் பிடிச்சுக் கிட்டு உக்காந்திரலாமே."

"சந்தேகமா? நான் என்ன பாடுபடறேன் கோவில்லே? கோவிலுக்குள்ளே ஏறிவந்தாலே புண்ணியாசனம் பண்ணணும்; ஸ்வாமி எழுந்திருந்து பின்புறம் வழியா ஓடியே போயுடுவர். அந்தமாதிரி பக்த சிகாமணிகள்ளாம் வருவா. அவாளிடம் போய் ஈ ஈன்னு இளிச்சுண்டு நிக்கறேன். உங்களெ விட்டா உண்டா என்கிறேன். ஆழ்வார், நாயன்மார்கள் கெட்டதுகேடு என்கிறேன். கடைசியாப் போறத்தே ரெண்டணு வைக்கருஞ, நாலணு வைக்கருஞன்னும் கவனிச்சுக்கறேன். அணுவெ தீர்த்தத்திலே அலம்பி இடுப்பிலெ சொருகிக்கறேன்" என்றுர் அர்ச்சகர்.

இருவரும் சேர்ந்து சிரித்தார்கள்.

இரண்டு பேரும் நடந்து நடந்து போஸ்டாபீஸ் ஜங்ஷனுக்கு வந்து விட்டார்கள்.

"இந்த லெட்டரே போட்டுட்டு வந்துடறேன்." என்றுன் எழுபத்திமூன்று நாற்பத்தியேழு.

"பாத்துப்போடும். யாராவது காக்கிச் சட்டைக்காரன் வந்து புடிச்சுக்கப் போருன். யார் வீட்டிலெ நோவு எடுத்திருக்கோ?" என்றுர் அர்ச்சகர்.

கடிதங்களைத் தபாலில் சேர்த்துவிட்டு எதிர் சாரியிலிருந்த வெற்றிலை பாக்குக் கடைக்கு வந்தான் எழுபத்திமூன்று நாற்பத்தியேழு. மட்டிப்பழக் குலையிலிருந்து

நாலைந்து பழங்களைப் பிய்த்தான். "இந்தாரும்; சாப்பிடும்" என்று அர்ச்சகரை நோக்கி நீட்டினான்.

அர்ச்சகர் இரண்டு கைகளையும் நீட்டி வாங்கிக் கொண்டார். இரண்டுபேரும் வெற்றிலை போட்டுக் கொண்டார்கள்.

"கணக்கிலெ எளுதிக்கிடுங்க" என்றான் எழுபத்தி மூன்று நாற்பத்தியேழு, கடைக்காரரை நோக்கி.

"எளுதிக்கிட்டே இருக்கேன்" என்றார் கடைக்காரர்.

"சும்மா எளுதுங்க. ரெண்டுநாள் களியட்டும். செக்கு கிளிச்சுத் தாறேன்."

நடந்து, இரண்டு பேர்களும் பரஸ்பரம் பிரியவேண்டிய இடத்திற்கு வந்துவிட்டார்கள்.

"சாமி, அப்பொ எனக்கு விடெ கொடுங்க. ஒண்ணும் மனசிலெ வச்சுக்கிடாதீங்க" என்றான் எழுபத்தி மூன்று நாற்பத்தியேழு.

"என்ன நெனக்கிறது. காக்கி ஜாதியே இப்படித் தான்" என்றார் அர்ச்சகர்.

"எல்லாம் ஒரே ஜாதிதான்" என்றான் எழுபத்தி மூன்று நாற்பத்தியேழு.

"அதுசரி, நாளைக்கு என்ன செய்யப் போறே?"

"என்ன செய்யுதுனு விளங்கலெ. அதுக்கு முகத்திலெ போய் முளிக்கவே வெட்கமாயிருக்கு. ஆயிரம் நெனப்பு நெனச்சுக்கிட்டு இருக்கும். சரி, நான் வாறேன்" என்று சொல்லிவிட்டு நடந்தான் எழுபத்திமூன்று நாற்பத்தியேழு.

"ஓய், இங்கே வாரும்" என்றார் அர்ச்சகர்.

வந்தான்.

அர்ச்சகர் அரை வேஷ்டியை இலேசாக அவிழ்த்து விட்டுக்கொண்டார். இப்பொழுது வயிற்றில் ஒரு துணி பெல்ட் தெரிந்தது. துணி பெல்ட்டில் ஒவ்வொரு இடமாகத்

தடவிக்கொண்டே முதுகுப்புறம் வந்ததும் சட்டென்று கையை வெளியில் எடுத்தார். ஐந்து ரூபாய் நோட்டு!

"இந்தாரும். கையெ நீட்டும்" என்ருர் அர்ச்சகர். எழுபத்திமூன்று நாற்பத்தியேழு ஒரு நிமிஷம் தயங்கிவிட்டு கையை நீட்டி வாங்கிக் கொண்டான்.

"கொழந்தை பிறந்த நாளுக்கு குறை ஏற்படப்படா துன்னு தறேன்" என்ருர் அர்ச்சகர்.

"சாமீ, ரொம்ப உபகாரம், ரொம்ப உபகாரம்" என்ருன் எழுபத்தி மூன்று நாற்பத்தியேழு. அவன் குரல் தழதழத்தது.

"ஆனந்த பாஷ்பம் ஒண்ணும் வழிக்க வேண்டாம். ஒண்ணும் தேதி சம்பளம் வாங்கினதும் திருப்பித் தந்துடணும்" என்ருர் அர்ச்சகர்.

"நிச்சயமா தந்துடுதேன்."

"கண்டிப்பாத் தந்துடணும்."

"தந்துடுதேன்."

"தரலையோ எச். ஸிட்டெச் சொல்லுவேன்."

இருவரும் சிரித்துக் கொண்டார்கள்.

"நாளைக்கு நம்ம கோயிலுக்கு கூட்டிண்டு வாரும் கொழந்தெயெ. கண்ணம்மா வந்தா ரொம்ப சந்தோஷப் படுவன் பாலகிஷ்ணன். நானே கூடயிருந்து ஜமாய்ச்சுப் புடறேன்."

"சரி, அங்கேயே கூட்டிட்டு வாறேன்."

"அப்பொ நான் வறேன். முதல் தேதி ஞாபகமிருக் கட்டும்" என்று சொல்லிக்கொண்டே இருட்டில் மறைந்தார் அர்ச்சகர்.

எழுபத்திமூன்று நாற்பத்தியேழு அவர் மறைவதைப் பார்த்துக்கொண்டே நின்ருன்.

# 5

# வட்டிற்சோறு

பூவை எஸ். ஆறுமுகம்

'பச்சை மண்' சிரிக்கக் கண்டால், உள்ளம் கொள்ளை போய்விடுமல்லவா? அப்படித்தான் சுருளாண்டியும் மனம் பறிபோய் நின்றான். ஆனால், அவனை அவ்வாறு ஆக்கியது குழவியா? அல்ல! 'சம்பான் தனை' எழுபத்தெட்டுக் குழி நிலத்தில் நடப்பட்டிருந்த நாற்றுக்கள் பசுமை ஏந்திச் சிரிப்பினைச் சிந்திக்கொண்டிருந்தன. அவன் சிந்தை இழந்து நின்றதில் வியப்பு ஏது? வினயந்தான் உண்டா?

சுருளாண்டியின் அடிப்பாதங்களில் வளை நண்டு நெளிந்து தப்பிய பொறியுணர்வு ஊடுருவியது; வாய்க்கால் நீர் உடலை நடுங்கச் செய்தது; ஊதல் காற்று வேறு. நிலத்தின் உள் வாயிலிருந்து வெளியேறி நடந்து, வரப்புக் கரையில் வந்து நின்றான். பிடுங்கி எறியப்பட்டிருந்த 'களை'கள் சில அவனது கால் விரல்களிலே சிக்கிக் கொண்டன; விடுபட்டு நடையைத் தொடர்ந்தான்.

தோளில் ஏர்க்கலப்பை இருந்தது; புதுக்கோட்டைக் காளைகள் இரண்டும் கைப்பிடிப்பில் அணைந்தன. அவன் பெருமூச்செறிந்தான். புதிதாக 'வசப்படுத்தி' யிருந்த

கரம்பைத் துண்டு நிலத்தைச் சீர்செய்து 'தொளி' உழுது முடித்த அயர்வின் நெட்டுயிர்ப்பு அது. 'வானம் பார்த்த பூமி' என்றாலும் ஒரு போகச் சாகுபடியாவது கிடைக்குமே.

"சுருளாண்டி! நீ எப்ப வந்தே? ஆளே கண்ணுப் புறத்தாலே தட்டுப்படலேயே?"

"வந்து ஒரு கிளமை ஓடிப்பிடுச்சு; வெள்ளாமை அலுவல் ஆளை நெட்டி வாங்கியிருச்சுது; எங்க சேக்காளி பச்சைமலே கடுதாசி அனுப்பி யிருந்துச்சு; ஜெயங்கொண் டத்திலிருந்து ஓடியாந்திட்டேன்!"

"அது சரி; வாய்ச் சேதியை மறந்திட்டு, என்னமோ பேசுறேனே?......சுருளாண்டி, ஒனக்குச் சங்கதி காதுக்கு எட்டலேயா? ஒன் மாமன் ஆவுடைத் தேவர் ரொம்ப செகல் தப்பிக் கெடக்குறுகளாமே?... போய் ஒரு கடுத்தம் காணப் புடாதாங்காட்டி?...ஆபத்துச் சம்பத்துக்கு ஒண்ணு அரை ஒத்தாசை பண்ணுப்பா, சுருளி!"

குத்துக்கல்லென நின்றான் சுருளாண்டி; 'சாமியாட்டம்' வந்தாற்போல முகம் அருள் வாங்கிப்போயிருந்தது. "பஞ்சாரம் அண்ணாச்சி, மத்தத் தாக்கல் எதுணச்சும் இருந்தால் எங்காதிலே போடுங்க; ஒங்க வயசுக்கு மரியாதை வச்சு ஒங்களோட காலுக்குச் செருப்பாச் செய்யிறேன். ஆனா, என் மாமன் பேச்சை ஒண்டியும் பெரிய மனசு செஞ்சு தூக்காதீக; நான் வாரேன் அடி சாயப்போவுது; ஆட்டிலே இது மாசம்!.........

* * * *

அறந்தாங்கிச் 'சங்கு மார்க்கு' நீலச் சவுக்காரம் போட்டுத் துவைத்துக் காயவைக்கப்பட்ட சவுக்கத்தை உதறித் தோளில் 'உருமாலை' போட்டபடி மாட்டுக் கொட்டடிக்குப் பக்கமாக வந்தான் சுருளாண்டி. அலமேலு உப்புப் போட்டுக் கலக்கிக் கொடுத்த 'ஒரு லோட்டா நீராகாரம்' அவன் வயிற்றுக்கு இதமாயிருந்தது.

அலஞ்சிரான் காட்டுக் காளிகோயில் உச்சிகாலப் பூஜை மணி அனற் காற்றில் ஓசை கிளப்பியது.

" அலமேலு "

தாபம் அழைத்தது.

" இந்தாலே வந்துப்புட்டேனுங்க, மச்சான் !"

அன்பு பதிலிறுத்தது.

அகப்பையில் சொட்டிய குழம்புடன் அவள் வந்தாள். கனவுச் சுவையும் இனிய நினைவும் களை கட்டித் திரிந்தன.

" வாசனை கமகமண்ணு மணக்குதே ?"

சுவை விஞப்போட்டது.

" கொண்டைப் பூவைச் சொல்றீகளா ?...ஒங்களுக்கு நாள் முச்சூடும் நைத்தியந்தானுக்கும் !"

வெட்கம் வெட்டிப் பேசியது.

" பூவைச் சொல்லலே, புள்ளே ! கொழம்பைச் சொல்லு றேனுக்கும் !"

கனவு சிரித்தது.

" அதுவுங்களா மச்சான் ?...கட்டுமாவடிக் கருவாட்டுக் கொளம்புங்க; வெள்ளைப் பூண்டுப் பல்லு இணுங்கிப்போட்டு சோக்கா ஆக்கியிருக்கேனுங்க. செயங் கொண்டத்தி லேயே வாய் ஓயாமச் சொல்லிக்கிட்டிருந்தீங்களே நீங்க ? அதுக்குத்தான் நெனைப்போட ஆக்கி யிருக்கேனுங்க, மச்சான் !"

"மசக்கைக் காரவுகளுக்கு இது உண்டனப் புடிக்கும்!"

நாணம் நகை பூத்தது !

" எனக்குக் கைவேலைங்க காத்துக் கெடக்குது. ஒங்க அப்பாருக்கும் ஆத்தாளுக்கும் கருவாட்டுக் கொளம்பு ஒரு வேளைக்குக் கொண்டுபோய்க் கொடுக்கவேணும். போன சந்தைக் கெடுவப்பவே சொன்னுங்க !"

" ஒவ்வொரு தடவையிலேயும் ஊருக்குப் புறப்படுறப்ப, மருமகப்பொண்ணுக்குத் 'துண்ணூரு' பூசி, பத்து, இருபது பணமும் போட்டு அனுப்புற மாமனுக்கும் மாமியாருக்கும்

இப்பிடி உபசாரமும் விருந்து வைபோகமும் நடந்துக்கிட்டி ருக்குது!......பலே. பலே!''

அலமேலு அழகுகூட்டி நகைத்தாள்.

"அலமேலு, தபாலாபீசு வரைக்கும் போயிட்டு ஓடி யாரேன். ஜெயங்கொண்டம் லாவாரத்துக்கு ஒரு அம்பது ரூபா அனுப்பிச்சிடணும்; தாக்கல் வந்திருக்குது!''

* * *

காத்தாயி அம்மன் சந்நிதியிலிருந்து மடங்கியது ஒற்றை யடிப் பாதை. அறுவடை முடிந்துவிட்டால், களத்துமேடு எழில் குலுங்கி நிற்பது இயற்கைதானே? திரும்பிய சுரு ளாண்டியின் பார்வை நேர் திசையில் அம்புபோலப் பாய்ந்த பொழுது, தீயை மிதித்தவன் மாதிரித் துடிதுடித்தான்; காலில்பட்ட சூடு மண்டை யோட்டில் வந்து தாக்கியது போன்று வேதனைப் பட்டான்; பற்களை 'நறநற'வென்று கடித்துக்கொண்டான்; 'இப்பத்தான் வழியிலே என்னோட புத்தி சத்தியைப்பத்தி குறுணி பதக்கின்னு பேசினான் ஒருத்தன். அதுக்குள்ளாறவே என்னோட கண்ணிலே மண்ணைத் தூவிப்போடப் பார்த்திட்டாளே?......ம்......; வரட்டும்!' —— வழி நடந்தான்!

கும்பகோணம் வட்டிலில் 'மட்டை அரிசிச் சோறு' படைத்திருந்தாள் அலமேலு. வெஞ்சனத் தட்டில் கரு வாட்டுக் குழம்பும் துணுக்குகளும் இருந்தன. "திறமாச் சாப்பிடுங்க, மச்சான்......! பாவம், ஊருக்குப் பயணப் பட்டாத்தான், நாளைக்கு ஒரு ஊருக்கும், வேளைக்கு ஒரு தெருவுக்கும் வெங்கலப் பாத்திரங்களைத் தூக்கிச் சுமந் துக்கினு அலையவேண்டி யிருக்குமே...!'' என்றாள் அவள்.

நெருஞ்சி முள் தைத்தது.

மனக்கண்ணில் விளையாட்டுக் காட்டிய இச் சம் பவத்தை மறந்தான். நின்றவன் நடந்தான். 'என் மனசுப்படி நடக்க வேண்டிய அலமேலுவா இப்படி நடக்கத் துணிஞ்சிருக்கா?......நான் படிச்சுப் படிச்சுச்

சொல்லி யிருந்ததை தக்கூட யில்லே அவ சட்டை பண்ணக் காணோம்!'—நடையில் ஆத்திரம் கனிந்தது. இலுப்பை மரத்தின் ஒண்டலில் ஒளிந்து கொண்டான் அவன்; எட்டிப்பார்த்தான்; பிறகு ஓட்டமாக ஓடினான்.

மறுகணம், "ஆ...!" என்னும் அலறல் கேட்டது. அலமேலுவின் கைப்பற்றுதலில் இருந்த ஒரு சட்டிச் சோறும் ஒரு கிண்ணக் கருவாட்டுக் குழம்பும் மண்ணில் சிதறின.

"தன்னோட அறுபதுக்கு அறுபது தேள்வைக்கே சொந்த மாப்பிள்ளையை, கேட்பார் பேச்சைக் கேட்டுத் தள்ளி வச்ச உன் அப்பன் எனக்குப் பகையாளி ஆனதும், ஒனக்குந்தானே எதிரி...? இப்பக் கை செத்துப்போச்சு தின்னு, அதுக்காக நான் சம்பாரிச்ச காசிலே நீ சோறு வடிச்சுக் கொளம்பு ஆக்கிக் காணுமக் கொண்டுபோய் உன் அப்பன் ஆத்தாளுக்குக் கொடுப்பியாக்கும்...? என் அப்பனுக்கும் ஆத்தாளுக்கும் குளம்பு கொண்டு போறதாச் சொன்னது எல்லாம் இந்த நாடகம் ஆடறத்துக்குத் தானா?"

ஒவ்வொரு வினாவிற்கும் ஒவ்வொரு அறை அலமேலு வின் கன்னத்தில் கொடுத்தான் சுருளாண்டி. அவன் அங்கிருந்து கிளம்பினான்; அப்போது, சோகமே வடிவமாக நின்ற அலமேலு பெற்றோர்களைக் காணத் தவறவில்லை!

* * *

பிணக்கு!

அலமேலுவும் சுருளாண்டியும் 'பேசுவது' இல்லை. அன்றைக்கு இருபது நாழிகைப் பொழுதிலிருந்து இந்த மாற்றம்! அவளுக்குக் காய்ச்சல் வந்துவிடும்போலிருந்தது. கோரைப் பாயில் சுருண்டுபடுத்தாள் அவள். 'அடுத்த கிளமை பொங்கலுக்குள்ளாற நான் பெத்துப் பிளைச்சு புதுசு கட்டிக்கிடுவேனா, ஆத்தா, மவராசி!......'

கையெழுத்து மறையும் வேளை அண்டியது.

வெளிவாசலுக்கும் உள்ளுக்குமாக அலைந்துகொண் டிருந்தான் சுருளாண்டி. 'நம்பளே வலியப் பேசலாமா?

பாவம், இன்னிக்கோ நாளைக்கோ 'புளி' குடிக்கப்போறவ... நான் பேசறதாவது?...மாட்டேன்...வசதியா இருந்தப்ப, மாப்பிள்ளை கண்ணுக்குத் தெரியலே; இப்ப வேணுங்கிற மகளோட அருமைகூட அந்த நாளையிலே அந்த ஆம் பளைக்குப் புரியலையே!......எனக்கு வேண்டாதவங்க யார் பேச்சையெல்லாமோ கேட்டுக் கேட்டு அம்பலக் கூத்து ஆடிஞரே மனுசன்!...சொத்துப் பத்து, நிலம் நீச்சு அம்பிட்டும் சொப்பனமாட்டம் பூட்டுதே!......என்னை விரோதம் பண்ணிக்கிடாம இருந்திருந்தா, ஐயாயிரம் ரூபா புரோநோட்டைக் 'காலாவதி' போக விட்டிருப்பேனு? ஆயிரம் செலவானுலும் தாவா போட்டு ஒரு கை பார்த் திருக்க மாட்டேனு?'

தந்தையும் மகளும் சுருளியாண்டியின் நெஞ்சுரத்தில் பாதம் பதித்து விளையாடினர்.

'ஹரிக்கேன்' விளக்கை ஏற்றி வைத்தாள் அலமேலு.

"அலமேலு......" என்று விளித்தான், உரிமை கொண்டவன்.

அவள் சமையற் கட்டுக்குப் போய்விட்டாள்; மேனி நடுங்கியது.

வந்த ஆத்திரத்தைப் பற்களிடைப் போட்டு நசுக்கிய வண்ணம், அங்கிருந்து அவன் வெளியேறப்போன தருணத்தில் அவனுடைய தாயும் தந்தையும் மருமகளைப் பார்த்துப்போக நுழைந்தார்கள்.

"வாயும் வயிறுமா இருக்கிறப்பவா அதைப்போட்டு இப்பிடி நொறுக்கோணும்?......நாலு காசு சம்பாரிச்சிப் பிட்டா மட்டும் போதுமா?...போய் 'அதை'ச் சமாதானப் படுத்து!" என்று ஆக்கினை பிறப்பித்தார் அவனுடைய தகப்பனுர்.

ஆனுல் கருமையின் சிரிப்பிலே உண்மையின் வெண்மை புலப்பட முடியாதல்லவா?

சினிமாக் கொட்டகையை நாடி நடந்தான் சுருளாண்டி. சாயாக் கடையை நெருங்கினான். அவன் பெயர் அடிபடு வதைக் கேட்டதும், ஒதுங்கி நின்றான். 'ரத்தம் செத்துப் போய்க் கையிலே மடியிலே காசு பணமும் வத்திப்பிடுச்சு தின்னு, அப்பாலே மாமனாவது மாப்பிள்ளையாவது ?...... இந்தாத்தான் கைக்கு மெய்யா ஆவுடைத் தேவரையும் சுருளியாண்டியையும் கண்ணுக்கு முன்னாடி கண்டு கிட்டிருக்கோமே ?...'

சுருளாண்டிக்குத் தலை வலித்தது. 'எனக்குச் செஞ்ச அநியாயத்துக்குப் பழிவாங்காம இருப்பேனா ? யாரோ பைத்தியக்காரன் உளறுகிறான்' என்று எண்ணித் தொடுத் தவனாக, ஆறணா 'டிக்கெட்' வாங்கிக்கொண்டு பெஞ்சு ஒன்றில் அமர்ந்தான்.

* * *

ஆந்தையின் கண்களை இருள் மூட முயன்றது. முடியுமா ?

தாராடி கோயில், சர்க்கார் கிணறு, திநாளூர்ப் புனித பூமி, செல்வத்தேவன் ஊருணி, ஆகியவற்றைக் கடந்து, கடைசியாக மடத்துக் குளத்தின் உயரமான கரையில் ஏறிக் கொண்டிருந்தான் சுருளாண்டி. "ஐயையோ!...யாருமே ஒத்தாசைக்குக் கெடையாதா?...மாரியாத்தா!... ஐயையோ!" என்ற கூப்பாடு கேட்டது. குரலுக்குத் திரை போடும் சக்தி இருளுக்கு ஏது ? அழுதவளின் உருவம் சுருளியாண்டிக்குத் தெரியவில்லை. ஓடிவந்தான். நீர் முட்டிக்கிடந்த குளத்தில் யாரோ வெறியுடன் இறங்கிச் செல்வதை அவன் காதுகள் ஒலிப்பதிவு செய்து எடுத்துக் காட்டின. வேட்டியை வரிந்து கட்டிக் கொண்டு சுருளாண்டி தண்ணீருக்குள் நீச்சலடித்தான். மூழ்க முனைந்த உருவம் விளங்கவில்லை ; கைகளைப் பற்றிக் கரைக்கு இழுத்து வருவதற்குள், பகீரதப் பிரயத்தனமாகி விட்டது. மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியது !

* * *

தெப்பமாக நனைந்த உடையுடன் இருளைக் கிழித்துக் கொண்டு ஓட்டமாக ஓடி வந்தான் சுருளாண்டி. சற்றுமுன் குளத்தில் விழுந்து உயிரைப் போக்கிக் கொள்ள எத்தனம் செய்த உருவத்தைக் காத்த போது, 'எம்பேரிலே கோவப் பட்டு இது கணக்கிலே என்னோட பெண்சாதியும் செஞ்சிருந்தா என்ன ஆகிறது?' என்று தோன்றிய ஐயமே அவனை அப்படி ஓடத் தூண்டியது. வீட்டினுள் நுழைந்து பார்த்த போது, அரவம் இல்லை. அகல் விளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. நுழைவாசலில் பாதம் பதித்தான் அவன். "...ஸ்! அப்பா!...உங்க அந்திய காலத்திலே என் கையாலே உங்களுக்கு ஒரு பருக்கைச் சாதம்கூடக் கொடுக்கிறதுக்குப் புண்ணியம் செய்யலியே அப்பா? நான் பெத்துப் பிளேச்சு உங்க கண்ணிலே முளிப்பேன்னு எனக்குத் தோணலியே, அப்பா!..."

ஓர் அரைக்கணம் சுருளாண்டி சிலையானான். பிறகு, சிலையில் 'மனித உணர்ச்சி' ஊறியது; பகைமை கடந்த பாசம் பிறந்தது; கண்களில் நீர் பிறந்தது.

"அலமேலு, என்னை மன்னிச்சுப்பிடு. இந்தாலே நொடியிலே போய் உங்க அப்பாரு காலிலே விளுந்து, அவுங்களைக் கையோடவே அழைச்சுக்கிட்டு ஓடியாரேன்!..." என்று விம்மினான் அவன்.

அலமேலுவின் விழிகள் திறக்கவில்லை; ஆனால் விழிநீர் வழி திறந்துகொண்டது. "அப்பா!...அப்பா!" என்று புலம்பினாள் அவள்.

"மாரியாத்தா, என் பெண்சாதியையும் புள்ளையையும் காப்பாத்து, தாயே!" என்று 'நேந்துகொண்டு,' தன் மாமனார் ஆவுடைத் தேவரை அழைத்து வரத் திரும்பினான் சுருளாண்டி,

அதுசமயம், நாலைந்துபேர் யாரையோ சுமந்து வந்ததைக் கண்டான் அவன். அவன் காப்பாற்றி, ஆட்கள் சிலரை ஏவி வீட்டில் சேர்ப்பிக்க வேண்டிக்கொண்ட அந்த உருவத்தை ஏன் இங்கே கொண்டு வருகிறார்கள்?

'லாந்தர்' வெளிச்சம் பரவியது. தன்னுடைய மாமியார் வருவதைக் கண்டான் சுருளாண்டி. விழித்து நோக்கினான். தூக்கி வந்த உருவத்தைக் கண்டதும், "மாமா!" என்று ஒரு குரல் உந்திக்கமலத்திலிருந்து புறப்பட்டது. பகைமையும், பகைமையும் பழி வாங்கிக்கொண்டு விட்டனவோ? இத்தகைய முடிவின் விளைபொருள்தான் அன்போ?

ஆவுடைத் தேவர் நடையில் கிடத்தப் பட்டார். வேப்பெண்ணெய் உள்ளங்காற் பாதங்களில் ஆவி பறக்கத் தடவப் பட்டது.

'என் கஷ்டத்தோட கஷ்டமாய் உங்க ரெண்டு பேரையும் இத்தனை நாள் காப்பாத்தின நான் சொச்ச நாளைக்கும் அப்படியே செய்யமாட்டேனுங்களா, முதலாளி?... நீங்க எதுக்குக் குளத்திலே விழுந்து சாக எத்தனிக்கணும்? அந்த நாளையிலே உங்க உப்பைத் தின்ன இந்த ஏழை ஒருகாலும் நன்னி கெட்டுப் போயிடமாட்டானுங்க, ஐயா"

யாரோ ஓர் ஏழை, மனம் விம்மிப் புலம்பியழுதான்!

சுருளாண்டி விழிப்புற்றான்; உணர்வு பெற்றான்; மனைவியைத் தொட்டு எழுப்பினான் அவன்; அவளுடைய உடல் தணலாய்ச் சுட்டது கற்பைப்போல! "அலமேலு, உங்க அப்பா வந்திருக்காங்க. பாரு!" என்றான், சுருளாண்டி.

அலமேலு நயனங்களை விலக்கினாள். "அப்பா!" அப்பா!" என்றாள்.

ஈரத்துணிகள் ஒதுங்கின!

சுருளாண்டி சமையற்கட்டினுள் நுழைந்தான்; கை வைக்கப்படாமல் இருந்த அலமேலுவின் 'வட்டிற் சோற்றை' எடுத்து வந்தான்; கொண்டவளிடம் நீட்டினான்; கருவாட்டுக் குழம்பு எட்டு ஊருக்கு மணத்தது!

"அலமேலு, நீ எழுந்திருச்சி உன் கையாலேயே உங்க அப்பாருக்குச் சாதம் பிசைஞ்சு கொடு. நடந்ததை எல்லாரும் மறந்துப்பிடுவோம். நீ பெத்துப் பிழைச்சதும்,

உங்க அப்பாவையும் ஆத்தாளையும் நம்ப கூடவே கூட்டிக் கிட்டு ஜெயங்கொண்டம் போயிடலாம். அப்பதான், எனக்கு நல்ல புத்தி வந்ததாக என்னைப் பெத்தவங்களும் ஒப்புக்கிடுவாங்க!...''என்று விம்மினான் சுருளாண்டி. விழி நீருக்கு மனச்சாட்சியைப் புனிதமாக்கும் சக்தி எப்படித் தான் உருவாகிறதோ!

"அப்பா!''—நீர் மல்க, வட்டிற் சோறும் கையுமாக நின்ற மகளைக்கண்டு, இதழ் விலக்கினார் பெரியவர்; "அலமேலு!'' என்ற தந்தையின் பாசங்கொண்ட உயிரின் குரல் எங்கும் எதிரொலி பரப்பியது!

# 6

# துணை

விக்ரமன்

கடபுடா சப்தத்துடன் ரயில் சென்று கொண்டிருந்தது. அந்தச் சப்தத்தையும் மீறி கம்பார்ட்மெண்டில் இருந்தவர்களின் பேச்சு ஒலித்தது. வண்டி கை காட்டியைத் தாண்டி இருக்காது.

'நல்லோர் மனத்தை நடுங்கச் செய்தேனோ
நட்டாற்றில் கை நழுவ விட்டேனோ
ஆசைகாட்டி மோசஞ் செய்தேனோ
அன்புடையவர்க்குத் துன்பம் செய்தேனோ......'

ராமலிங்க அடிகளாரின் இந்தப் பாடல் கணீரென அப்போது ஒலித்தது. எல்லோரையும் மெய் சிலிர்க்க வைத்தது. ஊர்வம்பு பேசி வந்தவரும், நகைச் சுவையென்று 'ஹோஹோ' என்று சிரித்துப் பேசி வந்தவரும், அழுத பிள்ளையும், சிரித்த பெண்களும் கூட அரவம் அடங்கிப் பாடி வந்தோரையே பார்த்தனர்.

இரண்டு கண்களும் அற்ற குருட்டுப் பெண். வயது பதினாறு இருக்கும். எழிலும் வனப்பும் வறியவர் எளியவர்

என்று பார்ப்பதில்லையே. புதரில் பூத்த புதுமல்லி போன்று தோன்றிய அவள் பாடிய பாடலும் அவள் தோற்றமும் தரும சிந்தனை யற்றவர்களையும் இரங்கும்படி செய்தன.

அவளுக்கு வழிகாட்டி உதவி வந்த அந்த வாலிபன் தான் எல்லோருக்கும் வணக்கம் செலுத்தி கிடைத்த காசு களை வாங்கி வந்தான்.

'ஏழைகள் வயிறு எரியச் செய்தேனோ ?
இரப்போர்க்குப் பிச்சை இல்லை என்றேனோ ?'

என்று தொடர்ந்து அவள் பாடும்போது அந்தக் கம்பார்ட்மெண்டில் உள்ளவர்கள் தரும துரைகளாகவே விளங்கினர்.

சில நிமிடங்களில் அந்தக் கம்பார்ட்மெண்ட் வேலை அவர்களுக்கு முடிந்தது. கதவருகே போய் அவர்கள் அமர்ந்தனர். அந்த வாலிபன் கிடைத்த காசை எண்ணிக் கூறினான். அவன் எந்தப் பள்ளிக் கூடத்திலும் படித்தவ னல்லன். எட்டணா என்று அவன் கூறியபோது அவள் முகத்தில் எந்த மாறுதலையும் காணோம்.

'நாலணாவை காலை நாஸ்தாவுக்கு வச்சுக்க... மீதிக்கு இரண்டு பன்னும், டீயும் வாங்கிடு' என்று வரவு செலவுத் திட்டம் கூறினாள்.

ரயில் செங்கல்பட்டு சந்திப்பை நெருங்கிக் கொண்டி ருந்தது. 'ரயில்கேட்டு வந்துடுத்தா ?' என்றாள் அவள், அப்போது ஏற்பட்ட ஒலி மாற்றத்தைக் கொண்டே.

அந்தப் 'பாசஞ்சர்' செங்கல்பட்டு சந்திப்பின் முதல் பிளாட்பாரத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. லயன் மாறுவதால் ஏற்பட்ட குலுக்கலால் அவள் நிலை தடுமாறினாள்.

'பூங்காவனம் வண்டிக் கதவருகே நிற்காதே. வண்டி நின்ற பிறகு இறங்கலாம்' என்று அவள் எச்சரித்தாள்.

பூங்காவனம் குருடியை அழைத்துக் கொண்டு பிளாட் பார ஓரமாக உட்கார வைத்துவிட்டு, டீ ஸ்டாலை நோக்கிச்

சென்றுன். அன்றைய இரவு சாப்பாட்டை முடிக்க மூன்று மணி நேரமாக அவள் பாடிப் பாடி நெஞ்சு உலர்ந்து விட்டது. ஒரு வாய்த் தண்ணீரை அருகே இருந்த குழாயை நோக்கித் தட்டுத் தடுமாறிச் சென்று குடித்து விட்டு, ஒளியை உமிழ்ந்து கொண்டிருந்த அந்தப் பிளாட் பாரத்தின் கோடியிலே மங்கிய ஒளி வீசும் இடத்தில் மரத்தின் அடியிலே அமர்ந்தாள். அதுதான் அவளுடைய இரவுப் படுக்கை இடம். அவளைப் பொறுத்தவரை அந்தப் பிளாட்பாரத்து மங்கிய விளக்கும், ஒளி வீசும் மெர்க்குரி விளக்கும் ஒன்றுதான். வெளியுலகில் மை இருளில்தான் மக்கள் வாழ்வதாக அவளுக்கு எண்ணம். ஆனுல், இதயத்திலிருந்து வீசிக்கொண்டிருந்த மாய ஒளி ஒன்று தான் அவளை நடமாட விட்டது.

அருகே நின்று கொண்டிருந்த கூட்ஸ் வண்டித் தொடரின் நடுவே புகுந்து முத்தையன் லயனையும் தாண்டி பிளாட்பாரத்திலேறினுன். சந்தடியின்றி அவள ருகே அவன் வந்து உட்கார்ந்தான். மூச்சுவிடும் அரவம் கூட அவளுக்குத் தெளிவாகக் கேட்குமே!

'யாரது, பூங்காவனமா?' என்று கேட்டாள் அவள்–மல்லி. முத்தையன் சிரித்தான். சிரிப்பொலி அவளது முகத்தில் சுருக்கங்களை ஏற்படுத்தியது.

'யாரு முத்தையனு?' என்று அவள் பரபரப்புடன் கேட்டாள்.

'கண்டுகிட்டயே கணக்கா. கண்ணுதான் இல்லேன்னுலும் உனக்கு மனசு கூடவா இல்லாமே போயிடும்?'— முத்தையன் அவளருகே நெருங்கி உட்கார்ந்துகொண்டு ஒரு பீடியைப் பற்றவைத்தான்.

அவள்—மல்லி—எழுந்தாள்.

'ஏன் மல்லி எழுந்திட்டே? பீடி வாசனை சகிக்கலையா? இதைத் தொலைச்சு முழுக முடியலையே... ஆனு, நீ மனசு வெச்சா முடியும்...' என்று வருத்தப்படுபவன்போல் நடித்தான் முத்தையன்.

மல்லி உட்காரவில்லை. நின்று கொண்டே இருந்தாள். 'எம்மா நேரம் நிற்பே...அந்தப் பய பூங்காவனம் எங்காவது சுத்தப் போயிருப்பான். இல்லாட்டி அந்தப் பஸ் ஸ்டாண்டிலே கண்ணம்மா இருக்குது, அதைத் தேடிப் போயிருப்பான்' என்று கூறிவிட்டு முத்தையன் அசட்டுச் சிரிப்பு சிரித்தான். அவள் கையைப் பிடித்து இழுத்து உட்கார வைக்க வேண்டும் என்ற துடிதுடிப்பு அவனிடம் காணப்பட்டது. மல்லிக்குக் கண் மட்டும் இருந்துவிட்டால் முத்தையா அவளை விழுங்கி விடுவதுபோல் பார்ப்பதற்கு அவனைப் பொசுக்கி இருப்பாள்.

'மல்லி, இன்னும் நீ பூங்காவனத்தை நம்பறே. ஒரு நாள் இல்லாட்டா ஒருநாள் உன்னை விட்டுட்டு ஓடிடப் போருன்' என்று கூறிக்கொண்டே முத்தையன் எழுந்தான்.

தொலைவில் சென்னையிலிருந்து வரும் மதுரை பாசஞ்சரின் விளக்கு வெளிச்சம் தெரிந்தது.

'இந்த வண்டியிலே நான் திண்டிவனம் போறேன். நீ வர்றியா?' என்று கேட்டான் முத்தையன். மல்லி சம்மதிச்சால் பிச்சை எடுக்க அவளுக்கு உதவி செய்யக் கூடத் தயங்கமாட்டான்.

'நான் வல்லே. ராவு தூக்கம் இல்லாட்டி பகல்லே அலைய முடியாது' என்று மல்லி கூறினாள்.

'ராவு தூக்கமா?'—என்று எகத்தாளத்தோடு கேட்டு விட்டு முத்தையன் அங்கிருந்து சென்றான். மல்லிக்கு ஏனோ பரபரப்பு அதிகமாகியது. நிம்மதியாகப் பாடிப் பிச்சையெடுத்து வாழும் வாழ்வைக் குலைக்க இந்த முத்தையன் வந்து சேர்ந்தானே என்று அவள் மனம் வேதனைப்பட்டது.

சிறு வயதிலிருந்தே மல்லி இந்தத் தொழிலில் ஈடுபட வில்லை. சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த சிறு கிராமம் ஒன்றில் மல்லி பிறந்தாள். பிறக்கும்போதே இரண்டு கண்களும் அவளுக்குக் கிடையாது. வருமானமும் அதிக மில்லாது மண்வெட்டிக் கூலி கொண்டுவந்து வயிறு

வளர்த்த அவளது பெற்றோர்களுக்கு மல்லி பெரும் பிரச்னையாகவே இருந்தாள். அவர்கள் வேலைக்குப் போகும்போது குருட்டுப் பெண்ணைப் பார்த்துக் கொள்ள ஆள் கிடையாது. அண்டை அயலார் ஆதரவில் வளர்ந்து வந்த மல்லிக்கு எப்பொழுதுமே அண்டை அயலாரே ஆதரவு எனப்படும் நிலை ஏற்பட்டு விட்டது. பெரும் கிணறு ஒன்று வெட்டிக் கொண்டிருக்கும் போது மண் சரிந்து விழவே இருவரும் பூமிக்கடியில் புதைந்துவிட்டனர்.

இருண்ட உலகத்தில் மல்லிக்கு ஆதரவு தருவதற்கு கிழவி ஒருத்தியைத் தவிர வேறு எவருமில்லை. அந்தத் தள்ளாத வயதில் அவள் வாழ்வதே மிகக் கஷ்டமாயிருந்த போது குருட்டுப் பெண்ணையும் சேர்த்துக் காப்பாற்ற அவளால் முடியவில்லை. அந்தப் பகுதியில் பல வருடங்களாக மழை பெய்யாததால் பஞ்ச நிலைமை ஏற்பட்டது. கிழவிக்குக் குடிக்கக் கஞ்சிகூட கிடைக்கவில்லை. அரை வயிற்றுக்குக் கிடைத்தாலும் மல்லிக்குக் கொடுத்துவிட்டுத் தான் சாப்பிடுவாள். பிழைக்கப் பட்டணம் பெரிதும் உதவும் என்று சென்னை நகரை வந்தடைந்த கிழவிக்கு, வந்த பிறகுதான் பட்டண நிலை புரிந்தது. பிழைப்பு அவ்வளவு சுலபமில்லை என்பது புரிந்தது. சுலபமான தொழில் பிச்சை எடுப்பதுதான் என்பது தெரிந்தது. கிழவிக்குத் தொழில் பழக்கமேது? உண்மையான கஷ்ட நிலையையும், குருட்டுப் பெண்ணையும் எடுத்துக் காட்டி பிச்சை எடுத்து வந்தாள். குருடிக்கும், கிழவிக்கும் இரக்கம் காட்டாத அளவுக்கு மனித இதயத்தில் ஈரம் காய்ந்துவிடவில்லை. கிழவிக்கு இராமலிங்க அடிகளின் பாடல்கள் பல மனப்பாடம். அதைப் பாடி ரயில் வண்டிகளில் பிச்சை எடுக்கும்போது இதயம் கனிந்து உதவாதவர் இல்லை.

மல்லிக்கு விவரம் அறியும் வயது வந்தபோது கிழவி காய்ச்சலால் கண்ணை மூடிவிட்டாள். அப்பொழுதுதான் கிழவிக்குத் தெரிந்த பூங்காவனம் மல்லிக்கு உதவ முன் வந்தான்.

முத்தையன் போனபிறகு படபடப்பு அடங்க மல்லிக்கு வெகு நேரமாகியது.

பூங்காவனம் கையில் தகரக் குவளையில் சூடான தேத் தண்ணீருடனும், இரண்டு பன்னுடனும் வந்தான். மல்லியின் படபடப்பு அவனுக்குத் தெரியாது. 'மல்லி, மல்லி, இங்கேயே தூங்கு. நானு சினிமா பாத்துட்டு வந்து டறேன். ஜோரான ஆட்டமாம்' என்று பூங்காவனம் கூறி விட்டுக் கிளம்பத் தயாரானான். மல்லி ஏதும் பேசவில்லை. அவள் ஏதோ கூற வாயெடுத்தாள். பூங்காவனம் அங்கு நிற்கவில்லை.

வானம் இருண்டிருந்தது. 'வீர் வீர்' என்று காற்று வீசியது. எங்கிருந்தோ மேகங்களை அழைத்துக் கொண்டு வந்து மோதச் செய்தது. கம்பி மின்னல் இருண்ட வானத்தைப் பிளந்தது. சப்த சமுத்திரங்களும் பொத்துக் கொண்டது போன்று மழை கொட்டியது. மல்லியம்மாள் தட்டுத் தடுமாறிப் போய் காலியாக நின்று கொண்டிருந்த கம்பார்ட்மெண்டின் பெஞ்சியில் நிம்மதியாகப் படுத்துக் கொண்டாள். அவள் மனத்தில் பலவித எண்ணங்கள் வட்டமிட்டன. முத்தையன் சொல்வதுபோல் பூங்காவனம் பஸ் ஸ்டாண்டுக்கு அவளைத் தேடிப் போயிருப்பானோ......

'ஆசை காட்டி மோசஞ் செய்தேனே
அன்புடையவர்க்குத் துன்பம் செய்தேனே...?'

மல்லி மனத்திற்குள்ளே இந்தப் பாட்டைச் சொல்லிப் பார்த்துக்கொண்டாள். வெளியே மழை ஓயவில்லை. ஜங்ஷனுக்கு வரும் வண்டிகள் வேறு ஏதுமில்லை. இதோடு காலை நான்கு மணிக்குத்தான் வண்டி. மழை இரைச்சலைத் தவிர வேறு ஒலி ஏதுமில்லை. பயங்கரமான எண்ணங்கள் அவளைச் சுற்றி வட்டமிட்டன. அவற்றிலிருந்து விடுபட மல்லி கண்ணை மூடினாள். வெகுநேரம் கழித்துத் தூக்கம் வந்தது.

கம்பார்ட்மெண்டின் கதவு திறக்கப்படுவது போன்ற ஓசை. யாரோ ஏறும் ஓசை......

திடீரென மல்லி கண்விழித்துக்கொண்டாள். கம்பார்ட்மெண்ட் கதவு திறக்கப்படும் ஓசை. யாரோ ஏறும் ஓசை.

'பூங்காவனம்...?'—மல்லி குரல் கொடுத்தாள்.

'உம்...' என்ற பதில் மட்டுமே வந்தது.

பூங்காவனம் வந்துவிட்டான். மல்லிக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. அவள் எண்ணியதுபோல் அவன் வேறு எங்கும் போகவில்லை. சொட்டச் சொட்ட நனைந்திருப் பானோ......

'நனைஞ்சுட்டாயா?' மல்லி கேட்டாள். தூக்கம் அவள் கண்களைச் சுழற்றியது. வாய் குழறியது.

'உம்......' என்ற பதிலைத் தவிர வேறு ஏதுமில்லை. மல்லியே பேசினாள். பூங்காவனம்போல் நடித்த முத்தைய னிடமிருந்து பதில் எப்படி வரும்? ரொம்பவும் எளிதாக அவன் தன் மனோபீஷ்டத்தை நிறைவேற்ற வந்துவிட்டான். வெளியே இருந்த சூழ்நிலையும் இடமும் சாதகமாக அமைந்தன.

காலையில் மழை விட்டுவிட்டது. தெற்கேயிருந்தும், மேற்கே இருந்தும், வடக்கே இருந்தும் வண்டிகள் வரத் தொடங்கிவிட்டன. பறவை இனங்கள் இறகுகளில் படிந் திருந்த மழைத் துளிகளை, உதறிவிட்டு வானில் பறந்தன.

ரயில்வே லயனை ஒட்டியிருந்த பெரிய ஏரியில் ஜலம் அலை மோதியது. மல்லி நன்றாகத் தூங்கிக் கொண்டிருந் தாள். என்றும் காணாத பெரும் நிம்மதி அவளிடம் குடி கொண்டிருந்தது.

'மல்லி, மல்லி' என்ற குரல் எங்கிருந்தோ கேட்டது. ஒவ்வொரு கம்பார்ட்மெண்டாகத் தேடிக்கொண்டு பூங்கா வனம் வந்துகொண்டிருந்தான்.

'மல்லி, இன்னுமா தூங்கறே. ராவு நன்றாத் தூங்கி னியா? உன் நெனைப்பேதான் எனக்கு. மழையிலே வர முடியாமை சினிமாக் கொட்டகையிலேயே படுத்துக் கிட்டேன்.........'

மல்லி சோம்பல் முறித்துக்கொண்டு எழுந்தாள். புது அனுபவத்தின் நினைவு அலைகளில் மிதந்து கொண்ட

அவளது மனத் தெப்பம் திடீரென மோதியது. 'உன் நினைப்பேதான் எனக்கு. மழையிலே வர முடியாமெ சினிமாக் கொட்டகையிலேயே படுத்துக்கிட்டேன்...' — இந்தச் சொற்கள் அவளைத் திடுக்கிட வைத்தன.

'என்ன ?'—மல்லி கூவியே விட்டாள்.

'நீ ராவு வரலே ?'—இவ்வளவுதான் அவள் கேட்டிருப்பாள்.

ஏனோ அதற்குமேல் அவள் பேசவில்லை. முகத்தை மூடிக்கொண்டு விம்மி, விம்மி அழுதாள். பூங்காவனம் எவ்வளவோ முயன்று கேட்டும் மல்லியிடமிருந்து எவ்விதப் பதிலையும் பெற முடியவில்லை. அன்று முழுவதும் மல்லி வெளியே எங்கும் கிளம்பவில்லை. மறுநாளும் அப்படியே. பூங்காவனத்திற்கும் கோபம் கோபமாக வந்தது.

'இப்படியே உட்கார்ந்திருந்தால் சோறு எப்படித் தின்பதாம் ?—' பூங்காவனத்தின் குரலில் த்வனித்த ஆத்திரத்தைக் கண்ட மல்லி 'சுள்' என்று விழுந்தாள்.

'நான் எப்படியோ போறேன். நீ அந்தப் பஸ் ஸ்டாண்ட் காரியையே தேடிப்போ' என்று கூவினாள்.

பூங்காவனத்திற்கு ஒன்றுமே புரியவில்லை. அவன் பேசாமல் போய்விட்டான். மல்லி அன்ன ஆகாரம் ஏதுமின்றி இரு தினங்கள் பழைய வண்டியின் உடைந்த பெஞ்சியில் படுத்துக்கிடந்தாள்.

அன்று மீண்டும் முத்தையன் மல்லியைத் தேடி வந்தான். சோர்ந்துபோய் கிடக்கும் அவளை நெருங்கவே அவனுக்குப் பயமாக இருந்தது. தான் செய்த காரியம் அவனுக்கே வெறுப்பாக இருந்தது. அதே சமயம் வெற்றிப் பெருமிதமும் தோன்றுதில்லை.

'மல்லி, மல்லி கோபமா ?' என்று கேட்டவாறு அவளருகே வந்தமர்ந்தான். இப்போது மல்லி ஏமாறவில்லை. பதில் ஏதும் பேசவில்லை. ஆனால், அப்பொழுது அவளுக்குக் கோபம் தணிந்திருந்தது. பூங்காவனத்தையும் இரு தினங்

களாகக் காணவில்லை. அவனையும் வெறுத்து, முத்தையனை யும் விரட்ட அவளுக்கு விருப்பமில்லை. 'கோவமென்ன? என் விதியை நெனைஞ்சு நான் அழறேன்' மல்லி நெஞ்சு தழுதழுக்கக் கூறினாள். முத்தையனுக்கு அவள் கூறுவது ஒன்றும் புரியவில்லை.

அந்தச் சமயம் மல்லியைத் தேடி பூங்காவனம் அங்கு வந்தான். அங்கு மல்லியும், முத்தையனும் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டு, ஒரு வினாடி நின்றவன் மறு கணம் உதட்டைக் கடித்துக்கொண்டு திரும்பி விட்டான்.

முத்தையன் தொடர்ந்து பேசினான்; 'மல்லி, இந்தப் பிச்சை எடுக்கும் தொழிலை விட்டுடு. நான் கொண்டுவரும் கூழோ, கஞ்சியோ குடிச்சுண்டு என்னோடையே இருந்துடு...'—

மல்லி எழுந்து நின்றாள். 'போ வெளியே, உன்னைப் போன்ற வஞ்சகர்களால் எத்தனைபேர் அழியப் போகிறார் களோ? என்னை ஏமாத்திட்டியேடா பாவி'—அவள் குரல் முத்தையனை நடுநடுங்க வைத்தது.

மல்லியின் குரல் தொலைவில் சென்ற பூங்காவனத்திற்கும் கேட்டது. அவன் திரும்பிப் பார்த்தான். முத்தையன் சென்று கொண்டிருந்தான். மல்லி, வண்டியினின்று இறங்கித் தட்டுத்தடுமாறி லயனைக் கடக்க முயன்றாள். பூங்காவனம் ஓடோடி வந்தான். மல்லியின் கையைப் பிடித்துக் கொண்டு வழி காட்டினான்.

அவன் அவளுடன் ஏதும் பேசவில்லை. 'என்னைப் பஸ் ஸ்டாண்டிற்குக் கொண்டு விடு. இனி ரயில் வண்டியில் பிச்சை எடுக்கப் போவதில்லை.' —மல்லி கண்டிப்பாகக் கூறினாள்.

பூங்காவனம் எங்கோ சென்று விட்டான். மல்லியின் உடல் நிலை மாறியது. அவளால் எழுந்து நடமாட முடிய வில்லை. அவள் தாயாகப் போகிறாள் என்பதைச் சகப் பிச்சைக்காரர்கள், பஸ் ஸ்டாண்ட் கூலிகள், போர்ட்டர், டிரைவர், அருகிலுள்ள டீக் கடைக்காரர் எல்லோரும்

பகிரங்கமாகப் பேசிக் கொண்டனர். மல்லியையும், பூங்கா வனத்தையும் சம்பந்தப்படுத்திப் பேசினர். உலகம் பேசு வதை அவள் காதால் கேட்டாள். சில சமயம் நெஞ்சு வெடித்து விடுவதுபோன்ற உணர்ச்சி ஏற்படும். தனியே உட்கார்ந்து கொண்டு கண்ணீர் விட்டுக் கலங்குவாள். முத்தையன் எங்கிருந்தாவது ஓடிவந்து அவள் தனியே இருப்பதறிந்து அவளைத் தேற்ற முயல்வான். ஆனால் அவ ளுடைய சுடு சொற்கள் அஸ்திரமாக மாறித் துரத்தி அடித்து விடும்.

நல்லோர் மனத்தை நடுங்கச் செய்தேனோ
நட்டாற்றில் கை நழுவ விட்டேனோ
ஆசைகாட்டி மோசஞ் செய்தேனோ
அன்புடையவர்க்குத் துன்பம் செய்தேனோ...

இந்தப் பாட்டில் வரும் வரிகளை முத்தையன் கேட்கும் போது அவனுக்கு அவ்வளவாகப் புரியாவிட்டாலும் ஆசை காட்டி மோசஞ் செய்தேனோ என்ற வரிகள் தன்னைக் குத்திக் காட்டுவதைப் போலவே உணர்ந்தான். மல்லி குழந்தையைப் பெறப்போகிறாள் என்பதறிந்தவுடன் அவன் நடுநடுங்கினான். மல்லியின் அருகில் கூட இனிவரக் கூடாது என முடிவு செய்தான்.

ஒருநாள்; நடுநிசி. மல்லிக்கு ஏற்பட்ட வேதனையை அறிந்த நல்லவர்கள் சிலர் அவளை ஆஸ்பத்திரியில் சேர்த் தனர். ஆண் குழந்தை ஒன்றை மல்லி பெற்றெடுத்தாள். வயிற்றிலுள்ள ஜீவன் பூமியை மிதித்த பிறகுதான் மல்லிக்கு முத்தையன் நினைவு வந்தது. அவனைக் கடிந்து பேசிய சொற்கள் நினைவுக்கு வந்தது. அவனை விரட்டிய வார்த் தைகள் நெஞ்சில் எழுந்தன. முத்தையா என்று அவள் உதடுகள் முணுமுணுத்தன. அவனைப் பாவி என்று சபித்த வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. முத்தையனுக்குத் தெரியுமோ தன் நிலை என அவள் நினைத்தாள்.

ஆனால், முத்தையனை அந்தச் சமயம் பெரிய ஆஸ்பத் திரிக்கல்லவா எடுத்துச் சென்றிருப்பார்கள். மல்லியிட மிருந்து திரும்பி வந்து எங்காவது ஓடிப்போய்விட

எண்ணிய முத்தையன் ஏதோ நினைவாக ரயில்வே லயனைக் கடந்தபோது, பின்புறமாக நடந்து வந்த கூட்ஸ் ஒன்று மோதவே கீழே வீழ்ந்தான். சக்கரங்கள் அவன் கால்மீது ஏறின. ரத்த வெள்ளத்தில் மிதந்த அவனை பெரிய ஆஸ்பத்திரிக்குத் தூக்கிச் சென்றார்கள். அவனுடைய இரண்டு கால்களும் துண்டிக்கப்பட்டன. அவனுக்கு நினைவு வந்தபோது தன் கால்கள் துண்டிக்கப்பட்டதை அறிந்தான். அவன் கண்கள் கால் போனதற்காகக் கலங்கவில்லை... அந்தப் பாட்டின் வரிகள்,

'ஆசை காட்டி மோசஞ் செய்தேனே...'

எங்கிருந்தோ மல்லி பாடும் ஒலி அவன் காதுகளில் ஒலித்தது. 'இல்லை இல்லை மல்லி நான் மோசஞ் செய்ய வில்லை. உன்னைக் காப்பாற்ற நான் தயாராக இருந்தேனே' என்று கூவினான். வலியால் பிதற்றல் என்று ஆஸ்பத்திரியில் இருந்தவர்கள் எண்ணியிருக்கலாம்.

மல்லியுடன் பிறந்த அந்தச் சிசுவும் பிச்சை எடுக்கத் தொடங்கியது. குருடியும், குழந்தையும் கை நீட்டும்போது காசு போடாத அளவுக்குத் தர்மசிந்தனை இன்னும் உலகில் வற்றிப் போகவில்லை, என்றாலும் தவறாகப் பேசாதவர்கள் இல்லாமல் இல்லை. 'குருடிக்கு ஆண் குழந்தையா?' என்று அவர்கள் கூறிச் சிரிக்கும்போது மல்லி வருத்தப்படாமலில்லை. 'குழந்தை அவளுடையதாயிருக்காது, இரவல் குழந்தையாயிருக்கும்' என்று பேசிக்கொள்ளும் போது மல்லி 'இரவல் குழந்தை இல்லை. என்னுடையது, என்னுடையது' என்று கூறத் துடிப்பாள். அதைக் கூறிப் பயன்? குழந்தையின் தந்தை எங்கே?

முத்தையனுக்கு நேர்ந்த விபத்து மல்லிக்குப் பல நாட்கள் கழித்தே தெரிந்தது. மிகுந்த பரபரப்படைந்தாள். எங்கிருந்தோ புதுப் பாசம் அவளை வந்து ஒட்டியது. ஆஸ்பத்திரிக்கு உடனே ஓடிப் போய்ப்பார்க்கத் துடித்தாள். தட்டுத் தடுமாறி விசாரித்துக் கொண்டு எவரெவருடைய தயவையெல்லாம் நாடி ஆஸ்பத்திரியை வந்தடைந்தாள்.

அன்று முத்தையன் ஆஸ்பத்திரியிலிருந்து விடுதலையாகும் நாள். அவனால் இனி மற்றொருவர் துணையின்றி நடக்க முடியாது. முன்போல் பொறுப்பில்லாமல் சுற்றி இஷ்டம்போல் அலைய முடியாது. மூட்டைத் தூக்கிப் பிழைக்க முடியாது. ஆஸ்பத்திரியிலிருந்த நாட்கள் வரை அவனுக்கு எந்தவிதக் கவலையும் தெரியவில்லை. உலகத்தில் இனி எப்படி வாழப் போகிறோமென்றே அவன் எண்ணவில்லை. ஊன்றுகோல் ஒன்றை ஆஸ்பத்திரியில் கொடுத்தார்கள்.

அவன் வெளியே வருவதற்கும் மல்லி குழந்தையுடன் ஆஸ்பத்திரிக்குள் நுழைவதற்கும் சரியாக இருந்தது. முத்தையன் மல்லியைப் பார்த்துவிட்டான். அவளைப் பார்க்காமலேயே போய்விட எண்ணினான். அவள் அங்கு எதற்காக வந்திருக்கிறாளோ...

'ஐயா, இங்கே முத்தையன் என்று ஒருத்தர் கால் உடைஞ்சு படுத்திருக்காராமே தெரியுமா?' என்று மல்லி கேட்பது முத்தையன் காதில் வீழ்ந்தது. அவன் ஒரு கணம் திடுக்கிட்டு நின்றான். தன்னையா மல்லி தேடுகிறாள். இந்தப் பாபியையா? அவனுக்கு அழுகையே வந்துவிட்டது.

'முத்தையனா—அவன் பேரு தெரியாது. காலுடைஞ்சு ஒருத்தனிருந்தான். இப்போதான் டிஸ்சார்ஜ் ஆகிப் போகிறான். அதோ—போகிறான் பார்—' ஆஸ்பத்திரி வேலைக்காரன் கூறினான்.

'முத்தையா' என்று கூறினாள் மல்லி. தட்டுத் தடுமாறி ஒரு திசையாகச் சென்றாள், முத்தையன் கலங்கிய கண்களுடன் மல்லியை நெருங்கினான்.

'மல்லி, மல்லி என்னை மன்னித்து விடு. உனக்குச் செஞ்ச தவறுக்குத் தண்டனை எனக்குக் கிடைச்சுடுத்து மல்லி. இனி வாழ்நாள் முழுவதும் அந்தத் தண்டனையை அனுபவிக்கப் போகிறேன் மல்லி' என்று விம்மினான் முத்தையன்.

'அப்படிச் சொல்லாதே முத்தையா, போனதை நெனைச்சு வருத்தப்படாதே. இதோ பார் உன் குழந்தை'— மல்லி இதைக் கூறும் போது வெட்கப்பட்டாள்.

கடபுடா சப்தத்துடன் ரயில் சென்று கொண்டிருந்தது. அதே பழைய பாடல். ஆனால், பாடலின் புது விளக்கம் அறிந்தவர்களுக்குத் தெரியும்.

'நல்லோர் மனத்தை நடுங்கச் செய்தேனோ
நட்டாற்றில் கை நழுவ விட்டேனோ,
ஆசை காட்டி மோசஞ் செய்தேனோ
அன்புடையவர்க்குத் துன்பம் செய்தேனோ...'

முத்தையன், மல்லிக்குத் துணையாக வழிகாட்டிக் கொண்டிருந்தான். மல்லி முத்தையனுக்கு உதவியாகத் தோள் கொடுத்து உதவிக் கொண்டிருந்தாள். இருவருக்கும் பிரியாத துணையாக அந்தச் சிசு இருந்து இள நகை புரிந்து தானம் கொடுப்போர் மனத்தைக் கவர்ந்து துணை செய்த வண்ணம் இருந்தது.

# 7

# செல்லம்மாளின் மறுமணம்

பூர்ணம் விசுவநாதன்

'டக் டக்' என்ற பூட்ஸ் சத்தம், அந்த 'ஸ்பெஷல் வார்'டில் நிறைந்திருந்த அமைதியை மிகைப்படுத்திக் காட்டிற்று. அந்தச் சத்தம் நாலாம் நம்பர் அறையை நெருங்கிய போது செல்லம்மாளின் கட்டிலைச் சுற்றி நின்று கொண்டிருந்த எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள். டாக்டர், படுக்கையருகே சென்று ஒரு முக்காலியில் அமர்ந்து செல்லம்மாளின் உடல் நிலையைச் சோதித்துப் பார்த்து விட்டு, ஒன்றும் பேசாமல் அப்படியே கொஞ்சநேரம் உட்கார்ந்திருந்தார். பிறகு, மீண்டும் ஒரு தடவை செல்லம்மாளின் நாடியைப் பிடித்துப் பார்த்தார். அப்புறமும் சற்று நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தார். பிறகு திடீரென்று எழுந்திருந்தார். இரண்டடி பின்னுக்கு வந்து ராமலிங்கத்தின் தோளில் லேசாகத் தட்டி, தம்முடன் வருமாறு சைகை செய்தார். ராமலிங்கம் திடுக்கிட்டவராக டாக்டரைப் பின் தொடர்ந்தார். டாக்டர் அவரை ஓர் ஓரமாக அழைத்துச் சென்று, பூர்வ பீடிகை ஏதுமில்லாமல் சொன்னார். "உம்முடைய மனைவிக்கு இன்னும் ஒரு

தடவைதான் நினைவு திரும்பலாம். அது வந்து போய் விட்டால்......அவ்வளவு தான்......"

ராமலிங்கம் தரையை நோக்கியவாறு உணர்ச்சி எதை யும் காட்டிக் கொள்ளாமல் அந்தச் செய்தியை ஏற்ருர். இருவரும் கட்டிலுக்குத் திரும்பிஞர்கள். மற்றவர்கள் எல்லோரும் ஆவலுடன் இருவர் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தார்கள். அவர்களால் எதையும் ஊகிக்க முடிய வில்லை.

'டக்டக்' சத்தம் அந்த அறையிலிருந்து கிளம்பி, தாழ்வாரமெங்கிலும் எதிரொலித்து மங்கி மறைந்தது.

ராமலிங்கம் செல்லம்மாளின் முகத்தையே கண் கொட் டாமல் பார்த்துக் கொண்டு நின்ருர். எழுபது வருஷம் வாழ்ந்து வைரம் பாய்ந்திருந்த அவருடைய தேகம், எல்லை யற்ற மனக்கிளர்ச்சியால் துவண்டுபோய் விகாரமாகத் தோற்றமளித்தது.

கட்டிலின் ஒரு பக்கத்தில் மகன் வைத்தியும், மருமகள் சரோஜாவும், பெண் உஷாவுடன் நின்று கொண்டிருந் தார்கள். காலடியில் மகள் கமலாவும், மாப்பிள்ளை மணியும், பையன் ரங்குவும் நின்று கொண்டிருந்தார்கள். அவர் ஏதேனும் சொல்ல மாட்டாரா என்று அவர்கள் எல்லோரும் ஆவலுடன் காத்துக் கொண்டிருந்தார்கள்.

செல்லம்மாள் கட்டைபோல் படுத்துக் கிடந்தாள். அவளையே வெறித்து நோக்கிக் கொண்டிருந்த ராமலிங் கத்தின் முகத்தில், திடீரென்று ஒரு மலர்ச்சி தென்பட்டது; அவருடைய உடல் ஒரு தடவை சிலிர்த்துக் கொண்டது. உடனே எல்லோரும் செல்லம்மாளைப் பார்த்தார்கள். இது வரை அசைவற்றுக் கிடந்த அவளுடைய உடம்பு, சற்றே அசைந்ததாகத் தோன்றிற்று. செல்லம்மாளுக்கு நினைவு திரும்பிக் கொண்டிருந்தது.

அப்போதுதான் யாரும் எதிர்பார்க்காத காரியம் ஒன்றை ராமலிங்கம் செய்தார். கதவுப் பக்கம் நகர்ந்து கொண்டே அவர் சைகை காட்டி எல்லோரையும் வெளியே

அழைத்தார். மணி, வைத்தி, கமலா, சரோஜா, ரங்கு, உஷா—ஆறு பேரும் அவர் பின்னே சென்றுர்கள்.

அரை நிமிஷம் கழித்து ராமலிங்கம் மட்டும் உள்ளே வந்தார். பாய்ந்து கட்டிலருகில் போய், செல்லம்மாளின் காலடியில் நின்று கொண்ட அவருடைய கண்களிலிருந்து நீர் வழிந்தது; உடல் நடுங்கிற்று.

அவர் மனத்தில் அடைபட்டுக் கிடந்த உணர்ச்சிக ளெல்லாம் உடைப்பெடுத்துக் கண்ணீர்ப் பிரவாகமாய்ப் பெருக ஆரம்பித்தன. ராமலிங்கம் தம் முகத்தை இரு கைகளாலும் மூடிக் கொண்டு உடல் குலுங்க, உள்ளம் குலுங்க அழுதார்.

செல்லம்மாள் திடீரென்று ஒரு தடவை புரண்டு விட்டுக் கண் விழித்தாள். அதே சமயம் ராமலிங்கம் தம் கைகளுக்குள் புதைந்திருந்த முகத்தை நிமிர்த்திப் பார்த் தார். மறுகணம், "என் அருமைச் செல்லம்மா! என்னை மன்னிப்பாயா ?" என்று கதறிக் கொண்டே அவள் காலடியில் விழுந்து, அவளுடைய இரு பாதங்களையும் எடுத்துத் தம் முகத்தோடு சேர்த்து அணைத்துக் கொண்டார். செல்லம்மாளின் உடல் முழுவதிலும் மின்சார வேகத்துடன் புது சக்தி ஒன்று பாய்ந்தது. "ஐயோ, நான் எங்கிருக்கிறேன் ?" என்று தீனமான குரலில் கேட்டாள் அவள்.

நாற்பது வருஷங்களுக்குப் பிறகு முதல் தடவையாக இன்று தனது அறுபத்தேழாவது வயதில், அதுவும் மரணப் படுக்கையில், அவள் கணவனின் ஸ்பரிசத்தை உணர்ந்து இன்பம் பெற்றுள்.

* * *

அருமையாகத் துவங்கிய மண வாழ்க்கை அது. ராமலிங்கத்தை அவருடைய அறிவுக்காகவும், ஆண்மைக் காகவும் கணவனுகத் தேர்ந்து கொண்டவள் செல்லம்மாள். ஆரம்பத்தில் அவர்களுக்கு மண வாழ்க்கை இன்ப மயமா யிருந்தது; இருவர் உள்ளங்களிலும் ஒருவித இன்னிசை

எந்நேரமும் ஒலித்துக் கொண்டிருந்தது. "நம் திருமணத்தின் வெள்ளி விழாவையும், பொன் விழாவையும், புதிதாக மறுபடி நாமிருவரும் கல்யாணம் செய்து கொண்டு ஊர் அழைத்துக் கொண்டாட வேண்டும்" என்று ராமலிங்கம் செல்லம்மாளிடம் அடிக்கடி சொல்லுவார்.

முதலில் வைத்தியும், பின்பு கமலாவும் பிறந்தார்கள். கமலா பிறந்தபோது தான் ராமலிங்கம் பெரிய உத்தியோகம் ஒன்றில் ஊன்றி நின்றிருந்தார். அங்கே மேன்மேலும் பெயர் பெருகிற்று. கமலா பிறந்தபோது பதவியில் அவருக்கு உயர்வு கிடைத்திருந்தது. கமலா அதிர்ஷ்டக்காரி என்று பெயர் வாங்கினுள்.

அதற்கப்புறம் நாலைந்து வருஷங்களுக்கு நல்ல சுக்கிர தசை அடித்தது. உத்தியோகத்தில் அவர் தொட்டதெல்லாம் பொன்னுயிற்று. பதவி எப்படி யெல்லாமோ உயரப் போகிறது என்று எல்லோரும் எதிர்பார்த்திருந்த சமயத்தில், ஒரு நாள் ராமலிங்கம் வேலையை விட்டு விட்டார். அவர் ஏன் இவ்வளவு அருமையான உத்தியோகத்திலிருந்து விலகினுர் என்பது யாருக்கும் தெரியாது. ஏன், அவருக்கே தெரியாது.

இந்த மாதிரி ஒரு மனநிலை எல்லோருடைய வாழ்க்கையிலும் ஏதாவதொரு சமயம் ஏற்படத்தான் செய்யும் என்று தோன்றுகிறது. பணம், அந்தஸ்து, சூழ்நிலை—எல்லாம் அளவுக்கு மிஞ்சித் திருப்தியளிக்கக் கூடியதாய் இருக்கும்; ஆனுல் மனத்தில் திருப்தியிராது. தாங்க முடியாத குறை ஒன்று அழுத்திக் கொண்டிருப்பதாகத் தோன்றும். இந்த மாதிரி ஒரு மன நிலைக்குப் பதில் சொல்லத் தெரியாமல் தான் ராமலிங்கம் அவ்வளவு நல்ல பதவியை உதறித் தள்ளி யிருக்க வேண்டும்.

செல்லம்மாளுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனுல் தன் கணவர் செய்தது சரியாகத்தான் இருக்க வேண்டும் என்ற நினைப்பில் சும்மா இருந்து விட்டாள்.

ராமலிங்கம் வேலையை விட்டு மாதம் இரண்டாயிற்று. புதிய வேலை ஒன்றும் அவரைத் தேடி வராததால் அவரும்

புதிய வேலையைத் தேடிப் போகவில்லை. ஆனால் பாவம், அவரை அறியாமலே ஒருவிதத் தேக்கம் அவருடைய வாழ்வில் புகுந்து கொண்டது. தாம் எதிர்பார்க்கும் அளவுக்குப் பெரியதான பதவி ஒன்று தம்மைத் தேடி வராது என்ற உணர்வு அவருக்கு ஏற்பட்டபோது, நிலைமை கட்டுமீறிப் போயிருந்தது. தாமே வேலை தேடிப் போவதென்ற பொறுப்பைத் தள்ளிப் போட்டார். இறுதியில், யாரிடமும் வேலை கேட்பதில்லை என்ற தீர்மானம் அசைக்க முடியாதபடி உறுதிப்பட்டு விட்டது.

ராமலிங்கம் சேர்த்து வைத்த பணம் கொஞ்சம் இருந்தது. அது படிப்படியாகக் கரையத் துவங்கிய போது தான் செல்லம்மாள் திகிலடைந்தாள். ஆரம்பத்தில் அவளால் கணவனின் வேலையின்மை பற்றிக் கவலைப்படாமலே மாதக் கணக்கில் இருக்க முடிந்தது. ஆனால் கவலை என்பதாக ஒன்று தோன்றியவுடன், அது நாளுக்கு நாள் வளர்வதை உணர்ந்தாள்.

இந்த நிலையில்தான் ஒருநாள் அந்தப் பெரும் புயல் மூண்டது. அன்று மாலையில் ராமலிங்கம் எங்கோ வெளியில் சென்றிருந்தார். செல்லம்மாளைக் காலை முதலே ஒருவித மனச்சோர்வு வாட்டிக் கொண்டிருந்தது. "இப்படியே இன்னும் எத்தனை நாள்?" என்ற கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் திணறிக் கொண்டிருந்தாள். மாலை ஸ்கூலிலிருந்து திரும்பி வந்திருந்த வைத்தி அந்தச் சமயம் பார்த்து ஏதோ சொல்லி வைத்தான். "அம்மா, நாளைக்கு ஸ்கூலுக்குப் போகும்போது எல்லாமாகச் சேர்த்து பத்து ரூபாய் கொண்டு போயாக வேண்டும்" என்று கத்தினான் அவன். உடனே ஆத்திரத்தில் செல்லம்மாள் தன்னை மறந்து அவன் முதுகில் ஒரு அடி வைத்தாள். முதன் முதலாகக் குழந்தையையும் அவள் அப்போது தான் கை நீட்டி அடித்தாள். அடித்தபோது அவள் தன் வசத்தில்லை; அடித்து விட்டு, கூடவே சில வார்த்தைகளைக் கொட்டினாளே, அப்போதும் அவள் தன் வசத்திலில்லை.

'உன் அப்பாவுக்கு மறுபடி குடும்பப் பொறுப்பு வந்து, அவரும் மற்றவர்களைப் போல் பணம் சம்பாதித்து இங்கே

கொண்டு வருவார் பார், அதுவரை காத்திருந்து அவரிடமே அந்தப் பத்து ரூபாயை வாங்கிக் கொண்டு போ...போதும் எனக்கு......''

கடைசி வார்த்தைகள் நாக்கை விட்டுப் பிரிந்து கொண்டிருந்த போதே, செல்லம்மாள் தன் பார்வையின் விளிம்பில் ஏதோ நிழலாடுவதை உணர்ந்து திரும்பிப் பார்த்தாள். அங்கே ராமலிங்கம் நின்று கொண்டிருந்தார்.

ராமலிங்கத்தைக் கண்டவுடன் அவள் நடுங்கிப் போனாள். பாய்ந்து ஓடி ராமலிங்கத்தின் காலடியில் சுருண்டு விழுந்தாள். ராமலிங்கம் விலகிக் கொண்டார். செல்லம்மாள் எழுந்து அப்படியே, குன்றிப் போய் நின்று அவரை நிமிர்ந்து பார்த்தாள். அவருடைய முகத்தில் சற்றும் மாறுதலில்லை.

''ஐயோ, அந்த வார்த்தைகள் நிஜமாகவே என் வார்த்தைகளில்லை; உங்கள் செல்லம்மாளின் வார்த்தைகளில்லை. அவை என் வாயிலிருந்து எப்படி வந்தன என்பது என் மனத்துக்கே தெரியாது. என்னை நம்புங்கள்'' என்று கை கால் பதற அவள் கெஞ்சினாள்.

ராமலிங்கம் அப்போதும் கோபித்துக் கொள்ளவில்லை. ஆனாலும் அவர் மனத்தில் பற்றிக் கொண்ட நெருப்பு, வார்த்தைகளாக வெளி வந்தது, அமைதிப் பூச்சுடன்.

''செல்லம்மா, உன் மனத்தை அறிந்து வெட்கத்தால் குன்றிப் போகிறேன். எனக்கு ஒரு பொறுப்பு இருக்கிறது என்பது இப்போதுதான் தெரிகிறது. நீதான் என் கண்களைத் திறந்து விட்டாய். இனி என் கடமையைத் தவறாமல் நான் செய்தாக வேண்டும்...'' என்று சொல்லிக் கொண்டே, பக்கத்திலேயே இருந்த தம்முடைய பெட்டியைக் கையில் எடுத்துக் கொண்டு புறப்பட்டுவிட்டார்.

செல்லம்மாள் அவர் பின்னாலேயே ஓடிப் போய், ''ஐயோ, எங்கே கிளம்புகிறீர்கள்?'' என்று கத்தினாள்.

ராமலிங்கம் ஒரு உதறு உதறித் தம்மை அவளுடைய பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டு, ''செல்லம்மா, நான்

திரும்பி இந்த வீட்டுக்கு வரவேண்டுமென்ருல், என்னை நீ தடுக்காதே!'' என்று சொல்லிவிட்டு, விடுவிடென்று போய் விட்டார்.

மூன்று நாள் கழித்துத் திரும்பி வந்து சேர்ந்தார் அவர். அவளை நேராகக் கூடப் பார்க்காமல் பேசினுர். ''இன்னும் இரண்டு நாளில் நாம் இங்கிருந்து வேறு ஊருக்குப் போகிருேம்.''

மேற்கொண்டு ஒரு தகவலும் கிடையாது. சாப் பாட்டை அரையும் குறையுமாகக் கொரித்து விட்டு, மூட்டை கட்டக் கிளம்பி விட்டார். செல்லம்மாள் என்ன வெல்லாமோ பேசிப் பார்த்தாள். எதற்கும் ஒரே வார்த் தையில் பதில் சொல்லி விட்டு வேலையில் முனைந்திருந்தார் ராமலிங்கம்.

புது ஊர் போய்ச் சேர்ந்த போதுதான், செல்லம் மாளுக்கு ராமலிங்கம் அந்த மூன்று நாளில் செய்திருந்த ஏற்பாடுகளெல்லாம் தெரிய வந்தன. பெரிய தொழிற்சாலை ஒன்றில் உயர்ந்த உத்தியோகம் ஒன்று அவருக்குக் கிடைத் திருந்தது. தொழிற்சாலைப் பகுதியிலேயே பெரிய பங்களா ஒன்றை அவருக்காக ஒதுக்கி யிருந்தார்கள். யந்திர நுட்பத்தில் பெரும் பயிற்சியெல்லாம் முடித்து நிபுணரா யிருந்ததால், அவரை அந்தத் தொழிற்சாலை முதலாளி விசேஷச் சலுகையுடன் ஏற்றுக் கொண்டிருந்தார்.

புது ஊர் போய்ச் சேர்ந்தபின், ராமலிங்கம் வீட்டில் தங்காமல் தொழிற்சாலையிலேயே பழியாய்க் கிடந்தார். குழந்தைகளை மட்டும் அழைத்துக் கொண்டு அடிக்கடி வெளியில் சுற்றுவார். செல்லம்மாளுடன் அளந்துதான் பேசுவார். அவளை ஏறிட்டுப் பார்ப்பதில்லை என்று தாம் வைராக்கியம் பூண்டு விட்டதாக அவர் ஒரு நாள் வெளிப் படையாகச் சொல்லியே விட்டார். ''பத்து வருஷங் களுக்குப் பொறுப்பில்லாமல் வாழ்ந்தாயிற்றே! அது போதும். இனி குழந்தைகள்தான் நம் இருவருக்கும் இடை யிலுள்ள ஒரே பிணைப்பு. மண வாழ்க்கை என்ற அர்த்த மற்ற வாழ்க்கை வேண்டாம்; இனிமேல் பண வாழ்க்கை

நடத்துவோம். அது போதும்'' என்று சொன்னார். செல்லம்மாளுக்குத் 'திக்'கென்றது.

வேண்டுமென்றே, செல்லம்மாளுடன் தனிமையில் தங்காமல் தட்டிக் கழித்தார். குழந்தைகள் ஸ்கூலுக்குப் போகுமுன் ஆபீஸுக்குப் போய்விடுவார். மாலையில் குழந்தைகள் திரும்பிய பிறகுதான் திரும்பி வருவார். இரவில் குழந்தைகளுடனேயே படுத்து அவர்களுக்கு முன்பே தூங்கிப் போய் விடுவார். ஒருநாள் செல்லம்மாள் பொறுமை இழந்து, குழந்தைகள் முன்னிலையிலேயே அவர் காலில் விழுந்து கெஞ்சினாள். அதற்கு அவர், ''இந்த அவலப் போராட்டம் குழந்தைகளுக்குத் தெரிய வேண்டாம்'' என்று சொல்லிவிட்டு வெளியே போய் விட்டார். அன்று பூராவும் வீட்டுக்கே திரும்பவில்லை.

இன்னொரு நாள் தனிமையில் அகப்பட்டுக் கொண்டார் ராமலிங்கம். அன்று இரண்டிலொன்று தீர்ந்தபோது செல்லம்மாளுக்குப் பேரிடி ஒன்று தலைமேல் விழுந்து விட்டது போலிருந்தது. அவர் சொன்னார் : ''இதோ பார், நம்முடையது புது மண வாழ்க்கையல்ல. இனிமேல் என்னால் அந்தப் பொறுப்பற்ற வாழ்க்கைக்குத் திரும்ப முடியாது. என் திறமைக்கு அருமையான உத்தியோகம் இருக்கிறது. என் அன்புக்கு மணியான குழந்தைகள் இருக்கிறார்கள். அதுபோதும் எனக்கு. நீ இன்னமும் இளம் பெண்ணல்ல... உன்னைப் பொறுத்த மட்டில் இனி நான், பணம் சம்பாதித்துக் கொட்டும் ஒரு யந்திரமே தவிர வேறில்லை.''

செல்லம்மாள் தோற்றுப் போய் விட்டாள்.

நாளடைவில் போராடுவதற்குக்கூட மனத்தில் தெம்பு இல்லாமல் போய்விடும் என்று தோன்றியபோது, செல்லம்மாள் திடீரென்று வைராக்கியம் பூண்டு வீட்டு வாழ்க்கையிலேயே துறவு மேற்கொண்டாள். சுயநலத்தை உதறியெறிந்தாள். பத்து வருஷத்து மணவாழ்வுடன் திருப்தியடைந்தவளாகத் தன் குழந்தைகளிடம் அதிக அன்பு செலுத்தத் தொடங்கினாள்.

ராமலிங்கமும் குழந்தைகளுடன் ஒன்றி விட்டார். அவர்களுடைய வாழ்வின் எல்லா அம்சங்களுக்கும் திட்டங்கள் வகுத்து அனைத்தையும் நிறைவேற்றி வைத்தார்.

இப்படிப் பல வருஷங்கள் ஓடின. திருமணத்தின் வெள்ளி விழா வந்து போயிற்று. அன்று செல்லம்மாளின் மனம் துடித்த துடிப்பு, யாருக்குத் தெரியும்?

வெளி உலகத்துக்குத் தெரியாமல்—குழந்தைகளுக்குக் கூடத் தெரியாமல்—இந்த வைராக்கிய வாழ்க்கை மேலும் ஐந்து வருஷம் நீடிப்பதற்குள், கமலாவுக்கும், வைத்திக்கும் அடுத்தடுத்துக் கல்யாணம் நடந்தது.

வைத்திக்கு தாம் வேலை பார்த்த தொழிற்சாலையில், தமது பதவியிலேயே அமர்த்துவதற்கு, ஆரம்ப முதலே அவனைச் சரியானபடி தயார் செய்து வைத்திருந்தார். கல்யாணத்துக்குப் பின் வைத்தி, சரோஜாவுடன் அங்கேயே மண வாழ்க்கை நடத்தத் துவங்கினது, ராமலிங்கத்துக்கு இதமாயிருந்தது.

அறுபதாவது வயதில் ராமலிங்கம் வேலையிலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டார். முப்பது வயதில் இருந்த அதே உடலுறுதியுடன் அவர் ஓய்வு பெற்றுக் கொண்டது விநோதமாயிருந்தது. ஆனால் தொழிற்சாலையுடன் தமக்கிருந்த தொடர்பை அவர் அப்புறமும் பூராவாக விட்டு விடவில்லை. இது எல்லோருக்கும் திருப்தியளித்தது—செல்லம்மாளைத் தவிர. ஆனால் அவள் மட்டும் ஏதோ ஒரு கொள்கையை ஸ்தாபிக்கப் போகிறவள் போல் உறுதியுடனிருந்தாள். முப்பது வருஷ 'ஒற்றை வாழ்வு' அவளைச் சுட்ட பொன்னாக்கி யிருந்தது.

உஷாவும், ரங்குவும் பிறந்தது செல்லம்மாளின் வாழ்வுக்குப் புது ஒளி ஊட்டிற்று. உயிர் வாழவேண்டுமென்ற உறுதி, அவர்கள் வருகையால் மேலும் வலுப்பட்டது. உஷாவின் வளர்ச்சியை நாள்தோறும் நேரில் கண்டு செல்லம்மாளின் கண்கள் குளிர்ந்தன. கமலாவும் கணவன் வீட்டிலிருந்து ரங்குவுடன் அடிக்கடி வந்து போய்க் கொண்டிருந்தாள்.

இப்படி ஒரு தடவை கமலாவும் ரங்குவும் வந்திருந்த போது, கூடத்தில் எல்லோரும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். ராமலிங்கம் அடுத்த அறையில் ஏதோ படித்துக் கொண்டிருந்தார். வைத்தி பேச்சுவாக்கில், தான் ஆபீஸ் அலுவலாக வெளியூர் போக வேண்டியிருக்கும் என்று செல்லம்மாளிடம் சொன்னான். உடனே செல்லம்மாள், "எப்போது போகவேண்டும்?" என்று கேட்டாள்.

அதற்கு வைத்தி, "ஏப்ரல் பதினைந்தாம் தேதிதான் போக வேண்டும். இன்று நாலாம் தேதிதானே! இன்னும் ......" என்று சொல்லி முடிப்பதற்குள், செல்லம்மாள், "ஆ, இன்று ஏப்ரல் நாலாம் தேதியா?" என்று கூச்சல் போட்டாள். எல்லோரும் திடுக்கிட்டுப் பேச்சை நிறுத்தினார்கள்.

"ஏப்ரல் நாலாம் தேதி! ... வைத்தி, எனக்குக் கல்யாணமாகி இன்றோடு ஐம்பது வருஷமாகிறதடா... பொன் விழா" என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தவள் மூர்ச்சையானாள்.

அன்று முதல் செல்லம்மாள் படுத்த படுக்கையானாள். ராமலிங்கம் தவியாய்த் தவித்தார். பிரபல டாக்டர்கள் பலரைக் கொண்டு வந்து காண்பித்தார். பணம் தண்ணீராய்ச் செலவழிந்தது.

செல்லம்மாளுக்கு ஏதோ திகிலடித்து விட்டது என்று டாக்டர்கள் சொன்னார்கள். ஆனால் உண்மையில் ராமலிங்கத்துக்குத் தான் திகிலடித்து விட்டதோ என்று தோன்றிற்று. செல்லம்மாளின் கட்டிலருகிலேயே இரவு பகலாக உட்கார்ந்திருந்தார். செல்லம்மாள் தூங்கும் போது அவளையே கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருப்பார்.

"செல்லம்மா! உன் அருகிலேயே தவம் கிடந்து உன்னை மறுபடி அடைந்தே தீருவேன்" என்று அவர் மனத்தில் ஓர் ஓலம் கேட்டது திடீரென்று. அந்த ஓலம் வர வர உரத்து, அவருடைய இதயத்தின் ஒவ்வோர் அணுவிலும் எதிரொலித்தது.

செல்லம்மாள் தான் விழித்திருந்த போதெல்லாம் அவரைப் பார்க்கவும் அஞ்சினாள்; அவள் உண்மையில்

அவரைப் பார்க்க விரும்பவேயில்லை. தவறிப்போய் வெளி வந்த சில வார்த்தைகளுக்காக நாற்பது வருஷ காலம் தன்னை அவர் தண்டித்து விட்டாரே என்பதுகூட முக்கியமா யில்லை; மண வாழ்வின் துவக்கத்தில் எத்தனையோ கனவுகளுக்குக் காரணமாக இருந்த வெள்ளி விழாவும் பொன் விழாவும் கொண்டாட்டமில்லாமலே வந்து போய் விட்டன; இரண்டு பேரும் உயிரோடு இருந்தும் கொண்டாட முடியவில்லை. இந்த எண்ணம்தான் செல்லம்மாளை வெகுவாக வதைத்தது. செல்லம்மாள், தன் அறுபத்தேழாவதுவயதில், தன் மண வாழ்வின் பெரும்பகுதி வீணாகி விட்டது பற்றிய பெருந் துயரத்துக்குத் தன்னைப் பலியாக்கிக் கொண்டிருந்தாள்.

மாப்பிள்ளை மணியும் ஊரிலிருந்து வந்து சேர்ந்தான். எல்லோரும் எப்போதும் செல்லம்மாளின் படுக்கையைச் சுற்றியே உட்கார்ந்திருந்தார்கள். ராமலிங்கம் வாய் திறந்து யாருடனும் பேசாமல் எங்கேயோ வெறித்துப் பார்த்தவாறு தவித்துக் கொண்டிருந்தார். அவர் உடம்பு நாளுக்கு நாள் தளர்ந்து வந்ததை எல்லோரும் பார்த்தார்கள். அவருடைய மனம் வலுவிழந்து, உருவிழந்து சிதறிக் கொண்டிருந்ததை யாரும் பார்க்கவில்லை. அது அவருக்கு மட்டும் தான் தெரியும்.

முடிவில் ஆஸ்பத்திரியிலே, 'ஸ்பெஷல் வார்'டில் செல்லம்மாளைச் சேர்த்தார்கள். அங்கே சேர்த்த பத்து நாட்களுக்குள் ராமலிங்கத்தின் நம்பிக்கை யெல்லாம் போய் விட்டது. 'இனி செல்லம்மாள் பிழைக்கமாட்டாள்' என்பது தெரிந்து போயிற்று. இப்போது அவர் மனத்தில் ஒரே ஒரு விருப்பம்தான் மிஞ்சி யிருந்தது. செல்லம்மாள் நல்ல நினைவுடன் இருக்கும்போது, தன் பாபத்துக்காக அவளிடம் மன்னிப்புக் கேட்டுவிட வேண்டும் என்பதுதான் அது.

செல்லம்மாளுக்கு நினைவு வந்து வந்து போய்க்கொண்டிருந்தது. ஒவ்வொரு தடவையும் நினைவு வரும்போது, ராமலிங்கம், அவள் காலைப்பிடித்துக் கதறியழுது மன்னிப்புக்

கேட்கத் துடிப்பார். எழுந்தும் விடுவார். ஆனால் கடைசி நிமிஷத்தில் தைரியம் வராது. அதற்குள் செல்லம்மாள் நினைவிழந்து விடுவாள். 'அடுத்த தடவை நிச்சயம்' என்று சொல்லிக் கொள்வார். ஆனால் அவள் முடிவு இவ்வளவு சீக்கிரம் வந்துவிடும் என்று அவர் நினைக்கவே யில்லை.

கணவனின் ஸ்பரிசம்பட்டு, ஆனந்த மிகுதியால் செல்லம்மாளுக்கு மூச்சு இரைக்க ஆரம்பித்தது. படுத்த வாக்கிலேயே நாற்புறமும் பார்த்தாள். கால் பக்கத்தில் கணவன் இருந்ததைப் பார்த்தவுடன், பதறிப் போய் "ஐயையோ, என் காலை நீங்கள் தொடலாமா? இங்கே என் அருகில் வாருங்கள்" என்று முணுமுணுத்தாள்.

ராமலிங்கம் முன்னே தாவி வந்து அவளை அணைத்துக் கொண்டு, "நாற்பது வருஷ காலத்துக்கு விட்டுப்போன இன்பமெல்லாம், உன்னுடைய இந்த ஓர் அழைப்பில் எனக்குக் கிடைத்துவிட்டது செல்லம்மா!" என்று கதறினார்.

செல்லம்மாள், "இனி நான் நிறை வாழ்வு வாழ்ந்த நிம்மதியுடன் உயிர் விடலாம்..." என்றாள் நா தழுதழுக்க.

ராமலிங்கம் செல்லம்மாளின் வாயைப் பொத்தினார். திடீரென்று அவருக்கு ஒரு யோசனை தோன்றிற்று. "செல்லம்மா, நம் கல்யாணத்துக்குப் பொன் விழா கொண்டாட வேண்டாமா? மறுபடி நாம் ஊரறியக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டாமா, கொட்டு மேளத் தோடு?" என்று கொஞ்சலாகவும், கெஞ்சலாகவும் கேட்டார்.

செல்லம்மாளின் உடலில் இவ்வளவு சக்தி எங்கிருந்து வந்தது திடீரென்று? முகத்தில் இவ்வளவு தெளிவு எப்படி வந்தது? உரக்கச் சிரித்துக் கொண்டே, "உங்களை எத்தனை தடவை வேண்டுமென்றாலும் கல்யாணம் செய்து கொள் கிறேன். என் இஷ்டத்தை வேறு கேட்க வேண்டுமா? என் உயிர் நிச்சயம் போகாது. இந்த ஆனந்தத்துக்காக இந்த நாற்பது வருஷமும் உயிரைப் பிடித்து வைத்துக்

கொண்டிருந்தவள், இப்போது அதைப் போகவிடுவேனு?'' என்ருள் உணர்ச்சி மிகுதியில்.

''வைத்தி!......கமலா!......நம் செல்லம்மா பிழைத்து விட்டாள்'' என்று கத்திக்கொண்டே ராமலிங்கம் கதவுப் பக்கம் ஓடிஞர்.

உண்மையாகவே செல்லம்மாள் பிழைத்து எழுந்து விட்டாள். எந்த உறுதியைக்கொண்டு நாற்பது வருஷமாக உயிரோடு இருந்தாளோ, எந்த உறுதியைக்கொண்டு இந்த முப்பது நாட்களாய்க் கொஞ்சம் கொஞ்சமாக இறந்து கொண்டிருந்தாளோ, அதே உறுதியுடன் மரணத்தைத் துறந்து பிழைத்தெழுந்து விட்டாள்.

மறு மாதமே, மேளதாளம் முழங்க, வேதமந்திரம் ஒலிக்க, ராமலிங்கமும், செல்லம்மாளும் 'மறுமணம்' செய்து கொண்டார்கள். சுமார் ஐம்பது வருஷத்துக்கு முன் ஒரு நாள் ஏற்பட்ட அந்த இன்பம், சற்றும் குறையாமல் இன்றும் அவர்களுக்கு ஏற்பட்டது!

# 8

# வேப்பம் பழம்

நா. பார்த்தசாரதி

கிழக்கு வானத்தில் பகல் பூத்துக் கொண்டிருந்த நேரம். மண்ணுலகத்து இன்பமெல்லாம் ஒன்று சேர்ந்து காற்ருய் வீசுவதுபோல் வேப்ப மரத்துக் காற்று வீசிக்கொண்டிருந் தது. காகம் கரையும் ஒலி, மேல வீட்டுப் பாகவதர் பூபாளம் பாடும் அழகு, பக்கத்து வீட்டு மாட்டுக் கொட் டத்தில் பால் கறக்கும் ஒலி, தெரு வாசலில் சாணம் தெளிக் கும் ஓசை, இடையிடையே வாசலில் கோலம் போடும் பெண் கரங்களின் வளைக்குலுங்கல், கோவில் விசுவரூப மணியோசை காற்றில் மிதந்து வரும் நாதம்...

அடாடா ! அந்தச் சின்னஞ்சிறு கிராமத்தில் வைகறைப் போது எவ்வளவு அழகாயிருக்கிறது ? உழவு மாடு பூட்டிக் கொண்டு போகும் உழவன், காய்கறிக்காரன், தயிர்க்காரி, பால்காரன் என்று தெருவில் மனிதர்கள் நடமாடுகிற உயிர்த் துடிப்பில் எத்தனை எழில்? கிழக்கே தெரு முடியும் இடத்துக்கு அப்பால் தென்னை மரக் கூட்டத்தில் சூரியோ தயத்தின் ஒளி பரவும் அழகைப் பார்த்துக்கொண்டே

வேப்பமரத் தடியில் நின்றிருந்தார் பேராசிரியர் சிற்சபேசன். கிராமத்தின் அழகிலும், தூய்மையும், அமைதியும் நிறைந்த அந்தக் காலை நேரத்துச் சூழ்நிலையிலும் தோய்ந்து நின்ற அவர் மனத்தில் வளமான சிந்தனைகள் உண்டாயின.

பின்னால் யாரோ நடந்து வருகிற ஓசை கேட்டுத் திரும்பினார் சிற்சபேசன். கையில் கூடையும் விளக்குமாறுமாக ஒரு சிறுமி வந்து கொண்டிருந்தாள். அவர் நின்று கொண்டிருந்த வேப்ப மரத்தடியை நோக்கித்தான் வருவதாகத் தோன்றியது.

''மாமா......! நீங்கதான் இந்த வீட்டுக்குப் புதிதாகக் குடி வந்திருப்பதாகச் சொன்னாங்க. நான் வீடெல்லாம் தெளித்துப் பெருக்கிச் சுத்தமா வைத்துக் கொள்வேன். வீட்டிலே சமையலுக்கு உதவியா எடுபிடிக் காரியமெல்லாம் செய்து கொடுப்பேன். சம்பளம்னு பெரிசா ஒண்ணும் கேட்க மாட்டேன். ஏதோ உங்களாலே முடிஞ்சதைக் கொடுத்தால் திருப்தியா வாங்கிக்குவேன். எனக்கு அப்பா அம்மா யாரும் இல்லை. ஒரு தம்பி இருக்கான். எலிமெண்டரி ஸ்கூல்லே அவன் மூணாங் கிளாஸ் படிக்கிறான். நான் உழைச்சுத்தான் காப்பாற்றியாகணும்.''

சிற்சபேசனுக்கு முன்னால் வந்து நின்று கொண்டு பணிவான குரலில் கூறினாள் அந்தச் சிறுமி. அழுக்குச் சிற்றாடையும் கிழிந்த தாவணியுமாக ஏழைமைக் கோலத்தில் நின்ற அந்தச் சிறுமியை நன்றாய்ப் பார்த்தார் சிற்சபேசன்.

பதின்மூன்று அல்லது பதினாலு வயது மதிக்கலாம். வயதுக்கு மீறின வளர்த்தி. குச்சி போல் வளர்ந்திருந்தாள். எதற்கோ ஏங்கிக் கொண்டே வளர்ந்தது போன்ற முகத் தோற்றம். ஆனாலும் பார்த்தவுடன் மனத்தில் பதிந்து விடக்கூடிய ஒரு சோகக்களை அந்த முகத்தில் இருந்தது. அந்த வயதுக்கு இருக்க வேண்டிய கூச்சமும், நாணமும் அற்றுப் போய், ஏதோ பெரிய பொறுப்பைச் சுமந்து கொண்டு வாழ்கிறாற்போல் கண்களில் ஓர் ஒளி அமைந்திருந்தது. பேச்சில் காரியத்தைச் சாதித்துக் கொள்கிற ஒட்டுறவு; சொற்களில் ஏழைமையின் குழைவு ; நம்பிக்கை

யோடு சிற்சபேசனின் முகத்தைப் பார்த்துக் கொண்டு நின்றாள் அந்தச் சிறுமி. வானத்தில் மேகத்தைத் தேடும் வறண்ட நிலத்து உழவனின் முகம் போல் அந்த முகத்தில் ஓர் ஆசைத் துடிப்பு மிதந்தது. சிற்சபேசன் வாய் திறந்தார்.

"உன் பேரென்ன குழந்தை ?"

"பட்டுன்னு சொன்னாத் தெரியும், சார்! இந்த ஊர்லே நான் வேலை செய்யற வீடுகளிலே கேட்டுப் பாருங்க சார்! என்னைப் பற்றி நல்லபடியாச் சொல்லுவாங்க..."

"அதிருக்கட்டும்! நீ பள்ளிக்கூடத்திலே படிக்கலியா?"

"எப்படி சார் படிக்க முடியும்? நான் சின்னவளா இருக்கப்பவே அம்மா போயிட்டா. அப்பாவுக்குச் சமையல் வேலை. கல்யாணம் கார்த்திகைன்னு முக்கால்வாசி நாள் வெளியூருக்குச் சமையல் வேலைக்குப் போயிடுவார். தம்பி அப்போ சின்னக் குழந்தையா இருந்தான். நான்தான் வீட்டோடு இருந்து பார்த்துக்கணும். தம்பி பெரியவன் ஆகி நெனைவு தெரியற சமயத்திலே அப்பாவும் செத்துப் போயிட்டா. அப்போ எனக்குப் பதினேரு வயசு, பொறுப்பெல்லாம் என் தலையிலே விழுந்துடுத்து..."

"அதிலேயிருந்து இப்படித்தான் காரியம் செய்து சம்பாதிச்சுக் குடும்பத்தைக் காப்பாத்தறயாக்கும் ?"

"ஆமாம் சார்! எங்களுக்கு வேறே யாரும் இல்லே. மாமான்னு ஒருத்தர் மெட்ராஸ்லே இருக்கார். பேருக்குத் தான் அவர் மாமா. அவராலே உபகாரம் ஒண்ணுமில்லே. அப்பா போனப்போ கடிதாசு எழுதினேன். அவர் திரும்பிக் கூடப் பார்க்கலே."

"வேறே யாரும் உறவு இல்லையா ?"

"இந்த ஊரிலே இல்லே. எங்கெங்கேயோ இருக்கா. யாருமே எட்டிப் பார்க்கலே. பணம் காசு சொத்து சுகம்னா எட்டிப் பார்ப்பா. நாங்க ஏழைப் பட்டவான்னு இளப்பம். யாரும் இருக்கியா, செத்தியான்னு கூடக் கேட்க வரலே. இந்த ஊர்க் கிராம முன்சீப் இருக்காரே, ரத்னம்

பிள்ளைன்னு—ஒல்லியா சிவப்பா சந்தனப் பொட்டு வைச்சிண்டு சாவடி வாசல்லே உட்கார்ந்து கணக்கெழுதிண்டிருப்பாரே—அவர்தான் ஒரு வழியா என்னைத் தைரியப் படுத்தினர். என்னைக் கூப்பிட்டார். 'குழந்தை, நீ தைரியமா இருக்கணும். தம்பியைப் படிக்க வைச்சுப் பெரியவனாக்கிறவரை நான் சொல்றபடி செய்; ஊர்லே நாலு வீட்டிலே எடுபிடிக் காரியம், பெருக்கத் தெளிக்க ஏற்பாடு செய்யறேன். அதிலே கிடைக்கிறதை வச்சிட்டு மானமாப் பிழைக்கலாம்'—அப்படின்னு ஒரு வழி பண்ணி விட்டார். அப்பா சொத்து, சுகம்னு ஒண்ணும் வைச்சிட்டுப் போகலேன்னாலும் ஒண்டிக்கிறதுக்கு ஒரு சின்ன ஓட்டு வீடு—கையகலத்துக்கு வைச்சிட்டுப் போயிருக்கார். மேலக் கோடியிலே சின்னதா பித்தல் நார்ப்பெட்டி மாதிரி ஓர் ஓட்டுக்குச்சு—நீங்க கூடப் பார்த்திருப்பீங்க. வாசல்லே எருக்கஞ் செடி மொளைச்சிருக்கும். தம்பியும், நானும் அதுலேதான் காலத்தைத் தள்ளிண்டு வரோம்..."

"சாப்பாடு!..."

"நானே சமைச்சுக்குவேன். எனக்கு எல்லாம் தெரியும் சார்!..."

"அது சரி! நான் இந்த வீட்டுக்குக் குடி வந்திருக்கேன்னு உனக்கு யார் சொன்னாங்க?"

"அதுவா? நேத்துச் சாயங்காலம் கிராம முன்சீப் சொன்னர். 'பட்டு! அந்த வேப்ப மரத்தடி வீட்டுக்குப் பட்டணத்திலேருந்து ஒரு புரொபஸர் ரிடையராகி வந்திருக்கார். நாளைக் காலையிலே போய்ப் பாரு' என்றார். அதான் வந்தேன் சார்."

"எல்லாம் சரி. எனக்கு உன்னை ரொம்பப் பிடிச்சிருக்கு. எங்க வீட்டிலேயும் நீயே வேலை செய்யலாம்...காலையிலே சுத்தமா வாசலைப் பெருக்கித் தெளிச்சுக் கோலம் போட்டுடணும், அப்புறம் உள்ளே மாமிக்கு ஒத்தாசையாகச் சமையலுக்கு நாலு குடம் தண்ணீர் இறைத்துக் கொடுக்கணும், சாயங்காலமும் ஒரு தரம் வீடு பெருக்கணும்,

இவ்வளவுக்குமாக மாசத்துக்கு உனக்கு என்ன சம்பளம் வேணும்?...''

"அதுதான் நான் அப்பவே சொன்னேனே, சார்! சம்பளம்னு பெரிசா ஒண்ணும் கேட்கமாட்டேன். நீங்க கொடுத்ததைத் திருப்தியா வாங்கிப்பேன். சம்பளமா பெரிசு? மனுஷாள்தான் வேணும்!''

சிற்சபேசன் அதிசயித்தார். ஏழைமை அந்தப் பெண்ணுக்கு எவ்வளவு விநயமாகப் பேசும் பழக்கத்தை உண்டாக்கியிருக்கிறது என்று எண்ணிய போது அவருக்கு வியப்பாயிருந்தது. உலகத்தைப் புரிந்து கொண்டு—சுற்றியிருப்பவர்களையும், சூழ்நிலையையும் நன்ருகத் தெளிந்து கொண்டு அந்தக் கசப்பை அங்கீகரித்து விட்ட ஒரு தெம்பு, அந்தச் சிறுமியிடம் தென்பட்டது. 'நமக்கு இதுதான் வாழ்வு—இதைக் கொண்டுதான் சமாளித்துக் கொள்ள வேண்டும்' என்கிற மாதிரி ஒரு நிறைவை அவளிடம் காண முடிந்தது.

"சரி, குழந்தை! இன்னியிலிருந்து காரியத்தைப் பாரு, நான் பார்த்துக் கொள்கிறேன்.'' என்ருர் சிற்சபேசன். பட்டு நெடுநாட்கள் அந்த வீட்டில் பழகிய வேலைக்காரியைப் போல் சிற்ருடை நுனியை இழுத்துச் செருகிக் கொண்டு வாசலைப் பெருக்க ஆரம்பித்தாள்.

சிற்சபேசன் வீட்டுக்குள் போய்க் காப்பி குடித்து விட்டு மனைவியிடம் வேலைக்காரச் சிறுமி கிடைத்த பெருமையை அளந்தார். மறுபடியும் திரும்பி அவர் வாசற்பக்கம் வந்த போது தரையில் விளக்குமாறு புரளும் பெருக்கல் ஓசை கேட்கவில்லை. வேப்ப மரத்தடியில் குனிந்து எதையோ பொறுக்கி எடுத்து ஒவ்வொன்ருக வாயில் போட்டுச் சுவைத்துத் துப்பிக் கொண்டிருந்தாள் பட்டு.

"எதையோ பொறுக்கிச் சாப்பிடுகிருயே...? அதென்னது?''

"வேப்பம் பழம் சார்! எனக்கு ரொம்பப் பிடிக்கும்... இந்த மரத்தடியிலே நிறைய உதிர்ந்திருக்கு...''

"வேப்பம் பழமா?.........ஐயையே.........கசக்காதோ உனக்கு?"

"கசப்பு உடம்புக்கு நல்லதாம், சார்! எங்கப்பா அடிக்கடி சொல்லுவா. காயா இருக்கறப்போ இது விஷமாக் கசக்கும். பழுத்திட்டால் தகதகன்னு தங்கம் போல் ஒரு நிறம் வரும். அப்போ சாப்பிட்டாக் கசப்பே தெரியாது. அசட்டுத் தித்திப்பா ஒரு இனிப்பு இருக்கும். மென்னு கடிச்சு முழுங்கிடப்படாது. இலேசாச் சப்பிச் சுவைத்து விட்டுத் துப்பிடணும்..."

"எங்கே இப்படி ஒண்ணு கொடு, பார்க்கலாம்..." சிற்சபேசன் பட்டுவுக்கு முன்னல் வந்து கையை நீட்டினுர்.

"வேண்டாம், சார்! பழக்கமில்லாட்டாக் கசப்பு ஒட்டாது...குடலைக் குமட்டிண்டு வாந்தியெடுக்க வரும்..."

"கொடேன்...பார்க்கலாம்..."

பட்டு சொன்னது மெய்யாகி விட்டது. பழத்தை வாயில் போட்டுக் கொண்ட மறுகணமே குமட்டலோடு காறித் துப்பினுர் சிற்சபேசன். "நல்ல காப்பி சாப்பிட்ட மணத்தை யெல்லாம் கெடுத்து வாயை நாற அடித்து விட்டதே, இந்தப் பாழும் வேப்பம் பழம்!" என்ருர்.

"நான் தான் மொதல்லேயே சொன்னேனே, சார்! பழகாட்டாக் கசப்பு ஒட்டாது. எனக்கு ரொம்ப நாட்க ளாகவே இந்தப் பழத்தைச் சாப்பிட்டுப் பழக்கம். ஒரே சமயத்திலே பத்து பன்னிரண்டு கூடச் சாப்பிட்டுடுவேன்.",

வேப்பம் பழத்தைச் 'சாக்லேட்டாக' விழுங்கும் அந்த அதிசயச் சிறுமியின் பழக்கத்தை வியந்து கொண்டே வாயைக் கொப்பளிக்க உள்ளே சென்ருர் சிற்சபேசன். வாயைக் கொப்பளித்துக் கழுவிய பின்னும் அந்தக் கசப்பும்' கமறல் நாற்றமும் போகவில்லை. வெகுநேரம் காறித் துப்பிக் கொண்டே இருந்தார். வாசல் தெளித்துக் கோலம் போட்டு வீடு பெருக்கித் தண்ணீர் எடுத்துக் கொடுத்து விட்டுப் பட்டு போய் விட்டாள். போகும்போது "வரேன் மாமி, வரேன் சார்" என்று உற்சாகமாகக் குரல் கொடுத்துச்

சொல்லிக் கொண்டு போனாள். அந்தக் குரலில் ஓடியாடி வேலை செய்த களைப்பின் சலிப்போ, அலுப்போ இல்லை. யாரோ உறவுக்காரப் பெண் பார்க்க வந்து விட்டுச் சொல்லிக் கொண்டு போகிற மாதிரி ஒரு தன்மையான— சுபாவமான இனிமை இருந்தது.

சிற்சபேசனிடமும், ஸ்ரீமதி சிற்சபேசனிடமும் பட்டு நல்ல பேரெடுத்து விட்டாள். "இந்தப் பொண்ணைப் பற்றி ஊரில் யாரைக்கேட்டாலும் பெருமையாத்தான் சொல்றா. சின்ன வயசிலேயே குடும்பக் கஷ்டம் தெரிஞ்ச பொண்ணாம். அப்பா, அம்மா ஒருத்தர் இல்லாமே ஒண்டியாத் தானும் பிழைத்துக் கொண்டு நாலு வீட்டிலே காரியஞ் செஞ்சு தம்பியையும் காப்பாத்தறதாம்" என்று முதல் நாளே பட்டுவைப் பற்றி அக்கம் பக்கத்தில் கேள்விப்பட்ட பெருமையைக் கணவனிடம் கூறினாள் ஸ்ரீமதி சிற்சபேசன்.

பட்டுவுக்கு ஊர் முழுவதும் நல்ல பேர்தான். யார் எந்தக் காரியம் சொன்னாலும் தட்டமாட்டாள், அவள் முகத்தில் கடுகடுப்பையே பார்க்க முடியாது. யாரிடமும் எதற்காகவும் அலுத்துக் கொள்ளமாட்டாள்.

நாலைந்து நாட்கள் கழித்து ஒரு நாள் சாயங்காலம் வீடு பெருக்க வரும் போது ஒரு சிறு பையனையும் அழைத்துக் கொண்டு சிற்சபேசன் வீட்டுக்குள் நுழைந்தாள் பட்டு.

"இவன்தான் சார் என் தம்பி. விசுவநாதன்னு பேரு, செல்லமா விச்சுன்னு கூப்பிடுவேன். இவனை என்னாலே முடிஞ்ச மட்டும் ஒரு 'ஸ்கூல் பைனல்' வரையாவது படிக்க வச்சு ஆளாக்கி விட்டுடணும்னு இருக்கேன். அதுக்காகத்தான் இத்தனை பாடுபடறேன்" என்று சிற்சபேசனிடம் அந்தச் சிறுவனைக் காட்டிச் சொன்னாள் பட்டு. சிற்சபேசன் சிரித்தார். "ஏன் சார் சிரிக்கிறீங்க? என்னாலே முடியுமான்னு தானே?"

"இல்லே! 'ஸ்கூல் பைனல்'னா இன்னும் ஆறேழு வருஷங்களாவது படிக்கணுமே. அது வரை நீ இப்படியே சின்னப் பொண்ணா வீடு வீடா ஏறி இறங்கிக் காரியம் செய்ய முடியுமான்னு நினைச்சேன். சிரிப்பு வந்தது."

"அப்படி நினைக்காதிங்க சார்...என்னாலே கண்டிப்பா முடியும்!...நான் நினைச்சா அதைச் செய்யாமே விடமாட்டேன். எப்பாடு பட்டாவது தம்பியைக் கண்டிப்பாய்ப் படிக்க வைச்சுடுவேன் சார்..."

இதைச் சொல்லும் போது பட்டுவின் இடுங்கிய கண்களில் ஒளி மின்னியது.

"பட்டு! உனக்கு நம்பிக்கை ரொம்ப இருக்கு......நீ செய்தாலும் செய்வே..."

"செய்யத்தான் போறேன், சார்! நீங்க நெறையப் படிச்சுப் பெரிய காலேஜிலே எத்தனையோ வருஷம் புரொபஸரா இருந்து விட்டு வந்திருக்கீங்க! உங்களோட எல்லாம் வாதாடிப் பேச எனக்குத் தெரியாது. ரத்னம் பிள்ளை அடிக்கடி 'முயற்சி திருவினையாக்கும்' என்று ஏதோ தமிழ் வசனம் சொல்வார். அதுலே எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை."—பதின்மூன்று வயதுப் பட்டு பேச ஆரம்பித்து விட்டால் அந்தப் பேச்சில் நூறு வயது அனுபவம் தொனிக்கும். அப்படி ஒரு நம்பிக்கை! அப்படி ஒரு முதிர்ச்சி. அப்படி ஒரு தெளிவு.

ஒரு நாள் சிற்சபேசன் தெரு வழியே போகும் போது மேலக்கோடியில் தன் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்த பட்டு பார்த்து விட்டாள்.

"சார்! சார்...!" என்று கத்தி அழைத்தாள். சிற்சபேசன் திரும்பிப் பார்த்தார். பக்கத்தில் வந்தார். "இதுதான் நீ இருக்கிற இடமா, பட்டு?" என்று கேட்டார்.

"ஆமாம், சார்! இதுதான் எனக்கு அரண்மனை. ஓட்டுக் கூரை வெயிலுக்குக் காயும்; மழைக்கு ஒழுகும். என்ன செய்வது? அப்பா வச்சிட்டுப் போன சொத்து! விடலாமோ?"

"கிழக்கேயும் மேற்கேயும் வீடில்லாமல் இடிமனைகளாகக் கிடக்கிறதே...? தனியாப் பயமில்லாமே இதிலே உன்னாலே எப்படியிருக்க முடியறது?"

"எப்படியோ இருக்கேன், சார்! எனக்கென்ன பயம்? விச்சு துணைக்கிருக்கான். பணமா? காசா? பயப்படறதுக்கு?"

"ஆமாம்! ஊர்க்காரரங்க வீடெல்லாம் வாசல் தெளிச்சுக் கோலம் போடறியே, உன் வீட்டிலே மட்டும் வாசலெல்லாம் எருக்கஞ் செடியா முளைக்க விட்டிருக்கியே?"

"அதுக்கு நேரம் ஏது சார்? எனக்குத்தான் கோழி கூப்பிடறதுக்கு முன்னேயிருந்து இருட்டறவரை வாடிக்கைக்காரங்க வீட்டு வேலே சரியா இருக்கே! இங்கே தம்பிக்கும் எனக்கும் சாப்பாடு வேறே சமைக்கணுமே?" என்று சரியாகக் காரணம் சொன்னாள் பட்டு.

பேராசிரியர் சிற்சபேசன் அந்தக் கிராமத்தில் குடியேறி ஒரு வருடம் ஓடிவிட்டது. பட்டுவின் தம்பி இப்போது நாலாங் கிளாஸ் படிக்கிறான். வீடு பெருக்குகிற வேலைக்காரப் பெண்ணாக இருந்தாலும் அவள் மேல் ஒரு தனி அனுதாபம் அவருக்கு உண்டு. ஒரு நாள் காலே பட்டு வாசல் தெளித்துக் கோலம் போட வரவில்லை. விடிந்து வெகு நேரமாகி விட்டது.

"இந்தப் பெண் பட்டு வரலியா இன்னைக்கு?" என்று தம் மனைவியிடம் கேட்டார் சிற்சபேசன்.

"அந்தப் பெண் இனிமேல் வராது!"

"ஏன் அப்படி?"

பதில் சொல்லாமல் அர்த்த புஷ்டியோடு சிரித்தாள் அவர் மனைவி.

"ஏன் சிரிக்கிறே?"

"ஒண்ணுமில்லே" என்று சொல்லிக் கொண்டே கணவன் பக்கத்தில் நெருங்கி வந்து தணிந்த குரலில், "பட்டு பெரிசாயிருக்கா!" என்றாள் அவள்.

சிற்சபேசனுக்குத் திகைப்பு ஒருபுறம்; மகிழ்ச்சி ஒரு புறம். இரண்டையுமே வெளிக்காட்டிக் கொள்ளாமல், "அந்தப் பெண்ணுக்கு இந்த ஊரில் ஏனென்று கேட்கக்

கூடத் தன் மனிதர் என்று யாருமே இல்லையே! ஒண்டியா என்ன செய்யறதோ? பாவம்......'' என்று தம் மனைவியை நோக்கிச் சொன்னார்.

''எனக்கே இது தெரியாது! நேற்று இராத்திரி பெருமாள் கோவிலுக்குப் போயிட்டுத் திரும்பி வரபோது அந்தப் பொண்ணோட வீட்டு வாசல்லே ஒரே பெண்கள் கூட்டமா இருந்தது. என்னன்னு போய் விசாரித்தேன். பட்டு பெரிசாயிருக்கான்னு தகவலைச் சொன்னா. உள்ளே போய் பார்த்தேன். அது ஒரு மூலையிலே தலையைக் குனிஞ்சிண்டு உட்கார்ந்திருந்தது. 'என்னடீ பட்டு?'ன்னேன். பதில் சொல்லாமே என்னைப் பார்த்துச் சிரிச்சுது. அதைப் பாக்கறபோது எனக்கு மனசு கஷ்டமா இருந்தது. பெத்தவ இருந்தா இப்படி ஒரு மங்களமான காரியம் நடந்ததைப் பெருமையா நாலு பேருக்குச் சொல்லுவா. வாசல்லே கோலம் போட்டுக் கொண்டாடித் தலைவாரிப் பூ வைச்சுப் பிட்டும், உருண்டையும் பண்ணி நாலு பெண்களைக் கூப்பிட்டுக் கொடுப்பா. யார் இருக்கா இதுக்கு அதெல் லாம் செய்ய? அனாதையா அழுக்குச் சித்தாடையைக் கட்டிண்டு மூலையிலே உட்கார்ந்திண்டிருக்கு...''

''ஐயோ பாவம்! நீயும் இந்த ஊர் அயல் அசல் மனிதர்களைப் போலப் பேசாமல் இருந்து விடாதே. சாயங்க லமா யூசுப் ராவுத்தர் ஜவுளிக் கடையிலேயிருந்து ஒரு சீட்டிச் சிற்றாடை வாங்கிண்டு வந்து தரேன். வாசல்லே பூக்காரன் வந்தால் கொஞ்சம் பூவும் வாங்கி வைச்சுக்கோ. போய் ஏதோ முறையா செய்யவேண்டியதைச் செஞ்சிட்டு வா. அது குளித்து வருகிற வரையில் அந்தச் சின்னப் பையனை இங்கேயே வந்து சாப்பிடச் சொல்லிட்டு வா. பட்டுவுக்கும் கொண்டுபோய்ப் போட்டுடு'' என்று பரிவோடு சொன்னார் சிற்சபேசன்.

அவர் கூறியபடியே நடந்தது. சாயங்காலம் அவர் மனைவி ஒரு பழுக்காத் தாம்பாளத்தில் புதுச் சிற்றாடையும் பூவும் மஞ்சள் குங்குமமும் ஒரு டஜன் கண்ணாடி வளையலும்

எடுத்து வைத்துப் புடவைத் தலைப்பால் மூடிக்கொண்டு பட்டுவின் வீட்டுக்குச் சென்றாள்.

போனவள் வீட்டுக்குத் திரும்பி வரும்போது இரவு ஏழு மணிக்கு மேலாகிவிட்டது.

"என்ன? பட்டு என்ன சொல்றாள்?" என்று விசாரித்தார் சிற்சபேசன்.

"அதை ஏன் கேக்கறேள்? நான் புதுச் சித்தாடையும் பூவுமாப் போய்··நின்னதும் அந்தப் பொண் ஒரே பிடிவாதமா 'இதெல்லாம் வேண்டாம் மாமி'ன்னு அடம் பிடித்தது. 'நான் பிறந்து வளர்ந்த சீருக்கு இதெல்லாம் இல்லைன்னு ஒரு குறையா? நீங்க ஏன் வீணா சிரமப் படணும்?' என்று சிரிச்சுண்டே சொல்லித்து. 'அதுக் கில்லையடி, பெண்ணே! இதெல்லாம் வழக்கம்டீ! ஆயிரம் கஷ்டம்னாலும் முறையை விடப்படாது. நல்லது நாளைக்கு வருமா?' என்று நானாக வற்புறுத்திச் சொல்லி எல்லாம் செய்துட்டு வந்தேன்" என்றாள் அவர் மனைவி.

"என்னவோ இதிலே நமக்கு ஒரு திருப்தி! அவ்வளவு தான்" என்று மன நிறைவோடு சொன்னார் சிற்சபேசன்.

"இத்தனை நாட்கள் முகத்தைச் சுளிக்காமல் உழைச்சுது. சம்பளம்னு ஏதோ கொடுத்தோம். ஆனால் அது உழைச்சதுக்கு நீங்க கொடுத்த நாலைந்து ரூபாய்க் காசு காணவே காணாது...பெரிசாப் போனப்புறம் இன்னமே எங்கே வீடு வீடா வாசல் பெருக்க வரப் போறது?" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டாள் சிற்சபேசனின் மனைவி.

"அப்படியானால் இனிமேல் பட்டு வேலைக்கு வரமாட்டாள் என்கிறாயா?"

"அப்படி அவள் சொல்லலையானாலும் எனக்குத் தோணறது" என்றாள் அவர் மனைவி. சாயங்காலம் சாவடியில் தற்செயலாகக் கிராம முனிசீப் ரத்னம் பிள்ளையைச் சந்தித்தார் சிற்சபேசன். பட்டுவைப் பற்றி ஏதோ பேச்சு வந்தது.

"எனக்கு அந்தப் பெண் பேரிலே தனி அனுதாபம், சார்! இதுவரை எப்படியோ நாலு வீட்டிலே காரியம் செய்து தன்னையும் தம்பிப் பயலையும் காப்பாத்திக்கிட்டுது. இனிமே அது முடியற காரியமில்லையே? துக்கிரிப்பய கிராமம் ஏழைப்பட்ட பொண்ணைப் பற்றி என்ன வேணுலும் பேசும். பெரிசான பொண்ணு வீடு வீடா நுழைஞ்சு வேலை செய்யறது நல்லா இருக்காது. இனிமே எப்படிக் காலந் தள்ளப் போகுதோ?" என்று ரத்னம் பிள்ளை ஏக்கம் நிறைந்த குரலில் சிற்சபேசனிடம் சொன்னார். "எனக்கும் அதுதான் யோசனை" என்றார் சிற்சபேசன்.

ஆனால் பட்டு இந்த மாதிரி எதையுமே யோசிக்க வில்லை என்பது நாலாவது நாள் விடிந்ததும் தெரிந்தது.

இருள் பிரியும் நேரம். காலைக் குளிர் நீங்கவில்லை. மப்ளரை இழுத்துக் கட்டிக்கொண்டு வாசல் பக்கம் வந்த சிற்சபேசன் வேப்ப மரத்தடியில் விளக்குமாறும் கையுமாக நின்று கொண்டிருந்த பட்டுவைப் பார்த்துத் திகைத்துப் போனார்.

நீராடிய கூந்தலை அவள் அள்ளிச் சொருகிக் கொஞ்சம் சிவந்திப் பூ வைத்திருந்தாள். கைகளில் அவர் மனைவி கொடுத்த புதிய கண்ணாடி வளையல்கள் குலுங்கின. புதிய சீட்டிச் சிற்றாடையும் கட்டிக் கொண்டிருந்தாள்.

'ரத்னம் பிள்ளைகூட அப்படிச் சொன்னாரே! ஒருவரையும் கலந்து யோசனை கேட்டுக் கொள்ளாமல் இந்தப் பெண் இன்னும் இப்படி விளக்குமாறும் கையுமாக வந்து நிற்கிறதே?' என்ற சிந்தனையோடு வேப்ப மரத்தடிக்குப் போனார் சிற்சபேசன்.

"சார்! உங்க வீட்டிலேருந்து மாமி வந்து என்னை ரொம்பப் பெருமைப் படுத்திட்டாங்க. என்னாலே வீண் கஷ்டம். நாலு நாளா நான் வராமல் வாசல் பெருக்க முடியாமல் சிரமமா யிருந்திருக்கும். குப்பை சுமந்து போச்சு" என்று வழக்கமாகப் பேசுவது போல் ஆரம்பித் தாள் பட்டு.

"அது சரி, பட்டு! நான் ஒண்ணு கேட்கணும் உன்னை. தப்பா நினைச்சுக்க மாட்டியே ?"

"என்னது சார் ?"

"இனிமே நீ இப்படி வீடு வீடா வாசற் பெருக்க வர முடியுமா? பெரிய பெண்ணாயிருக்கே... ரத்னம் பிள்ளை கூட எங்கிட்டச் சொன்னார் ஊரார் நாலு தினுசாப் பேசறவங் கன்னு..."

பட்டு பெருக்குவதை நிறுத்திவிட்டு அவர் முகத்தைப் பார்த்துச் சிரித்தாள். அந்தச் சிரிப்புக்குத்தான் எத்தனை அர்த்தம்?

"சார்! எனக்கெல்லாம் இப்படிப் பெருமை கொண்டாடினா முடியுமா? உழைச்சு வயிறு நிரப்பியாகணும். தம்பியைப் படிக்க வைக்கணும்னு நான் ஒரு வைராக்கியம் வேறே எடுத்துண்டிருக்கேன். ஊரார் எப்பவுமே நாலு விதமாப் பேசறவங்கதான். பட்டினி கிடந்தா ஏன்னு கேட்க இந்த ஊராருக்குத் துப்பு இருக்கா? அவங்க என்ன பேசினாலும் கேட்க நான் தயாரில்லே..."

"சரி! நான் எனக்குப் பட்டதைச் சொல்லி விட்டேன். அப்புறம் உன் இஷ்டம்" என்று சொல்லி விட்டு வேப்ப மரத்தடியிலிருந்த சிமிண்டு மேடையில் உட்கார்ந்தார் சிற்சபேசன். வழக்கம் போல் கிழக்கே சூரியோதயக் காட்சி கிராமத்துக்கே உரிய அசல் அழகோடு தெரிந்து கொண்டிருந்தது. பட்டு வேகமாகப் பெருக்கத் தொடங்கி யிருந்தாள். சிறிது நேரம் கழித்து வீட்டுக்குள்ளே போவ தற்காக அவர் எழுந்திருந்த போது, பட்டு பெருக்கி முடித்து விட்டு மரத்தடியில் வேப்பம் பழம் பொறுக்கிக் கொண்டி ருந்தாள்.

"இந்த வேப்பம் பழம் தின்கிற கெட்ட பழக்கம் இன்னும் உன்னிடமிருந்து போகவில்லையே? உன் பழக்கமே உலகத்தோட ஒட்டாமே தனியா இருக்கு! எல்லாருக்கும் வாய்க்கு ருசியா ஏதாவது பழம் பிடிக்கும்னா உனக்கு

மட்டும் வாயை நாற அடிக்கிறதுலேயா பிரியம்?" என்று கேலியாகச் சிரித்துக் கொண்டே கேட்டார் சிற்சபேசன்.

"என்ன சார் செய்யறது? சின்ன வயசிலேயிருந்தே எனக்கு இந்தக் கசப்பிலே ஒரு பிரியம்! இந்தப் பழத்தைச் சாப்பிட்டுப் பழகிட்டேன். இந்தப் பழத்திேைட கசப்பிலே ஓர் அசட்டு இனிப்பும் இருக்கு சார்!" என்ருள் நிஷ்களங்கமாகச் சிரித்துக் கொண்டே.

பட்டு சொன்ன வார்த்தைகளை அவள் ஒரே அர்த்தத்தை நினைத்துக் கொண்டுதான் சொல்லியிருக்க முடியும்! ஆனல் சிற்சபேசனுக்கு எத்தனையோ அர்த்தங்கள் அந்த வார்த்தைகளிலிருந்து கிடைத்தன!

"பட்டுவுக்கென்ன? கசப்பாயிருக்கிற எதுவுமே அவளுக்குச் சின்ன வயசிலிருந்து பழக்கம்! பழகினல் கசப்பைப் போல் சுவை வேறே இல்லை" என்று தமக்குள் மெல்ல முணு முணுத்துக் கொண்டார் சிற்சபேசன்.

# 9

# கௌரி

கி. பாலசுப்ரமண்யன்

நாங்கள் வீடு திரும்பியபோது இருள் அடர்ந்து விட்டது. தெருவின் நிசப்தமும் பெருகிய இடைவெளியில் அமைந்திருக்கும் விளக்கேற்றிய வீடுகளும் என்னை மயக்கின. ஆனால் அந்த அழகு மயக்கத்திலே லயித்திருக்க என் மனைவி விடவில்லை. 'சீக்கிரமாக நடங்களேன். மாப்பிள்ளை வந்து காத்துக் கொண்டிருக்கப்போகிறார்' என்று என்னைக் கடிந்து கொண்டாள். ஆனால் வீட்டுக் கதவை நாங்கள்தான் திறக்கவேண்டி யிருந்தது. மாப்பிள்ளையும் பெண்ணும் இன்னும் வரவில்லை.

வீட்டினுள் நுழைந்ததும் பக்கத்து வீட்டு மராத்தியப் பெண் ஒரு கடிதத் துண்டைக் கொண்டு வந்து கொடுத்தாள். அதில் 'கௌரி, திருநெல்வேலி—நாளைக் காலையில் வருகிறேன்.' என்று எழுதியிருந்தது. உடனே என் மனைவி பரபரப்புடன், "நாங்கள் இல்லாதபோது வந்து தேடினளோ?" என்று மராத்தியில் கேட்டாள்.

"ஆமாம்" என்றாள் அந்தப் பெண்.

"தனியாகத்தான் வந்தாளா அல்லது கூட யாரேனும்......"

"இல்லை தனியாகத்தான்" என்று பதில் சொல்லி விட்டுப் போய்விட்டாள்.

எனக்கு வியப்பினால் பேசவே முடியவில்லை. கௌரி—அந்தப் பேதைப் பெண்—இங்கு எப்படி வந்தாள்? தன்னந் தனியாக இந்தப் புறவில் வந்து தேடுகிற அளவுக்குத் தைரியம் வந்துவிட்டதா? இப்படிக் கேள்விமேல் கேள்விகள் என் உள்ளத்தில் எழுந்து கொண்டிருந்தன. வாழ்க்கையிலே எவ்வளவோ பேரைச் சந்திக்கிறோம். சிலருடன் பல நாட்கள் பழகினாலும் கொஞ்ச நாட்கள் பிரிந்து இருந்தால் அவர்கள் நினைவு, 'ஸ்பிரிட்' ஆவியாகி விடுவதைப் போல் மறைந்து விடுகின்றது. சிலருடைய நினைவுகள் வாழ்க்கை முழுவதும் மறக்க முடியாதவாறு மனத்தில் வயிரம் பாய்ந்து விடுகின்றன. கௌரியும் எங்கள் மனத்தில் அப்படித்தான் தங்கிவிட்டாள்.

* * *

பதினாறு ஆண்டுகளுக்கு முன் நான் திருநெல்வேலியில் 'ரெவின்யூ இன்ஸ்பெக்டர்' வேலை பார்த்தேன். திருநெல்வேலிச் சீமையின் தமிழ்ப் பேச்சும், தாமிரபரணியின் தெளிந்த நீரும் இனிமையானவை என்று பலர் சொல்வார்கள். ஆனால் எனக்கோ அனந்தையன் அக்ரஹாரத்தினரின் வாழ்க்கையைப் போல இனிமையானது உலகில் இல்லை என்பது திட்டமான அபிப்ராயம். அந்தத் தெருவில் என்னைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் பரம்பரைப் 'பண்ணையார்கள்'. ஆகவே அறுவடைக்காலம் தவிர மற்றப்போதெல்லாம் அவர்களுக்கு அரட்டைக் காலம். யாராவது ஒருவருடைய வீட்டுத்திண்ணையில் நாள்தோறும் ஒரு மகாநாடு கூடும். ஆங்கிலேய 'வைஸ்ராய்'யின் விநோத சட்டத்தினால் தாமிரபரணியில் தண்ணீர் குறைந்தது? குப்புசாமியின் எட்டாவது குழந்தைக்குக் கையில் ஆறு விரல் இருந்ததனால், அவனது எதிர்காலப் பதவி

என்னும் பல விஷயங்கள் குறித்து 'எழுதாக்கிளவி' களாகப் பல தீர்மானங்கள் நிறைவேறும்.

பிறகு எல்லோரும் யோக நிலையில் அமர்ந்து 'இஸ் பேட்,' 'ஜாக்கி' ஆகிய தெய்வங்களைத் துதிப்பார்கள். பிறகு—'டேய்! அடா' என்று ஏக வசனத்தில் கூச்சல்கள்—எல்லோரும் துண்டை உதறித் தோளில் போட்டுக்கொள்ளுதல்—மகாநாடு கலைதல். நாள்தோறும் நடக்கும் இந்த மகாநாட்டைப் பார்க்கும் போதெல்லாம் "சீ! என்ன 'ரெவின்யு' உத்தியோகம்? மாதத்தில் இருபது நாட்களுக்கு மேல் ஊர் ஊராக அலைவதும் வசூலாகும் பணத்தை நெருப்பைப் போலப் பாதுகாத்து வைத்துக் கொள்வதுமே வாழ்க்கையாக ஆகிவிட்டது. இப்படி ஒரு நாளாவது நான்கு மனிதர்களோடு கலகலப்பாக உறவாட முடிகிறதா?" என்று அலுத்துக் கொள்வேன்.

ஊர் ஊராக அலைந்தாலும் ஓய்ந்து இருக்கும்போது என்னை வாட்டும் தனிமையின் சலிப்புப் பொறுக்க முடியவில்லை. அதைத் தவிர்ப்பதற்காகவே நான் சாம்பசிவ ஐயருடன் தொடர்பு கொண்டேன். சாம்பசிவ ஐயர் பக்கத்து வீட்டுக்காரர் என்ற அளவுக்கு மிகவும் நல்லவர். எந்த விஷயத்தைப் பற்றியும் சளைக்காமல் பேசுவார். ஆனால், எப்போதாவது நான், "இந்த நாற்காலி நன்றாக இருக்கிறது; இல்லையா? நீங்களும் உங்கள் வீட்டில் நாலு நாற்காலி வாங்கிப் போடுங்களேன்", "உங்கள் பிள்ளை வைத்திக்கு ஒரு சைக்கிள் வாங்கிக் கொடுப்பதுதானே. பாவம்! காலேஜுக்கு நடையாக நடக்கிறானே" என்கிற ரீதியில் பேச ஆரம்பித்தால் உடனே "எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கிறது. வரட்டுமா?" என்று கிளம்பிவிடுவார். அவர் போனபிறகு என் மனைவி வந்து என்னிடம், "உங்களுக்குக் கொஞ்சமாவது மனிதர்கள் சுபாவத்தைப் புரிந்து கொள்ளும் புத்தியே கிடையாது. அவருக்கு காசை நழுவ விடுவது என்றால் கையையே நறுக்கிக் கொள்வதுபோல, அந்த மாதிரி மனிதரிடம்போய் இப்படியா செலவுக்கு வழி சொல்வது?" என்று வெறுத்துக் கொள்வாள்.

எனக்குச் சாம்பசிவ ஐயருடைய நடத்தை ஆச்சரிய மாகவே இருந்தது. நிலமும் சொத்தும் குறைவின்றிக் குவித்துள்ள அந்த மனிதர் ஏன் சாயவேட்டியைத் தவிர, வேறு எதையும் விரும்புவதில்லை? அரையணு குறைவாகத் தேங்காய் வாங்குவதற்காக ஊரெல்லாம் அலைவதில் ஏன் தளர்வதில்லை? அந்த மனிதருடைய உள்ளத்தில் ஏதோ இருக்க வேண்டும். "ஒருவேளை வைத்தியை இங்கிலாந்து, அமெரிக்கா என்று வெளிநாட்டுக்குப் படிக்க அனுப்பப் போகிருரோ!" என்று எண்ணினேன்.

ஒரு நாள், "என்ன மாமா, வைத்தியை மேலே என்ன படிக்கச் சொல்வதாக உத்தேசம்" என்று வினவினேன். சாம்பசிவ ஐயரின் முகத்தில் ஒரு திருட்டுப் புன்னகை ஓடியது. "இப்போது தான் காலேஜிலே சேர்ந்திருக்கிருன். பிள்ளையாண்டான் பாஸ் பண்ணின அப்புறம் அவன் பாடு அவன் மாமனுர் பாடு. எனக்கேன் வீண் தலையீடு?" என்ருர். நான் திடுக்கிட்டுப் போனேன்.

"என்ன உங்க பிள்ளைக்குக் கல்யாணமாகி விட்டதா? எனக்குத் தெரியவே தெரியாதே!" என்றேன். பள்ளிக்கூடப் பையன்களின் விஷம புத்தியும், குமரப் பருவத்தின் அலட்சியத் தன்மையும் கலந்த வைத்தியைக் கல்யாணமான மனிதன் என்று நம்பவே முடியவில்லை. "யார் பெண்?" என்று திகைப்பை மறைப்பதற்காகக் கேட்டேன். "எல்லாம் நம்ப பக்கந்தான். கடையத்துப் பண்ணையார் நல்லசாமி ஐயர் பொண்ணு; ஏதோ மஞ்சக்காணி இருக்கு. பதினுலு வயசாகிறது அவளுக்கு—கௌரிக்கு; மாசத்திலே ஒருதரம் இங்கே வருவாளே! நீங்க பார்த்ததில்லையா? ஏன் சார்."

நான் பேசாமலிருந்தேன்; "காலா காலத்தில் கல்யாணம் பண்ணிவிட வேண்டும் குழந்தைகளுக்கு" என்று பொதுவாகச் சொன்ஞர், சாம்பசிவ ஐயர். 'எனது பெண்ணைச் சீக்கிரமாகக் கல்யாணம் பண்ணிக் கொடுப்பதற்காக அப்படிச்சொன்ஞரா, அல்லது தமது செயலுக்குச்

சமாதானம் தேடுவதற்காக அப்படிப் பேசினுரா என்று எனக்குத் தெரியவில்லை.

நான்கு நாட்களுக்குப் பிறகு "மாமாவுக்கு நமஸ்காரம் பண்ணு" என்று சொல்லிய வண்ணம் சாம்பசிவ ஐயர் உள்ளே நுழைந்தார். அவருக்குப் பின்னே ஒரு பெண்—என் மகள் சுமதியை விட சற்றுப் பெரியவளாக இருப்பாள்—மேனி துவள வந்து என்னை வணங்கினுள். வீட்டினுள்ளிருந்து சுமதியும், என் மனைவியும் வந்து கௌரியை அழைத்துக்கொண்டு சென்றுர்கள்.

கௌரியிடம் இன்னும் பேதைப் பருவத்தின் இனம் புரியாத இயல்பு தேங்கிக்கிடந்தது. அவளுடைய முகத்திலும் கண்களிலும் குழந்தையின் ஆர்வம் பொங்கி வழிந்ததே தவிர யுவதியின் மயக்கும் சக்தி அவற்றில் காணப்படவில்லை. மேனி எல்லாம் நகை பூட்டியிருந்தார்கள். அந்த நகைகளும் சரி, கௌரி நாணி நடந்ததும் சரி—எல்லாம் எனக்குப் பருவம் மீறிய சுமையாகத் தான் தென்பட்டன. இந்தச் சின்ன வயதிலே குடும்ப பாரத்தைச் சுமக்கச் செய்து விட்டார்களே என்று எண்ணினேன். ஆனுல் என்னுடைய எண்ணத்திற்குப் பதில் கூறுவது போல அந்தச் சம்பவம் நடந்தது. அப்போது கௌரி எவ்வளவு பெரிய பொறுப்பைத் தாங்கினுள்!

ஒரு ஞாயிற்றுக்கிழமை; காலை பத்து மணி இருக்கும். நான் வீட்டுத் திண்ணையில் அமர்ந்து பத்திரிகை படித்துக்கொண்டிருந்தேன். திடீரென்று தெருவில் சலசலப்பு ஏற்பட்டது. வெளியே எட்டிப் பார்த்தேன். சாம்பசிவ ஐயரின் வீட்டு வாயிலில் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் நாலைந்து ஜவான்களுடன் நின்றுகொண்டிருந்தார். தெருவில் உள்ள "அரை டிக்கெட்டுகள்" எல்லாம் வேடிக்கை பார்ப்பதற்காகக் கூடி நின்றுகொண்டிருந்தன.

"வைத்தியநாதன் என்கிற பையன் இந்த வீட்டில் தானே இருக்கிறுன்?" என்றுர் இன்ஸ்பெக்டர். "ஆமாம்" என்றுர் சாம்பசிவ ஐயர் நடுக்கத்துடன். "நாங்கள் இந்த வீட்டைச் சோதனை போடவேண்டும். இந்த ஊர் காலேஜ்

பிரின்ஸிபாலிடமிருந்து எங்களுக்கு 'ரிபோர்ட்' வந்திருக்கிறது" என்று கூறிய வண்ணம் இன்ஸ்பெக்டர் தமது ஆட்களுடன் உள்ளே நுழைந்துவிட்டார். சாம்பசிவ ஐயருக்கு நா எழவில்லை. வைத்தி பூனைபோல் ஒரு மூலையில் பதுங்கிக் கொண்டிருந்தான்.

போலீஸ்காரர்கள் தேடாத இடமில்லை. நெல் குதிர், பரண், பெட்டிகள் எல்லாவற்றையும் துருவிப் பார்த்து விட்டனர். ஒன்றும் பயனில்லை. கடைசியில் வீட்டின் பின்புறம் இருந்த தவிட்டுப் பானையைக் கிளரத் தொடங்கினர். அதில் கையை விட்டுத் தோண்டத் தோண்ட விதவிதமான கடிகாரங்கள், சில தங்க மோதிரங்கள், மைனர் செயின்கள் எல்லாம் பாற்கடலிலிருந்து பொருள்கள் தோன்றுவது போல் வெளியே வந்தன. நான் அயர்ந்து போனேன்; வைத்தியின் முகம் கன்னிப்போயிருந்தது. இன்ஸ்பெக்டர் என்னையும் வேறு சிலரையும் பஞ்சாயத்தாராக வைத்துக் கொண்டு வழக்குப் பதிவு செய்தார். வைத்தியைக் கைது செய்து அழைத்துக்கொண்டு போனார்கள்.

தெருவில் கதம்பமான பேச்சுக்கள். "சீ! பாவம், வைத்தி சாது......". "ஓகோ சாதுவா! உனக்கென்ன தெரியும் பய பூனை மாதிரி இருக்கானே ஒழிய பலே கைகாரன்."

"காலேஜிலே ஹாஸ்டல் பையன்களெல்லாம் எண்ணெய் தேச்சுக்கறத்துக்கு முன்னே அறையிலே கடிகாரம், மோதிரம் இதெல்லாத்தையும் கழட்டி வைச்சுட்டுப் போவானுக, இவன் தோட்டத்திலே உலாத்தற கணக்கா ஜன்னல் வழியா வாரிண்டு வந்துடுவானுமே."

"அப்பன் கஞ்சனயிருந்தா மகன் களவாணியாத்தான் இருப்பான்!"

'சாம்பசிவ ஐயருக்கு இப்போ கை கரையப் போறது. ஹே! ஹே!' என்று ஒருவர் ஆனந்தப்பட்டார்.

விசாரணை, சாட்சியங்கள் என்னும் சட்டத்தின் சம்பிரதாயச் செயல்களுக்குப் பிறகு வைத்தியை ஜாமீனில் விடுவதற்கு ஆயிரம் ரூபாய் கேட்டார்கள். கௌரிக்கும்

அவள் தகப்பனுருக்கும் செய்தி போயிற்று. இருவரும் இரண்டு மணி நேரத்தில் வந்து சேர்ந்தார்கள். என் மனைவி, கௌரியை அழைத்து வீட்டில் வைத்துக்கொண்டு ஆறுதல் சொல்லத் தொடங்கினாள். நான் சாம்பசிவ ஐயரைப் பார்க்கச் சென்றேன். "மாமா, ஏதோ போதாத காலம்; பையன் புத்தி இப்படித் திரிந்து போய்விட்டது. ஹூம், இனிமேல் நடக்க வேண்டியதைப் பாருங்கள். ஏதோ ஐயாயிரமோ, ஆயிரமோ ஜாமீனைக் கட்டி அழைத்து வாருங்கள். எனக்குத் தெரிஞ்ச வக்கீல் இருக்கார். ஏதோ நம்மால் ஆனதைப் பார்க்கலாம்" என்று அவரிடம் சொன்னேன்.

"அதெல்லாம் பண்ணி வைக்க வேண்டியவாள் அதோ இருக்கா; மாப்பிள்ளை மேலே கொள்ளை ஆசை, இல்லாவிட்டா சிரமத்தைச் சிரமம்னு பார்க்காம கடையத்திலிருந்து ஓடி வருவாளா?" என்று சாம்பசிவ ஐயர், தமது சம்பந்தி நல்லசாமி ஐயரைக் காட்டினார்.

"சே! சே! அப்படிச் சொல்லக்கூடாது. பெத்து வளர்த்த ஓங்க கைக்கு மேலே நான் என் கையை உயர்த்துவதாவது! இந்தக் காரியத்தை நான் பண்ணினு உங்கள் கௌரவம் என்ன ஆகும்?" என்றார் நல்லசாமி ஐயர்.

"என்னது? படிக்க வைத்து வேலை தேடிக் கொடுப்பது என் பொறுப்பு என்கிற பேச்சிலே தானே கல்யாணமே நடந்தது. இப்போ படிப்புக்குத் தடங்கல் வந்ததனுலே நீர்தான் ஐயா ஈடுகொடுக்கணும்." என்று நேரடியாகப் பேசினார் சாம்பசிவ ஐயர்.

"உங்க பையன் இப்படிப்பட்டவன் என்று தெரிந்தால் இந்த சம்பந்தத்துக்கே நான் ஒப்புக்கொண்டிருக்க மாட்டேன்" என்று இரைந்தார் நல்லசாமி ஐயர்.

எனக்கு ஏற்பட்ட வெறுப்பிற்கு அளவே இல்லை. பணத்திற்காக—தங்கள் கஞ்சத்தனத்திற்காக இந்த மனிதர்கள் எப்படிப் புதுப்புது நியாயங்களைக் கற்பிக்கின்றனர்! அந்தப் பேதைப் பெண் கௌரியின் மனம் என்ன பாடுபடும் என்று கொஞ்சமேனும் நினைத்துப் பார்த்தார்களா? நான் வீடு திரும்பியபொழுது ஒரு பரிதாபமான காட்சி தென்பட்டது.

கௌரி தனது நகைகள் எல்லாவற்றையும் கழற்றித் தரையில் வைத்திருந்தாள். அழுதுகொண்டே என் மனைவியிடம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

"மாமி, அப்பா வண்டியில் வரும்போதே சொல்லி விட்டார், 'என்னிடமிருந்து சல்லிக் காசு பெயராது' என்று. 'அவரு'டைய அப்பாவும்கூட ஜாமீன் கட்ட மாட்டேன்னு சொன்னால் நான் என்ன பண்ணுவது." என்னைக் கண்டதும் கௌரி என் முன்னே விழுந்து என் பாதங்களைப் பற்றிக்கொண்டாள். "மாமா, நீங்கள்தான் எனக்கு ஒரு வழி செய்யணும். இதோ, இந்த நகையெல்லாத்தையும் வித்து அவரை அழைத்துக்கொண்டு வரணும். எனக்கு யாருமில்லை; நீங்கதான் உதவணும்" என்று கதறினாள்.

அவளுடைய கண்ணீர் என் பாதத்தை நீராட்டியதுமே என்னுள் ஒரு புதிய சக்தி பிறந்தது. அவளுடைய வேண்டுகோளை நிறைவேற்றுவது என் கடமை என்று தோன்றியது. 'மைனர்' பெண்ணின் நகைகளை விற்பது அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. நான் என்னுடைய செல்வாக்கை எல்லாம் உபயோகிக்க வேண்டி இருந்தது.

வைத்தி ஜாமீனில் வெளியே வந்ததும் கௌரியிடம் பெரிய மாறுதல் ஏற்பட்டது. பெண்கள் வெகு விரைவில் முதிர்ச்சியும் அனுபவமும் பெற்றுவிடுவார்கள் என்பது வெறும் கவிதைப் பேச்சல்ல. தன்னுடைய பிறந்தகத்தையும் புக்ககத்தையும் உதறித் தள்ளினாள்; வைத்தியுடன் தனியாகவே வசிக்கத் தொடங்கி விட்டாள். தன்னுடைய கணவனின் வழக்கை நடத்துவதற்காகத் தன் சக்தி முழுவதையும் உபயோகித்தாள். தையல், சமையல் வேலை இன்னது என்று ஒரு வேலை இல்லை; எல்லாம் செய்து பணத்தைத் தேடினாள். ஆனால் கௌரி பட்ட பாடெல்லாம் வீணாயிற்று. வைத்தியநாதன் ஆறு மாதம் விலங்கு பூணவேண்டித்தான் வந்தது.

அதன் பிறகு நான் சென்னைக்கு மாற்றப்பட்டு விட்டேன். கௌரியிடமிருந்து என் மனைவிக்கு அடிக்கடி கடிதம் வரும். வைத்தியநாதன் சிறையிலிருந்து வெளியே வந்த பிறகு, "கல்லூரிகளிலும் சேர்த்துக் கொள்ள மறுக்கிறார்கள். வேலை கிடைப்பதும் கடினமாக இருக்கிறது" என்று எழுதியிருந்தாள். நான்கு வருடங்களுக்குப் பிறகு எனது பெண் சுமதியின் கல்யாணத்திற்கு கௌரி வந்திருந்தாள். தன்னுடைய மஞ்சள் காணி நிலத்தை விற்று வைத்தியநாதனை ஒரு சைக்கிள் கம்பெனி நடத்துவதற்கு ஏற்பாடு செய்திருப்பதாகவும் தொழில் நன்றாக நடப்பதாகவும் தெரிவித்தாள்.

அதற்குப் பிறகு பத்து வருடங்கள் கடந்துவிட்டன. நானும் என் மனைவியும் புனாவில் எங்கள் பெண்ணுடன் நிரந்தரமாகத் தங்கிவிட்டோம். இங்கு வந்த பிறகு கௌரியிடமிருந்து கடிதம் வருவது நின்று போய்விட்டது. எனக்குக் கௌரியின் நினைவு தோன்றும் போதெல்லாம், "வைத்தியநாதன் ஒரு மூடன்; அவனுக்குக் கௌரியைப் போன்ற மனைவி கிடைத்திருப்பது பூர்வ ஜன்ம பலனைத் தவிர வேறு என்னவாக இருக்க முடியும்?" என்று எனக்குள் சொல்லிக் கொள்வேன்.

* * *

புனா நகரின் காலைப் பனிதான் பிரபலமானதாயிற்றே! மணி ஏழான பிறகும்கூட பனித்துளிகள் நிலத்தில் படிவது நிற்கவில்லை. கேட்டின் இரும்புச் சட்டங்களில் பனித்திவலைகள் அரும்பி, திரண்டு, தரையில் விழும் அழகை ரஸித்துக் கொண்டிருந்தேன்.

"என்ன மாமா! கௌரியைத்தானே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று ஒரு பெண் குரல் கேட்டது. நிமிர்ந்து பார்த்தேன்; கௌரிதான்!

எவ்வளவு மாறி விட்டாள்! பிச்சோடாப் பின்னல், கையில் கடிகாரம், பிளாஸ்டிக் பை வேறு; இவளைப் பார்த்தால் பழைய கௌரி என்று நம்ப முடியுமா?

"வா கௌரி, பனியைக்கூடப் பார்க்காமல் புறப்பட்டு வந்து விட்டாய் போலிருக்கிறதே?" என்று உபசாரம் கூறினேன்.

"செல்லம்! கௌரி வந்து விட்டாள்" என்று என் மனைவியைக் கூப்பிட்டவண்ணம் கௌரியை அழைத்துக் கொண்டு வீட்டினுள் நுழைந்தேன்.

"வா கௌரி! சௌக்கியமா? ஏது இவ்வளவு தூரம்?" என்று வரவேற்றாள் செல்லம்.

"இவதான் கௌரி. நான் சொல்வேனே அடிக்கடி திருநெல்வேலியிலே........" என்று என் பெண் சுமதி தன் கணவனுக்கு அவளை அறிமுகப்படுத்தினாள்.

"வைத்தி எங்கே வரவில்லையா?" என்றேன் நான்.

"ஊஹூம்" என்றாள் கௌரி.

"புனாவுக்கே வரவில்லையா? அல்லது......" என்றாள் செல்லம்.

"ஆமாம். நான் தனியாகத்தான் இங்கே வந்திருக்கிறேன்" கௌரியின் முகத்தில் சோகம் கப்பி விட்டது; "இனிமேல் நான் தனிதான்" என்றாள் கௌரி.

"என்னது?" என்றாள் செல்லம். நான் கௌரியின் நெற்றியைப் பார்த்தேன். அதில் துலங்கிய குங்குமம் விபரீதம் ஒன்றும் ஏற்பட்டு விடவில்லை என்று விளக்கியது.

"என்ன கௌரி, உன்னை........"

"ஆமாம் மாமா ஆமாம். நான் அவருக்கு வேண்டாதவளா போய்விட்டேன். பணம் மனிதர்கள் கையிலே சேர்ந்தால், குணமும் மாறிப்போவது சகஜந்தானே! அவர் பெரிய சைக்கிள் கம்பெனி முதலாளி. அவருடைய பூர்வீக சொத்து வேறே இப்போ வந்து விட்டது. அதனாலே பெரிய இடத்து சம்பந்தம் கிடைக்கிறதுக்குக் கேட்கணுமா? அல்லது என்னைப் போல அப்பா, அம்மா எல்லோரையும் உதறிவிட்டு வந்த துக்கிரிதான் அவருக்குத் தகுந்தவளா?"

"உன்னைத் தள்ள எப்படியடி மனசு வந்தது?" என்று ஆத்திரத்தைக் கொட்டினுள் என் மனைவி.

"மனசு என்ன மாமி, போன வருஷம் எனக்கு இருமல் விடாது ரெண்டு மாசமா இருந்தது. அதைக் கொண்டு 'டி. பி.,ன்னு டாக்டர்களிடம் 'சர்டிபிகேட்' வாங்கினுர். பிறகு தனக்கு வேண்டிய பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டார். நான் என்ன பண்ணுவேன். இங்கே அபலாசிரமத்திலே வேலை தேடிக்கொண்டேன்."

"ஏன் கௌரி, நீ அவன் மேல் கேஸ் போடுவது தானே?" என்று நான் ஆத்திரத்துடன் கேட்டேன். கௌரியின் உதட்டில் ஒரு வறட்டுப் புன்னகை தோன்றி மறைந்தது. "மாமா, உங்களுக்குத் தெரியாதா? அந்த நாளிலே அவர் சிறைக்குப் போகாமல் இருக்கணும் என்று என்ன பாடுபட்டேன். இப்போ நானே இவர் ஜெயிலுக்குப் போவதற்கு வழி செய்யணுமா? அந்த அவமானம் வேறு வேண்டுமா? எப்படியோ அவர் சந்தோஷமாக இருந்தால் சரி."

நான் தலை குனிந்தேன். குனியாமல் இருக்க முடியுமா? பெண்மையின் கம்பீரத்தை மதிக்காத பேதை அல்லவே நான்.

# 10

# கவலை

ஸ்ரீரஞ்சனி

ஒவ்வொரு முதல் தேதியும் மாணிக்கம் கடன் வசூல் செய்ய சிவசங்குவின் ஆபீஸ் வாசலில் ஆஜராகி விடுவார். தம்புச் செட்டித் தெருவில் உள்ள அந்தக் கம்பெனியின் வாசலில் ரஸ்தாவில் நின்றுகொண்டு ஜன்னல் வழியே மாணிக்கம் உள்ளே எட்டிப் பார்ப்பதும், சிவசங்கு தலையை உள்ளே இழுத்துக் கொண்டு 'பைல்' கட்டுகளுக்கிடையே முகத்தைப் புதைத்துக் கொள்வதும், காரியாலய நண்பர்கள் கண்டும் காணுதது போலிருந்து ரசித்த ஒரு கண்ணுமூச்சி விளையாட்டு. பதினைந்து நிமிஷ விளையாட்டிற்குப் பிறகு சிவசங்கு–என்ன இருந்தாலும் கடன் வாங்கியவர்தானே? தோல்வியை ஒப்புக் கொண்டு, எச்சில் துப்பும் வியாஜமாக வெளியே வருவார். அப்புறம் எல்லாம் வழக்கம் போல்! இவர் கெஞ்ச, அவர் மிரட்ட, இவர் தன் குடும்பக் கஷ்டங் களைக் கூறி அழ, அவர் தன் நெருக்கடியைச் சொல்லிக் கெஞ்ச, மறுபடியும் இவர் மிஞ்ச......

மாணிக்கம் இத்தனைக்குப் பிறகு அப்படி ஒன்றும் பிரமா தமாக வசூல் செய்துவிட முடியாது. சிவசங்கு சம்பளம்

என்று ஏதாவது வாங்கினுல்தானே? பணத்தைக் கையால் தொடுவதில்லை யென்ற ரகம்தான். சம்பளப் பட்டியலில் கையெழுத்தை மட்டும் ராயசமாகப் போட்டுவிடுவார். "அதில் ஒன்றும் குறைச்சலில்லை. கையெழுத்து பிரமாதமாக இருக்குன்னுதானே இங்கே வேலையே கொடுத்தான்.' கையெழுத்து சோரு போடுகிறது. தலையெழுத்து இத்தனை மோசமாக இருக்கிறதே! சம்பளத்தில் முக்கால்பங்கு ஆபீசிலேயே ' பிடித்து ' விடுகிருன்! மீதி என்ன, பிச்சைக் காசு.

நான்கு வருஷத்துக்கு முன்னுல் பெண்ணுக்குக் கல்யாணம் செய்துவிட வேண்டுமென்று சிவசங்குவின் மனைவி தலைகீழாய் நின்ருள். அவரும் ஆபீஸ் அலைச்சலுக்கு நடுவே ஓடி, ஆடி அலைந்து எவனே ஒருவனை மாப்பிள்ளை என்று பிடித்து வந்து கொட்டு மேளம் கொட்டி கல்யாணத்தை முடித்து விட்டார். அதற்கென்று பிராவிடண்டு பணத்தில் கடன் வாங்கியாகிவிட்டது. கடன் வாங்கின அந்த இரண்டாயிரம் ரூபாயை வாங்கிக்கொண்டு பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்ட புண்ணியவான், அந்தக் கடன் கால்வாசி அடை படுவதற்குள்ளேயே கண்ணை மூடிவிட்டு, சிவசங்குவின் பெண்ணை சிவசங்கு வீட்டுக்கே அனுப்பி வைத்துவிட்டான். கல்யாணச் செலவினுல், பின்னுல் பெண்ணை வளர்க்கும் செலவு குறையும் என்று புள்ளிக் கணக்குப் போட்டுப் பார்த்து ஆசைக் கோட்டை கட்டிய சிவசங்கு இந்த நிகழ்ச்சியால் அசந்துவிட வில்லை. இம்மாதிரி சோதனைகள் எல்லாமே தன்னைப் போன்றவர்களுக்காகவே யன்றி பின் வேறு யாருக்காகவாம்? அவர் அப்படித்தான் எண்ணினுர்.

பெண்ணைப் பற்றி இரண்டாவது முறை கவலைப்படத் தொடங்கிய போது, சம்பளத்தில் வெட்டு விழ ஆரம்பித்து விட்டது. கடனை அடைக்காவிட்டால், கம்பெனிக்காரன் விட்டு விடுவானு? அதை முதலில் பிடித்துக் கொண்டு மீதியைத்தானே தருகிருன்! இந்த அமளிக்கு நடுவே சிவசங்குவின் மனைவிக்கு உடற்கோளாறு வந்து சேர்ந்தது. பசிக்கும்; சாப்பிட்டால் ஜீரணமாகாது; சாப்பிட முடியாது.

சாப்பிடாமலிருக்கவும் முடியாது. கூடவே பெண்ணைப் பற்றிய ஏக்கம்! வைத்தியம் வேண்டாமென்று அந்த அம்மாள் கண்டித்துச் சொன்னாள். ஆனால் ஊரறியத் தன் சுக துக்கங்களில் பங்கெடுக்கச் சம்மதித்த அவளை, அந்த நிலையில் வைத்திய உதவியில்லாமல் விட்டால் அந்தப் பாபம் தன்னைச் சும்மா விடாது என்ற பயம் உண்டு சிவசங்குவுக்கு. பணத்தைப் பணமென்று பாராமல் செலவிட்டார். அதுவும் கடன்தான். செலவழித்த பணம் முழுவதையும் ஒரு பண முடிப்பாகக் கட்டி, யமனிடம் லஞ்சமாகக் கொடுத்திருந்தால் ஒருவேளை அவன் அந்த அம்மாளை விட்டுவிட்டுப் போயிருப்பானோ என்னவோ? அந்த மருந்துப் புட்டிகளும் இஞ்செக்ஷன் குப்பிகளும் மட்டும் மசியாமல் சிவசங்குவின் உழைத்த காசையும், உற்சாகத்தையும் விழுங்கி ஏப்பம் விட்டதோடு திருப்தியடையாமல், அவரது மனைவிளக்கின் உயிரையே குடித்துவிட்டுத்தான் ஓய்ந்தன.

அழ வேண்டிய தெம்பும் உணர்ச்சியும் கூட இல்லை சிவசங்குவுக்கு. அவருக்கு ஒரே கவலை! எத்தனை கடன் வாங்கினோம், எப்படி அடைப்போம் என்று. அவருக்கு எத்தனை வருஷ சர்வீஸ் பாக்கி, மாதம் எவ்வளவு 'பிடிக்க' வேண்டும் என்று கணக்கிடத்தான் ஆபீசிலேயே ஐந்நூறு ரூபாய் சம்பளத்தில் ஒருவர் கோட்டும், சூட்டுமாக இருக்கிறாரே, ஆகவே அந்தப் பிரச்னையும் சிவசங்குவுக்கு எழவில்லை.

நூற்றைம்பது ரூபாய்க்குக் கையெழுத்துப் போட்டு விட்டு ஐம்பது ரூபாயுடனும், நாற்பது ரூபாயுடனும் வீடு திரும்பும் துணிச்சலும், அந்த ரூபாய்க்குள் வாழ்க்கையை ஓட்டி விடுகிறோம் என்ற நம்பிக்கையும் அவருக்கு இருந்தது. அதுவும் வேடிக்கைதான்! வீட்டில் உப்பு இல்லை, புளி இல்லை என்று வாயைத் திறந்து சொல்ல மாட்டாள் அவரது உடன் பிறந்த தங்கை—அதுவும் ஒரு நாதியற்றது தான்! அண்ணனிடம் சொல்லி அவரைக் கலங்க அடிப்பானேன் என்று பச்சாத்தாபத்தில், தானே மளிகைக் கடையிலும், செக்குமேட்டிலும் கடன் சொல்லி, சாமான் வாங்கி வந்து குடித்தனம் நடத்தினாள். அண்ணனுக்கு நன்மை

செய்வதாக எண்ணி அவள் செய்தது அந்த அண்ணனுக்குத் தெரியவே தெரியாது. நாற்பது ரூபாயில் மூன்று, நான்கு ஜீவன்களும் வாழ்கிறோமென்று சிவசங்கு நம்பியது அவரது குற்றமில்லை. அவரது தங்கையின் குற்றமுமல்லதான்!

ஏதோ ஒரு நாள் பைக்ராப்ட்ஸ் ரோடில், மளிகைக்கடை மாணிக்கம், வழிமறித்துக் கேட்டபோதுதான் சிவசங்குவுக்கு 'தான் ஒரு கடனாளி, மாணிக்கத்திடமும்' என்ற விஷயம் தெரிய வந்தது! தெரிந்தவுடன் விடுவிடென்று வீட்டுக்குப் போய்—இரைச்சல் போட்டார் மகளிடமும், தங்கையிடமும். வேறு என்ன செய்து விட முடியும்? கடனையா அடைக்கப் போகிறார்!

"எல்லாம் உங்களுக்காகத்தானே அண்ணா? உங்களுக்கு இருக்கிற கவலையிலே இத்தையும் வேறே சொல்லணுமான்னுதான்......" என்று புதுமையான சமாதானம் ஒன்று சொல்லி பிலாக்கணம் வைத்தாள் தங்கை.

'பொங்கிப் போட்டுக் கொண்டிருக்கும் புண்ணியவதியைக் கோபித்துத்தான் என்ன லாபம்? நம்ம பெண்ணுக்கும் உலக அனுபவம் கிடையாது. உலகத்திலே மனுஷின்னு தலைகாட்டற முன்னே தான் கதவை அறைஞ்சு சாத்திட்டாங்களே. உம்...உம்...'

இரண்டு கையாலும் நெற்றிப் பொட்டை அமுக்கி விட்டுக் கொண்டார் சிவசங்கு. ரொம்ப இதமாக இருந்தது. மாணிக்கம் அன்று தெருவில் கேட்டதோடு நின்றுவிடவில்லை. கடனைக் கொடுத்துவிட்டு, நடையாக நடப்பதற்கோ, சால்ஜாப்பு சமாதானங்களைக் கேட்டுக் கொண்டு திரும்பவோ சலித்துக் கொள்ள முடியுமா? பார்த்த இடத்திலெல்லாம் சிவசங்குவிடம் பாக்கியைக் கேட்டுத் 'தொந்தரவு' செய்தார். அவரை சமாதானப்படுத்த—பணத்தைத் தருவது தவிர வேறு வழியேயில்லை. ஆகவே சம்பளம் வாங்கும் தேதியன்று இரவு எட்டு மணிவரை ஆபீசிலேயே உட்கார்ந்திருந்து விட்டு, ஊரடங்கியபின் திருடனைப் போல வீட்டுக்குள் நுழைவார் சிவசங்கு. மாணிக்கத்திடம் முதல்

தேதி தப்ப வேறு வழி? இரண்டாம் தேதியோ, பின்னரோ வந்தால் கையில் பணமில்லை என்று—உண்மையை தைரியமாகச் சொல்லி விடலாமல்லவா?

இந்தச் சூழ்ச்சியைக் கண்டு கொண்டார் மாணிக்கம். 'சிங்கத்தை குகையிலேயே பிடிக்கவேண்டும்' என்று சிவசங்குவின் ஆபீசை முற்றுகையிடத் தொடங்கினார். இரண்டு, ஒன்று, அரை கால்—கிடைத்தவரை லாபம்தானே என்று வசூலிப்பார். குருவி மூக்கால் சேர்ப்பது போல மாணிக்கம் தன் கடனை சுயமுயற்சியால் அடைத்துக் கொண்டிருந்தார்! அப்பேர்ப்பட்ட புண்ணியவான்—

"இந்த மொதத்தேதி அலுவலா ஆம்பூர் வரையிலெ போறேன். ஊரிலே இருக்க மாட்டேன். வர பத்து நாள் மேலே ஆகும். காரியம் முடியறதைப் பொறுத்து...ஆகையாலே உம்மைத் தொந்தரவு செய்ய மாட்டேன். அடுத்த முதத் தேதி ஸப்ஜாடா தீத்துடணும்" என்று எச்சரிக்கை விடுத்தபோது அது எச்சரிக்கையாகவே தோன்றவில்லை சிவசங்குவுக்கு. ஒரு பெரிய 'வரம்' அளிக்கப்பட்டதாகவே தோன்றியது. ஒரு முதல் தேதிக்கு அவருக்கு மன்னிப்பு! எத்தனை பெரிய விஷயம். அதுவும் அந்த—வரப் போகிற—முதல் தேதி...

* * *

முந்தைய மாதமே ஆபீஸ் கடன் அநேகமாக அடைபட்டு முடிந்து விட்டது. வேதனைக்குப் பின் பெற்றுப் போட்டுவிட்ட தாய் போல கடைசித்தவணை செலுத்திய நிம்மதியில் சிவசங்கு திளைத்திருந்தார். 'வெளியிலிருந்த கடன்களிலும் ஓரளவு தீர்த்தாகி விட்டது. கடன் அடையவும் ரிடயராகவும் சரியாகத் தானிருக்கிறது. கையிலே வர்ர பணம் கொஞ்ச நஞ்சம் கடனை அடைக்கப் போதும். ராஜாளி மாதிரி வட்டம் போடுகிற ஆட்களிடம் தப்ப முடியுமா? சில்லறைக் கடன்தான் கொஞ்சம் 'நின்று' போய்விட்டது. பெட்டிக் கடைக்காரனிடம் முப்பத்தைந்து ரூபாய் வரை ஏறிவிட்டது. ஸ்வீட், காரம் சாப்பிடாமல், பூவன்பழம், ரஸ்தாளிப் பழம் உரித்துப் போட்டே இப்படி

இதுக்கு மேல் நாம் சாப்பிட்டால், செலவு நம்மையே சாப்பிட்டு, ஏப்பம் விட்டிருக்கும். 'பங்க்' நாயரும் நம்ம மொகத்துக்காக விரட்டாமல் இருக்கான். வேறொருத்தனா யிருந்தா, மேத்துண்டை யல்ல பிடுங்குவான். நாமும் மரியாதையைக் காப்பாத்தணும், இந்த மாசம் அவனுக்கு ஒரு பத்து ரூபாத்தாளாவது கண்ணிலே காட்டணும். நாளை மறுநாள் அவன் கடைக்குப் போகவாணுமா?

'உடன் பிறந்தபிறப்பு எனக்கென்று உழைச்சு ஓடாய்த் தேயுது. அதற்கு ஒரு புடவையாவது வாங்கவேண்டும். அவளுடைய மகள்-அந்தக் குஞ்சுக்கு, பட்டுப் பாவாடை யில்லாவிட்டாலும், கொஞ்சம் சுமாரான துணியிலாவது தைக்கணும். நமக்கும்...கோட்டில் இருக்கும் கிழிசலில், ஆள் என்ன, ஆனையே புகுந்து புறப்படலாம் போல இருக்கு. உடம்பை மூட பனியன், பனியன் கந்தலை மறைக்க சட்டை, அந்தச் சட்டையோட பவிசு, தெரியாம மூட கோட்டு போட்டால், அது பெரிசா பல்லை இளிக்கிறது! ஒரு நல்ல கோட்டு, அட இனிமே கோட் எதுக்கு? அடெண்டர் கிருஷ்ணன் போடுறானே அந்தத் துணியிலே ஜோரா ஒரு சட்டை தைச்சு...அது இல்லாட்டியும், நல்ல பனியனாவது இரண்டோ, ஒண்ணோ வாங்கித்தான் ஆகணும்.

'நமக்கும் நேரங்கெட்ட நேரத்திலே இருமலும் இளைப்பும். அதுக்கு ஏதாவது மருந்து மாயம் தின்னுத் தான் தேவலை. திடீர்னு நாம மண்டையைப் போட்டுத் தொலைச்சா, வீட்டிலிருக்கிற படைங்க பரதேசிக் கோலம் போடவேண்டி வந்துடும். முடிஞ்ச வரை உடம்பைக் காப் பாத்தி, உடம்பைத் தேச்சுச் சம்பாதிக்கவேண்டியது தான். சுவரை வச்சுத்தானே சித்திரம் எழுதணும். நம்ம ஆயுர் வேத டாக்டர் சர்மாகிட்டயாவது, கோட்டைத்தெரு பண்டிதர் கிட்டயாவது லேகியமோ ஏதோ வாங்கி முழுங்க வேண்டியதுதான். இத்தினி நாள் சம்பாதிச்சுக் கொட் டிட்டு, நமக்குன்னு ஒரு பத்து ரூபா செலவழிக்க என்ன? உழைச்சு உழைச்சு ஊரான் கிட்ட கொடுக்கத்தானே சரியா யிருந்தது. இந்த முதல் தேதி நமக்குன்னு கட்டாயமா

ஒரு பத்து ரூபா எடுத்துக்க வேண்டியதுதான். எடுத்துக் கத்தான் போறேன். யாரு நம்மைக் கேக்கறது ?

'கேட்க உரிமையிருந்தவளே என்னை வாயைத் திறந்து கேட்டதில்லே! அட! அவள் போய் மூன்று வருஷமாயி டுத்தா? நாளைத்தானே பௌர்ணமி? இன்னும் இரண்டு நாளிலே திதிகூட வந்திடுமே! இந்தத் தடவை அவ மனசு குளிர நல்லாவே ஏதாவது செய்யணும். அவ மனசு குளிர்ந் தாத்தான் இங்கே இருக்கிறவங்க நல்லா வாழலாம். குடும்ப நன்மைக்காகவாவது அந்தப் பத்து ரூபா செலவு செய்து தான் ஆகணும்.

'அப்படி இப்படி கணக்குப் போட்டுப் பார்த்தா, கையில் இருக்கிற ரூபாய் அத்தனைக்கு மல்லவா செலவு வருகிறது! அட, அப்படி வந்தாத்தான் என்ன? இத்தனை நாள் சம்பாதிச்சுக் கடன்காரன் மடியிலே கொட்டியாச்சு. இந்தத் தடவை வாயிதா தள்ளிப்போட்டானே புண்ணிய வான். இந்த ரூபாயை நமக்காகவும், நம்ம குடும்பத்துக் காகவும்தான் செலவழிச்சிடுவமே! செலவும், செலவழிக்கிற ஆசையும் பிரமாதமாய்த்தானிருக்கு.

யோசித்துக் கொண்டே வந்த சிவசங்கு, சைனுபஜாரில் அந்தப் பெட்டிக் கடை வாசலில் நின்று வெறித்துப் பார்த் தார். கோட் பையைத் தடவிப் பார்த்தார். சம்பளத்தில் முக்கால் பகுதி-நியாயமான பிடித்தங்கள் போக மீதி-அப் படியே அங்கே இருந்தது. பர்சைக் கையிலெடுத்தார். காசை எடுத்து அலட்சியமாக வீசி ஒரு சிகரெட் வாங்கினுர். பரம்பரையாக சிகரெட் பிடிக்கும் பாணியில், வலக்கையால் சிகரெட்டைப் பிடித்து, இடக்கை உள்ளங்கையில் வைத்து நாசூக்காகத் தட்டினுர். சிறிது நேரம் கையில் வைத்து உருட்டினுர். பின்னர் அதைப் பற்ற வைத்துக்கொண்டு, ஒய்யாரமாக சைனுபஜார் கும்பலில் நெளிந்து, புகுந்து ஹைகோர்ட் கடற்கரையை நோக்கி நடந்தார்.

வெண் மணலில் உட்கார்ந்து கொண்டதும், பழையபடி அவரது பிரச்னைகள் பெரும் பூதங்களாக அவர் மனக் கண் முன் தாண்டவமாடத் தொடங்கின.

'பணமில்லாத போதுதான் இந்த எழவு பிரச்னைகள் தொல்லை கொடுத்தன. பணம் கையில் வந்தும், எப்படிச் செலவு செய்வதென்று மறுபடியும் குழப்பமா? நல்ல வேடிக்கையடா இது!'

எதிரே பால்கோவா விற்றுக் கொண்டு ஒருவன் வந்து கொண்டிருந்தான். பழையபடி சிவசங்கு சிந்தனையில் லயித்தார்.

'வீட்டில் தகப்பனில்லாத அந்தக் குழந்தை ஒன்று மூன்று நான்கு வருஷமாய் இருக்கிறதே! ஒரு நாளாவது அதன் கையிலே இந்தா என்று ஒரு இனிப்புப் பண்டம் வாங்கித் தந்திருக்கிறோமா? ஒவ்வொரு வேளைச் சாப்பாடும் தான் விருந்துபட்ட பாடு படுகிறது. அதுவுமில்லாமல் வீட்டிலே இனிக்கப் பேசி எத்தனையோ நாளாயிட்டுதே! திங்கறது எங்கே? பாவம், குழந்தை. நம்ம கஷ்டத்துக்காக அதுக்கு ஒன்றும் செய்யாமலிருந்தோமே. சே! இன்றைக்கு இரண்டு பொட்டலமாவது வாங்கி விடுவது. சம்பளப் பணத்திலே நம்ம செலவில் முதற் செலவுதான் இப்படி ஒரு நல்ல செலவா யிருக்கட்டுமே!'

செலவுப் பிரச்னையைச் சமாளிக்க சுபமான ஆரம்பம் செய்யும் திருப்தியுடன், மனநிறைவுடன் கோட் பைக்குள் கைவிட்டார் சிவசங்கு. கையை அவர் வெளியே எடுக்கவே யில்லை.

கையை வெளியே எடுத்தால், பர்ஸ் பையில்—அது இருந்த இடத்தில்—இல்லை என்ற பயங்கரத்தைக் கண்ணால் பார்க்க வேண்டி யிருக்குமே! சமுத்திரத்தில் நான் சிந்திய கண்ணீர் எங்கே என்று தேட முடியுமா? இடிந்துபோய் நின்ற சிவசங்குவுக்கு என்ன செய்வது, என்ன கேட்பது என்று எதுவும் புரியவேயில்லை. மயக்கம் வந்த நிலையில் மணலில் படுத்து விட்டார்!

இனி அவருக்குக் கவலையில்லை. பணத்தை எப்படிச் செலவு செய்வது என்று மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொள்ள வேண்டிய அவசியமே இல்லை. அந்த அவசிய மில்லாமல் சைனா பஜாரிலேயே ஒரு தேர்ந்த கரம் சிவசங்குவின் பிரச்னைகளை ஒரு தினுசாகத் தீர்த்து விட்டது!

# 11

# அன்னை

சரோஜா ராமமூர்த்தி

சுள்ளிக் கத்தையை 'மளுக் மளுக்' கென்று முறித்து வைத்து ஊதாங் குழலினுல் 'சுர்'ரென்று அடுப்பை ஊதி விட்டாள் செல்வி. அடுப்பின் மீது இருந்த சோற்றுப் பானையில் அரிசி 'தள தள'வென்று கொதிக்க ஆரம்பித்தது. குடிசையின் மூலையில் முடங்கிக் கிடந்தான் துரை என்கிற அவள் மூத்த மகன். இளைய பையன் கதிர்வேலு மட்டும் மிகவும் விழிப்பாகத் தாயின் எதிரில் சோற்றுக் கிண்ணத்துடன் சாப்பாட்டுக்காகக் காத்திருந்தான்.

செல்வி சோற்றை வடித்து நிமிர்த்தியதும் பக்கத்தில் இருந்த அகலமான சட்டியில் அதைக் கொட்டினுள். தும்பைப் பூவைப் போல சோறு 'பல பல' வென்று அதில் கொட்டியது.

"அம்மா! பசிக்குது" என்ருன் கதிர்வேலு.

"பசிக்குதா? பசிக்கும் பசிக்கும். இரண்டணு வடையையும் அண்ணனுக்குக் கொடுக்காம துண்ணே பாரு, பசிக்கும்டா பயமவனே. என்னத்தைக் கடிச்சிப்பே சோத்துக்கு?"

"ஏன் கொழம்பு வக்கலே?" கதிர்வேலு அதிகாரத்துடன் கேட்டான் தாயைப் பார்த்து.

"கேப்பேடா! ஏன் கேக்க மாட்டே? உங்க அப்பன் வச்சுட்டுப் போனுன் பாரு வீடும், காணியும்! நீ கேக்க மாட்டே! சீ...எழுந்திருச்சிப் போயி ஒரணுவுக்கு ஒடச்ச கடலே, பச்சை மிளகா வாங்கிட்டு வா, போ. தொவையல் அரெச்சு தண்ணி ஊத்திச் சோறு போடுறேன்." சுருக்குப் பையை அவிழ்த்து வெற்றிலே, புகையிலேச் சருகுடன் உறவாடிக்கொண்டு முடங்கிக் கிடந்த ஓரணுவை எடுத்துக் கதிர்வேலுவிடம் கொடுத்தாள் செல்வி.

கதிர்வேலு கடைக்கு ஓடியவுடன் செல்வி துரை படுத்திருந்த இடத்துக்குச் சென்று, அவன் அருகில் உட்கார்ந்தாள். பிறகு மெதுவான குரலில், "ராசா, எழுந்திரு! சோறு திங்க வாடா கண்ணு" என்று கூப்பிட்டாள்.

துரைக்குத் தாயை ஏறிட்டுப் பார்க்கவே பிடிக்கவில்லே. அவள் தன்னே ஒப்புக்காக 'ராசா, கண்ணு' என்றெல்லாம் அழைப்பதாக நினேத்தான். பிறந்த சில நாட்களில் நோயாளி ஆகிவிட்ட அவனே எல்லோரும் வெறுக்கிருர்கள் என்பது அவன் தீர்மானம்.

"மொண்டிப் பையன்டோய்......!" துரைக்குப் பெயரே அதுதான். காலும், கையும் கோணிக்கொண்டு, சுரைக்காய் வயிறும், வற்றிய முகமுமாக அவன் குடிசை மூலேயில் பதுங்கியே தன் நாட்களே விரட்டிக் கொண்டிருந்தான்.

செல்வி அவனுக்காக அழுது தீர்த்து ஓய்ந்து விட்டாள். 'அப்பன் ஒழுங்கானவனுக இருந்தால்தானே பிறந்தது சரியாக இருக்கும்? அவன் கெட்டலேஞ்சவன்தானே' என்று இறந்துபோன கணவனே ஓயாமல் சபித்துக்கொண்டே இருந்தாள் அவள். வாழைக் குருத்துப்போல் தளதள வென்று இருக்கும் கதிர்வேலுவைப் பார்க்கும்போதெல்லாம், அவள் பெருமையுடன் தன்னேயே பார்த்துக்கொண்டாள்.

ஆனுல், மொண்டிப் பையன் துரையின் இதயம் தங்கமாகவும், ராசாப்பையன் கதிர்வேலுவின் இதயம் வேம்பா

கவும் இருந்த விந்தையை அவள் நினைத்து நினைத்து வியந்தாள்.

துரை முக்கி முனகிக்கொண்டே எழுந்திருந்து அடுப் படிக்கு நொண்டிக்கொண்டே வந்து உட்கார்ந்தான். செல்வி, குடிசைக் கூரையில் ஒளித்து வைத்திருந்த பொட்டலத்தை அவிழ்த்து இரண்டு வடைகளை அவன் முன்பு வைத்துவிட்டு, கிண்ணத்தில் சோறு போட்டு தண்ணீர் ஊற்றினாள்.

துரை இரண்டு வாய் அள்ளிச் சாப்பிட்டிருக்க மாட்டான். கதிர்வேலு கடையிலிருந்து ஓடி வந்தான். துரை ஒவ்வொரு வாய் சோற்றுக்கும், வடையைக் கடித்துக் கொண்டு சாப்பிடுவதைக் கவனித்தான். அவனுக்கு ஆத் திரம் பற்றிக்கொண்டு வந்தது.

"யம்மோவ்......உனக்கு அவன்தானே ஒசத்தியாப் பூட்டான்?" என்று செல்வியைப் பார்த்துக் கத்தினான்.

"நீ மத்தியானம் துண்ணலையாடா நாலு வடை? இதுக்குப் போய்க் கத்துறயே?" என்று செல்வி கேட்கவும், "ஆமாமாம்......இந்த மொண்டிப்பயதானே உனக்குச் சம்பாதிச்சி வாரியாருன்? நான் எண்ணெய்க் கடையிலே தினம் நாலு அணு சம்பாதிக்கிறது ஒனக்கு தெரியுதா?" என்று பதிலுக்குக் கேட்டான் கதிர்வேலு.

துரைக்கு என்ன தோன்றியதோ? கலத்துச் சோற்றை நகர்த்தி விட்டுப் போய்ப் படுத்தவன்தான். அப்புறம் அவன் ஒரு வாரம் வரையில் கண் விழிக்கவில்லை. உலகத் தவரின் சுடு சொற்களுக்கு ஆளாகாமல் அவன் கண்ணை மூடிக்கொண்டபோது, செல்வி அலறிய அலறல் அந்த வட்டாரத்தையே சோகத்தில் ஆழ்த்தியது.

அதன் பிறகு கதிர்வேலுவிடம் அவள் பாசம் படிப் படியாக வற்ற ஆரம்பித்தது.

"பய மவனே! கூடப் பொறந்தவனை முழுங்கிப் போட் டியேடா பாவி" என்று அடிக்கடி கூறி அவனை ஏசிக்

கொண்டிருந்தாள். மொண்டிப் பையனுக இருந்தாலும் துரைக்கு அவளிடம் அலாதியான பாசம் இருந்தது. எத்தனை நாட்கள் தாயிடம், தன் கை கால்கள் சரியாகி விட்டால் மூட்டை தூக்கியாவது அவளைக் காப்பாற்றி விடுவதாகக் கூறி இருக்கிருன்!

கதிர்வேலுவின் குணம் அப்படி அல்ல. எண்ணெய்க் கடையில் சம்பாதிக்கும் காசை நாளடைவில் செலவழித்து விட்டு, வெறுங்கையுடன் வந்து வீட்டில் நிற்பான். சில நாட்களில் வேலைக்கே போகமாட்டான்.

செல்லிக்கும் அந்த வாழ்க்கை அலுத்து வந்தது. காலையில் எழுந்தவுடன் ஐயர் வீட்டுக்குப் போய் சாணம் தெளிப்பதிலிருந்து, பத்து மணிக்கு அவர்கள் வீட்டுக் குழந்தையைப் பள்ளியில் கொண்டுவிட்டு வரும்வரை இடுப்பு நிமிர வேலை இருந்துகொண்டே இருக்கும். பகல் வேளைகளில் அரசமரத்தடியில் ஒரே விதமான வம்புப் பேச்சுகள். மறுபடியும் பகல் இரண்டு மணியிலிருந்து மாலை ஐந்துவரை ஐயர் வீட்டு வேலை; இரவு இருக்கவே இருக்கிறது தாய்க்கும் மகனுக்கும் நடக்கும் தினப்படி சண்டை சச்சரவு.

"அடியே செல்லி! நீ ரொம்பக் கெட்டுப் பூட்டே. அந்தக் கொயந்தையைக் கண்டா ஆவல்லே, உனக்கு" என்று செல்லியின் நாத்தி, கதிர்வேலுவுக்காகப் பரிந்து கொண்டு வந்தாள்.

"தே......நீ சும்மாக் கெட? உனக்கென்ன தெரியும்? அவன் காலணு கொடுத்து மாசம் ஒண்ணுவுது. தண்டச் சோறு போட அவன் அப்பன் சேத்து வச்சுட்டா போயி ருக்கான்?"

"என்னடி சொன்னே மூதேவி, எங்க அண்ணனைப் பத்தி?" என்று நாத்தி பிலு பிலுவென்று செல்லியைப் பிடித்துக் கொண்டாள்.

சண்டை ஓய்ந்ததும் கதிர்வேலுவை அத்தைக்காரி தன் குடிசைக்கு இழுத்துக்கொண்டு போய்விட்டாள். அவள்

பிள்ளையில்லாதவள். அண்ணன் மகனைப் பார்த்து ஆளாக்கி ஆதரவு தேடிக்கொள்ள முனைந்திருக்கலாம்.

தன்னந் தனியாகக் குடிசையில் உட்கார்ந்திருந்தாள் செல்லி. அன்று அடுப்பு பற்ற வைக்கவில்லை அவள். துக்கம் தீருமட்டும் அழுது தீர்த்தாள். கடைசியாகப் பானைத் தண்ணியை மொண்டு குடித்துவிட்டு குடிசைக்கு வெளியே வந்தபோது வானத்தில் கிருஷ்ணபட்சத்து ஆரும் நாள் நிலவு பூத்துவிட்டது. அந்த வட்டாரத்து மக்கள் எல்லோரும் தத்தம் குடிசை வாயிலில் படுத்து விட்டார்கள். செல்லி முழங்காலைக் கட்டியபடி வெளியே உட்கார்ந் திருந்தாள்.

சற்றுத் தொலைவில் இருந்த வேப்பமரத்தின் அடியில் முக்காடிட்ட உருவம் ஒன்று நின்றிருப்பதைக் கண்ட செல்லி அப்படியொன்றும் பயந்து விடவில்லை. எலும்பும் தோலுமாக இருந்த தன் கணவனைப் பார்த்துப் பார்த்து உறுதி அடைந்தவள் அவள். மறுபடியும் உற்றுப் பார்த்தாள் அந்த உருவத்தை. உருவம் நகர்ந்து நகர்ந்து வந்தது.

" இந்தாப்பா ! இங்கே வா......நீ யாரு ?" என்று கேட் டாள் செல்லி.

அந்த ஆள் பேசாமல் நின்றான்.

" நீ யாருன்னு கேக்கறேனே ! மரமாட்டம் நிக்கறியே, சொல்லேம்பா."

" நான் ராசப்பன் " என்று முணு முணுத்தான் அவன். செல்லி சிரித்து விட்டாள்.

" இந்தாய்யா ! நான் ராசப்பன்னு சொல்லிட்டா எல்லாம் புரிஞ்சிடுமா ?"

"கொஞ்சம் சோறு இருந்தாப் போடேன்—" கேட்ட தற்குப் பதில் கூறாமல் வேறு ஏதோ கேட்டு வைத்தான் அவன். செல்லி குடிசைக்குள் அணைந்து கிடந்த காடா விளக்கை ஏற்றினாள். பழையதுப் பானையில் கை விட்டுப் பார்த்தாள். சோறு 'நொச நொச' வென்று இருந்தது.

உப்பிட்டுப் பிசைந்து அவன் கையில் உருட்டி உருட்டிப் போட்டாள். கடித்துக் கொள்ள கருவாட்டுத் துண்டுதான்.

"சோறு என்னவோ வாடை வீசுது. கண்டம் நல்லாருக்குது பொண்ணே......" என்றான் ராசப்பன். செல்வி அவனை முறைத்துப் பார்த்தாள்.

"பொண்ணாமே பொண்ணு! இன்னும் கொஞ்சம் போனால் கண்ணும்பான்......?"

இருவரும் வெளியே வந்தார்கள். மங்கிய ஒளியில் செல்வி அவனை நன்றாகக் கவனித்தாள். கரணை கரணையாக வலுவேறிய கைகால்கள். புசுபுசுவென்று வளர்ந்திருந்த தாடி மீசை. ஆள் நன்றாக இருந்தான்.

அவன் செல்வியைக் கவனித்தான்.

அள்ளிச் செருகிட்ட கருங் கூந்தல் முத்துப்பல் வரிசை மின்ன வாளிப்பான பெண்ணாகத்தான் இருந்தாள் அவள். கழுத்து வெறிச்சென்று கிடந்தது.

தாலிக் கயிறு! அதைத்தான் காணோம். அவனுக்குப், புரிந்து விட்டது அவள் விதவை என்று.

வேப்பமரம் தாலாட்டுப் பாட, ராசப்பன் மேல் துண்டை விரித்துப் படுத்தான். கனவிலே ஒரே செல்வி மயம் தான்!

கோழி கூவும்போது செல்வி கண் விழித்தாள். விழித்தவள் வேப்பமரத்தடியைத் திரும்பிப் பார்த்தாள். ராசப்பன் மேல் துண்டை உதறி முண்டாசு கட்டிக்கொண்டிருந்தான். புது ஆள் ஒருவன் வந்திருப்பதை வட்டாரத்தினர் அனைவரும் பார்த்தார்கள். யாரோ பிழைக்க வந்தவன் என்று அவரவர் வழியே போய்விட்டார்கள்.

செல்வி, ஐயர் வீட்டுக்குப் போய் விட்டாள். கதிர்வேலு எண்ணெய்க் கடைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான்.

"ஏண்டா! பகல் சோத்துக்கு ஊட்டுக்கு வருவியா. இல்லை, உங்க அத்தை ஊட்டிலே போய்ப் பூந்துக்குவியா?" என்று கேட்டாள் செல்வி.

"ஆமாமாம்......ஒன் வீட்டிலே எனக்கென்ன வேலை இனிமே? போ......போ......" என்று கூறிவிட்டுப் போய் விட்டான் கதிர்வேலு.

ஒரு விநாடி செல்லி அதிர்ந்துதான் போனாள். 'பெத்த பிள்ளையே எப்படிப் பேசுது பாரு' என்று நினைத்துப் பெருமூச்செறிந்தவாறு, நடையைக் கட்டினாள் அவள்.

பகல் பன்னிரண்டு மணி வரையிலும் அவளுக்கு ஐயர் வீட்டிலே வேலை இருந்தது.

தினம் பகலில் செல்லி அடுப்பு பற்ற வைப்பதில்லை. அன்று ஐயர் அம்மாளிடம் ஒரு ரூபாய் கடன் வாங்கி, அரிசி, புளி, உப்பு வாங்கி வந்திருந்தாள். ஐந்து பலம் உருளைக் கிழங்கு வேறு.

கால்படி அரிசியைக் கழுவி அரித்துப் பானையில் இட்டு உலை ஏற்றிவிட்டு, உருளைக்கிழங்கை வேக வைத்து இறக்கினாள். அம்மியில் மிளகாய்க் கூட்டு அரைத்துக் கிழங்கில் பிசிறி மொரு மொருவென்று எண்ணெய் ஊற்றி வதக்கினாள். பூண்டு ரசம் வேறு கமகமவென்று மூக்கைத் துளைத்தது.

சமையல் முடிந்ததும் செல்லி தெருவில் சென்று பார்த்தாள்.

கதிர்வேலு வந்தான்.

"அம்மா! சோறாக்கி வச்சிட்டியா?" என்று ஆவலுடன் கேட்டான் பையன்.

"உம்... உம்...தொரக்கி சோறு வேணுமாமே சோறு! நேத்தி போய் உன் அத்தைகிட்டே பூந்துக்கினியேடா பயலே. அங்கேயே போடா..." சொல்லிக்கொண்டே கீழே கிடந்த குச்சி ஒன்றை எடுத்தாள் அவனை அடிக்க. கதிர்வேலு கண்ணைக் கசக்கிக் கொண்டு அத்தை வீட்டுக்குள் நுழைந்தான்.

தொலைவிலே முண்டாசு கட்டிய உருவம் வந்துகொண்டிருந்தது. அவன்தான், ராசப்பன்தான் என்று முணு முணுத்தாள் செல்லி. ராசப்பன் வந்து விட்டான். கந்தல்

துணியில் வேர்க்கடலை, வாழை நாரில் கோத்த ஒரு சீப்பு வாழைப் பழங்கள், அப்புறம் வெற்றிலை, புகையிலை எல்லாம் வாங்கி வந்திருந்தான்.

"என்னாத்துக்கு இம்புட்டு?" என்று கேட்டாள் செல்லி.

"ஒனக்குத்தான் செல்லி" என்று சிரித்தான் ராசப்பன்.

"இந்தா! இப்படி இருந்தியானா இங்கே உன்னைக் கட்டையாலே அடிப்பாங்க—" என்று கூறிச் சிரித்தாள் அவள்.

அவர்களின் நட்பு வளர்ந்தது. ராசப்பன் வந்து மூன்று அமாவாசைகள் போய் பௌர்ணமி வந்து கொண்டிருந்தது. அண்டை அசலில் கசமசவென்று பேசிக்கொண்டார்கள். சின்னச் சின்ன குழந்தைகள்கூட செல்லியை ஒரு தினுசாகப் பார்த்தன.

அன்று ராசப்பன் மாம்பழம் வாங்கி வந்தான். செல்லிக்கு அதைப் பார்த்ததும் நொண்டிப் பையன் நினைவு வந்தது. ஒரு நாள் மாம்பழத்துக்காக எத்தனை தரம் அவன் அழுதிருக்கிறான்? அப்படி வாங்கிக் கொடுத்தாலும் இந்தக் கதிர்வேலுப் பையன் அவனைத் திங்க விட்டானா?

"ஏன்னா! அப்படிப் பாக்குறே பயத்தை!" என்று கேட்டான் ராசப்பன்.

"ஒண்ணுமில்லே!"

"சும்மாச் சொல்லு......"

"இறந்து விட்டானே எம் பையன் ஒருத்தன், அவனை நெனச்சுக் கிட்டேன்—" செல்லி கண்ணீரைச் சுண்டி எறிந்துவிட்டு எழுந்து விளக்கேற்றினாள்.

"இப்பத்தான் இன்னொருத்தன் இருக்கிறானே, அவனைக் கூப்பிட்டு பயம் ஒன்னு கொடேன், திங்கறான்..."

"அதுவா? நீ வந்த அப்புறம் அது இந்த வூட்டுலே காலடி எடுத்து வச்சுப் பாத்தியா நீ?......"

"ஏன்?"

"ஏனு? அவன் கேக்குறுன் கண்டபடி என்னை......"

"கேக்காம இருப்பானு பின்னே! பேசாமே நீ இந்த எடத்தை விட்டுக் கிளம்பு......"

செல்லிக்கும் அது தேவலை என்றுதான் பட்டது. நாலு பேர் பழிக்க, பெற்ற மகன் தூற்ற அங்கிருப்பதைவிட, வெளியில் போய்விடுவதும் நல்லதுதானே?

அன்றிரவு நிலவு உச்சியில் வரும்போது ராசப்பன் பின்னுல் செல்லி, புடவையைச் சுருட்டிக்கொண்டு கிளம்பி விட்டாள். வேப்ப மரத்து நிழலில் படுத்திருந்த கதிர்வேலு வின் காலடியில் சிறிது நின்றுள் அவள். பத்து மாதம் சுமந்து பெற்று பத்து வயசு வளர்த்தவள் ஆயிற்றே! சொட்டு சொட்டு என்று கண்ணீர்த் துளிகள் அவன் மேல் விழுந்தன.

"கதிர்வேலு! நீ மாத்திரம் என்னை வெறுக்காம இருந் தியானு நான் ஏண்டா போப் போறேன்..." இவ்விதம் மனம் அலற, ராசப்பன் பின்னுடி நடந்து விட்டாள் அவள்.

அடுத்த நாள் காலையில் செல்லி ஓடிவிட்ட செய்தியைக் கதிர்வேலு அமைதியுடன் தாங்கிக் கொண்டான். அவள் அத்தைக்காரி மட்டும் ஒரு பாட்டம் இரைந்து விட்டு ஓய்ந் தாள்.

காலச் சக்கரத்தின் சுழற்சியில் அகப்பட்டு நசுங்கும் மனிதர்களில் இவர்கள் மட்டும் எம்மாத்திரம்? வாலிபனுன ராசப்பனுக்கும், நடுத்தர வயதைக் கடந்த செல்லிக்கும் சில வருஷங்களுக்கு அப்புறம் உடல், மனுேநிலை எதிலும் ஒத்துக் கொள்ள வில்லை. அள்ளிச் செருகிட்ட கூந்தல் செம்பட்டையாய்க் காற்றில் பறக்க, முன் பற்கள் இரண்டு தேய்ந்து விழுந்து விட, செல்லி கூனிக் குறுகி வண்டலூர் சாலை ஓரத்தில் இருந்த குடிசை வாசலில் உட்கார்ந்திருந் தாள். கால்கள் சூம்பிக் கிடந்தன. மூங்கில் குச்சிகளைப் போல் கைகள் சதைப் பிடிப்பற்றுக் காணப்பட்டன.

இப்போது அவள் உள்ளத்தில் ஓயாமல் ஒரு குரல் ஒலித்துக் கொண்டிருந்தது.

'கதிர்வேலு!' பார்த்து எத்தனை வருஷங்கள் ஆயின? பத்து வருஷங்கள்! எப்படி இருக்கிருனே? உடற் கட்டும் வனப்பும் கொண்ட வாலிபன் ஒருவனைக் கற்பனை செய்து பார்த்தாள் செல்லி. கதிர்வேலு எங்காவது வேலையில் இருப்பான். கல்யாணம் கூடக் கட்டிப்பான். அப்புறம் குஞ்சும் குளுவானுமாகக் குழந்தைகள் பிறக்கும்.

அவளுடைய பேரப் பிள்ளைகள், 'ஆயா' என்று அவள் தோள்களிலும், மடியிலும் விழுந்து புரளவேண்டிய குழந்தைகள்.

ஆனால், இந்த அறிவு, சிந்திக்கும் திறன் அப்பொழுது எங்கே போயிற்று? உடம்பிலே தெம்பிருந்தது; உலகத்தை எதிர்த்துக் கொண்டு புறப்பட்டு விட்டாள் அன்று.

'அவன் மேலும்தான் தப்பு. ஒரு நாளாவது அவன் என்னை அம்மான்னு ஆசையாக் கூப்பிட்டிருப்பானு? கூடப் பொறந்தவனைக் காணுமக் கரிச்சுக் கொட்டினுன். அவன் போனப்புறம் என்னைக் கண்டா ஆகலை. அன்பு ஒட்ட வேண்டிய வயசிலே ஒட்டவில்லை.'

வாயில் இருந்த வெற்றிலைச் சக்கையைத் தூவென்று துப்பிவிட்டுச் சாலையைப் பார்த்தாள்.

சாலை ஓரம் ஜீப்பு வண்டி ஒன்று வந்து நின்றது. அவள் வேலை செய்து வந்த ஐயரும் அந்த வீட்டு அம்மாளும் வண்டியை விட்டுக் கீழே இறங்கி வந்தார்கள்.

எதிர்பாராத சந்திப்புதான்!

"செல்லியாடி?" என்று கேட்டாள் அந்த அம்மாள்.

"நீங்களா அம்மா?" என்று குமுறிக் குமுறி அழுதாள் செல்லி.

பத்து வருஷங்களில் தேக்கி வைத்திருந்த துயரமனைத்தும் கரைந்து போவது போல் கண்ணீர் பெருகியது.

"தே...ஏன் அழுவறே? வந்தவங்களோட நாலு பேச்சுப் பேசாம..." என்று அங்கிருந்தவர்கள் அதட்டினார்கள்.

"யம்மா, ராஜாமணி எப்படி இருக்குது? பெரிய ஆம்புளை ஆயிடுச்சா?" என்று கேட்டாள் செல்வி அழுகையை நிறுத்தியவாறு.

"பெரியவனாகத்தான் ஆயிருக்கான். பம்பாயிலே படிக்கிறான். லீவுக்கு வருவான் செல்வி. நீ ஏன் இப்படி ஆயிட்டே?"

செல்வி விரக்தியாகச் சிரித்தாள். கூனிக் குறுகிக் கொண்டு பக்கத்தில் கிடந்த மூங்கில் கம்பினால் முருங்கைக் கிளைகளைத் தட்டித் தட்டிக் காய் பறித்தாள்.

"ஐயருக்கு சாம்பார் வச்சுப் போடுயம்மாவ்......" என்று கட்டு முருங்கைக் காய்களை அம்மாளிடம் நீட்டினாள்.

"செல்வி! உன் மகன் பெரிய ஆளா வளந்துட்டான். மாசம் நாப்பது ஐம்பது சம்பாதிக்கறான். சோடா கலர் வண்டி ஓட்டுகிறான்......"

செல்வியின் பார்வை அந்தப் பெரிய சாலையை வெறித்துப் பார்த்தது.

"அவனை வரச் சொல்லவா?" என்று கேட்டாள் அம்மாள்.

"வாணும் அம்மா........"

ஜீப் போய் விட்டது.

அந்த அம்மாளிடம் வேண்டாம் என்று சொன்னாலும் அவளுக்குள் ஒரு நப்பாசை தோன்றி விட்டது. 'நான் இருக்கிற இடம் இப்போ தெரிஞ்சிருக்கும். கதிர்வேலு வருவான்?' தினம் இப்படிச் சொல்லிக்கொண்டு குடிசை வாசலில் கிழக்கே சூரியன் உதித்ததிலிருந்து, மேற்கே சென்று மறையும் வரையில் உட்கார்ந்து கிடப்பாள் செல்வி.

ராசப்பனைக் கவனிக்க இப்பொழுது வேறொருத்தி வந்து விட்டாள். செல்வி செய்த ஏற்பாடுதான் அது. 'நான்

பாட்டுக்கு குந்தி இருப்பேன். இனிமே உன் சங்காத்தமே வேணும்...' என்று ராசப்பனிடம் கூறி, அந்தப் புதியவளிடம் அவனை ஒப்படைத்து விட்டாள். ராசப்பன் ஏதோ ஒரு நியாயத்துக்கும், ஆணைக்கும் கட்டுப்பட்டவனைப் போல் செல்லியை அனுதாபத்துடன் கவனித்துக் கொண்டான். அறத்துக்குப் புறம்பாக அமைந்துவிட்ட அவர்கள் வாழ்க்கையில், மனிதப் பண்புகள் காணப்பட்டன.

ஒரு நாள் சாலையில் வந்து நின்ற பஸ்ஸிலிருந்து ஒரு வாலிபன் இறங்கினான். கையிலே பெரிய மூட்டை: கூர்ந்து கவனித்துக் கொண்டே வந்தவன், கூனிக் குறுகி உட்கார்ந்திருந்த செல்லியைக் கவனித்து விட்டான். பத்து வருஷங்களின் பிரிவு அவன் மனத்திலிருந்து தாயின் முகத்தை அடியோடு அழித்து விடவில்லை.

"யம்மோவ்" என்று அலறியவன் அப்படியே அவளைக் கட்டிக்கொண்டு கதறினான். அவன் ஒவ்வொரு நரம்பிலும் ஓடும் ரத்தம் பொங்கித் தணிந்தது. தசை நார்கள் கிடு கிடுவென்று நடுங்கின. என்னதான் இருந்தாலும், அவள் அவனுடைய தாய் அல்லவா?

"கண்ணு! என் ராசா!" என்று கூச்சல் போட்ட செல்லி அவன் முகத்தைத் தடவித் தடவிப் பார்த்தாள்; வேதனை பொங்கச் சிரித்தாள்; பைத்தியம் போல் குதித்தாள். கதிர்வேலு மூட்டையைப் பிரித்தான். புளியஞ்சோறு, மசால்வடை, லட்டு, பூந்தி என்று பலகாரங்களில் நாகரிகமும், அநாகரிகமும் கலந்த மூட்டை அது.

"துண்ணு அம்மா... உனக்குத்தாம்மா......"

"நீ துண்ணுடா ராசா?"

"நீ துண்ணு அம்மா..."

தாயும், மகனும் உண்டார்கள். மகனுக்குக் குருமாக் குழம்பும், புலவும் ஆக்கிப் படைத்தாள் அன்னை. கண்ணீர் பிழிய விடை கொடுத்து அனுப்பினாள். அவனைத் தன்னுடன் வைத்துக்கொள்ள அவளுக்கு ஆசைதான்.

"அவனை ஒருத்தி கட்டிக்கோணும். அவன் குடியும் குடித்தனமும் ஆகோணும். இங்கே இருந்தா ஒழுங்கான வாழ்க்கை அமையுமா?"

கதிர்வேலு கிளம்பி விட்டான்.

அதன் பிறகு செல்லிக்கு ராசப்பனைக் கண்டால் வெறுப்பு வளர்ந்தது. 'என்னையும், எம் புள்ளையையும் பிரிச்ச பாவிப்பய' என்று அவனை ஏசினாள்.

அவள் ஏச்சுக்களைப் பொறுத்துக் கொண்டான் ராசப்பன்.

"நான் அங்கே போயி அவனைப் பாக்கணும்" என்று ஆசைப்பட்டாள் அவள்.

"தே...பைத்தியம்! சும்மாக்கிட! கல்லைப்போட்டு உன் மண்டையை நசுக்கிப் போடுவாங்க..." என்றான் ராசப்பன்.

"எம்மவன் அவங்களைச் சும்மா விடமாட்டான்" என்று சவால் விடுத்தாள் அவள்.

"அதையும்தான் பாக்கப் போறியே..." என்று வெறுப்புடன் கூறிவிட்டு வேலைக்குப் போய் விட்டான் ராசப்பன்.

அவன் சென்றதும் செல்லி அண்டை அயல் மூலமாகப் பணம் கொடுத்து பழங்கள் வாங்கினாள். பலகாரங்கள் வாங்கினாள். மூட்டை கட்டிக் கொண்டு பஸ் ஏறி, பழைய ஊருக்கு வந்து சேர்ந்தாள்.

அங்கேதான் எத்தனை மாறுதல்?

வேம்புலி அம்மன் கோவில் மண்டபத்தில் உட்கார்ந்து, தெரிந்தவர்கள் யாராவது வருகிறார்களா என்று பார்த்தாள். சொல்லி வைத்தாற்போல் அவள் நாத்திதான் வந்தாள்.

"ம்மே பூங்காவனம்!" என்று அழைத்தாள் செல்லி. அது அவள் செவியில் பேய்க் குரலாக ஒலித்திருக்க வேண்டும். விக்கித்து மண்டபத்தைப் பார்த்தாள் பூங்காவனம். அப்புறம் ஊரே கூடி விட்டது அவளைப் பார்க்க.

" எங்கே வந்தே?" என்று எல்லோரும் கேட்டார்கள்.

" எம் மவனைப் பார்க்க" என்றாள் செல்வி.

" அடி சக்கை! இவ மகனாமே?..."

" ஏன்? அவன் என் மகன் இல்லையா? நான் பத்து மாசம் சுமந்து பெத்த மகன்தானே?"

" பெத்தே! பெருமையைப் பாரு பெருமையை! ஓடு காலிக்குப் பெருமை வேறே!"

சோடா வண்டி இழுத்துக்கொண்டு வந்த கதிர்வேலு கூட்டத்தைப் பார்த்து வண்டியை நிறுத்தி விட்டு வந்தான்.

" வாடா அப்பா! உன் ஆத்தாக்காரி வந்திருக்கா பாரு, உறவு கொண்டாடிக்கிட்டு" என்று வரவேற்றாள் அத்தைக்காரி.

" கண்ணு! என் ராசா, இங்கே வாடா மவனே!" என்று அழைத்தாள் செல்வி.

" நீ ஏன் இங்கே வந்தே? உன்னை யார் கூப்பிட்டாங்க?" என்று கத்தினான் கதிர்வேலு.

அன்று 'யம்மோவ்' என்று அலறியவன்தான் இன்று இப்படிப் பேசினான்.

" ஏண்டா கண்ணு அப்படிக் கேக்குறே? உன்னைப் பார்க்கத்தாண்டா வந்தேன்."

" பாக்க வந்தியா? பாத்தாச்சுல்லே, போ...பின்னே..."

கதிர்வேலு எரிந்து விழுந்தான்.

செல்வி ஏறிட்டுப் பார்த்தாள் அவனை.

" யப்போவ்......இந்த மண்டபத்துலே பொங்கித் தின்னுக்கிட்டு விழுந்து கிடக்கிறேண்டா மவனே. சாகிற காலத்துலே உம் மூஞ்சியைப் பாத்துக்கிட்டே சாவ ஆசையா இருக்குடா......"

"என்ன சொன்னே? உன் வாடை அடிச்சாக்கூட எனக்கு யாரும் பொண் தரமாட்டாங்க. பேசாம நடையைக் கட்டு......"

கூடியிருந்தவர்கள் கொல்லென்று சிரித்தார்கள்.

அன்று தனிமையில் தாயை அன்புடன் அரவணைத்த கதிர்வேலுவுக்கும், இந்தக் கதிர்வேலுவுக்கும் எத்தனை வேற்றுமை!

வானம் இருண்டு கிடந்தது. செல்வி அந்தப் பெரிய தெற்குச் சாலையில் நடந்து சென்றாள். பாவம், அப்புறம் அந்த அன்னை என்ன ஆனாளோ?

# 12

# சிதைந்த கூடு

—வாசவன்

*சிந்தாமணி பொய்யாகி விட்டாள்!*

நேற்றுவரை எல்லா நிஜங்களுக்கும் நிஜமாக இருந்து, இன்று எல்லாப் பொய்களுக்கும் பொய்யாகிப் போனவள் ஊர்க் கோயில் மூன்றடிக் குழியிலே உறங்குகிருள். என் நெஞ்சில் மண்ணை அள்ளிப்போட்ட அந்தச் சண்டாளியை நானும் வஞ்சம் தீர்த்துக்கொண்டேன் மூன்று பிடி மண்ணை அந்தக் கழுதையின் நெஞ்சில் வாரி இறைத்தேன். ஆனல் அது மண்ணு? இல்லை. என் கண்களிலிருந்து திரண்ட வெம்பனித்திரள். வெயிலில் வெடித்து விடுகிற வெறும் பனித்துளிகூட அல்ல அது. என் நெஞ்சைக் கிழித்துப் புறப்பட்ட உதிரப் பெருக்கு!

“கொடுத்து வைத்தது மண்ணோடு போய்விட்டது. மனம் கலங்கி ஆவது என்ன? வாருங்கள் போகலாம்!” என்று உயிரோடு உறைத்துவிட்ட என் கைகளைப் பிடித்திழுத்தார் மேலவீட்டுப் பரமசிவம் பிள்ளை. அவர் குரலில் ஈரம் இல்லை; ஓர் உயிர் மலர் எந்த லட்சியத்துக்காக மலர்ந்

ததோ, அந்த லட்சியம் நிறைவேறுவதற்கு முன்னமேயே அது கருகி உதிர்ந்து விட்டதே என்ற அனுதாபம் இல்லை. வெறும் உபசாரணைப் பேச்சுக்களால் பிறரின் துக்கத்தில் கலந்து கொள்கிற எத்தனையோ சம்பிரதாய மனிதர்களில் அவரும் ஒருவர்.

என்னைச் சூழ்ந்திருந்த அத்தனை பேரும் மலட்டு மனம் உள்ளவர்கள். போகப் பறந்தார்கள். ஐயோ, என் குழந்தையின் பஞ்சு உடலிலே மண்ணை வெட்டிப் போடுகிறானே வெட்டியான்! பொறுப்பாளா என் செல்வம்? பெற்றவன் அருகிருக்க, பிறந்த மகள் மண்ணோடு புதைகிறாளே! அதோ அவள் கால்கள் மறைகின்றன. நான் ஆசையோடு முந்தா நாள் பட்டுக்கயிறு பூட்டிய அந்த இடுப்பிலே மண் விழுந்து விட்டது. என் இதயமான அந்த நெஞ்சில் இரக்கமின்றி மண்ணை வெட்டிப் போடுகிறானே வெட்டியான்!

''அடே, கொலைகாரா! என் குழந்தை ரொம்பச்சாதுடா. ஏண்டா அவளைப் புதைக்கிறாய்? ஐயோ, என் மகளைக் குழியிலிருந்து எடுத்து என்னிடம் கொடுத்துவிடு—கொடுக்க மாட்டாயா? உன்னையே அந்தக் குழியில் வைத்துப் புதைக்கிறேன் பார்!''

வெட்டியானை நோக்கி ஓடிய என்னைப் பிடித்து இழுத்துக்கொண்டு போயிற்று அனுதாபம் காட்ட வந்த அரக்கர் கூட்டம்.

நேற்று அவளை உயிரோடு சுமந்தேன்; சற்று நேரத்துக்கு முன்பு அவளைப் பிணமாக்கிச் சுமந்தேன். இப்பொழுது என்னையே பிணமாக்கிச் சுமந்து கொண்டு போகிறேன்.

இந்தப் பிணத்தைக் குளத்தில் கொண்டுபோய்த் தள்ளினார்கள். மூழ்கி எழுந்தவுடன் விழுந்து பிடுங்கும் வேதனைக்கு இரையாக உயிர்ப்படைந்தேன்.

நீரில் அலை அடுக்குகளில் இரண்டு கொடிக்கால்களின் சலங்கை கலகலத்தது.

''அப்பா!''

உருவம் இல்லை. வெறும் குரல்! அலை பேசுமா? இல்லை. இல்லை! அந்தக் குரலைப் புரிந்துகொள்ள எனக்கு உருவம் வேண்டாம். என்னில் ஒரு கிளையான என் அருமைச் சிந்தாமணிதான் என்னை அழைக்கிறாள்.

ஒரு வாரத்துக்கு முன்பு இப்படித்தான் நான் இந்தக் குளத்தில் குளித்துக் கொண்டிருந்தேன். பிடிவாதமாக வம்படி செய்த சிந்தாமணியைப் படித்துறையில் உட்கார வைத்திருந்தேன். தினசரி நான் குளத்துக்கு வரும்போதெல்லாம் முரண்டுபண்ணி என்னுடன் புறப்பட்டுவிடுவது அவளுடைய இரண்டாவது வயதில் ஏற்பட்ட ஒரு பழக்கம்.

அப்பொழுதும் 'அப்பா' என்றுதான் அவள் கூப்பிட்டாள், இதே குரலில் ஒலித்த ஆர்வத்துடன்.

திரும்பிப் பார்த்தேன். சிந்தாமணி நீரில் இறங்கி வந்துகொண்டிருந்தாள். "அப்பா! அந்த அலையிலே ஒண்ணைப் பிடிச்சு எனக்கு வௌயாடக் குடுக்கிறியா?" அலைகளில் கையைத் துழாவிக்கொண்டே கழுத்தளவு நீருக்கு வந்து விட்டாள்.

நான் பாய்ந்தோடி அவள் கன்னத்தில் இரண்டு கொடுத்து உச்சிப் படிக்கட்டில் கொண்டுபோய் வைத்து, "சாக இருந்தாயே, பிணமே!" என்று பற்களைக் கடித்தேன்.

அவள் அழுது கதற வேண்டுமே! சாதாரண மனித உணர்வுகளில் என்னைப் போன்றவர்கள் சிக்கித் தடுமாற, உணர்வுகளைக் கடந்து நிற்கும் ஒரு சுபாவம் இந்த நான்கு வயதுப் பிஞ்சுக்கு எப்படி வந்தது? என்னுடைய கோபம் எவ்வளவு அசட்டுத்தனம் என்பதை நிரூபிப்பவள் போலச் சிரித்தாள். "உனக்கு வேணுங்கிற பணத்தை ஆபீஸிலே போய்க் கொண்டுக்கிட்டு வர்றியே, அந்தைப்போலே எனக்கு வேணும்கிற அலையை நான் கொண்டுக்கிட்டு வரணும்னு ஆசைப்பட்டது தப்பா? அப்போ, நீயும் ஆபீஸுக்குப் போய்ச் சாகும் பிணம்தானா?"

அவள் வயதுக்கேற்ற கேள்வியா அது? என் அறிவுக்குப் புலப்படாத கேள்வியும் கூடத்தான் அது! ஒவ்

வொருவரும் செத்ததற்குப் பிறகு சாவதில்லை. வாழும்போதே சாகிறார்கள்; சாகும்போதே வாழ்கிறார்கள். இது புதிர் போலத் தோன்றினாலும் விளங்கிக்கொள்ளக்கூடிய வேதனைக்குரிய ஓர் உண்மைதான். ஒவ்வொருவருக்கும் சாவுக்காகக் கணிக்கப்பட்ட காலத்தில் சென்று மறையும் ஒவ்வொரு விநாடியிலும் செத்து, வரவிருக்கிற ஒவ்வொரு விநாடியிலும் செத்துக்கொண்டே இருக்கிறார்கள். நம்முடைய வாழ்நாளைக் குறுக்கிக்கொண்டு வரும் சாவுக் காலத்தை வாழ்க்கை என்று நம்பி ஏமாறுகிறோம்.

இதைக் கூறிவிட்டாளே என் கண்மணி!

அவளை உச்சி மோந்து உள்ளம் குளிர வேண்டியவன், அப்பொழுது கண்டிப்புள்ள ஒரு தந்தையாகத்தான் நடந்து கொண்டேன். அவளைக் கொண்டாடினால் குளிர் விட்டுப் போய் மீண்டும் தண்ணீரில் இறங்கிவிட்டால்?

"பேசாதே!" என்று அதட்டி விட்டு மீண்டும் என் குளியலைத் தொடங்கினேன்.

"அப்போ என்னைப் பேசாதேன்னு வாயிலே அடிச்சாய், இப்போதாவது பேசலாமா?" என் குழந்தை அண்டாத ஆழத்தில் இறங்கி, என்னை நெருங்கிக் கேட்கிறாள்.

இப்பொழுது நான் அறை கொடுப்பதற்கு அவள் கன்னம் இல்லை. என் ஊமை உள்ளத்தின் உருப்படியான கருவியாக இருந்த வாய்கூட அடைத்து விட்டது.

"அப்பா! 'அலை' என்கிற பொய்யைப் பிடிக்க ஆசைப் பட்ட என்னை அன்னிக்கு அறைஞ்சியே, நீ மட்டும் எப்படி இருக்கியாம்? உனக்கும் எத்தனை ஆசை? ஆபீஸிலே உத்தியோகம் உயரணும், அம்மாவுக்கு அம்பாரமா நகை போடணும், பெரிய மாடி வீடு கட்டணும் என்கிற ஆசைகளிலே நீ அகப்பட்டுத் தவிக்கிறியே, இதுக்கு விடுதலை வேணும்? இப்போப் பாரேன். நானும் இல்லை; ஆசையும் இல்லை; ஆழமும் இல்லை; அலையும் இல்லை......"

"சிந்தாமணி......!" நீரைக் கலக்கியது என் அலறல்.

சீறிப் புரண்டன அலைகள். சுழி சுழியாய், நீளம் நீளமாய், திட்டுத் திட்டாய், நுரை நுரையாய்ப் பிரிந்து விரிந்து, சரிந்து, மறைந்து விட்டாளா சிந்தாமணி?

"சிந்தாமணி, சிந்தாமணி......"

"ஆழமும் இல்லை; அலையும் இல்லை......"

இரு கரங்களையும் நீரைப் பிளக்கும் கத்திகளாக்கி நீந்திச் சென்று கொண்டிருந்த என்னை, பரமசிவம் பிள்ளை இழுத்துக் கரை சேர்த்தார்.

"நாலும் படித்த நீங்களே துக்கத்தைத் தாளாவிட்டால் என்னைப் போன்றவர்களின் உபசாரம் எதற்காகும்? வாருங்கள், வீட்டுக்குப் போகலாம்" பரமசிவம் பிள்ளை கரையோடு என்னை விடவில்லை. என்னை என் வீட்டுக்கு நகர்த்தி அழைத்துச் சென்றுகொண்டிருந்தார்.

பரமசிவம் பிள்ளை சொன்ன நான் படித்த நான்கும் மிக மிக அற்பமானவை. அறிவின் அகங்காரத்தைப் பூதமாகக் கிளப்பி விட்டிருந்த அவை, துக்கத்தின் அதிர்ந்த ஒவ்வொரு சிறு மூச்சிலும் ஒடுங்கிப் புகைகின்றன. சிந்தாமணி எதைப் படித்து அறிவு பெற்றாள்? இதய ரகசியத்தின் ஆழத்தில் புதைந்து கிடக்கும் அறிவு என்னும் எருமையை எந்த ஒரு சக்தியின் மூலம் துள்ளிக் குதித்தோட வைத்தாள்?

எனக்குத் தெரியாது; சத்தியமாகவே தெரியாது.

இளங் காலைப் பனியின் கனவில் குளித்த மலரின் அற்பப் புன்னகையைப்போல் மறைந்தோடி விட்டாள் சிந்தாமணி. 'அற்பப் புன்னகை' என்று பெரிய மனிதத்தனம் நாடகம் ஆடும் என் அறிவின் பொய்த் திரைக்குப் பின்னே ஓர் உண்மையான தோற்றம் நன்றாகத் தெரிகிறது. சிந்தாமணி சின்னஞ் சிறு வாழ்க்கையை நடத்தி, 'காலம்' என்னும் கவிஞனின் நிரந்தரக் கவிதையாக உலவிக்கொண்டிருக்கிறாள். நான், நான்...மங்கிய சிந்தனைகளில் மாய்ந்துருகும் ஓர் அனுதாபத்துக்குரிய மனித ஜந்து.

"நானும் இல்லை; ஆசையும் இல்லை..."—சிந்தாமணியின் குரல் தொலைதூரத்துச் சோக கீதமாக என் மனத்தை வளைத்துக் கொள்ளுகிறது.

"தம்பீ! காலைக் கழுவிக் கொள்ளுங்கள்."

நான் என் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தேன். பரமசிவம் பிள்ளை செம்பை என்னிடம் நீட்டிக் கொண்டிருந்தார். அவர் உள்ளத்தோடு கலக்காவிட்டாலும், சம்பிரதாயங்களில் அழகாகக் கலந்து கொள்ளத் தெரிந்த எங்கள் தெருப் பிரமுகர். அவருக்குப் பசியைவிடச் சம்பிரதாயம் முக்கியம். மற்றவர்களுக்குப் பிறர் துக்கத்தைவிடப் பசி முக்கியம். வெறும் வயிற்று வாழ்க்கை வாழும் அந்தக் கூட்டம் என்னைக் குளத்தில் விட்டு விட்டுப் பிரிந்து விட்டது.

மயானத்துக்குப் போய் வந்தவர்கள், காலைக் கழுவிக் கொள்ளவேண்டும் என்ற சம்பிரதாயத்தைப் பரவசிவம் பிள்ளையைப் போன்ற யாரோ ஒருவர்தான் கொண்டு வந்திருக்கவேண்டும். மனத்திலிருந்த துக்கத்தைக் கழுவக் காலில் தண்ணீர் ஊற்றிக் கொண்டால் போதுமா?

நான் கட்டையாக நின்றேன். பரமசிவம் பிள்ளையே என்னுடைய காலில் தண்ணீரை ஊற்றி விட்டார்.

"வாருங்கள், உள்ளே போகலாம்."

அவர் 'உள்ளே' என்று சொன்ன என் வீட்டுக்குள் நேற்றுவரை எனக்கென்று எத்தனையோ அபிலாஷைகளும், இளங்கதிரில் மின்னும் பனி முத்தைக் கையில் எடுக்க விரும்பிய பைத்தியக்காரக் குணங்களும் இருந்ததுண்டு. இப்பொழுது அங்கே என் சிந்தாமணி இல்லை. பாசத்தைத் தழுவிப் படர்ந்த பைத்தியக்காரத்தனமும் இல்லை. எனக்கு உள்ளே என்ன வேலை?

வேலையைக் கருதியே தொடங்கும் வாழ்க்கையின் பிரயாணம் என் காலடியில் அயர்ந்து தூங்கி விட்டதா?

பரமசிவம் பிள்ளையின் அழகான சம்பிரதாயத்தில் இன்னும் பாக்கி யிருக்கிறது! என் கைகளைப் பிடித்து அவர் உள்ளே தள்ளிக்கொண்டு போனார்.

இன்று காலைவரை ஓர் உயிர்விளக்கு எரிந்துகொண்டிருந்த கூடத்தில் ஓர் அகல்விளக்கு மினுக்கிக் கொண்டிருந்தது. என் செல்வம் அந்தச் சாணம் மெழுகப் பட்ட இடத்தில்தான் தன் மலர்மொட்டு விழிகளை மூடினாள்.

ஒரு வாரம் பத்து நாட்கள் என்று படுக்கையில் விழுந்து கிடந்தாள் அவள்? ஓடி விளையாடிக்கொண்டிருந்தவள் நேற்று மாலை நெஞ்சைப் பிடித்தபடி கீழே விழுந்தாள். திணறித் திணறி மூச்சு விட்டாள். பழிவாங்கத் துடித்த சிருஷ்டியின் இரக்கமற்ற சூன்ய இருளில் அவள் இரு கனவு விழிகளும் பதுங்கிக் கொண்டன.

என் மனைவி, தன் தாய்மைக் கொடியில் விளைந்த செழுங்கனியின் மேல் விழுந்து புரண்டாள். பத்து வருஷங்கள் தபசிருந்து பெற்ற கனல், பாசத்தில் பற்றி எரிந்த போது நாங்கள் அழுது கதறுவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?

தெருவிலே கூடிப் போலி அநுதாபத்துடன் மக்கள் எங்களைச் சுற்றி வேடிக்கை பார்த்த போது, பரமசிவம் பிள்ளை டாக்டருடன் நுழைந்தார்.

சிந்தாமணியின் நாடியும், இருதயமும் துடித்த துடிப்பில் டாக்டரின் உதடுகள் பிதுங்கிக் கொண்டன. ஏதோ மருந்து கொடுத்தார். "நாளைக்குச் சாயங்காலம் போனால் தான் என்னால் எதுவும் சொல்ல முடியும்" என்று கூறி விட்டு அவர் நடையைக் கட்டினார்.

"நான் சொல்கிறேன்!" என்று பக்கத்து வீட்டு வள்ளி மயிலுப் பாட்டி முன்னுக்கு வந்தாள். "இது நாய்க்கணை. இந்தக் கணை முற்றிவிட்டால் மண்டையோடு தான் போகும்" என்றாள்.

"ஏய், கிழவி! உனக்கு இங்கிதம் தெரிய வேண்டாம்? இந்த வேளையில் யார் உன்னை ஜோஸியத்துக்கு அழைத்தார்கள்?" என்று பரமசிவம் பிள்ளை பாட்டியைக் கடிந்து கொண்டார்.

எங்கள் மனத்தில் ஏற்கனவே நெருப்பு விழுந்து விட்ட போது, இந்தப் பரமசிவம் பிள்ளை ஏன் தற்காலிக ஏமாற்று வித்தையைச் செய்து காட்டுகிருர்?

என் மனைவி சௌந்தரம் அழுது அழுது மயங்கி விட்டாள். நான் புலம்பிப் புலம்பி உலர்ந்து விட்டேன். சிந்தாமணி எங்களைச் கொல்வதற்கே வந்த ராட்சஸியைப் போலக் கட்டையாகிக் கொண்டிருந்தாள். அவளுடைய கோலத்தில் ஒரு புதிய பொருளை, இது வரையில் எப் போதுமே அருகிருந்து பார்க்காத ஒன்றை, இன்று திடீரென்று நான் பார்க்கிறேன். ஆம்! மரணத்தின் இருள் படிந்த உருவம்தான்!

விடிந்த பொழுது, எங்கள் வாழ்க்கையின் நலனை எரித்த பொழுது, வள்ளிமயிலுப் பாட்டியின் இங்கிதமற்ற சோதிடம் பலித்து விட்டது.

சிந்தாமணியின் அவஸ்தைகள் ஓய்ந்து விட்டன. வாழ்க்கையை ஏமாற்றிவிட்ட ஒரு வெற்றிப் பெருமிதம் அவள் துடிக்காத இதழ்களில் கூடி நிற்கிறது.

எங்கள் இதயங்களை ஒரு குருக்ஷேத்திரமாக்கி விட்டு, அமர வாழ்வில் சாந்தியைப் பருகச் சென்ற அந்த நன்றி கெட்ட கழுதை எங்களுக்காக அலட்சியத்துடன் போட்டு விட்டுப் போன பரிசு: வெறும் கூடு; உயிர்ப் பறவை சின்னபின்னப்படுத்தி விட்டுப்போன சிதைந்த கூடு.

"தம்பி! விளக்கைக் கும்பிடுங்கள். உயிர் என்னும் விளக்கின் ஸ்தூல வடிவமான இந்த அகலை வணங்கினுல், அந்த உயிரின் ஆத்மா சாந்தியடையும்!" பரமசிவம் பிள்ளை என் இரு கரங்களையும் சேர்த்துக் குவித்து வைத்தார்.

காரணத்தின் சரியான உண்மையைப் பிரதிபலிக்காத சம்பிரதாயம்! எந்த ஓர் ஆத்மா அமைதியுறவில்லேயோ, அந்த ஆத்மாவின் கதறலினுல் மற்ருேர் ஆத்மா சாந்தி பெறுமா ?

“ தம்பீ...!”

என் வெம்பாளே விழிகள் மெதுவாகப் பரமசிவம் பிள்ளேயை நோக்கி ஊர்ந்தன.

“ உங்களுடைய மகத்தான இழப்புக்கு ஆறுதல் கூற எதுவுமே இல்லே. ஆனுல் நாம் விரும்பியோ, விரும்பாமலோ நம்முடைய கஷ்டங்களே ஏற்றுக்கொண்டுதானுக வேண்டும். வேறு என்ன சொல்ல இருக்கிறது? துக்கத்துக்கு வந்தவர்கள் விடைபெற்றுப் பிரியக் கூடாது என்று சொல்வார்கள்.” ஆனுல், விடைபெருமல் விடைபெற்றுக்கொண்டு நடந்தார் பரமசிவம் பிள்ளே.

விளக்கின் சன்ன ஒளியில் என் கண்கள் அசையாமல், அசைவின் எல்லா வழிகளும் அடைபட்டுப் போய்க் கலந்தன. சிந்தாமணி உள்ளத்தின் இருள் துடைக்கும் ஒளியாக இல்லே. தீட்டிய வாளேப்போல் என் நெஞ்சை நோக்கிப் பாய்கின்ருள்.

ஐயோ! இனி என்னுல் அந்த விளக்கைப் பார்க்க முடியாது. அந்தப் பயங்கர வாளால் குத்துப்பட முடியாது.

என் மனமே இரு கால்களாக நான் பறக்கப் படுக்கை அறையை நோக்கி ஓடினேன். வெற்றுக் கட்டிலில் விழுந்தேன். இடியின் குமுறலும், மழையின் பொழிவும் இந்தச் சாரமற்ற உலகத்தின் சூன்ய தரிசனமும் பரமசிவம் பிள்ளே கூறிப் போன பேச்சில் எதிரொலித்தன. ‘நாம் விரும்பியோ விரும்பாமலோ நம்முடைய கஷ்டங்களே ஏற்றுக்கொண்டு தானுக வேண்டும்.’

ஏன், ஏற்றுக் கொள்ள வேண்டிய உள்ளத்தையே இல்லாமல் செய்துவிட்டால்? ஆசைக்காக சபிக்கப்பட்ட துயரங்களேத் தேடிக்கொள்ளும் அறிவையே ஒழித்து விட்டால்?

'நானும் இல்லை; ஆசையும் இல்லை...' சிந்தாமணி என் துயர் மந்தை மனத்திலிருந்து வேய்ங்குழல் வாசிக்கிருள். இரைக்கு அலைந்த என் எண்ண ஆடுகள் அந்த நாத வெள்ளத்தில் மயங்குகின்றன. மரணக் கிண்ணத்தில் நிரப் பப்பட்டிருக்கும் தேன் ரஸம் என் முன்னே வைக்கப்பட்டி ருக்கிறது.

சிந்தாமணியைப் போல் மரணமும் இன்பம் ஊட்டக் கூடியதா?

இப்பொழுது புயல் ஓய்ந்த கடலைப் போல் என் மனம் அமைதி பெற்றது. அங்கே வேதனை இல்லை; வேக்காடும் இல்லை. பாசம் இல்லை; பந்தமும் இல்லை. மரணத்தின் வல்லமை பெரிது; ஆளுகை பெரிது.

'மயானத்தை அடுத்து மரணக் கிணறு ஒன்று இருக் கிறது. வாழ்க்கையில் சோர்ந்து போனவர்களை அனுதாபத் துடன் தன் மடியில் சாய்த்துக்கொள்ளும் தாயைப் போன் றது அது. அதன் இரக்கம் தோய்ந்த மடியில் 'மரணம்' என்கிற இன்பத்தை நுகரலாம்.'

எழுந்தேன். மனம் வடிந்தவுடன் கைகால்கள் எல் லாமே இலேசாகி விட்டன. ஐந்தே நிமிஷ நடைதான் வேண்டும், அந்தக் கிணற்றுக்குப் போக. எனக்கு இறை வன் கட்டளை போட்ட காலத்தை இன்னும் ஐந்தே நிமிஷங் களில் நான் ஏமாற்றி விடுவேன்!

சிந்தாமணிக்குத்தான ஏமாற்றத் தெரியும்? எனக்கும் தெரியும்! வெடிக்காத மெல்லிய சிரிப்பில் என் உதடுகள் இலேசாக நீங்கிக்கொண்டன.

நடந்தேன். ஹாலின் மூலையிலே ஏன் அந்தப் பயங்கரக் கூச்சல்கள்!

நின்றேன். திரும்பிப் பார்த்தேன்.

எங்கள் குடும்பத்தோடு கொள்ளைப் பிரியத்துடன் தொடர்பு கொண்டிருந்த சிட்டுக்குருவிகளல்லவா அவை?

அந்த நேரத்திலும் அவற்றின் கதையைப் பற்றி ஒரு முறை நினைத்துப் பார்க்கத் தோன்றியது எனக்கு.

சீதை என்று நாங்கள் செல்லமாக அழைத்த அந்தப் பெண் சிட்டுக்குருவி எங்கள் வீட்டுப் பெண். அப்பொழுது சீதை, அம்மாவை இழந்த அனுதைக் குழந்தை; சௌந்தரம் அதன் வளர்ப்புத் தாயானுள். கூடு கட்டிக்கொடுத்தாள். ஊசி வாய்க்கேற்ற மென்மையான ஆகாரத்தை ஊட்டினுள்.

ஆறே மாதங்களில் சீதை பருவத்துக்கு வந்துவிட்டாள். அவளுக்கு இப்பொழுது சௌந்தரம் சோறு ஊட்ட வேண்டியதில்லை. சீதை எங்கோ பறந்து போவாள், திரும்புவாள். பருவக் குறும்புகள் செய்வாள். சௌந்தரத்துக்குத் தன் வளர்ப்புப் பெண்ணின் வளர்ச்சிகளில் ஏகப்பட்ட மகிழ்ச்சி.

திடீரென்று ஒரு நாள் சீதையுடன் ஒரு புதிய அழகன் வந்து சேர்ந்தான். இருவரும் கூடிக் கொம்மாளமிட்டார்கள். இணைபிரியாமல் திரிந்தார்கள்; பறந்தார்கள்; உண்டார்கள்; உறங்கினுர்கள். சீதையின் காதலன்தான் அவன் என்பதை எனக்குப் புரிய வைத்தவள் சௌந்தரமே! எங்கள் வீட்டு மாப்பிள்ளைக்கு ராமன் என்று பெயரிட்டாள் அவள்.

சில மாதங்களில் சீதை கருவுற்ருள். அப்பொழுது அவளை ராமன் வெளியே கூட்டிச்செல்வதில்லை. அவனும் ரொம்பத் தூரம் போவதில்லை. பக்கத்திலேயே இரை தேடி அலகில் இடுக்கிக் கொண்டு கூட்டுக்கு வருவான். மனைவிக்குக் கொடுப்பான். மீண்டும் பறப்பான். நாள் முழுவதும் அவனுக்கு இதே வேலைதான்!

ஒரு மாதத்துக்கு முன்பு நான் படுக்கை விட்டு எழுந்த போது, "உங்களுக்குப் பேரன் பிறந்திருக்கிருன்" என்ற செய்தியைச் சொன்னுள் சௌந்தரம்.

"சீதை பிரசவித்து விட்டாளா?"

"ஆமாம்! பயல் ரொம்ப அழகாக இருக்கிருன். வந்து பாருங்களேன்!"

கூட்டை நோக்கி ஓடினேன். ஒரு ஸ்டூலைப் போட்டுக் கொண்டு கூட்டினுள் எட்டிப் பார்த்தேன். சீதையின் இறகு விரிப்பில் என் பேரன் கண்வளர்ந்து கொண்டிருந்

தான். என் பெண்ணின் அழகை எல்லாம் திரட்டிக் கொண்டு வந்திருக்கின்றுன்!

அந்தப் பொடியனுக்கு 'லவன்' என்று நாமம் சூட்டி ஞேம். அன்று எங்கள் வீட்டில் தடபுடலான பாயஸ விருந்து.

இப்பொழுது கூக்குரலிடும்படியாக என்ன வந்து விட்டது அந்தத் தம்பதிகளுள்? எல்லாவற்றையும் கடந்து போகிறவனுக்கு அதன் காரணத்தைப் புரிந்துகொள்ளாமல் போக மனம் வரவில்லை.

அவற்றை நெருங்கினேன். லவன் ஏன் அப்படி அசை யாமல் கிடக்கிருன்: அவனைச் சுற்றிச் சுற்றி வந்து அலறு கிருளே சீதை, ஏன்? இரண்டு ஏன்களுக்குப் பிறகு ஒரு பதில் கிடைத்தது.

லவன் இறந்துவிட்டான்! துக்கம் தாளாத சீதை அவ னைச் சுற்றிச் சுற்றிப் புலம்புகிருள். ராமன் சீதை செய்த அதே காரியத்தைச் செய்யவில்லை. அவன் சீதையின் கழுத் தில் கோதிக் கொடுக்கிருன். சீதையினுடைய மகன் அவனுடைய மகனும்தானே? பிறகு ஏன் அவன் அலறிப் புலம்பவில்லை? ராமன் பாசத்தில் கரைந்துவிடும் ஒரு மெழுகு உருண்டை. தன்னுடைய எல்லாத் துக்கத்திலும் மேலான துக்கத்தை அடைந்திருக்கிற அவன், இப்பொழுது ஏன் கொஞ்சம்கூடக் கரையாமல் சீதையைச் சுற்றி வருகிருன்?

புரிகிறது! துக்கத்தில் கரைந்தே விட்ட சீதையைச் சமாதானப்படுத்துவதற்காக ராமன் கல்லாகிவிட்டான். தன் கண்ணீரை வெளியே விடாமல் உள்ளத்துக்குள்ளேயே பாய்ச்சிக்கொண்டு தன் துணைவியின் கண்ணீரைத் துடைத் துக்கொண்டிருக்கிருன்!

நான் என்ன செய்தேன்? என் கண்ணீரைப் பெரிதாக நினைத்தேன். எனக்கு நேர்ந்த துக்கத்தை நீளம் நீளமாய்த் திரித்துக்கொண்டேன். அந்தக் கஷ்டத்திலிருந்து விடுதலை பெற உயிரை விடவும் தயாராகி விட்ட சுயநலக்காரனுக இருந்தேன்.

சௌந்தரத்தை இதுவரையில் நான் நினைத்துப் பார்க்கவே இல்லையே! 'அம்மி மிதித்து, அருந்ததியைக் காட்டி, உன்னைக் கைவிடமாட்டேன்' என்று சத்தியம் செய்தேனே அப்பொழுது? இப்பொழுது சத்தியத்தையே கொல்லும் சண்டாளனாகி விட்டேன்! மூடத்தனமான தற்கொலையைச் செய்து கொள்ளத்தூண்டிய என் காய் மனமும், நான் என்னும் புதிரை அவிழ்த்த பொய் மயக்கத்தின் அகம்பாவச் செருக்கும் சேர்ந்து சிந்தாமணியின் பரிசுத்தமான ஆவிக்குக் களங்கம் சூட்டவல்லவா இருந்தன?

சீதை அலறிக்கொண்டிருந்தாள். ராமன் அவளை ஆறுதல்படுத்த அவளோடு ஒட்டிக்கிடந்தான். அன்பு என்னும் லாபத்தை அவளிடம் வர்ஷித்துக் கொண்டிருக்கிறான்.

நான் அடைந்த நஷ்டத்துக்குச் சிந்தாமணியை விழுங்கிக்கொண்டதும் அல்லாமல் சௌந்தரத்தையும் அல்லவா விழுங்கவிருந்தேன்?

ஒரு சிட்டுக் குருவிக்கு இருக்கும் அறிவுகூட எனக்கு இல்லாமல் போய்விட்டதே? அதற்குத்தான் எத்தனை விவேகம் இருந்தது? ஒரு மகா புருஷனின் பெயரைச் சூட்டியதன் விசேஷமோ அது?

"மரணக் கிணறே போ!"

என் சௌந்தரம் எங்கே? தன் தாய்மையில் இடி விழுந்து துடிக்கும் என் துணைவி எங்கே? ஆருகப் பெருகும் அவள் கண்கள் எங்கே? துடைக்க ஆளில்லாமல் நீர்த் திரை படர்ந்துவிட்ட அவள் முகம் எங்கே?

ஆயிரம் கேள்விகள் என் கால்களை ஊக்கின.

என் கண்ணீரையும், அறியாமையையும் அறிவின் நிறைவையும் ஒரேயோர் அலறலில் புரிந்துவிட்ட ஓர் அதிசயக் கனவின் பொருளில் முழக்கினேன்: "சௌந்தரம்...!".

# 13

# புதிர்

வேங்கடலட்சுமி

படுக்கையில் புரண்டு படுத்த பட்டுவை அத்தையின் கீச்சுக் குரல் தட்டி யெழுப்பியது. கண்களைக் கசக்கி விட்டுக்கொண்ட குழந்தை ஒன்றும் விளங்காமல் நாற்புற மும் நோக்கி விழித்தாள்.

அத்தை பாகீரதிக்கு அவள் விழிப்பதைக்கண்டு சிரிப்பு வந்தது.

" என்னடி பட்டு ? அப்படி விழிக்கிறாயே? இன்றைக் குச் சாவித்திரி அக்காவுக்குக் கல்யாணமல்லவா ? எல்லா ரும் எழுந்து குளித்துத் தயாராகிவிட்டார்கள். நீ மாத்திரம் இன்னும் தூங்கிக்கொண்டே யிருக்கிறாயே. எழுந்திரடி சீக் கிரம்!"

ஒரு வினாடி திகைப்புடன் மலர விழித்த குழந்தைக்குச் சட்டென்று ஒரு விஷயம் ஞாபகம் வந்தது. ஆமாம். அக்காவுக்குக் கல்யாணம் ; அதுதான் ஏழெட்டு நாளாக வீட்டிலே வருவோரும் போவோருமாய் ஒரே அமர்க்களமா யிருக்கிறது. அத்தை கூப்பிடுவதைக் காதிலேயே வாங்கிக் கொள்ளாமல் எழுந்து ஜன்னலண்டை ஓடினாள்.

ஏயப்பா ! வாசலிலேதான் எவ்வளவு பெரிய பந்தல் ! எத்தனை அழகழகான விளக்குகள் ! யார் இத்தனை அழகான கோலம் போட்டிருப்பது ? சந்தேகமென்ன ? அம்மாவாகத் தான் இருக்க வேண்டும். வேறு யாருக்கு இத்தனை பெரிய கோலம் போடத் தெரியும் ?

மீண்டும் உட்புறம் திரும்பிய குழந்தையைப் பார்த்து, "பட்டு ! சீக்கிரம் பல் தேய்த்துக் காப்பி பலகாரமெல்லாம் சாப்பிடு. அப்புறம் தலையை வாரிப் பின்னிப் பட்டுப் பாவாடையெல்லாம் கட்டிவிடுகிறேன்." என்று அழைத்தாள் அத்தை.

அவளுடைய கையைப் பிடித்தபடி குதித்துக் கொண்டு ஓடினாள் பட்டு. அட ! சமையலறைப் பக்கத்தில்தான் என்ன கூட்டம் ! எவ்வளவு பேர் கும்பலாக உட்கார்ந்து காப்பி பலகாரம் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அக்காவின் கல்யாணத்துக்காகவா இத்தனை மாமா, மாமியெல்லாம் வந்திருக்கிறார்கள் ! அவளை உட்காரவைத்து ஒரு சின்ன இலையில் சொஜ்ஜியும் இட்டிலியும் பரிமாறினாள் அத்தை.

வாசலில் மேளச் சப்தம் கேட்டது. உள்ளேயிருந்தவர்களெல்லாம் அவசர அவசரமாய் வாசற்பக்கம் போனார்கள்.

பாகீரதி அத்தை பட்டுவுக்குத் தலை பின்னிப் பாவாடை சட்டையெல்லாம் போட்டுக் கல்யாணப் பந்தலுக்கு அழைத்துக்கொண்டு கிளம்பினாள்.

"அத்தை ! சாவித்திரியக்கா எங்கே?"

"மாடியறையிலே அலங்காரம் பண்ணிக்கொண்டிருக்கிறாள். வா ! அதோ மாப்பிள்ளை புறப்பட்டுவிட்டார்." என்று பட்டுவின் கையைப் பிடித்திழுத்தாள் அத்தை.

ஆனால் பட்டு மாடிப் படியை நோக்கி ஓடிவிட்டாள்.

வெளியே மேளம் பலமாய்க் கேட்டது. ஒரு விநாடி நிதானித்த குழந்தை, தனது பட்டுப் பாவாடையை ஒரு கையால் தூக்கிப் பிடித்துக்கொண்டு படிகளில் ஏறினாள்.

சாவித்திரியின் அறையில் ஒரே கூட்டம். அக்கூட்டத்தை விலக்கிக் கொண்டு உள்ளே போக முடியுமென்று தோன்றவில்லை பட்டுவுக்கு. அவளை ஒருவரும் கவனிக்கவுமில்லை. ஒரு மூலையில் நின்றபடி எல்லோரையும் மாறி மாறிப் பார்த்தாள்.

அறைக்கு நடுவே ஒரு ஜமுக்காளத்தின்மீது உட்கார்ந்து கொண்டிருந்தாள் சாவித்திரி. அவளுடைய நீண்ட பின்னலின் தலைப்பில் அழகான பட்டுக் குஞ்சலம் தொங்கியது. மேல் தலையில் பெரிய செண்டாகச் சூட்டப்பட்டிருந்த மல்லிகைப் பூ முதல், அவள் கால்நகத்தில் தீட்டப்பட்டிருந்த மருதோன்றிச் சிவப்பு வரையிலும் ஆவலுடன் கவனித்தாள் பட்டு. சாவித்திரியின் உடம்பில் பொன்னும் ஜரிகையுமாய் மின்னின. நெற்றியில் அழகான திலகம்; கண்களில் மைக் கீற்று. உதடுகளில் வெற்றிலைச் சிவப்பு.

அக்காதான் எவ்வளவு அழகாயிருக்கிறாள்!

இத்தனை கூச்சலுக்கும் அமர்க்களத்துக்கும் நடுவில் ஆடாமல் அசையாமல் பொம்மைபோல் உட்கார்ந்திருந்தாள் சாவித்திரி. இடையிடையே அவள் தலை நிமிரும்பொழுதெல்லாம் அவளுடைய அழகிய முகத்தில் ஒரு புன்னகை ஒளி வீசியது. பட்டுவின் பிஞ்சு மனத்திற்கு எல்லாமே வியப்பாயிருந்தன.

வயதான ஓர் அம்மாள், சாவித்திரியின் கழுத்தில் அட்டிகையைப் பூட்டியபடியே சொன்னாள் :

"இந்த நாலு நகையைப் பூட்டிக்கொள்ளவே மூக்கால் அழுகிறார்கள் இந்தக்காலத்துக் கல்யாணப்பெண்கள்! எங்கள் நாளிலேயெல்லாம், ஒரு காறை யென்ன? காசு மாலையென்ன? கிள்ளட்டியென்ன? ஒவ்வொன்றும் குறைந்தது ஒரு சேர் தங்கமிருக்கும். கல்யாணத்துக்கு ஒரு மாதம் முன்னாலேயே இதை யெல்லாம் மாட்டிப் பழக்கம் பண்ணி விடுவார்கள். இந்தக்காலம் மாதிரியா?"

இதைக் கேட்டதும் அருகே சுவரில் சாய்ந்து உட்கார்ந்திருந்த ஓர் அம்மாள், ஐம்பது வருஷத்துக்கு முன்னால்

நடந்த தன் கல்யாண அனுபவத்தை விவரிக்க ஆரம்பித்து விட்டாள்.

சாவித்திரி ஒன்றும் பேசாமல் பொம்மைபோல் உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவள் ஏன் அப்படி இருந்தாளென்பது பட்டுவுக்கு விளங்கவேயில்லை. சதா சிரிப்பும் விளையாட்டுமாகவே கலகலவென்று இருக்கும் அக்கா இப்பொழுது ஏன் என்னவோ மாதிரி பேசாமலிருக்கிருள் ? கல்யாணம் அவளுக்குப் பிடிக்கவில்லையா ? அன்றைக்கு வந்தாரே, உயரமாய்ச் சிவப்பாய், அந்த மாமாவைத்தானே அவள் கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போகிருள்? அவருக்கென்ன, நன்ருய்த்தானே இருக்கிருர் ? ஆனுலும் பட்டுவுக்கென்னவோ, அவரைப் பார்த்ததிலிருந்தே பிடிக்கவில்லை. கல்யாணம் ஆனவுடனேயே சாவித்திரியை அவர் அழைத்துக் கொண்டு போய் விடுவாரென்று அம்மா சொன்னுள். பட்டுவின் வெறுப்புக்கு அதுதான் காரணம்.

சாவித்திரியைச் சுற்றியிருந்த கூட்டம் கொஞ்சம் கலைந்தது. அறைக்கு வெளியே நின்றிருந்த குழந்தையைக் கண்டாள் அவள். புன்சிரிப்புடன் சைகைகாட்டி அவளைத் தன்னிடம் வருமாறு அழைத்தாள்.

ஓட்டமாயோடி அவளுடைய மடியிலேறி உட்கார்ந்து கொண்டாள் பட்டு.

காதோடு கேட்டாள். "அக்கா, நீ சொஜ்ஜி சாப்பிடலை ?"

"சாப்பிட்டேனடி கண்ணே." என அவளை அணைத்து முத்தமிட்டாள் சாவித்திரி. ஏனே அவள் கண்ணில் மளமளவென்று நீர் நிறைந்தது.

பார்த்துக் கொண்டேயிருந்த பட்டுவுக்கும் அழுகை வந்துவிட்டது. சட்டென்று சட்டைமுனையால் கண்ணைத் துடைத்துக் கொண்டாள்.

"வெகு நன்ருயிருக்கிறது அசடுகள் மாதிரி அழுவது. கண்ணைத் துடைத்துக் கொள்ளுங்கள்," என்று பக்கத்திலிருந்த வயதான அம்மாள் அதட்டினுள்.

அனேகமாக அறையிலிருந்த எல்லாருமே கீழே போய் விட்டார்கள். மிகுதியிருந்த இரண்டொருவரும் கீழே இறங்கிப் போக எழுந்து கொண்டிருந்தார்கள்.

அக்காவை அழைத்துப்போக அம்மா வருவாள். அப் புறம்தான் அவள் கல்யாணப் பந்தலுக்குப் போகவேண்டும். இந்தச் சந்தர்ப்பம் பட்டுவுக்கு அக்காவிடம் பேசுவதற்குச் சாதகமாயிருந்தது.

"அக்கா, நீ நாளைக்கே அந்த மாமாவுடன் ஊருக்குப் போய் விடுவாயா?"

அழுகையிலும் சிரிப்பு வந்தது சாவித்திரிக்கு.

"இல்லை, கண்ணு. இன்னும் இரண்டு நாள் கழித்துத் தான் போவேன்."

"அப்புறம் எனக்கு யார் தலை பின்னுவார்கள்? யார் சாதம் போடுவார்கள்? ராத்திரி நான் யாரிடம் தூங்கு வேன்?" என்று பலவிதமான கேள்விகளை அடுக்கினாள் பட்டு.

கேட்டுக்கொண்டேயிருந்த சாவித்திரிக்கு மீண்டும் கண் கலங்கியது. குழந்தை சொல்லுவது உண்மைதான். பட்டு பிறந்தவுடன் அவளுடைய அம்மா நோய் வாய்ப் பட்டுப் படுக்கையில் விழுந்து விட்டாள். சுமார் ஒரு வருட காலம் வரையிலும் வீட்டுப் பொறுப்பும், பச்சைக் குழந் தையான பட்டுவைப் பராமரித்து வளர்க்கும் பொறுப்பும் மூத்த பெண்ணான சாவித்திரியின் தலையில் விழுந்தது. பன்னிரண்டு வயதே ஆகியிருந்தபோதிலும், தன் மீது சுமத்தப்பட்ட அப்பொறுப்பைத் திறமையாக ஏற்று நடத் தினாள்.

"அக்கா, அக்கா" என்று எதற்கும் சாவித்திரியையே நாடலானாள் பட்டு. இந்த வழக்கம் ஆறு வயதான பிறகு கூட அவளைத் தொடர்ந்தே வந்தது. இக்காரணம் பற்றியே சாவித்திரியின் கல்யாணப் பேச்சு ஆரம்பமானதிலிருந்து அக்குழந்தையின் மனத்தில் ஒரு வகையான வேதனை யுண்டாகி வருத்திக்கொண்டே யிருந்தது. சாவித்திரியைப்

பெண் பார்க்க வந்த தினம் ஒரு சம்பவம் நடந்தது. அதை அக் குழந்தையின் பளிங்கு மனம் மறக்கவே யில்லை.

அன்றைய தினம் வீட்டில் ஏற்பாடுகளெல்லாம் பலமா யிருந்தன. கூடத்தில் பட்டுப் பாயெல்லாம் விரித்துப் பாக்கு வெற்றிலை பழமெல்லாம் எடுத்து வைத்திருந்தார்கள். சாவித்திரியை நன்றாக அலங்கரித்து மாடியறையில் உட்கார வைத்திருந்தார்கள். கூடவே இருந்த அவளுடைய தோழி கமலி, அவளைப் பலவிதமாகக் கேலிசெய்துகொண் டிருந்தாள். சாவித்திரி எல்லாவற்றையும் கேட்டபடி மௌனமாக உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவள் முகத்தில் மட்டும் லேசான புன்சிரிப்பொன்று இழையோடிக் கொண்டிருந்தது.

இச்சந்தர்ப்பத்தில் கீழிருந்து அப்பாவின் குரல் கேட்டது, "சாவித்திரி! இங்கே வந்து இவர்களையெல்லாம் நமஸ்காரம் செய், அம்மா ?"

அவசரமாக எழுந்த சாவித்திரி, கமலியுடன் கீழே போனாள். கூடத்துக்கு வெளியே கையில் ஒரு புதிய ரிப்பனுடன் காட்சியளித்த பட்டு, "அக்கா! எனக்குத் தலை பின்னிவிடு" என்று அவளுடைய புடவையைப் பிடித்து இழுத்தாள்.

"நல்ல சமயம் பார்த்தாயடி, தலை பின்னுவதற்கு! அம்மாவிடம் போய் பின்னிவிடச் சொல்லு," என்று அவளை ஒரு கையால் ஒதுக்கிவிட்டு, இன்னொரு கையால் சாவித்திரி யிடம் வெற்றிலைத்தட்டை எடுத்துக் கொடுத்தாள் கமலி.

குழந்தைக்கு ஒன்றும் விளங்கவில்லை. அக்காவுக்கு என்ன வந்துவிட்டது? தினமும் அவள்தானே தனக்குக் குளிப்பாட்டி, தலை பின்னி, எல்லாம் செய்வாள்?

துக்கம் அவள் நெஞ்சை அடைத்துக் கொண்டது.

குழந்தைக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. கையிலிருந்த ரிப்பனைத் தூர, எறிந்துவிட்டு மாடிக்குப் போய்ச் சாவித் திரியின் கட்டிலில் குப்புறப் படுத்துக்கொண்டாள்.

கீழே வீணையை மீட்டும் நாதமும் அக்கா பாடுவதும் அவளுக்குத் தெளிவாய்க் கேட்டன. ஆனால் என்ன? அவளுடைய பிஞ்சு மனத்தில் துயரத்தின் பாரம் அழுகை யாய் வெடித்துவிட்டது.

அழுதுகொண்டே யிருந்தவள் அப்படியே தூங்கி விட்டாள்.

வெகு நேரம் கழிந்தது!

"பட்டு! எழுந்திரம்மா! சாப்பிட வேண்டாமா?" என்று எழுப்பினாள் சாவித்திரி.

கண்ணை விழித்துப் பார்த்துவிட்டு, "நான் ஒன்றும் வரவில்லை போ!" என்று சிணுங்கினாள் குழந்தை.

அவள் பின்னாலேயே உள்ளே வந்த அம்மா, "உன் பேரில் அவளுக்குக் கோபம், நீ மத்தியானம் அவளுக்குத் தலை பின்னிவிடவில்லை யென்று!" என்று சிரித்துக் கொண்டே சொன்னாள்.

சாவித்திரி குனிந்து அவள் கன்னத்தில் முத்தமிட்டாள் பிறகு அவளை வாரியெடுத்து அணைத்துக்கொண்டு உள்ளே போனாள். அப்பொழுது அவள் விழிகளிலிருந்து கண்ணீர் முத்துக்கள் பட்டுவின் ரோஜாக் கன்னத்தில் சிதறின. குழந்தை தன் துயரத்தையெல்லாம் உடனே மறந்து அவளுடைய கழுத்தைத் தன் பிஞ்சுக் கரங்களால் கட்டிக் கொண்டாள்.

சாவித்திரியை அழைத்துப்போக அம்மா மாடிக்கு வந்தாள். அக்காவுடன் கூடவே பட்டுவும் மணப்பந்தலுக்குப் போனாள்.

கல்யாண முழுவதும் தன் அக்கா பின்னாலேயே சுற்றிக் கொண்டிருந்தாள் குழந்தை. அந்தப் புதிய மாமாவிடம் அவளுக்குப் பெருத்த வெறுப்பும் கோபமும் உண்டாயின. ஊர்வலத்தின்பொழுது அவ்விருவருக்கும் நடுவில் உட்கார வேண்டுமென்று அடம் பிடித்தாள். அப்பா வந்து அதட்டியபொழுது அந்தப் புதிய மாமா, "பரவாயில்லை. அவளும்

பல்சுவைக் கதைகள்
பதின்மூன்று கொண்டது இத்
தொகுப்பு நூல். புகழ்பெற்ற எழுத்துலகச்
சிற்பிகளின் இனிய படைப்புக்கள்.

சென்ற இரண்டாண்டுகளில் பத்திரிகைகளில் வெளி வந்துள்ள எண்ணற்ற சிறு கதைகளின் பொறுக்கு மணிகளாக 22 சிறு கதைகளைத் தென் மொழிகள் புத்தக டிரஸ்ட் தேர்ந்தெடுத்தது.

ஏற்கெனவே 9 கதைகள் 'நவமணிக் கதைகள்' என்ற பெயரில் டிரஸ்ட் ஆதரவில் வெளிவந்துள்ளன. இரண்டாம் தொகுப்பாக வெளிவரும் இந் நூலில் 13 கதைகள் அடங்கியுள்ளன.

பெரும்பாலான கதைகள் உள்ளத்தை உருக்குவன; பல சிந்தனையைத் தூண்டுவன; பொதுவில் எல்லாமே மனத்தை ஈர்க்கும் வாழ்க்கைச் சித்திரங்கள்!

முதல் தொகுப்பைப் போலவே இத் தொகுப்பும்
தமிழில் சிறு கதை வளர்ச்சிக்கு ஒரு
சிறந்த எடுத்துக் காட்டு.

தென் மொழிகள் புத்தக டிரஸ்டின்
ஆதரவில் பதிப்பிக்கப் பெற்றது.

எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை.